| 4.உளுந்தூர்பேட்டை | தாமோதரன் | கே.சின்னமணி<br>சக்திவேல்<br>சம்பத்<br>ஏழுமலை | எ.கண்ணையன் | முத்துகுமார்<br>கே.வேல்முருகன்<br>ஜெயலட்சுமி<br>தமிழ்அரசன் | என்.பிரபு |
| 5.திருக்கோயிலூர் | எம்.மூர்த்தி | யாசின்<br>காந்திமதி | குணசேகரன் | சரவணன்<br>சுந்தரம்<br>வேல்முருகன்<br>முகமது ஷெரிப் | பாண்டியன் |
| 6.கல்வராயன்மலை | எம்.பி.கோவிந்தராஜ் | 1. A.நூர்முகமது<br>2. சரவணன் | P.கோவிந்தராஜ் | 1. A.தனலட்சுமி<br>2. S.மணிகண்டன்<br>3. K. சீனிவாசன்<br>4. செந்தில்நாதன் | L.கோவிந்தராஜீ |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. வானாபுரம் | வி.காஞ்சனாமேரி | D.ஸ்டாலின்<br>P.தெய்வானை<br>செந்தில்முருகன் | ராஜேந்திரன் | ராஜா<br>முகமது ஆரிஸ்<br>A.சரசு | சங்கரன் |
| **செங்கல்பட்டு**<br>1.செங்கல்பட்டு | கே.கார்த்திகேயன் | கே.வெங்கடேசன்<br>எம்.கற்பகம் | வ.வெங்கடேசன் | ஜி.விஜயா<br>இராமராஜ்<br>பி.கௌதம் | எம்.சக்திவேல் |
| 2.மதுராந்தகம் | என்.பாலாஜி | டி.உமாமகேஷ்வரி<br>வி.சுதர்சன் | ஜி.சுதர்சன் | ஆர்.நாராயணமூர்த்தி<br>எம்.உத்தமன்<br>கே.பாக்கியராஜ் | டி.பிரான்சிஸ் |
| 3.திருக்கழுக்குன்றம் | ஜெ.முருகன் | கே.ஜோஸ்பின்<br>சிவக்குமார் | எஸ்.வசந்தகுமார் | என்.விஜயா<br>தீபா | கே.புஷ்பாவதி |
| 4.செய்யூர் | எம்.வேல்முருகன் | ஆர்.மணிகண்டன்<br>கே.வாசுதேவன் | கே.முத்துராமன் | எஸ்.எஸ்.கௌரி<br>எஸ்.சதீஷ்<br>விநாயகம் | இ.பிரதாப் |
| 5.திருப்போரூர் | கே.முருகேசன் | ஜே.கோபாலகிருஷ்ணன்<br>காளி | டி.முருகசெல்வி | டி.சுரேஷ்<br>யுவராஜ் | டி.ரேவதி |
| 6. வண்டலூர் | எம்.சீனிவாசன் | ம.சக்திவேல்<br>வி.தன்யகுமார் | பி.சதிஷ்குமார் | நா.துரைமுருகன்<br>இ.முருகேசன் | என்.சசிகலா |
| **இராணிப்பேட்டை**<br>1.ஆற்காடு | கே.ரவி | நேதாஜி<br>மாதவன்<br>சத்யா | அ.கபிலன் | ராஜி<br>திலகா<br>பிரவினா | செந்தில்குமார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மயிலாடுதுறை**<br>1.மயிலாடுதுறை | K.வெங்கடேஸ்வரன் (பொறுப்பு) | T.அருண்ஜேஷி | T.பழனிச்சாமி | K.கண்ணன்<br>A.அருள் | S.திவ்யா |
| 2.குத்தாலம் | R.மதியழகன் | R.கமலதாசன் | P.பரமானந்தம் (பொறுப்பு) | R.வேல்ராஜ்<br>M.முருகானந்தம் | B.ஜெயந்தி |
| 3.சீர்காழி | T.ராஜேஷ்குமார் | K.ராமதேவன்<br>S.அசோகன்<br>S.காவியா | S.ரமேஷ் | M.அருள்பெருமாள்<br>G.லெட்சுமணன்<br>J.கனகராஜ் | V.சசிகலா |
| 4.தரங்கம்பாடி | A.சாந்தி | N.பேபி<br>M.அனுசியா | P.பாலாஜி | P.கண்ணதாசன்<br>A.கோகிலம் | R.மாலா |
| **தென்காசி**<br>1.தென்காசி | லெ.லட்சுமிகாந்தன் | செந்தில் கணேஷ்<br>செல்வக்குமார் | ம.மனோகர் | ஜெ.பிரவீன்குமார்<br>சும்சுதின் | பாபுராஜ் |
| 2.மாவட்ட ஆட்சியரகம் | செல்வி | | பாலகிருஷ்ணன் | | ஹரிகோபால் |
| 3.செங்கோட்டை | ராச.ராஜேந்திரன் | ச.முத்துக்குமார்<br>ஜெ.பெலிக்ஸ்மோனிகா | ஜெ.முகமதுஜலால் | ச.திருமலைக்குமார்<br>வெ.மாரியப்பன் | சா.சபரிகார்த்திக் |
| 4.கடையநல்லூர் | ர.பீமராஜா | இராஜேந்திரன்<br>திருமலையாண்டவர் | அண்ணாதுரை | மா.கருப்பசாமி<br>செ.சீனிவாசன் | ரஞ்சித்குமார் |
| 5.சங்கரன்கோவில் | ந.மோகன்ராஜ் | து.கடல்குமார்<br>அன்பழகன் | ச.நவநீதன் | சுப்புராஜ்<br>தங்கம் | உ.முருகையா |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.திருவேங்கடம் | ப.முத்துகணேஷ் | ச.கணேசன்<br>ச.தமிழ்செல்வி | ப.கருப்பசாமி | மா.நாகசாமி<br>ஜாகிர் உசேன் | வெ.ஜெயலட்சுமி |
| 7.சிவகிரி | க.கணேசன் | மு.முனியசாமி<br>பா.முத்துப்பாண்டி | க.கோவிந்தன் | வே.அழகுராஜா<br>குமார் | கனகராஜ் |
| 8.ஆலங்குளம் | | பேச்சியம்மன்<br>இரா.திருப்பதி | சிலம்பரசன் | முத்து<br>தீபக்குமாரி | அருள்பேகஸ் |
| 9.வீரகேரளம் புதூர் | இராஜேந்திரன் | கணபதி ராமன் | சுமன் | தாமஸ் | கணேசன் |
| **திருப்பத்தூர்**<br>1.திருப்பத்தூர் | K.குமாரசாமி | முரளி கிருஷ்ணன்<br>பூபதி | பெருமாள் | சிலம்பரசன்<br>தி.ராஜ்குமார் | சுரேஷ் |
| நாட்றாம்பள்ளி | K.திருப்பதி | பனிமலர்<br>குணசேகரன் | குமரன் | தினேஷ் பாபு<br>நா.அர்ச்சனா | கனகராஜ் |
| வாணியம்பாடி | சூர்யா | L.R.D.கார்த்திக்<br>பார்வதி | சத்தீஸ் | V.பாபுராவ்<br>கங்கா | D.பிரபாகரன் |
| ஆம்பூர் | விஸ்வநாதன் | ரகு<br>ஆனந்தன் | பழனி | மலர்விழி<br>பிரியா | பிரபாகரன் |

# I. விடுப்பு

## தற்செயல் விடுப்பு

(1) ஒரு ஆண்டுக்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். தற்செயல் விடுப்பை அரசு விடுமுறைகள், ஈடுசெய் விடுப்பு முதலியவற்றுடன் இணைத்தும் எடுக்கலாம். ஆனால், ஒரே நேரத்தில் எடுக்கும் மொத்த விடுப்பு பத்து நாட்களுக்கு அதிகமாகாமல் இருக்க வேண்டும். (அடிப்படை விதியின் இணைப்பு VII) இருப்பினும் 11வது/12வது நாள் எதிர்பாராத விதமாக அரசு விடுமுறை என அறிவிக்கப்பட்டால் பத்து நாட்களுக்கு மேலும் தற்செயல் விடுப்பு அனுபவிக்கலாம். (அ.ஆ. எண் 309, நிர்வாகத் துறை, நாள் 16.8.93)

(2) முன்னரே ஒப்புதல் பெறும் தற்செயல் விடுப்புக்கான விண்ணப்பத்தில் விடுப்பிற்கான காரணம் குறிப்பிடத் தேவையில்லை – (அரசாணை எண் 1410, நிர்வாகத்துறை, நாள் 2.12.1997)

(3) தற்காலிகப் பணியாளர்களுக்கு ( 10(a)(i) )இரண்டு மாதங்களுக்கு மூன்று நாட்கள் என்ற அளவில் (மொத்தத்தில் 12 நாட்களுக்கு அதிகமாகாமல்) இவ்விடுப்பு வழங்கப்படும். ( அடிப்படை விதி இணைப்பு VII)

(4) கணக்கில் தற்செயல் விடுப்பு இல்லாதவருக்கு முன் அனுமதியுடன் ஈட்டிய விடுப்பு உண்டு (அடிப்படை விதி 67ன் துணை விதி (3).

(5) 30 நாள் பணி முடித்த சில்லரைச் செலவின ஊழியர்களுக்கும் தற்செயல் விடுப்பு வழங்கப்படும் (அரசாணை எண். 1180, நிர்வாகத் துறை, நாள் 15.12.1986).

(6) சமீபத்தில் ஓய்வு பெற இருப்பவருக்கு பணிக்காலத்தைக் கணக்கிடாமல் தற்செயல் விடுப்பு வழங்கலாம். உதாரணமாக ஜனவரியில் ஓய்வு பெறும் ஒருவருக்கு அந்த ஆண்டுக்குரிய 12 நாள் தற்செயல் விடுப்பு வழங்கலாம் – (அரசு க.எண். 61559/82–4, நிர்வாகத் துறை, நாள் 17.1.1983)

(7) இரவு காவலர்களுக்கு சுழற்சி முறையில் விடுப்பு வழங்கலாம் – (அரசு க.எண். 22402/பணி எண் 93–1, நிர்வாகத்துறை, நாள் 4.5.93)

## வரையறுக்கப்பட்ட விடுப்பு

கீழ்க்காணும் பண்டிகை நாட்களில் ஆண்டுக்கு மூன்று நாட்கள் வரையறுக்கப்பட்ட விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் (அ.ஆ. எண் 210 ப.(ம)நி.சீ.துறை நாள் 25.3.88 மற்றும் அரசு கடித எண் 118727/எப்.ஆர்III/88–1, நாள் 6.12.89) (அ.ஆ.எண் 428, ப.(ம)நி.சீ. துறை (FRIII) நாள் 16.12.2003) (அரசு ஆணை எண் (24) 3 ப.(ம)நி.சீ. துறை நாள் 12.1.06) (அரசு ஆணை எண் 77, ப.(ம)நி.சீ.துறை (FR-III நாள் : 17.06.2005), (அரசு ஆணை எண் 135, ப.(ம)நி.சீ.துறை (FR-III) நாள் : 29.05.2007)

தற்காலிக அரசு ஊழியர்கள்/ஒப்பந்தப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட விடுப்புகள் கிடையாது. (அரசாணை எண்.119, ப.(ம)நி.சீ.துறை (FR-III), நாள். 29.9.2011)

1. சித்ரா பௌர்ணமி
2. ஆடிப்பெருக்கு
3. ரிக் உபகார்மா
4. யஜீர் உபகார்மா
5. காயத்ரி ஜெபம்
6. சாம உபகார்மா



7. தீபாவளி நோன்பு
8. கார்த்திகை தீபம்
9. வைகுண்ட ஏகாதசி
10. ஆரூத்ரா தரிசனம்
11. போகி
12. மாசிமகம்
13. மகா சிவராத்திரி
14. ஷாபே பாரத்
15. ஷாபே காதேர்
16. ஹிஜ்ரோ – புதுவருடம்
17. அப்துல் காதேரின் கார்வீன்
18. மாண்டி வியாழக்கிழமை
19. ஆஷ் புதன்கிழமை
20. ஆல் ஷோல்ஸ் டே
21. கிருத்துமசுக்கு முதல் நாள்
22. புதுவருடத்திற்கு முதல் நாள்
23. வரலஷ்மி விரதம்
24. ஓணம்
25. ஸ்ரீகுருநானக் தேவிஜிஸ் பிறந்தநாள்
26. ஷாபே மிரவஜ்
27. ஆர்ஃபா
28. ஈஸ்டர்
29. டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள்
30. புத்த ஜெயந்தி
31. ரமலான் நோன்பு துவக்க நாள் (அ.ஆ.எண்.183, ப(ம)நி. சீ.துறை நாள் 13.7.2007)
32. பகவான் வைகுண்டசாமி பிறந்தநாள் (அ.ஆ.எண்.36 ப(ம)நி.சீ.நாள் 2.3.2012
33. மஹாளய அமாவாசை (அ.ஆ. எண்.122 ப. & சீ.துறை நாள் 28.12.2016)

வேற்று மதத்தைச் சார்ந்தவர்களும், மதவேறுபாடின்றி இவ்விடுப்பை துய்க்கலாம்.

# 2. தாமத வருகை மற்றும் அனுமதி

(1) அனுமதியுடன் ஒருவர் மாதத்தில் மூன்று முறை தாமதமாக வருவாராயின் அரை நாள் தற்செயல் விடுப்பு கழியும். அனுமதியின்றி மூன்று முறை தாமதமாக வருவாராயின், ஒருநாள் தற்செயல் விடுப்பு கழியும். பொதுவாக ஒருவர் அனுமதியுடன் இரண்டு முறையும், அனுமதியின்றி இரண்டு முறையும் தாமதமாக வரலாம். (அரசாணை எண் 414, நிர்வாகத்துறை, நாள் 17.7.89)

(2) தற்செயல் விடுப்பு இல்லாவிடில் ஈட்டிய விடுப்பிலிருந்தோ ஈடுசெய் விடுப்பிலிருந்தோ கழிக்கப்படும்–(அ.ஆ. எண். 130, நிர்வாகத் துறை, நாள் : 10.4.91)

(3) மதச்சார்பு விடுப்பிலிருந்து கழிக்கக்கூடாது–(அரசு கடித எண் 24686/அ.வி.III, ப.(ம)நி.சீ.துறை, நாள் 4.4.91)

(4) எவ்வித விடுப்பும் இருப்பில் இல்லாவிடில் எதிர்காலத்தில் திரளக்கூடிய ஈட்டிய விடுப்பிலிருந்து கழிக்கலாம்.–(அரசாணை எண் 130, நிர்வாகத்துறை நாள் 10.4.91)

(5) அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண் அரசு ஊழியர்கள் ஒரு மாதத்தில் மூன்று வெள்ளிக்கிழமை நாட்களில் காலையில் ஒரு மணி நேரம் தாமதமாக வர அனுமதியுண்டு. இந்தச் சலுகை நேரடியாக பொதுமக்களுக்கு சேவை

செய்து வரும் மருத்துவமனை, பள்ளிகள், கல்லூரிகள், காவல் நிலையங்கள் போன்றவற்றில் வேலை செய்யும் பெண் அரசு ஊழியர்களுக்கு கிடையாது. (அ.ஆ. எண். 393, நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29.12.95)

(6) கண்பார்வையற்றோர் அல்லது உடல் ஊனமுற்ற பணியாளர்கள் அலுவலகத்தை விட்டு 15 நிமிடங்கள் முன்னதாக செல்ல அனுமதியளிக்கப் படுகிறது. (அரசாணை எண்.50, ப.(ம)நி.சீ.(ஏ) துறை, நாள் 24.3.2010)

**பண்டிகைகளுக்கான சிறப்பு அனுமதி**

கீழ்க்காணும் பண்டிகைகளுக்கு அலுவலகத்தை விட்டு 1½ மணி நேரம் முன்னதாகச் செல்லவோ காலையில் 1½ மணி நேரம் தாமதமாக வரவோ அனுமதிக்கப்பட்டுள்ளது. (அ.ஆ. எண் 470 பலவகை (பொது.எம்) துறை, நாள் 3.3.67)

| இந்துக்கள் | இஸ்லாமியர்கள் |
|---|---|
| 1. கார்த்திகை தீபம் | 1. ரம்ஜான் முதல் நாள் |
| 2. சந்திர கிரகணம் | 2. பக்ரீத்துக்கு முந்தைய நாள் |
| 3. சூரிய கிரகணம் | கிருத்துவர்கள் |
| 4. அறுபத்தி மூவர் விழா (மைலாப்பூர்) | 1. ஆஷ் புதன்கிழமை |
| 5. தீபாவளி முதல் நாள் | 2. மாண்டி வியாழக்கிழமை |
| 6. காயத்ரி ஜெபம் | 3. கிறிஸ்துமசுக்கு முதல் நாள் |
| 7. மாசி மகம் | 4. ஈஸ்டருக்கு முந்தைய நாள் |
| 8. ஸ்ரீராம நவமி | 5. டிசம்பர் 31 |
| | 6. ஆல் ஷோல்ஸ் டே |

அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே, அந்தந்த பண்டிகைகளுக்கான அனுமதியை துய்க்கலாம் (அரசு கடித எண் 118707/எப்ஆர்(II)/88 நாள் 6.12.89)

## 3. சிறப்பு தற்செயல் விடுப்பு

### 1. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான சிறப்பு தற்செயல் விடுப்பு

(1) அரசு ஊழியர் ஒருவரின் மனைவி குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்ட நாளிலிருந்து, அரசு ஊழியருக்கு மருத்துவச் சான்றின்பேரில் 7 நாள் இவ்விடுப்பு வழங்கப்படும். முதல் அறுவை சிகிச்சை பயன் அளிக்காதபோது, மனைவி இரண்டாவது அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் 7 நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கலாம் – (அரசு ஆணை எண் 470, நிர்வாகத் துறை, நாள் 14.11.1990)

(2) சில்லரைச் செலவின பணியாளருக்கும் இவ்விடுப்பு வழங்கலாம் – (அரசு ஆணை எண் 1452, நல்வாழ்வுத் துறை, நாள் : 14.7.1982)

(3) இந்த விடுப்புடன் அரசு விடுமுறை அல்லது பிற விடுப்புகளையும் சேர்த்து எடுக்கலாம். இந்த விடுப்புகளை சாதாரணமாக விடுப்பு வழங்கும் அலுவலரே வழங்கலாம். (அரசு ஆணை எண் 356, நல்வாழ்வுத்துறை, நாள் : 22.2.1982)



(4) திருமணமாகாத அல்லது இரண்டு குழந்தைகளுக்கும் குறைவாக உள்ளவர் Recanalisation Operation செய்து கொண்டால், மருத்துவச் சான்றின் பேரில் 21 நாட்கள் விடுப்பு வழங்கலாம். (அரசு விடுமுறையும் சேர்த்து மொத்தத்தில்) இந்த விடுப்பை பிற விடுப்புகளுடன் சேர்த்தும் எடுக்கலாம். – (அரசு ஆணை எண் 2323, நல்வாழ்வுத் துறை, நாள் : 28.12.1981)

(5) ஆண் அரசு ஊழியர் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டால் 8 நாட்கள் விடுப்பு மட்டுமே வழங்கப்படும். (அடிப்படை விதி இணைப்பு 7ன் விதி (ii) உள்ள துணை விதி 7(ஏ)ன் கீழ்)

(6) பெண் அரசு ஊழியர் Non-Puerperal Sterlisation அறுவை சிகிச்சை செய்து கொண்டால் 20 நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கலாம். பேறு காலத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் சிறப்பு தற்செயல் விடுப்பு கிடையாது – (மேற்படி விதி)

(7) தற்காலிகப் பணியில் உள்ள திருமணமான பெண் ஊழியர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அவருக்கு 20 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும் – (அரசாணை எண் 299, நல்வாழ்வுத்துறை, நாள் 10.3.1982)

(8) சில நேரங்களில் அறுவை சிகிச்சை காரணமாக மேற்படி விடுப்புக்கும் அதிகமாக சிறப்பு விடுப்பு தேவைப்பட்டால் மருத்துவ அலுவலரின் சான்றின் பேரில் அதிகமான விடுப்பு வழங்கப்படும் – (அரசாணை எண் 644, நல்வாழ்வுத் துறை, நாள் 25.3.1982)

(9) சாதாரணமாக விடுப்பு வழங்கும் அலுவலரே இந்த விடுப்பை வழங்கலாம். (அரசாணை எண் 356, நல்வாழ்வுத் துறை, நாள் 22.2.1982)

### 2. தொற்று நோய்க்கு சிறப்பு தற்செயல் விடுப்பு

(1) ‘ராபிஸ்’ நோய் குடும்பத்தில் எவருக்கேனும் கண்டிருந்தாலும், அரசு ஊழியருக்கு மருத்துவச் சான்றின் பேரில் 10 நாட்கள் விடுப்பு வழங்கப்படும். (அடிப்படை விதி இணைப்பு VII–ன் பிற்சேர்க்கை I துணை விதி 7 (a) மற்றும் அரசாணை எண் 28 ப.நி.சீ.து. நாள் 24.2.2017

(2) இந்த வியாதிகள் அரசு ஊழியருக்கே கண்டிருப்பின் அவர் (U.E.L. on M.C.) அல்லது தகுதியுள்ள பிற விடுப்புகளை அனுபவிக்கலாம். (அ.ஆ.எண் 264, நல்வாழ்வுத் துறை நாள் 03.06.1997)

(3). பெரியம்மை (Chicken Pox) மற்றும் தட்டம்மை நோயால் (Measles) பாதிக்கப்பட்டிருந்தால் 7 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும். அரசாணை எண் 28, ப.ம.நி.சீ. துறை நாள் 24.2.17.

(4) பன்றிக்காய்ச்சல் (Swine Flu) நோயால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியருக்கு 7 முதல் 10 நாட்கள் வரை சிறப்பு தற்செயல் விடுப்பு அனுமதிக்கலாம். அ.ஆணை எண். 28 ப.ம.நி.சீ. துறை நாள் 24.2.2017

(5) பிளேக் (Plague) மற்றும் ராபிஸ் நோயால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு 10 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு அனுமதிக்கலாம். அ. ஆணை எண் 28 ப.ம.நி.சீ. துறை நாள் 24.2.2017.

**3. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க சிறப்பு தற்செயல் விடுப்பு**

(1) தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவருக்கு கீழ்க்கண்டவாறு சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும்.

(i) மேற்படி போட்டிகளில் கலந்திட தேர்வு பெற்றவர்களுக்கும், அதற்கான பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல வேண்டியவர்களுக்கும் பயணக்காலம் உட்பட அனைத்தும் பணிக்காலமாக கருதப்படும்.

(ii) மேற்படி விளையாட்டுக்கான போட்டிகளில் கலந்து கொள்ள 30 நாட்கள் வரை இவ்விடுப்பு கிடைக்கும்.

(2) இந்த விடுப்பைப் பிற விடுப்புகளுடன் சேர்த்தும் எடுக்கலாம்.

(3) தனிப்பட்ட முறையில் போட்டிகளில் கலந்து கொள்பவருக்கு இவ்விடுப்பு கிடைக்காது (அ.ஆ. எண் 1755, கல்வித்துறை, நாள் 28.11.1988)

**4. புற்றுநோய் சிகிச்சைக்கென சிறப்பு தற்செயல் விடுப்பு (FR 85)**

அரசு ஊழியர் புற்றுநோய் சிகிச்சைக்கென கீமோ தெரபி மற்றும் ரேடியோதெரபி சிகிச்சை பெறும் ஒவ்வொரு முறையும், ஏனைய தகுதியான விடுப்பு இருப்பினும் 10 நாட்கள் உரிய மருத்துவ சான்றுடன் சி.த.விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. 10 நாள் விடுப்பு தெரபி சிகிச்சைக்கு முன்னால் இருந்து துவங்குகிறது. (அரசாணை (நிலை) எண் 89, ப.(ம) நி.சீ. துறை (FR-III) நாள் 16.07.2019)

சிறப்பு பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை (Special children) கொண்ட அரசு ஊழியர்கள் அந்த குழந்தைகளுக்கு சிறப்பு பராமரிப்பு தேவை என்பதற்கான உரிய சான்றினை சமர்பிக்கும் பட்சத்தில் 23.03.2020 முதல் ஆண்டிற்கு 6 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 39, ப.(ம) நி.சீ. துறை (FR-III) நாள்.23.03.2020 (ம) அரசாணை (நிலை) எண்.111/ ப.(ம) நி.சீ. துறை, (FR-III) நாள் 01.10.2020.

FR Annexure VII 85 Ruling (3) Heading II (14), Rule Amendment GO (MS) No.05/ P&AR (FR.II) Date 06.01.2020

டிசம்பர் 3 சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் என்பதால் மாற்றுத்திறனாளிகளுக்கு, சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கலாம். அ.ஆ. எண்: 72 சமூக நலத்துறை நாள் : 28.05.2009

## 4. ஈடுசெய் விடுப்பு

(1) அரசு விடுமுறைகளில் பணிபுரிவதற்கு, ஈடாக வேறு நாளில் எடுத்துக் கொள்ள வழங்கப்படும் விடுப்பே ஈடுசெய் விடுப்பாகும். ஒரு ஆண்டுக்கு 20 நாட்கள் இவ்விடுப்பு வழங்கப்படும். இடமாற்றலில், புதிய இடத்திலும் இவ்விடுப்பை எடுக்கலாம். இவ்விடுப்பினை ஆறு மாதங்களுக்குள் துய்க்காவிடில் காலாவதியாகிவிடும். (அ.ஆ. எண் 2218 பொதுத்துறை, நாள் 14.12.1981)

(2) இந்த விடுப்பைத் தற்செயல் விடுப்பு மற்றும் அரசு விடுமுறை ஆகியவற்றுடன் சேர்த்து 10 நாட்களுக்கு மிகாமல் எடுக்கலாம்.

(3) ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்புடன் சேர்த்தும் எடுக்கலாம். (அடிப்படை விதி 68ன் கீழ் உள்ள குறிப்பு)



(4) முழுநேரக் காவலர்களுக்கு அரசு விடுமுறை நாட்களில் பணிபுரிவதற்காக ஈடுசெய் விடுப்பு வழங்கலாம். (அரசு க.எண். 22402/பணி–எப்93–1/நிர்வாகத்துறை, நாள் 4.5.93)

(5) தேவையின்றி அரசு ஊழியரை விடுமுறை நாளில் பணிபுரிய நிர்ப்பந்திக்கக் கூடாது. (அ.ஆ.எண் 186, நிர்வாகத் துறை, நாள் 15.6.93)

(6) 6 மாதத்திற்கு 10 நாட்கள் என்ற உச்சவரம்பு இல்லை. தகுதியுள்ள நாட்களை முழுமையாக துய்க்கலாம்.

(7) முகாமின் போது விடுமுறையில் பணிபுரிந்தார் என்பதற்காக ஈடுசெய் விடுப்பு துய்க்க இயலாது ( த.நா.அலுவலக நடைமுறை பத்தி 169)

(8) பணிவரன் முறைப்படுத்தப்பட்ட அனைத்து காவலர்களுக்கும் அரசு விடுமுறை நாட்களில் பணிபுரிந்தமைக்கு, ஈடுசெய்யவிடுப்பு வழங்கலாம்

ஒருகாவலர் மட்டும் பணியாற்றும் அலுவலகங்களை பொருத்தமட்டில், வாரம் ஒரு நாள் விடுப்பு அனுமதிக்கும் பொருட்டு, அத்துறையில் உள்ள (அலுவலக உதவியாள் போன்று) மற்ற அடிப்படைப் பணியாளர்களைக் கொண்டு மாற்று முறையில் பணி செய்ய தக்க மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

ஒன்றுக்குமேற்பட்ட காவலர்கள் பணிபுரியும் அலுவலகங்களில் சுழற்சி முறையில் ஈடுசெய்யும் விடுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

1. அரசு க.எண்.22402/பணி–எப்/93–1 ப & நி.சீ.(பணி.எப்.) துறை எண்.4.5.1993
2. அரசு க.எண்.48154/பணி எப் ப & நிசீ.(பணி.எம்.) நாள்.10–02–1994

## 5. மகப்பேறு விடுப்பு

(அரசாணை எண். 237, நிர்வாகத் துறை, நாள் 29.6.93)
(அரசாணை எண். 51, ப.(ம)நி.சீ.து., நாள் 16.5.2011)
(அரசாணை எண் 138, ப.(ம) நி.சீ.து., நாள் 19.11.2013)
(அரசுக் கடிதம் எண் 13965/FR–3/2015 ப.(ம) நி.சீ.து., நாள் 20.4.15)
(அரசாணை எண் (பொது) 164, ப.(ம) நி.சீ.து., (FR.III) துறை, நாள் 25.10.2019)

(1) பெண்களின் விருப்பத்தின் பேரில் தகுதிகாண் பருவம் முடித்த திருமணமான பெண் ஊழியருக்கு 270 நாட்களுக்கு அதிகமாகாமல் மகப்பேறுக்கு முன்னரும், பின்னரும் (அரசு கடிதம் எண் 41615/FR III/95-1 P&R Dt.13.10.95) பெண் ஊழியரின் விருப்பத்தின் பேரில் விடுப்பு அளிக்கலாம். (அடிப்படை விதி 101 (a))

(1a) தகுதிகாண் பருவம் முடித்த திருமணமான பெண் அரசு ஊழியருக்கு 9 மாதம் (270 நாட்கள்) உயர்த்தப்பட்டு முழு சம்பளத்துடன் மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் அரசு ஆணை எண். 105/P&AR (FRIII) Dt. 07.11.2016)

1(b) மகப்பேறு விடுப்பு 01.07.2021 முதல் 9 மாதத்தில் இருந்து (270 நாள்) 12 மாதங்களாக (365 நாள்) உயர்த்தப்பட்டுள்ளது. (அரசு ஆணை (நிலை) எண். 84 மனிதவள மேம்பாட்டு (FR–III) துறை, நாள் 23.08.2021

(2) பிற விடுப்புகளில் இருக்கும்பொழுது குழந்தை பிறந்தால், குழந்தை பிறந்த நாளிலிருந்து 360 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்.

(3) தகுதிகாண் பருவத்தினராக இருந்தால் ஓராண்டு காலம் முடிப்பதற்கு முன்னரே இவ்விடுப்பு வழங்கலாம். ஆனால், அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்புப் போக மீதமுள்ள விடுப்பே மகப்பேறு விடுப்பாக வழங்கப்படும் (அரசு க.எண். 44189/82–13, நிர்வாகம், நாள் 16.12.1983)

(4) 25–10–2019 முதல் முறையான நிலையில் நியமனம் பெற்ற நிரந்தரம் செய்யப்படாத திருமணம் ஆன பெண் ஊழியர்க்கு கீழ்க்கண்டவாறு மகப்பேறு விடுப்பு வழங்கலாம்.

(i) அன்னாரின் ஈட்டிய விடுப்பிலிருந்து கழிவு ஏதும் செய்யாமல், 360 நாட்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கலாம்.

(ii) மகப்பேறுக்கு பின்பு பணியில் சேரும் ஊழியராயின், குழந்தை பிறந்தநாளில் இருந்து பணியின் சேரும் நாள் வரையிலான நாட்களை (இருதினங்களும் உள்அடக்கிய) 360 நாட்களில் கழித்தபின்பு, பின்வரும் மீத நாட்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கலாம்.

அரசுக் கடித (நிலை) எண் : 16049 மனிதவள மேலாண்மை (அ.வி.III) 2021 துறை நாள்: 17.09.2021ன் படி, 365 நாட்கள் ம.பே.விடுப்பு அனுமதிக்கப்பட்ட அரசாணை எண்: 84 ம.வ.மே (அவி III) துறை நாள்: 23.08.2021 வெளியிடப்பட்ட நாளுக்கு முன்னதாக ம.பே.விடுப்பில் சென்ற ஊழியர் 270 நாட்களுக்கு பின்னர் தகுதியான வேறு விடுப்பினை தொடர்ந்தால். அவ்விடுப்பு நாட்களை யும் 365 நாட்களுக்கு மிகாமல் மகப்பேறு விடுப்பாக வரன்முறை செய்யலாம்.

(5) அவசரத் தேவைகளுக்காக நியமனம் பெற்ற தற்காலிகப் பணியாளராக இருப்பின், ஓராண்டு பணி முடிக்க வேண்டும். அதுவும் அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு போக மீதி உள்ள காலத்திற்கு மட்டுமே மகப்பேறு விடுப்பு வழங்கப்படும்.

(அரசாணை (நிலை) எண் 164, ப.(ம) நி.சீ.(FR-II) துறை நாள் 25.10.2019)

விதிதிருத்தம் 25-10-19 முதல் அரசாணை (நிலை) எண்.91/ ப.ம.நி.சீ.(FR-II) துறை, நாள் 28.07.2020ல் வழங்கப்பட்டுள்ளது.

(6) குழந்தை இறந்து பிறக்கும் நிகழ்வுகளில் (still born babies) மகப்பேறு விடுப்பு 90 நாட்கள் அனுமதிக்கப்படும்

(7) 29.6.93 முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இந்த விடுப்பு கிடைக்கும். உயிருடன் இரண்டு குழந்தைகள் இருந்தால், மூன்றாவது குழந்தைக்கு விடுப்பு கிடைக்காது.

(8) முதல் பிரசவத்தில் இரட்டை குழந்தை பிறந்திருந்தாலும் இரண்டாவது பிரசவத்திற்கு மகப்பேறு விடுப்பு அனுமதிக்கலாம். அரசாணை எண் 77 ப.நி. சீர்திருத்த துறை நாள் 20.6.2018

மேற்கண்ட ஆணைக்கு விதித்திருத்தம் 20.06.2018 முதல் அமல்படுத்தப்பட்டது. அரசாணை எண் 149 ப.நி.சீ.துறை (FRII) 31.10.2018

மகப்பேறு விடுப்பில் உள்ளபோது மாதஊதியம் வழங்கலாம். (Article 72 of TNFC Vol I ), மகப்பேறு விடுப்பு காலமானன 360 நாட்களுக்கும் வீட்டு வாடகைப்படி பெறலாம். (அரசாணை எண்.89 மனிதவள நிர்வாகத்துறை நாள்: 09.09.2021)

(9) மகப்பேறு விடுப்பிலிருந்து திரும்பும் ஊழியரை முடிந்தவரை அதே இடத்தில் பணி அமர்வு செய்ய வேண்டும் – (அரசு க.எண். 22901/93–1 நிர்வாகத் துறை, நாள் 18.6.93)

(10) மகப்பேறு விடுப்பைத் தொடர்ந்து தகுதியுள்ள எந்த விடுப்பினையும் ஓராண்டுக்கு மிகாமல் மருத்துவச்சான்றின் பேரில் வழங்கலாம். பிறந்த குழந்தையின் உடல் நலம் பாதிக்கப்பட்டு தாயின் தனிப்பட்ட கவனிப்பு தேவை என மருத்துவர் சான்றளிக்கும் நிகழ்வுகளுக்கும் இது பொருந்தும்.

விதி திருத்தம் : 28/07/2019 முதல் அரசாணை எண் (பல்வகை) எண்.91/ ப.ம.நி.சீ.(FR-II) துறை நாள் 28.07.2020ல் வழங்கப்பட்டுள்ளது.



**கருச்சிதைவு அல்லது கரு நீக்குதலுக்கான விடுப்பு**

(1) ஒருவருக்கு கருவுற்ற 12 வாரங்களுக்குப் பின்னரும் 20 வாரங்களுக்கு முன்னரும் கருச்சிதைவு ஏற்பட்டால், இவ்விடுப்பு வழங்கப்படும். தானே முன்வந்து அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் கருச்சிதைவு செய்து கொண்டாலும், இவ்விடுப்பு வழங்கப்படும். இயற்கை அபார்ஷன், மிஸ்கேரியேஜ் ஆகியவை களுக்கும் 6 வாரங்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கலாம்.

(2)தகுதிகாண் பருவத்தினராக இருந்தால் அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்புப் போக மீதமுள்ள விடுப்பே வழங்கப்படும்

(3) தற்காலிகப் பணியில் உள்ளவர் ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும். இவர்களுக்கு இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பு போக மீதி உள்ள விடுப்பு (42 நாட்களுக்குட்பட்டு) மகப்பேறு விடுப்பாக வழங்கப்படும்.

4) இந்த விடுப்புக்கு வரையறை கிடையாது. எத்தனை குழந்தைகள் இருப்பினும் விடுப்பு வழங்கலாம் – (அரசாணை எண் 237, நிர்வாகத்துறை, நாள் 29.6.93) குடும்ப கட்டுப்பாட்டு ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை இல்லை.

**தத்து எடுத்துக் கொள்வதற்கு மகப்பேறு விடுப்பு**

தத்து எடுத்துக் கொள்ள விரும்பும் பெண் அரசு ஊழியர்களுக்கு குழந்தையின் வயதினை பொறுத்து கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு வருட காலம் அளவிற்கு அனுமதிக்கலாம்.

(1) தத்து எடுத்துக் கொள்ள விரும்பும் அரசு ஊழியருக்கு குழந்தை இல்லாமலோ அல்லது உயிருடன் உள்ள ஒரு குழந்தை மட்டும் இருக்க வேண்டும்.

தற்போது மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல் மாநில அரசுப் பெண் பணியாளர்களுக்கு 180 நாட்கள் குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை பின்வரும் நிபந்தனைகளுடன் வழங்கி ஆணையிடுகிறது.

தற்போது இந்த சிறப்பு தத்து எடுப்பு விடுப்பு 5.1.2018 முதல் 270 நாட்களாக துய்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விதி திருத்த அரசாணை எண் 150 ப.நி. சீ துறை (FRII) நாள் : 31.10.2018 [அவி.101(ab)] .

அ) தத்தெடுக்கும் குழந்தை ஒரு வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

ஆ) குழந்தை, சட்டப்படி தத்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இ) முறையாகத் தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மருத்துவச் சான்று ஏதுமின்றி வழங்கலாம்.

ஈ) (அரசாணை (நிலை) எண். 56, ச.ந.(ம) நிநாள் 10.4.2013) மற்றும் அரசாணை எண். (பல்வகை) 124/ப.ம.நி.சீது. நாள் 18.10.2013

## 6. ஈட்டிய விடுப்பு

**(அரசாணை எண். 157, P&AR, Dt : 24.6.94)**

(அ) 1.7.94 முதல் விடுப்பு முற்றிலுமாக மைய அரசு ஊழியருக்கு வழங்கப்படுவது போன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதன்படி ஜனவரி 1 மற்றும் ஜூலை 1 ஆகிய தேதிகளில் அரசு ஊழியருக்கு முறையே 15 நாட்கள் ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கப்படும்.

(இ) மொத்தம் 240 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

(ஈ) ஒரு அரை ஆண்டின் இடையில் புதியதாக பணி ஏற்கின்ற முறையான ஊழியருக்கு ஒரு மாதத்திற்கு 2½ நாள் என்ற அளவில் அவரின் கணக்கில் இருப்பு வைக்கப்படும்.

(உ) அரை ஆண்டின் இடையில் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற அல்லது விலகும் ஒருவருக்கும் ஒரு மாதத்திற்கு 2½ நாள் என்ற அளவில் ஈட்டிய விடுப்புக் குறைக்கப்படும். இதேபோன்று பணிக்காலத்தில் இறப்பவர்களுக்கும் பணியிலிருந்து நீக்கப்படுபவர்களுக்கும் ஈட்டிய விடுப்பு குறைக்கப்படும்.

(ஊ) ஒரு அரையாண்டில் ஈட்டிய விடுப்பு இருப்பில் சேர்த்த பின்னர் ஒருவர் ஊதியமில்லா விடுப்பு அனுபவிக்க நேருமாயின் (LLP. with or without M.C.) 10 நாள் LLPக்கு ஒரு நாள் என்ற அளவில் இவ்விடுப்பு குறைக்கப்படும். அதிகஅளவாக 15 நாட்கள். தற்காலிக பணியாளர் (அ) தகுதிகாண் பருவகால பருவகாலத்தினரைப் பொருத்தவரை அசாதாரண விடுப்பு காலத்தில் 1/20 பங்குக்கு சமமான நாட்கள் (அதிக அளவாக எட்டு நாட்கள்) வழங்கப்படும் விடுப்பில் கழித்துக் கொள்ளப்பட வேண்டும் (அரசு க.எண். 60094/அ.வி. III94-14 ப & நி.சீ.துறை நாள்21.06.96)

(எ) பின்னமாக வரும் ஈட்டிய விடுப்பு முழு நாளாகக் கணக்கிடப்படும்.

(ஏ) தற்காலிகப் பணியாளர்கள் / தகுதிகாண் பருவத்தினர் விஷயத்தில் ஒரு அரையாண்டில் அவர்கள் பணிபுரியக்கூடிய ஒவ்வொரு இரண்டு முழு மாதத்திற்கும் 2½ நாள் வீதம் வழங்கலாம். மொத்த இருப்பு 30 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.

(ஐ) கடைநிலை ஊழியருக்கு மேலே (ஏ)ல் குறிப்பிட்டபடி ஈட்டிய விடுப்பு இருப்பு வைக்கப்படும். பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர், அரை ஆண்டின் துவக்கத்திலேயே 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு இவர்கள் கணக்கில் இருப்பு வைக்கப்படும்.

(ஒ) ஒரு அரை ஆண்டின் முதலில் ஒருவர் விடுப்பில் இருக்க நேரிட்டால், அவர் மீண்டும் பணி ஏற்பார் என்று திட்டவட்டமாகத் தெரிந்தால்தான் அவருக்கு 15 நாட்கள் இருப்பு வைக்கப்படும்.

(ஓ) ஒரு ஆண்டு துவக்கத்தில் 226 முதல் 240 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருப்பு இருக்கும் பட்சத்தில், அவருக்கு அரை ஆண்டு துவக்கத்தில் இருப்பு வைக்கப்படும் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு தனியாக இருப்பு வைக்கப்படும். அந்த அரை ஆண்டில் அனுபவிக்கும் ஈட்டிய விடுப்பு மற்றும் சரண் விடுப்பு போக மீதம் உள்ள விடுப்பு, அரை ஆண்டின் இறுதியில் பழைய இருப்பில் சேர்க்கப்படும். இது மொத்தம் 240 நாட்களுக்கு அதிகமாகக் கூடாது.



## 7. சொந்தக் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

(Unearned Leave on Private Affairs) T.N.L.R. 13 and 14

(1) தகுதியான விடுப்பு

**உயர்நிலைப்பணி**

10a (i) மற்றும் தகுதிகாண் பருவத்தினருக்கு இவ்விடுப்பு கிடைக்காது.

0–10 வருடப் பணிக்கு 90 நாட்கள் கிடைக்கும்

10 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு 180 நாட்கள்

**அடிப்படைப் பணி**

முறைப்படுத்திய தேதியிலிருந்து 15 வருடங்கள் பணி முடித்திருந்தால், உயர்நிலைப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் இந்த விடுப்பு வழங்கலாம்.

(2) விடுப்பு முடிந்து மீண்டும் பணி ஏற்பார் என்ற உறுதியின் அடிப்படையில் இந்த விடுப்பு வழங்கப்படும்.

(3) ஒரே நேரத்தில் மூன்று மாதம் எடுக்கலாம். ஈட்டிய விடுப்புடன் சேர்த்து எடுத்தால் ஆறு மாதங்களுக்கு அதிகமாகக் கூடாது. இவ்விடுப்பு நாள் கணக்கில்தான் வழங்கப்பட வேண்டும்.

(4) ஒவ்வொரு விடுப்புக்குமுள்ள நிபந்தனைக்குட்பட்டு இவ்விடுப்பினை பிற விடுப்புடன் இணைத்து எடுக்கலாம்.

## 8. ஊதியமில்லா விடுப்பு [F.R.85(a)]

மற்ற விடுப்புக்கள் ஏதும் வழங்க இயலாத நிலையில் அல்லது ஊழியர் விரும்பிக் கேட்டால், இந்த விடுப்பு வழங்கப்படும். இந்த விடுப்பிற்கு ஊதியம் கிடையாது. இந்த விடுப்பை பிற விடுப்புடன் சேர்த்தும் எடுக்கலாம்.

மருத்துவச் சான்றின் பேரில் 60 நாட்களுக்கு மேல் இந்த விடுப்பு எடுத்தால் மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் – (அரசு க.எண். 695481/82–1, நிர்வாகத் துறை நாள் 13.9.1982)

மருத்துவச் சான்றின் பேரில் ஊதியமில்லா விடுப்பு எடுத்தால் இந்த விடுப்புக்காலம் ஓய்வூதியம் மற்றும் ஊதிய உயர்வுக்கு கணக்கில் சேரும் – (அடிப்படை விதி 26 (bb)

## 9. Hospital Leave (instruction 2 under F.R.101(b)

அபாயகரமான இயந்திரங்கள், வெடி மருந்துகள், பிற மருந்துகள் அல்லது மிகவும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுவோருக்கு இவ்விடுப்பு வழங்கப்படும்.

## 10. மருத்துவ விடுப்பு

(Unearned Leave on Medical Certificate) T.N.L.R. 15 & 15A

(1) தகுதியான விடுப்பு

உயர்நிலைப்பணி

10(a) (i) மற்றும் 2 வருடம் பணி முடிக்காத தகுதிகாண் பருவத்தினருக்கு இவ்விடுப்பு கிடைக்காது. (த.நா.வி.விதி 23 உபவிதி 2)

உயர்நிலைப் பணி

| | | |
|---|---|---|
| தகுதிகாண் பருவத்தினர் | 0 – 2 வருடம்<br>2 – 5 வருடம்<br>5 – 10 வருடம் | இல்லை<br>90 நாட்கள்<br>180 நாட்கள் |
| நிரந்தரமாக்கப்பட்டவர்/ தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டவர் | 2 – 5 வருடம் வரை<br>5 – 10 வருடம் வரை<br>10 – 15 வருடம் வரை<br>15 – 20 வருடம் வரை<br>20 வருடத்திற்கு மேல் | 90 நாட்கள்<br>180 நாட்கள்<br>270 நாட்கள்<br>360 நாட்கள்<br>540 நாட்கள் |

அடிப்படைப் பணி

| தற்காலிகம் | இல்லை |
|---|---|
| தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டவர்/ 15 ஆண்டு பணி முடிக்காதவர் | ஓர் ஆண்டிற்கு 10 நாட்கள் வீதம் |
| முறைப்படுத்திய நாளிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால் | உயர்நிலைப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் இவ்விடுப்பு எடுக்கலாம். |

(2) இந்த விடுப்பு நாள் கணக்கில்தான் வழங்கப்பட வேண்டும்.

(3) எந்த நோய்க்காகவும் இந்த விடுப்பு வழங்கலாம்.

(4) சாதாரணமாக ஒருவர் பணிக்காலத்தைக் கணக்கிட்டுத்தான் இந்த விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால் காச நோய், புற்று நோய் மற்றும் தொழு நோயாளிகளுக்கு ஒரே நேரத்தில் 18 மாத விடுப்பும் வழங்கலாம். (T.N.L.R. 15, 15A23(a)(i) and Ruling (2) under T.N.L.R. 23-D) இருதய சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்றம், கண்ணில் உள்ள Retina மாற்றம் ஆகியவற்றுக்காக சிகிச்சை பெறுபவருக்கும் பணிக்காலத்தை கணக்கிடாமல் இவ்விடுப்பு வழங்கலாம். (அ.ஆ.எண். 5 நிர்வாகத் துறை, நாள் 10.10.1988) 'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கும், HIV Positive என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கும் ஒரே நேரத்தில் வரையறையின்றி 18 மாதங்கள் வரை மருத்துவ விடுப்பு வழங்கலாம். (அ.ஆ.எண்.131 ப.நி.சீ.து. (எப். ஆர்.III) நாள். 23.9.09.

(5) A.M.A./R.M.P. ஆகியவர்கள் இவ்விடுப்புக்கு மருத்துவச் சான்று வழங்கலாம். (Annexure to F.R.)

(6) H.P.I.M/C.G.I.M/B.I.M. ஆகிய தகுதியுள்ளவர்களும் இந்த விடுப்பிற்கு மருத்துவச் சான்று வழங்கலாம். (G.O. Ms. No, 816, P&A.R, Dt. 31.7.81)



(7) அரசு மருத்துவமனையில் பணிபுரியும் ஓமியோபதி மருத்துவம் பார்ப்பவர்களும் இந்த விடுப்புக்கு சான்று வழங்கலாம். (G.O. Ms. No.2235, Health Dt.10.12.81).

(8) மருத்துவ சான்றிதழில் குறிப்பிட்ட தேதியிலிருந்துதான், ஈட்டா விடுப்பு துவங்கும். மருத்துவ விடுப்பு முடிந்து, தகுதிச் சான்றிதழ் எந்த தேதியில் வழங்கப்படுகிறதோ அந்த தேதியோடு மருத்துவ விடுப்பு முடிவடைகிறது. மருத்துவர் எந்த தேதியில் விடுப்பு முடிவதாக சான்று தருகிறாரோ, அந்த தேதி அரசு விடுமுறையானால், அந்த தேதியின் விடுப்பினை பின் இணைப்பு செய்து கொண்டதாக கருதலாம். இந்த உத்தரவு 30.5.94 முதல் அமுலாகியது. (அரசு கடிதம் எண் 64335 FRV/94–5, நாள் 27.3.95)

(9) அரசுத் துறைகளில், உரிய முகமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெற்ற ஊழியர்கள், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே மருத்துவர் சான்றின் பேரில் ஈட்டிய விடுப்பு அல்லது அசாதாரண விடுப்பினைத் துய்க்கலாம்

(அரசு கடிதம் எண்.39623/FR III/2015-1, P&AR Dept. dt.7-1-16)

### மருத்துவக் குழுவிற்கு அனுப்புதல்

Appendix - I Annexure, II, (FR 74 9 - A(i)(a) 59 days

(1) ஒரே நேரத்தில் 60 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக மருத்துவ விடுப்பு எடுத்தாலும், இடமாற்றல் / பணிமாற்றல் ஆணை பெற்றவுடன் மருத்துவ விடுப்பு எடுத்தாலும் அல்லது அடிக்கடி மருத்துவ விடுப்பு எடுத்தாலும், 60 நாட்களுக்கு அதிகமாக LLP on MC எடுத்தாலும், விடுப்பு விண்ணப்பம் பெற்ற 3 {Rule 74, 9A} தினங்களுக்குள் மருத்துவக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டும். (G.O.Ms. No.460, P&A. R. Dt. 21.4.78 மற்றும் அரசு. க.எண். 16213/ஏ/அ.வி./111/87–10, P&AR நாள் 26.2.88). தொடர்ச்சியாக அல்லாமல் இடையிடையே விடுப்பு அனுபவித்தாலும், மொத்த மருத்துவ விடுப்பு நாட்கள் 60 நாட்களுக்கு அதிகமானால் மருத்துவக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் – (Govt. Lr. No.48445/FR. V/95-1, P&A R Dt. 19.7.95)

FR 74 விதி 9 A(VII) – ன்படி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் பணியாளர்களுக்கு மருத்துவ சான்றிதழ் மீதான ஈட்டாவிடுப்பு வழங்குவதற்கு மருத்துவ குழு பரிந்துரைக்கு அனுப்ப தேவையில்லை அரசு ஆணையில் அரசால் ஏற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சை பெறும் அரசு பணியாளர்களுக்கு மருத்துவ சான்றிதழ் பேரில் ஈட்டா விடுப்பு வழங்குவதற்கு அவர்களை மருத்துவக்குழுப்பரிந்துரைக்கு அனுப்ப தேவையில்லை. அம்மருத்துமனையில் உள்ள மருத்துவ அதிகாரியிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் மருத்துவ அறிக்கையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) மருத்துவ விடுப்பில் சென்று ஏழு நாட்களுக்குள் {Rule 74, 3(A)} மருத்துவச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். மருத்துவக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இருப்பின், விண்ணப்பம் கிடைத்த மூன்று நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

(3) மருத்துவக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட ஊழியர், மருத்துவக்குழுவின் முன் குறித்த தேதியில் நேர்நில்ல தவறினாலோ தகுதி சான்று பெற்ற பின்பும் பணியில் சேரத் தவறினாலோ அத்தகைய பணிக்கு வராக் காலங்கள், ஊழியருக்கு தகுதியுள்ள ஏனைய விடுப்பாக முறைப்படுத்தப்பட வேண்டும். {Rule 74, 24A}

அரசாணை (நிலை)எண்.8/ப.ம.நி.சீ.(FR-III)-2 துறை, நாள் 19.01.2015
FR-Annexure II, Section-II Leave Rule - 15 (i) (ii) (iii) (iv)

**விதிதிருத்தம்**

அரசாணை (நிலை) எண்.6/ப.ம.நி.சீ. (FRII) துறை நாள் 22.01.2021
(Under Rule-74 Annexure-II-Part-1 in Appendix-I to FR instead of Ammending Rule-15 TNLR-1933)

(4) காச நோயாளிகள், தொழுநோயாளிகள் மற்றும் புற்று நோயாளிகளை மருத்துவக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட உதவி மருத்துவரின் சான்று மட்டுமே போதுமானது. (Govt. Lr. No.195778/76–77/P&AR., Dated 3.1.78) Coronory Surgery, Kidney Transplantation மற்றும் Retina Transplantation ஆகிய நோய்களுக்கு ஊழியர் சிகிச்சை பெறும் மருத்துவமனையின் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரி சான்று வழங்கினால் போதுமானது. (அ.ஆ.எண் 527 P&A.R. Dt. 10.10.88)

(5) அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்நோயாளிகள் விஷயத்தில் மருத்துவமனைக் கண்காணிப்பாளரின் சான்றே போதுமானது. (G.O.Ms. No.727/P&A.R., Dated 12.8.70 மற்றும் அரசு ஆணை எண் 293, நிர்வாகத்துறை, நாள் 18.5.89)

(6) மருத்துவமனையினின்று விடுபட்டதைத் தொடர்ந்து விடுப்புத் தேவைப்படின், மருத்துவமனை வார்டின் உதவி மருத்துவர் சான்று அளித்தால் போதும். (Govt. Lr. No.12087/82-4, P&A.R. Dated 12.5.82)

(7) தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருப்பவர் 60 நாட்களுக்கு அதிகமாக விடுப்பு எடுத்தால், அவரை அருகில் உள்ள மருத்துவக் குழுவிற்கு அனுப்பி கருத்துரை பெற வேண்டும். இதற்காக ஆம்புலன்ஸ் கட்டணம் செலுத்தியிருந்தால் ஊழியர் திரும்பப் பெறலாம். (G.O.Ms.No.307, P&AR, Dated 24.3.86, G.O.Ms. No. 293, P&A.R. Dt. 18.5.89)

(8) த.நா. அரசு ஊழியர் நல நிதி திட்டத்தின்கீழ் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சை பெறுபவர்களுடைய மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பினை மருத்துவக் குழுவிற்கு பரிந்துரை செய்ய வேண்டியதில்லை. மருத்துவச் சான்றிதழுடன், சிகிச்சைக்கான விவரங்களின் மருத்துவமனை ஆவணங்களை இணைத்தால் போதுமானது. விடுப்பு ஒப்பளிப்பு அலுவலர், சிகிச்சை சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் ஏற்படின், இரண்டாவது கருத்துக்காக மருத்துவக் குழுவிற்கு அனுப்பலாம். அரசு ஊழியர் சிகிச்சைக்காக மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். பரிசோதனைக்காக அல்ல. இந்த சலுகை 14.11.2006 முதல் அமலுக்கு வருகிறது. (அ.ஆ. எண். 148, ப.(ம)நி.சீ.துறை நாள் 14.9.06 அரசாணை எண்.184, ப&நி.சீ.(அ.வி.IV) துறை, நாள் 10.10.2008)

## 11. Special Disability Leave (அடிப்படை விதி 83 & 83A)

அரசுப் பணிகள் மேற்கொள்கையில் விபத்துக்குள்ளாகின்றவர்களுக்கு அதிகபட்சமாக 24 மாதங்களுக்கு இவ்விடுப்பு வழங்கப்படும். விபத்து நடந்து முடிந்த சில நாள் கழித்து உடலில் ஊனம் ஏற்பட்டாலும் அல்லது மீண்டும் ஊனம் ஏற்பட்டாலும் மருத்துவக் குழுவின் பரிந்துரையின் பேரில் இவ்விடுப்பு வழங்கப்படும். துறைத் தலைவரால்தான் இவ்விடுப்பு வழங்க இயலும்.



## 12. உயர் கல்விக்கான விடுப்பு
(F.R. 84 and Rules in Annexure in Appendix II)

(1) ஐந்து ஆண்டு பணி முடித்த அரசு ஊழியருக்கு இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி கற்க இந்த விடுப்பு வழங்கப்படும். இவ்விடுப்பு பிற விடுப்புகளுடன் சேர்ந்து, மொத்தத்தில் 24 மாதங்களுக்கு அதிகமாகாமல் எடுக்கலாம். இவ்விடுப்பு, ஓய்வூதியம், ஊதிய உயர்வு, பதவி உயர்வு ஆகிய அனைத்திற்கும் கணக்கிடப்படும். இது குறித்து அரசு ஒட்டுமொத்தமாக G.O.Ms.No.145, P&A.R., நாள் 14.3.96–ல் அறிவுரைகள் வழங்கியுள்ளது.

(2) அரசு செலவில் பயிற்சிக்கு அனுப்பப்படும் அலுவலர்கள் பத்திரம் எழுதித் தர வேண்டும். (G.O.Ms. No.145, P&A.R. நாள் 14.3.96)

## 13. ஒப்புவிப்பு விடுப்பு (Surrender Leave)

(TNLR 1933 FR7A)

(1) ஊதியமில்லா விடுப்பு, சொந்தக் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலம் போன்றவை தவிர பிற காலங்களில் பணம் பெறும் பொருட்டு, ஈட்டிய விடுப்பை, ஊழியர் ஒருவர் ஒப்புவிப்புச் செய்யலாம். (G.O. Ms. No. 1089, P&A.R., dated 1.11.80)

(2) 24 மாத இடைவெளியில் 30 நாள் வரையும், 12 மாத இடைவெளியில் 15 நாள் வரையும் (அதற்குக் குறைவாகவும்) ஈட்டிய விடுப்பை ஒப்புவிக்கலாம்.

(3) விடுப்பை ஒப்படைக்கும் நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ விண்ணப்பம் கொடுக்கலாம். பின்னர் கொடுக்கப்படும் விண்ணப்பம், விடுப்பு ஒப்படைக்கும் நாளுக்கு ஒரு மாதத்திற்குள் இருக்க வேண்டும். விடுப்பு ஊதியத்துடன், மலைவாழ்படி, நகர ஈட்டுப்படி மற்றும் வாடகைப்படியும் கிடைக்கும் 1/30 என்ற வீதத்தில் விடுப்பு ஊதியம் இருக்கும் – (அரசு ஆணை எண் 200, நிதி நாள் 1.4.81) (G.O.Ms.No. 43, Fin., dated 16.7.82) இக்காலத்திற்கு மருத்துவப்படி கிடைக்காது – (அரசு க.எண். 107557படிகள்/89–2 நிர்வாகத்துறை, நாள் 8.1.1991) இடைக்கால நிவாரணம் கிடைக்காது. (அரசு கடித எண் 28968/PC/94–நிதி நாள் 3.5.94)

(4) அரசுக்குச் சொந்தமான குடியிருப்பில், வாடகையுடன் இருப்பவருக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கலாம். ஆனால், வாடகையில்லா குடியிருப்பில் இருப்பவருக்கு வீட்டு வாடகைப்படி கிடைக்காது. (G.O.Ms.No. 200 Fin. dt. 1.4.81 (G.O.Ms. No.777, Fin., dated 7.9.83 and Govt. Lr. No. 33853/II/84-1, Fin., dated 18.8.84)

(5) தற்காலிகப் பணி நீக்கத்திலிருப்பவர், அக்காலம் பணிக்காலமாக கருதப்பட்டு மீண்டும் பணி ஏற்றால், தற்காலிக பணி நீக்க காலத்திற்கு அவருக்கு திரண்டுள்ள ஒப்புவிப்பு விடுப்பை பெற தகுதி உண்டு. இதற்கான விண்ணப்பத்தை தற்காலிகப் பணிநீக்கம் முடிந்து மீண்டும் பணி ஏற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் தர வேண்டும். (Govt. Lr. 38745/82-1, P&A.R., dated 29.5.82 and Govt. Lr. No. 16216/83-1, P&A.R., dated 18.4.83) இதற்கான விண்ணப்பம் தற்காலிகப் பணிநீக்க காலம் முறைப்படுத்தி ஆணைப் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். (அரசு ஆணை எண் 166, ப.நி.சீ.துறை (FRII) நாள் 03.12.2018).

**(6)** தற்காலிகப் பணிநீக்க காலம் சொந்த காரணங்களால் ஈட்டா விடுப்பாகவோ அல்லது ஊதியமில்லா விடுப்பாகவோ கருதப்பட்டால் இந்தச் சலுகை கிடைக்காது. (Govt. Lr. No. 92550/82-3, P&A.R., dated 18.1.83)

**(7)** இந்த சரண் விடுப்பு உரிமை தற்காலிகமாக **28.11.01** முதல்**19.10.04** வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (அ.ஆ.எண். **211** ப.நி.சீ.துறை (எப்ஆர்III) நாள் **28.11.01** மற்றும் அரசு ஆணை எண் **138** (ப.நி.சீ. துறை) நாள் **22.11.02**)

**(8)** இந்தச் சலுகை பின்னர் பகுதியாக திரும்ப வழங்கப்பட்டு, ஆண்டுக்கு ஏழு நாட்கள் வீதம் வழக்கமான வருடாந்திர சுழற்சியில் ஒப்படைப்பு செய்து ஊதியம் மற்றும் படிகள் **20.10.2004** முதல் பெறலாம் என்று ஆணையிடப்பட்டது (அ.ஆ.எண் **351** (பநிசீது) நாள் **21.01.04**)

**(9) 8.2.2006** முதல் **15** நாட்கள் சரண்விடுப்பு வருடாந்திர சுழற்சி முறையில் ஒப்படைப்பு செய்து விடுப்பு ஊதியம் பெறலாம். (அ.ஆ.எண். **19**, ப(ம)நிசீ துறை FR III நாள் **23.2.2006**)

**(10) 14.8.2006** முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை **30** நாட்கள் சரண் விடுப்பு வருடாந்திர சுழற்சி முறையில் ஒப்படைப்பு செய்து விடுப்பு ஊதியம் பெறலாம். (அ.ஆ. எண் **123**, ப(ம)நிசீ. துறை (FRIII) நாள் **14.8.2006**)

ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பு செய்வது தொடர்பான வழிமுறைகளுக்கு (அ.ஆ(MS) எண்.166 ப(ம)நி.சீ.துறை, (FR-II) நாள் 03.12.2018) ன் மூலம் த.நா. விடுப்பு விதிகள் 1933ற்கு உரிய விதிதிருத்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**விதி 7A** TNLR 1933 ஈட்டிய விடுப்பு சரண் செய்வது **27.04.2020** முதல் ஆரம்ப நிலையில் ஓர் ஆண்டிற்கு நிறுத்தப்பட்டுள்ளது (அரசாணை நிலை எண்.48/ப.ம.நி.சீ.(FR-III) துறை, நாள் **27.04.2020**

விதிதிருத்தம்: அரசாணை (நிலை) எண்.12/ப.ம.நி.சீ. (FR-II) துறை நாள் **08.02.2021**

அரசு ஆணை (நிலை) எண் 48/ பமநிசீ(FR–III) துறை, நாள் 13.05.2021 –ன் படி 31.03.2022 வரை மேலும் ஓர் ஆண்டிற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விதிதிருத்தம்: அரசாணை (நிலை) எண். 142 / மனிதவள மேலாண்மை (FR-II) துறை நாள் 10.12.2021அ.ஆ.எண்: (நிலை) 36 ம.வ.மே. (FR III) துறை நாள்:11.04.2022–ன் படி, மறு உத்தரவு வரும் வரை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

## 14. விடுப்பு ஊதியம்

**(1)** விடுப்புக் காலத்தில் கீழே குறிப்பிட்டுள்ளபடி விடுப்பூதியம் வழங்கப்படும். **(TNLR 28A)**

| | | |
|---|---|---|
| 1 | ஈட்டிய விடுப்பு | அடிப்படை ஊதியம் மற்றும் பிற படிகள் |
| 2 | மருத்துவ விடுப்பு | |
| 3 | மகப்பேறு விடுப்பு | |
| 4 | சொந்தக் காரணத்திற்கான ஈட்டா விடுப்பு | அடிப்படை ஊதியத்தில் பாதி; அகவிலைப்படி மற்றும் படிகள் பாதி அ.க.எண் 34007/FR-3/2016-1 dated 13.10.16 |
| 5 | ஒப்புவிப்பு விடுப்பு (சரண்விடுப்பு) | ஊதியம் மற்றும் படிகள் முழுவதுமாக (மருத்துவப்படி கிடையாது) |
| 6 | ஊதியமில்லா விடுப்பு | ஊதியம் கிடையாது. |



**(2)** தொழுநோயாளிகள், புற்று நோயாளிகள் மற்றும் காச நோயாளிகள் அனைத்து விடுப்புகளும் முடிந்தபின்னர் ஊதியமில்லா விடுப்பில் இருக்க நேரிட்டால் இவர்களுக்கு மாதந்தோறும் ரூ. **250** கருணைத் தொகையாக வழங்கப்படும். அவர்கள் உள்நோயாளியாக இருந்தால் அதிகமாக இரண்டு ஆண்டுக்கு மட்டுமே இத்தொகை கிடைக்கும். (அரசாணை எண் **539**, நிர்வாகத்துறை, நாள் **17.10.1988**)

**(3)** விடுப்பு காலத்தில் விடுப்பில் செல்வதற்கு முன்னர் பெற்று வந்த ஊதியம் மற்றும் படிகள் விடுப்பு ஊதியமாக வழங்கப்படும். (T.N.L.R. 28A)

**(4)** வாடகையில்லா குடியிருப்பு (Free Quarters) உள்ளவர் விடுப்புக் காலத்தில் வீட்டைக் காலி செய்தால், காலி செய்த நாள் முதல் அவருக்குத் தகுதியுள்ள வீட்டு வாடகைப்படி கிடைக்கும். (அரசாணை எண் **490**, நிர்வாகத்துறை, நாள் **23.5.1983**)

**(5)** விடுப்புக் காலத்தில் உயர்த்தப்படும் அகவிலைப்படியையும் விடுப்பு ஊதியத்துடன் பெறலாம் – (அரசாணை எண் **490**, நிர்வாகத்துறை, நாள் **23.5.1983**)

**(6)** விடுப்பிலிருப்பவர் வேறு அலுவலகம் மாற்றப்பட்டால், பழைய அலுவலகம் தான் விடுப்பூதியம் வழங்க வேண்டும். புதிய அலுவலகம் பணியேற்பிடைக்கால ஊதியம் மட்டுமே வழங்கும் – (Art 31(3), Account Code, Vol.I)

## 15. விடுப்பு தொடர்பான பிற விதிகள்

பணி நீக்கம் செய்யப்பட்டவர் ஈட்டிய விடுப்பை பணமாக்குதல்

அரசுத்துறை ஒன்று மூடப்படுவதாலோ அல்லது அரசின் திட்டம் ஒன்று முடிவு பெறுவதாலோ, பணிநீக்கம் செய்யப்படும் தகுதிகாண் பருவம் முடித்த ஊழியருக்கு இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்புக்கு சரண் விடுப்பைப் போன்று விடுப்பு சம்பளம் வழங்கப்படும் – (அரசாணை எண் **315**, நிர்வாகத் துறை, நாள் **29.5.1995** மற்றும் அரசாணை எண் **345**, நிர்வாகத் துறை, நாள் **31.7.1990**)

பணியிலிருக்கும்பொழுது பிற துறைக்குத் தேர்வு செய்யப்பட்டவர் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பை அனுபவித்தல்

ஒரு அலுவலகத்தில் பணிபுரிபவர், தேர்வாணையம் அல்லது பிற நியமனங்கள் வாயிலாக வேறு துறைக்கு பணி நியமனம் பெற்றால், அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு போன்ற விடுப்புகளை புதிய அலுவலகங்களிலும் அனுபவிக்கலாம். (அடிப்படை விதி **65**ன் துணை விதி **(5)**.

அதிகபட்சமாக ஒரு ஊழியர் எத்தனை நாள் விடுப்பு அனுபவிக்கலாம் ?

**(1)** ஐந்து ஆண்டு பணி முடிக்காத அரசு ஊழியர் ஒருவர் ஆறு மாதம் வரை தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம். ஐந்து ஆண்டு பணி முடித்தவர் என்றால் ஓராண்டு வரை தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம். (அரசாணை எண். **477**, நிர்வாகத்துறை, நாள் **21.11.1990**)

**(2)** தவிர்க்க இயலாத காரணங்களினால் விடுப்பு எடுத்தால் மேற்படி வரையறையை அரசு தளர்த்தலாம் – (G.O.Ms.No.477, P&AR நாள் 8.8.1991)

**(3)** ஒரு ஊழியர் மருத்துவம் அல்லது மேற்படிப்பு ஆகியவற்றுக்காக ஓராண்டுக்கு மேலும் தொடர்ந்து விடுப்பில் இருக்கலாம் – (மேற்படி அரசாணை)

**(4)** மேற்கூறியபடி ஆறு மாதம் / ஓராண்டுக்கு அதிகமாக விடுப்பில் இருக்கும் ஒருவரை பணி ஏற்க அனுமதித்துவிட்டு, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம். (அரசு க.எண். **8699**/அ.வி.**111/91–5** நிர்வாகத்துறை, நாள் **8.8.1991**)

**(5)** ஆறு மாதம் / ஓராண்டு தொடர் விடுப்பு எடுத்தவர் மீண்டும் ஆறு மாதம் / ஓராண்டு தொடர் விடுப்பு எடுக்க மூன்று ஆண்டு இடைவெளி தேவை. ஆறு மாதம் / ஓராண்டுக்கு அதிகமாகாமல் விடுப்பு எடுத்தவர், மீண்டும் தொடர் விடுப்பு எடுக்க மூன்று ஆண்டு இடைவெளித் தேவையில்லை.

**(6)** ஓராண்டு அல்லது ஆறு மாதங்களுக்கு மேல் விடுப்பில் சென்றவர் மீது

அடிப்படை விதி 18(3)க்குப் பதிலாக, தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 8 மற்றும் 17ன்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் (அரசு ஆணை 153 பநிசீது (எப்ஆர் III) துறை நாள் 8.8.2000)

அரசு விடுமுறைகளை விடுப்புடன் சேர்த்து அனுபவித்தல்

அரசு விடுமுறைகளை கீழே குறிப்பிட்டபடி விடுப்புகளுடன் முன் இணைப்பாகவோ அல்லது பின் இணைப்பாகவோ சேர்த்து அனுபவிக்கலாம். (அரசு க.எண். 64435/F.R.V/94–5, P&A.R. நாள் 27.3.95 (30.5.94லிருந்து அமுலில் உள்ள நடைமுறை).

(1) ஈட்டிய விடுப்பு ஒரே சமயத்தில் 180 நாட்களுக்கு மேல் எடுக்கக் கூடாது (ஆனால் 240 நாட்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம்)

(2) அரசு விடுமுறைகளை விடுப்புகளுடன் சேர்த்து எடுக்கலாம். தற்செயல் விடுப்பு தவிர அனைத்து வகை விடுப்புகளையும் ஒன்றாக சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

(3) ஆனால் பதிலாள் நியமனம் செய்யப்பட்டிருப்பின் விடுப்புக்களை இணைக்க முடியாது.

(4) மருத்துவச் சான்று வழங்கும் நாளிலிருந்து மருத்துவ விடுப்பு தொடங்கும். உடல்நலச் சான்றிதழின்படி பணி ஏற்க வேண்டிய நாள் விடுமுறை நாளாயின் விடுமுறை முடிந்து பணி ஏற்கலாம்.

(5) சொந்த அலுவல்கள் பேரில் ஈட்டா விடுப்பு, ஈட்டிய விடுப்புடன் சேர்த்து எடுத்தால், மொத்தம் ஆறு மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது (TNLR 14)

பொதுவான விவரங்கள்

(1) ஒவ்வொரு விடுப்புக்கும் வரையறை செய்யப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு அனைத்து விடுப்புகளும் இணைத்து எடுக்கலாம் (TNLR 14)

(2) (அ) பணி அமர்வுக்கான ஆணைகளுக்காக ஒருவர் காத்திருக்க நேர்ந்தால், அக்காலம் கட்டாய காத்திருப்பு காலமாகக் கருதப்படும். இக்காலத்திற்கு ஊதியம் மற்றும் பிற படிகள் கிடைக்கும். அடிப்படை விதி 9(6) அயல் பணியிலிருந்து திரும்புபவருக்கு அரசாணை எண் 420, நிர்வாகத்துறை, நாள் 27.9.1990ல் கண்டுள்ளபடி விடுப்பு வழங்கப்படும்.

(ஆ) விடுப்பு முடிவுற்றபின், பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர், பணியிடம் காலாவதியாகி வேறு பணியிடம் கிடைக்காதவர், தனக்கு அடுத்த உயர் அலுவலரை நேரில் சந்தித்து, பணியிடம் ஒதுக்கி தர கோர வேண்டும் (அரசு கடிதம் எண் 44890/எப்.ஆர்./III 95–1 P&A.R. நாள் 28.8.96)

(இ) அடிப்படை விதி 9(6)(b)ன் கீழ் கட்டாய காத்திருப்பு காலமாக கருதப்பட வேண்டியிருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அரசு அலுவலர் நேரடியாக, தினந்தோறும் சென்று கையெழுத்திட வேண்டும். (அரசு கடித எண். 44890/ எப்.ஆர்./III/95–1 P&A.R., நாள் 28.8.96)

(3) 5 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு விடுப்பு காலத்திற்கு F.R. 26(bb) சான்று தேவையில்லை (அ.ஆ.எண் 777, நிதி, நாள் 16.7.1976)

(4) விடுப்பு ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை என்றாலும் ஒரு மாதத்திற்கு மட்டும் விடுப்பு ஊதியம் வழங்கப்படும். (அரசாணை எண் 278 நிதி, நாள் 30.3.1978). முன் அறிவிப்பின்றி விடுப்பில் சென்றால் விடுப்பு ஊதியம் கிடைக்காது (G.O.Ms. No. 1561. நிதித்துறை, நாள் 23.11.79)

(5) அயற்பணியிலிருந்தால் அயற்பணியாளர் விடுப்பூதியத்தை முதலில் வழங்கிவிட்டு பின்னர் பணிப்பதிவேடு பராமரிக்கும் அலுவலரிடமிருந்து Reimburse செய்து கொள்வார். (Govt. Lr. No. 58175/FR.1188-2. Finance, dt. 27.9.88). தமிழக அரசுச் சார்ந்த நிறுவனமாயின், ஒரு ஆண்டு பணிக்காலத்திற்கு ஒரு மாதம் என்ற அளவில் விடுப்பு அந்நிறுவனத்தால் வழங்கப்படும். மிகையான காலத்திற்கு பணிப்பதிவேடு பராமரிக்கும் அலுவலர் வழங்க வேண்டும்.

(6) விடுப்புக் காலத்தில் பணி துறப்பு செய்தால் முன்னரே ஒப்புதல் வழங்கப்பட்ட ஈட்டிய விடுப்பாயின், விடுப்பு முடித்த நாளிலிருந்து பணி துறப்பு ஏற்கப்படும். விடுப்பு ஊதியம் முன்னரே வழங்கப்பட்டிருப்பின் அதை பிடித்தம் செய்யக்



**அரசு ஊழியருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விடுப்பு விவரம்**

| | உயர்நிலைப் பணி | | அடிப்படைப்பணி | |
|---|---|---|---|---|
| விடுப்பின் பெயர் | 10(a) (i) & தகுதி காண் பருவத்தினர் | தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர், நிரந்தரமாக்கப்பட்டவர், 15 ஆண்டு பணி முடித்த அடிப்படைப் பணியாளர் | தகுதிகாண் பருவத்தினர் மட்டும் | தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் 15 ஆண்டு பணி முடிக்காதவர் |
| மருத்துவ சான்றுடன் ஈட்டா விடுப்பு (UEL on MC) | இல்லை–த.நா.வி.வி. 23 உபவிதி 2 | 2–5 வருடம் = 90 நாட்கள்<br>5–10 வருடம் = 180 நாட்கள்<br>10–15 வருடம் = 270 நாட்கள்<br>15–20 வருடம் = 360 நாட்கள்<br>20 வருடத்திற்கு மேல் =540 நாட்கள் | தற்காலிகம் :இல்லை (த.நா.வி.வி. 23 உபவிதி 2)<br>தகுதிகாண் பருவத்தினர்: ஒவ்வொரு வருடத்திற்கும் 10 நாட்கள் வீதம் | ஒவ்வொரு முடிவுற்ற வருடத்திற்கும் 10 நாட்கள் வீதம் |
| | முறையான இரண்டு வருட பணி முடித்த தகுதிகாண் பருவத்தினர்<br>0–2 வருடம் – இல்லை<br>2–5 வருடம் – 90 நாட்கள்<br>5–10 வருடம் – 180 நாட்கள் | | அடிப்படைப் பணியாளர்கள் முறைப்படுத்திய நாளிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால், உயர்நிலை பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதேஅளவில் மருத்துவ சான்றுடன் ஈட்டாத விடுப்பு எடுக்கலாம். | |
| சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு | இல்லை | 0–10 வருடம் – 90 நாட்கள்<br>10 வருடங்களுக்கு மேல் – 180 நாட்கள் | தகுதி இல்லை. முறைப்படுத்திய தேதியிலிருந்து 15 ஆண்டுகள் முடித்திருந்தால், உயர்நிலைப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அதே அளவில் சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு எடுக்கலாம். | |

## II. பயணப்படி விதிகள்

**பயணப்பட்டியல் நிலுவை**

அரசு ஊழியர் ஒருவரின் ஊதியம் முன் தேதியிட்டு உயர்த்தப்பட்டால் அவருக்கு பயணப்பட்டியல் நிலுவை வழங்கலாம். (Ruling (1) Under T.A. Rules (1993 Edition) ரயில்/பஸ் கட்டணம் போன்றவை வாங்க முடியாது.

**பயணப் பட்டியலை யார் மேலொப்பம் செய்ய வேண்டும்?**

இதுவரை பயணப்பட்டியல்களை மண்டல அல்லது மாவட்ட அலுவலர்கள் மட்டுமே மேலொப்பம் செய்ய வேண்டும் என்ற விதி இருந்தது. T.A. Rule 2(ii)-ல் (1993 Edition.) கண்டுள்ள புதிய விதிகளின்படி அடுத்த உயர் அலுவலர் பயணப்பட்டியல்களை மேலொப்பம் செய்தால் போதும்.

**பயண முன்பணம்**

(1) ஒரு பயணத்திற்கு ஆகும் உத்தேச செலவினத்தில் 75% வரை பயண முன்பணமாக பெறலாம். (நிதி விதித் தொகுப்பு 1 விதி 84), இருப்பினும் பஸ், ரயில் செலவினம் முழுத்தொகையையும் முன்பணமாக பெறலாம். (அரசு க.எண். 82136/ எஸ் II நிதி, நாள் 26.9.1987)

(2) பயணம் செய்த மூன்று மாதங்களுக்குள் முன்பணம் சரிக்கட்டப்பட வேண்டும். தவறினால் நான்காவது மாத ஊதியத்திலிருந்து 2.5% வட்டியுடன் தொகை பிடிக்கப்படும். (அ.ஆ.எண் 798, நிதி/ நாள் 22.12.1982)

(3) சரிக்கட்டப்படாத முன்பணம் நிலுவையில் இருப்பின், புதிய முன்பணம் கிடைக்காது.

**பொது**

(1) பயணம் முடித்த நாள் முதல் மூன்று மாதங்களுக்குள் பயணப்பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும். பணி நிமித்தம் எப்போதும் பயணம் செய்ய வேண்டிய ஊழியர்களாயின் மாதத்தில் கடைசி பயணம் முடித்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பயணப்பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும் – (தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு விதி 52)

(2) பட்டியல் கிடைத்த 15 நாட்களுக்குள் பயணப்பட்டியல் தீர்வு செய்யப்பட வேண்டும் – (அ.ஆ. எண் 687, நிர்வாகம், நாள் 16.7.1982)

(3) தலைமையகத்தின் மைய இடத்திலிருந்து தூரம் கணக்கிடப்பட வேண்டும். இந்த தூர விவரங்கள் மிலிடரி புத்தகத்தில் இருக்கும் (விதி 22)

(4) தலைமையகத்திலிருந்து 8 கி.மீ. சுற்றளவுக்கும் அதிகமான தூரத்துக்கு பயணம் செய்தால் மட்டுமே பயணப்படி கிடைக்கும். குறைவான தூரத்திற்கு பஸ்/ ரயில் கட்டணம் மட்டுமே கிடைக்கும். சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில், நகர எல்லைக்கு அப்பால் பயணம் செய்தால் மட்டுமே பயணப்படி கிடைக்கும். (அரசு க.எண். (M.S.) 147, நிதித்துறை, நாள் 11.2.94)

(5) கருவூலம் மற்றும் கணக்கு ஒத்திசைவு பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு பயணப்படி கிடைக்கும் (அ.ஆ.எண். 471, நிதி, நாள் 22.7.1982)



| தூரம் | பயணப்படி தொகை |
|---|---|
| 8 கி.மீ. வரை | பஸ்/ரயில் கட்டணம் |
| 8 கி.மீ.க்கு மேல் 50 கி.மீ. வரை | கட்டணம் மற்றும் தினப்படி |
| 50 கி.மீ.க்கு மேல் | அனைத்து பயணப்படிகள் |

(6) விடுப்புக் காலத்தில் பயணம் செய்யப் பணிக்கப்பட்டாலும், பயணப்படி கிடைக்கும் (பயண விதி 90 (b)

(7) வங்கி, கருவூலத்திலிருந்து பணம் கொண்டு வர கீழ்கண்டவாறு தொகை கிடைக்கும். (அரசு.க.எண்.64258/படிகள் II/81-2, நிதித்துறை நாள் 3.5.84)

| தொகை | பயணப்படி தொகை |
|---|---|
| ரூ. 1999 வரை | பஸ் அல்லது ரயில் கட்டணம் |
| ரூ. 2000 முதல் 9999 வரை | ஆட்டோ கட்டணம் |
| ரூ. 10,000க்கு மேல் | டாக்ஸி கட்டணம் |

வங்கிப் பணிக்கு செல்லும் அலுவலக உதவியாளருக்கும் இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 81544/படிகள் 1/88-3, நிதித்துறை நாள் 22.11.88)

(8) பயணக் காலத்திற்குள்ளாகவோ, முன்னரோ அல்லது பின்னரோ 7 நாட்களுக்கு அதிகமாகாமல், அரசு விடுமுறை மற்றும் தற்செயல் விடுப்பு எடுக்கலாம். அந்த நாட்களுக்கு தினப்படி கிடைக்காது. – (Ruling (3) under Rule 61 மற்றும் அ.ஆ.எண். 486, நிதி. நாள் 27.7.1982) ஏழு நாட்களுக்கு அதிகமானால் திரும்புவதற்கான ரயில்/பஸ் கட்டணம் கிடைக்காது. தலைமையகம் திரும்பிய பின்னர் விடுப்பு எடுத்தால், முழுத் தொகையும் கிடைக்கும் (அரசு க.எண். 4779/ படிகள் I/80–1, நிதி, நாள் 7.4.1980)

(9) ஒருவர் பெறுகின்ற ஊதிய நிலையை (Pay Level) அடிப்படையாக கொண்டே பயணப்பட்டியல் தயாரிக்கப்படும். சிறப்பூதியம், தனி ஊதியம் பயணப்படிக்கு சேராது (அரசாணை எண் 307 நிதி (ஊ.கு) துறை நாள் 13.10.17)

(10) 01.10.2017 முதல் ஏற்கனவே உள்ள மாத உச்சவரம்பு, திருத்தப்பட்ட அடிப்படை ஊதியத்தில் (Cell) ல் 10% ல் இருந்து 5% ஆக குறைக்கப்படுகிறது. அதே போன்று எங்கு இதற்கு முன்பு 15% மற்றும் 12% உச்சவரம்பு இருந்ததோ அங்கு முறையே 8% மற்றும் 6% ஆக திருத்திய ஊதியத்தில் குறைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாவட்ட எல்லை உள்ளவர்களுக்கு மாத உச்சவரம்பு 12% இருந்து 6% ஆகவும் இரண்டு மாவட்ட எல்லைக்குமேல் உள்ளவர்களுக்கு மாத உச்சவரம்பு 13% ல் இருந்து 7% ஆகவும் குறைக்கப்படுகிறது. (அரசு ஆணை எண் 307 நிதி (ஊ.கு) துறை நாள் 13.10.2017

(11) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஒருவர் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் பயணம் செய்ய நேருமாயின் 10% லிருந்து 5% ஆக என்பது அவரைப் பொறுத்தவரை ரயில்/பஸ்/விமானக் கட்டணம் தவிர்த்து கணக்கிட வேண்டும். (அரசு க.எண். 103001/படிகள்/90, நிதி நாள் 12.12.1990)

(12) பயணப்பட்டியல் தமிழிலும் எழுதலாம் (அரசு க.எண். 15223/89–1, தமிழ்த்துறை, நாள் 1.11.89)

**தினப்படி**

(1) அனுமதிக்கப்படும் தினப்படி அளவு பின்வருமாறு:

| பயண நேரம் | அனுமதிக்கப்படும் பயணப்படி |
|---|---|
| 0 முதல் 6 மணி வரை | 30 சதவிகிதம் |
| 6 மணிக்கு மேல் 12 மணி வரை | 70 சதவிகிதம் |
| 12 மணிக்கு மேல் 24 மணி வரை | 100 சதவிகிதம் |

பயணப்படி மற்றும் மாறுதல் பயணப்படி கணக்கிடும் பொருட்டு ஊதிய அடிப்படையிலான அலுவலர்களின் நிலை (GRADE)

| தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம், 2009-அரசாணை எண்.234, நிதி(ஊ.கு) துறை, நாள்: 1.6.2009 | | தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள், 2017-அரசாணை எண்.303, நிதி (ஊ.கு) துறை, நாள்: 11.10.2017 | | |
|---|---|---|---|---|
| பிரிவு (Group) | தர ஊதியம் | பிரிவு (Group) | Level | திருத்திய ஊதிய நிலை (Revised Levels of Pay) Minimum Rs. Maximum Rs. |
| **I A** | ரூ. 8700-ம் அதற்கு மேலும். | **I A** | **28 - 32** | 1,23,100 - 2,15,900 முதல் 1,28,900 - 2,25,000 வரை |
| **I B** | ரூ.6600/- முதல் ரூ.8700/- க்கு கீழ் | **I B** | **25 - 27** | 59,300 - 1,87,700 முதல் 62,200 - 1,97,200 வரை |
| **II** | ரூ.4400/- முதல் ரூ.6600/- க்கு கீழ் | **II** | **13 - 24** | 35,900 - 1,13,500 முதல் 57,700 - 1,82,400 வரை |

| தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம், 2009-அரசாணை எண்.234, நிதி(ஊ.கு) துறை, நாள்: 1.6.2009 | | தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள், 2017-அரசாணை எண்.303, நிதி (ஊ.கு) துறை, நாள்: 11.10.2017 | | |
|---|---|---|---|---|
| பிரிவு (Group) | தர ஊதியம் | பிரிவு (Group) | Level | திருத்திய ஊதிய நிலை (Revised Levels of Pay) Minimum Rs. Maximum Rs. |
| **III** | ரூ.1900/- முதல் ரூ.4400/- க்கு கீழ் | **III** | **5 - 12** | 18200 - 57900 முதல் 35600 - 11800 வரை |
| **IV** | ரூ.1300/- முதல் ரூ.1900/- க்கு கீழ் | **IV** | **1 - 4** | 15700 - 50000 முதல் 18000 - 56900 வரை |



(2) 24 மணி நேரத்திற்கு (பயணம், தங்கல், அலுவலகப் பணி, அலுவலக வேலையாக இருத்தல் ஆகிய எதுவானாலும்) ஒரு தினப்படி கிடைக்கும். ஒரு 24 மணி நேரத்தில் இரண்டு பயணம் செய்தால் ஒரு தினப்படி மட்டுமே கிடைக்கும்.

(3) Class I மற்றும் Class II இடங்கள் என சில ஊர்களை பயணப்படி விதி இணைப்பில் வரையறை செய்யப்பட்டுள்ளது. சாதாரணமாக கிடைக்கும் தினப்படியைவிட Class I இடத்திற்கு 50%மும் Class II இடத்திற்கு 33 1/3%ம் அதிகமாக கிடைக்கும்.

சென்னைக்கு வருபவர்களுக்கு மொத்த பயணக்காலம் 24 மணி நேரத்திற்கும் அதிகமாக இருந்தால் சென்னைக்கான தினப்படி கிடைக்கும். (அ.க.எண். 61631/ஏ படிகள்1/82-1 நாள் 14.6.1982)

(4) சாதாரண இடமும், தினப்படி அதிகமாகக் கிடைக்கும் Class I&II இடமும் சேர்ந்து பயணம் செய்யப்படின், பயணம் முடித்து இரவு தங்குகின்ற இடத்திற்கு வழங்கப்படுகின்ற தினப்படியே கிடைக்கும். (Ruling (1) of Annexure V to T.A. Rules-47)

(5) பயணக்காலத்தில் உணவு மற்றும் உறைவிடம் இரண்டும் வழங்கப்பட்டால் 1/4 தினப்படி கிடைக்கும். உணவு மட்டும் வழங்கப்பட்டால், ½ தினப்படியும், இருப்பிடம் மட்டும் வழங்கப்பட்டால் 3/4 தினப்படியும் வழங்கப்படும். (அரசாணை எண். 748, நிதித்துறை, நாள் 22.9.92) TA Rule 43ஆ

(6) பயிற்சிக்காக பயணம் மேற்கொண்டால் 90 நாள் வரை முழு தினப்படியும், 90 நாட்களுக்கு அதிகமானால் இடமாற்றம் செய்யப்பட்டதாகக் கருதி இடமாற்றல் பயணப்படியும் வழங்கப்படும். (அ.ஆ.எண் 748, நிதித்துறை, நாள் 22.9.92) TA Rule 44 (ஆ)

(7) அறுபதுநாள் வரை முழு தினப்படியும் 60 நாட்களுக்கு அதிகமானால் இடமாற்றப் பயணப்படியும் கிடைக்கும் (அ.ஆ. 748, நிதித்துறை, நாள் 22.9.92) TA Rule 44

**விமானம்/ரயில்/பஸ் பயணம்**

(1) அரசாணை எண். 307, நிதி(சகு) துறை, நாள் 13.10.2017–ன்படி 01.10.2017 முதல் அனுமதிக்கப்பட்டுள்ள விகிதங்கள் வருமாறு:

(2) விமானப் பயணம் மேற்கொள்ள தகுதிப்பெற்ற அரசு அலுவலர்கள், தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி பயணச்சீட்டுகளை வாங்கிக் கொள்வது மட்டுமல்லாமல், கூடுதலாக ஜெட், சஹாரா, ஏர்டெக்கான் மற்றும் அனைத்து தனியார் விமானங்களிலும் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இந்த விமானப் பயணம் மாநிலத்திற்குள்ளும், மாநிலத்திற்கு வெளியிலும், இந்தியாவிற்குள், அலுவலரின் விருப்பப்படி, புறப்படும் நேரம் மற்றும் சேரும் நேரத்திற்கேற்ப, விமானங்களை தெரிவு செய்து கொள்ளலாம். பயணச் சீட்டுகளை ரொக்கமாகவோ, கிரடிட் கார்டு மூலமாகவோ வாங்கிக் கொண்டு, பயணப்

அரசாணை எண்.307,நிதி (ஊ.கு.) துறை,நாள்: 13-10-2017. (1-10-2017 முதல்)

| நிலை | ஊதிய விகிதம் (ஊதிய நிலை) | தினப்படி (Daily Allowance) | | நிர்ணயப்படி (Flat Rate) | | தூரப்படி (Mileage Rate) | மோட்டார் வாகன தூரப்படி | | சொந்த உடமைகள் (Personal Effect) கிலோ கிராம் | | | ஒட்டு மொத்த மானியம் | | சொந்த பணியாளர்கள் வைத்துக் கொள்ளும் தகுதி | விமானம் மற்றும் இரயிலில் பயணம் செய்யத் தகுதி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சென்னை | பிற இடங்கள் ரூ. | சென்னை | பிற இடங்கள் ரூ. | மாறுதல் பயணப்படி ரூ. | சீருந்து | இருசக்கர வாகனம் | மொத்த தகுதி | பயணியர் இரயில் | சரக்கு இரயில் | 60கி.மீ. வரை ரூ. | 60கி.மீ. க்குமேல் ரூ. | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| I (A) | ஊதியநிலை- 28 முதல் 32 வரை ஊதியவிகிதம் 123100 -215900 முதல் 128900 -225000 வரை. (ஊதியவிகிதம் 123100 –225000) | 800 | 400 | 20 | 20 | 1.50 | 12 | 6 | 4500 | 200 | 4300 | 1800 | 3600 | 2 | 1.ஊ.நி.32 (128900-225000) விமானத்தில் Executive Class-ல் பயணம் செய்யலாம். 2.மற்றவர்கள் விமானத்தில் சாதாரண வகுப்பு/ இரயிலில் குளிர்சாதன முதல் வகுப்பு மாநிலத்திற்கு உள்ளே மற்றும் வெளியே. |
| I (B) | ஊதியநிலை- 25 முதல் 27 வரை ஊதியவிகிதம் 59300 -187700 முதல் 62200 -197200 வரை. (ஊதியவிகிதம் 59300 –197200) | 800 | 400 | 20 | 20 | 1.50 | 12 | 6 | 4500 | 200 | 4300 | 1800 | 3600 | 2 | 1.மாநிலத்திற்கு வெளியே விமானம். 2.மாநிலத்திற்கு உள்ளே மற்றும் வெளியே - இரயில் முதல் வகுப்பு அல்லது 2-ம் வகுப்பு குளிர்சாதன வசதி. |



| நிலை | ஊதிய விகிதம் (ஊதிய நிலை) | தினப்படி (Daily Allowance) | | நிர்ணயப்படி (Flat Rate) | | தூரப்படி (Mileage Rate) | மோட்டார் வாகன தூரப்படி | | சொந்த உடமைகள் (Personal Effect) கிலோ கிராம் | | | ஒட்டு மொத்த மானியம் | | சொந்த பணியாளர்கள் வைத்துக் கொள்ளும் தகுதி | விமானம் மற்றும் இரயிலில் பயணம் செய்யத் தகுதி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சென்னை | பிற இடங்கள் ரூ. | சென்னை | பிற இடங்கள் ரூ. | மாறுதல் பயணப்படி ரூ. | சீருந்து | இருசக்கர வாகனம் | மொத்த தகுதி | பயணியர் இரயில் | சரக்கு இரயில் | 60கி.மீ. வரை ரூ. | 60கி.மீ. க்குமேல் ரூ. | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| II | ஊதியநிலை- 13 முதல் 24 வரை ஊதியவிகிதம் 35900 -113500 முதல் 57700 -182400 வரை. (ஊதியவிகிதம் 35900 –182400) | 600 | 300 | 20 | 20 | 0.90 | 12 | 6 | 2000 | 75 | 1925 | 1350 | 2850 | 1 | 1.இரயில் முதல் வகுப்பு அல்லது மூன்றாம் வகுப்பு குளிர்சாதன தூங்கும் வசதி. 2.புதுடெல்லிக்கு செல்லும் போது முதல் வகுப்பு இல்லையெனில் 2-ம் வகுப்பு குளிர்சாதன தூங்கும் வசதி. |
| III | ஊதியநிலை- 5 முதல் 12 வரை ஊதியவிகிதம் 18200 -57900 முதல் 35600 -112800 வரை. (ஊதியவிகிதம் 18200 –112800) | 400 | 200 | 20 | 20 | 0.75 | – | 6 | 1000 | 40 | 960 | 900 | 1950 | – | இரயில் இரண்டாம் வகுப்பு. |
| IV | ஊதியநிலை- 1 முதல் 4 வரை ஊதியவிகிதம் 15700 -57900 முதல் 18000 -56900 வரை. (ஊதியவிகிதம் 15700 –56900) | 320 | 160 | 20 | 20 | 0.75 | – | 6 | 1000 | 40 | 960 | 450 | 1050 | – | இரயில் இரண்டாம் வகுப்பு. |

1. சீருந்து: ஊதியநிலை 22-ம் அதற்குமேலும். 2. இரு சக்கரவாகனம்: ஊதியநிலை 5-ம் அதற்குமேலும்.

பட்டியலில் சரிசெய்து கொள்ளலாம். இதனை பயண முன் பணமாகவும் பெற்றுக் கொள்ளலாம். (அரசாணை எண். 660, நிதி (படிகள்) துறை, நாள் 04.12.2006)

(3) கட்டுப்பாட்டு அலுவலர் வழங்குகின்ற சான்றின் அடிப்படையில் நிர்வாகக் காரணங்களினால் பயணம் ரத்து செய்யப்பட்டால், ரத்து செய்வதற்கான கட்டணம் பெற்றுக் கொள்ளலாம். (அ.ஆ.எண் 11, நிதி, நாள் 14.2.1985). ரயில்/விமானம் பயண முன்பதிவு ரத்து செய்யப்படும் கட்டணம் சம்பந்தப்பட்ட சம்பளம் பெறும் தலைப்பின் கீழ் '04 பயண செலவினங்கள்' என்பதன்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். (அரசு கடித எண். 29971/நிதி (படிகள்) துறை/2010–1 நாள் 4.6.10).

(4) ரயில் கட்டணத்துடன் முன்பதிவுக் கட்டணம், தூங்கும் வசதிக் கட்டணம் ஆகியவையும் பெறலாம். (அரசு க.எண். 132096/பி.சி. 11/79–1, நிதி, நாள் 6.4.1979)

(5) பயணத்தின்போது துரித பஸ்ஸிலும் பயணம் செய்யலாம். (அ.ஆ.எண். 1054, நிதி, நாள் 5.10.1979)

(6) பயணப்பட்டியலில் டிக்கெட் எண் குறிக்கத் தேவையில்லை. (அரசு க.எண். 87877/ஏ/படிகள்/84, நாள் 9.12.1990)

**இடைநிகழ் செலவுகள் – (Incidental Charges)**

(1) ரயில்/பஸ் முதலியவற்றில் பயணம் செய்தால் வண்டி ஏறுகிற அல்லது இறங்குகின்ற இடங்களில் இந்தத் தொகை கிடைக்கும். 24 மணி நேரத்திற்கு ஒரு இடைநிகழ் செலவு மட்டும் கிடைக்கும். 24 மணி நேரத்திற்கு பஸ்/ரயில் ஏறுவதோ அல்லது இறங்குவதோ இல்லை என்றால் இத்தொகை கிடைக்காது. (பயணப்படி விதி 46)

(2) எவ்வளவு சிறிய கிராமத்திற்குச் சென்றாலும், இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 98666/படி 1/81. நிதித்துறை, நாள் 30.12.81)

(3) 160 கி.மீ. குறைவான தூரமுள்ள ஊருக்கு பயணம் செய்தால் இத்தொகை கிடைக்காது. (அ.ஆ. எண். 666, நிதி நாள் 27.6.1989) ஆனால் 160 கி.மீ. அதிகமான தூரமுள்ள ஒரு இடத்திற்கு பயணம் செய்த பின்னர், அந்த இடத்திலிருந்து செல்கின்ற வேறு ஊர் 160 கி.மீட்டருக்கு குறைவாக இருப்பினும், இந்த இடைநிகழ்ச் செலவு கிடைக்கும். (அரசு க.எண். 91952/பி.சி./90–1,நிதி நாள் 31.8.1990)

(4) ஒருவர் பெறுகின்ற தினப்படியில் 1/2 மடங்கு இடைநிகழ்ச் செலவாக கிடைக்கும். சென்னைக்கு வருபவர் அல்லது சென்னையில் இருந்து வெளியிடம் செல்பவருக்கு சென்னையில் வழங்கப்படும் தினப்படி விகிதத்திலேயே இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 6163/ஏ.படிகள் 1/82, நாள் 31.8.1990)

(5) இரவு தங்காமல் தலைமையிடம் திரும்பினாலும் இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 64918/படி 1/83, நாள் 25.10.1984)

(6) சிறப்பு வழித்தடங்களில் பயணம் மேற்கொண்டால் முறையே 50% அல்லது 33 1/3 % இடைநிகழ் செலவுடன் முன்பதிவுக் கட்டணமும் வழங்கப்படும். (அரசு க.எண். 126593/பி.சி./78–1, நாள் 1.11.1978) Ruling 3 under TA Rule 46

(7) பம்பாய், கல்கத்தா போன்ற பிற மாநிலப் பெரு நகரங்களில் தங்கினால், இடைநிகழ்ச் செலவானது பிற மாநிலங்களின் விருந்தினர் மாளிகையில் வழங்கப்படும் தினப்படி வீதத்தில் கிடைக்கும். டில்லியில் தங்கினால் தமிழ்நாடு விடுதிக்கு வழங்கப்படும் பயணப்படி வீதத்தில் கிடைக்கும். (அரசாணை எண் 249, நிதி, நாள் 9.3.1990).



**நிர்ணயப்படி** (Flat Rate)

(1) அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.20 அனைத்து வகையினருக்கும் (1.10.17 முதல்) அரசாணை எண். 307, நிதி (ச.கு) துறை, நாள் 13.10.2017

(2) பயணம் மேற்கொள்ளும் இடம் அல்லது முடிக்கும் இடங்களில் 1/2 கி.மீ. அதிகமாக கடக்க வேண்டிய தூரம் இருப்பின் இத்தொகை வழங்கப்படும்.

(3) பஸ்/ரயிலில் பயணம் செய்தால் மட்டுமே இத்தொகை வழங்கப்படும்.

(4) ஒரு நாளில் பல இடங்களில் விட்டுவிட்டு பயணம் செய்தாலும் அதிகபட்சமாக நான்கு ஃபிளாட் ரேட்டுகள் மட்டுமே கிடைக்கும்.

(5) பிற மாநிலங்களின் தலைநகரங்களில் பயணம் மேற்கொண்டால், சென்னையில் கிடைக்கும் அளவிலும், பிற மாநிலங்களில் தலைநகர் தவிர்த்த பிற இடங்களுக்கு சாதாரணமாக வழங்கும் விகிதத்திலும் இத்தொகை கிடைக்கும்.

(6) பயணக்காலம் மிகவும் குறைவாக இருந்தாலும் இத்தொகை கிடைக்கும். (அரசு கடித எண். 126593/பிசி/78–1, நிதி நாள் 2.11.1978)

(7) சிறிய கிராமங்களில் பயணம் மேற்கொண்டாலும் இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 98666/படி/81–1இ, நாள் 30.12.1981)

**தூரப்படி (Mileage Allowance) Rule 23**

(1) மோட்டார் சைக்கிள் பயணத்திற்கு ஒரு கி.மீ.க்கு ரூ. 6.00ம் கார் பயணமாயின் ஒரு கி.மீ.க்கு ரூ. 12.00ம் 01.10.2017 முதல் தூரப்பயணப்படியாக கிடைக்கும் (அரசாணை எண் 307, நிதி (ஊ.டு) துறை நாள் 13.10.2017)

(2) Class I & II இடங்களில் பயணம் மேற்கொண்டால் தூரப்படியானது முறையே 50%&33 1/3% மேற்கண்ட தொகையைவிடக் கூடுதலாக இத்தொகை வழங்கப்படும்.

(3) பயணப்படி விதித் தொகுப்பு இணைப்பு 6ல் குறிக்கப்பட்டுள்ளபடி மோட்டார் கார்/சைக்கிள் ஆகியவற்றை பயன்படுத்தி தூரப்படி பெறக்கூடிய அலுவலர்கள் மட்டுமே தூரப்படி பெறலாம். ஆனால், 320 கி.மீ. அதிக தூரமுள்ள இடத்திற்கு பயணம் செய்தால், அதிகமான தூரத்திற்கு தூரப்படி கிடைக்கும். (அ.ஆ.எண். 312, நிதித்துறை, நாள் 17.5.82) (320 கி.மீ என்பது இரு வழி பயணத்தை உள்ளடக்கியது)

(4) 320 கி.மீ. என்பது Shortest Road Distanceல் கணக்கிடப்படும். அதிக தூரமுள்ள வழித்தடத்தில் பயணம் செய்தால் அதற்கான காரணத்திற்கு சான்று அளிக்க வேண்டும். (மேற்படி அரசுக் கடிதம்)

(5) பொது வாகன வசதி உள்ள இடங்களுக்கு Borrowed Conveyance உபயோகிக்கக் கூடாது. (அரசு க.எண். 8197/நிதி, நாள் 19.8.1984)

(6) டாக்ஸி மற்றும் பிற வாகனங்களில் பயணம் செய்ய நேரிடின், அவருக்கு தகுதியுள்ள வாகனத்திற்கு உண்டான பயணப்படிக்கு இத்தொகை வரையறை செய்யப்படும். (அரசு க.எண். 8197/ நிதி நாள் 19.6.1984)

**பயணப்படிகள் தாமதமாக Claim செய்வது தொடர்பாக**

நிதி ஒதுக்கீடு இல்லாமையால், பயணப் பட்டியல்கள் உரிய காலத்தில் வாங்கப்படவில்லை என்றால், தாமதத்திற்கான சான்றிதழ் உரிய Countersigning அதிகாரியால் பயணப்பட்டியலில் வழங்கினால் போதும் (அரசுக் கடித எண் 316/ படிகள்/2001–1 நாள் 19.6.2001)

**பயணப்படி தொகை விவரப் பட்டியல்**

| அரசாணை எண். 307 நிதி (ஊ.கு) துறை நாள் 13.10.2017 ன்படி 1.10.2017 முதல் அமுலுக்கு வருகிறது | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புதுதில்லி மற்றும் இதர மாநிலங்களின் தலைமையிடங்கள் (சென்னை தவிர) | | | சென்னை | | | மாநிலத்திலும் (ம) வெளியிலுமுள்ள இதர இடங்கள் (யூனியன் பிரதேசம் உட்பட) | | |
| அலுவலர்-களின் நிலை | தங்கும் விடுதிக் கான கட்டணம் | உணவகக் கட்டணம் விடுதி | விருந்தினர் மாளிகை/ தனியார் (உணவு, உறைவிட கட்டணம்) | தங்கும் விடுதிக் கான கட்டணம் | உணவகக் கட்டணம் | விருந்தினர் மாளிகை/ தனியார் (உணவு, உறைவிட கட்டணம்) | தங்கும் விடுதிக் கான கட்டணம் | உணவகக் கட்டணம் | விருந்தினர் மாளிகை/ தனியார் (உணவு, உறைவிட கட்டணம்) |
| நிலை–I(a) | 4500* | 1000 | 1000 | 4500* | 900 | 900 | 4500* | 600 | 600 |
| நிலை–I (b) | 3000 ^ | 800 | 800 | 1800 # | 800 | 800 | 800 | 400 | 400 |
| நிலை–II | 2250 | 600 | 600 | 1050 | 600 | 600 | 600 | 300 | 300 |
| நிலை–III | 1150 | 400 | 400 | 750 | 400 | 400 | 450 | 200 | 200 |
| நிலை–IV | 900 | 320 | 320 | 600 | 320 | 320 | 320 | 160 | 160 |

நிலை–I (a) ஊதிய நிலை 28 க்கு மேல் சம்பளம் வாங்கும் அலுவலர்கள்

நிலை-I (b) ஊதிய நிலை 25 மற்றும் அதற்கு மேல் ஊதியம் நிலை 28க்கு கீழ்

நிலை–II ஊதிய நிலை 13க்கு மேலும் 25க்கு கீழும்

நிலை–III ஊதிய நிலை 5க்கு மேலும் ஊதிய நிலை 13க்கு கீழும்

நிலை–IV ஊதிய நிலை 5க்கு கீழ் ஊதியம் பெறும் அலுவலர்கள்

அரசாணை எண். 307 நிதி (ஊ.டு) துறை நாள் 13.10.2017

*மூன்று நட்சத்திர நிலையுள்ள விடுதிகள் வரை அதிகபட்சம் ஈடு செய்தல் ரூ. 4500

^ இரண்டு நட்சத்திர நிலையுள்ள விடுதிகள் வரை அதிகபட்சம் ஈடு செய்தல் ரூ. 3000

# இரண்டு நட்சத்திர நிலையுள்ள விடுதிகள் வரை அதிகபட்சம் ஈடு செய்தல் ரூ. 1800



## III. இடமாற்றப் பயணப்படி (T.T.A.)

**பொது**

**(1)** தலைமையகத்திலிருந்து **8** கி.மீ. அதிகமாக உள்ள இடத்திற்கு ஒருவர் மாற்றப்பட்டால், இடமாற்றப் பயணப்படி கிடைக்கும். இதற்கு குறைவான தூரமிருந்தால் இடமாற்றப் பயணப்படி கிடைக்காது.

**(2)** அரசு ஊழியரும், குடும்பத்தினரும் ஒரே நாளில் செல்லாமல் மாறுபட்ட நாட்களில் பயணம் செய்யலாம். புதிய இடத்தில் பணி ஏற்ற நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் குடும்பத்தினர் புதிய இடம் செல்லலாம். அதற்கான பயணப்பட்டியல், பயணம் செய்த நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் **(90** நாள் அல்ல**)** கொடுக்கப்பட வேண்டும். (Note 1 under Art 54, TNFC 1).

**(3)** இடமாற்றப் பயணப்படி என்பது உண்மையாக செலவு செய்யப்பட்டத் தொகையைத் திரும்பப் பெறுவது ஆகும். அது ஒரு வருமானம் அல்ல.

**விடுப்பு முடிந்து பணி ஏற்றால் கிடைக்கும் இடமாற்றப் பயணப்படி**

ஆறு மாதத்திற்கு குறைவான விடுப்பிலிருந்து ஒருவர் பணி ஏற்றால், இடமாற்றப் பயணப்படி கிடைக்கும். பணியிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து ஆறு மாதம் விடுப்பு கணக்கிட வேண்டும்.

இடமாற்றப் பயணப்படி பட்டியல் ஒவ்வொரு பிரயாணம் முடிவுற்றவுடன் **3** மாதங்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். அரசு ஊழியர், குடும்பம், வீட்டு சாமான்கள் புதிய தலைமையிடத்திற்கு தனித்தனியாக செல்லும் தேதிகளிலிருந்து கணக்கிட வேண்டும். (Note 1 under Art 54 of TNFC Vol. 1)

**இடமாற்றப் பயணப்படியாக கிடைக்கும் தொகை**

**(1)** ரயில்/பஸ் கட்டணம் **(2)** அரசு ஊழியருக்கு மட்டும் இரண்டு Incidental Charges (பயண நேரம் கணக்கல்ல). **(3)** குடும்பத்தினர் மற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவருக்கும் Flat Rate மற்றும் தினப்படி **(4)** வீட்டுச் சாமான்களை புதிய இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான செலவு **(5)** Lump Sum தொகை **(6)** வேலையாளுக்கு இரண்டாம் வகுப்பில் ரயில்/பஸ் கட்டணம் (தினப்படி கிடைக்காது) **(7)** வாகனம் எடுத்துச் செல்வதற்கான செலவு முதலியவை கிடைக்கும்.

**இடமாற்றப் பயணப்படிக்கு தகுதியான குடும்ப உறுப்பினர்கள்**

மனைவி, அரசு ஊழியரைச் சார்ந்துள்ள மகன் மற்றும் மகள் (வயது வரம்பு கிடையாது), தத்தெடுத்த மகன் மற்றும் மகள், மாற்று மகன்/மகள், அரசு ஊழியரை முழுவதுமாக சார்ந்துள்ள விதவை மகள், பெற்றோர், பெண் அரசு ஊழியரை முற்றிலுமாக சார்ந்துள்ள கணவன் ஆகியோர் இடமாற்றப் பயணப்படிக்கு தகுதி உடையவர் ஆவர். பயணப்படி விதி **2**(IV)

**குடும்ப உறுப்பினர் புதிய இடம் செல்வது . (விதி 76)**

குடும்ப உறுப்பினர் அரசு ஊழியரோடு புதிய இடத்திற்கு பயணம் செய்யலாம். அல்லது பழைய இடத்தில் விடுபட்ட நாளுக்கு ஒரு மாதத்திற்கு முன்னரும் செல்லலாம். அல்லது புதிய இடத்தில் பணி ஏற்ற நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள்ளும் புதிய இடம் செல்லலாம்.

**குடும்ப உறுப்பினர் புதிய ஊர் தவிர வேறு ஊருக்கு செல்வது**

குடும்ப உறுப்பினர் புதிய ஊர் தவிர வேறு ஊருக்கும் பயணம் செய்யலாம். அல்லது வேறு ஊரிலிருந்து புதிய இடத்திற்கும் வரலாம். இப்படி பயணம் செய்தாலும் குடும்ப உறுப்பினருக்கு இடமாற்றப் பயணப்படி கிடைக்கும்.

**கணவன் மனைவி இருவரும் மாற்றப்பட்டால்**

கணவன், மனைவி இருவரும் ஆறு மாதத்திற்குள் ஒரே இடத்திற்கு மாற்றப்பட்டால், ஒருவருக்கு மட்டுமே இடமாற்றப் பயணப்படி கிடைக்கும். வேறு வேறு ஊருக்கு மாற்றப்பட்டால் இருவருக்கும் பயணப்படி கிடைக்கும்.

**தினப்படி . (விதி 70)**

அரசு ஊழியர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பயண நேரத்தைக் கருத்தில் கொள்ளாமல் 24 மணி நேரப் பயணம் வரை முழு தினப்படி வழங்கப்படும். 24 மணிக்கு அதிகமானால் ஒரு தினப்படியும், 24 மணிக்கு அதிகமாகும் நேரத்திற்கு கூடுதல் தினப்படியும் வழங்கப்படும். (2) 12 வயது நிறைவு செய்யாதவர்களுக்கு அரை தினப்படி கிடைக்கும். (3) எந்த வாகனத்தில் பயணம் செய்தாலும் தினப்படி கிடைக்கும். வாகனத்திற்கும் தினப்படிக்கும் சம்பந்தமில்லை.

| பயண நேரம் | ஊழியருக்கும் குடும்ப உறுப்பினருக்கும் | 12 வயதுக்கு குறைந்த மகன்/மகள் |
|---|---|---|
| 1) 24 மணி நேரத்திற்குட்பட்டால் | முழு தினப்படி | அரை தினப்படி |
| 2) 24 மணி நேரத்திற்கு மேற்பட்டால் | | |
| 6 மணி நேரம் வரை | 1.30 | 0.65 |
| 6 மணி 12 மணி நேரம் வரை | 1.70 | 0.85 |
| 12 மணி நேரத்திற்கு மேல் | 2.00 | 1.00 |

ஒவ்வொருவருக்கும் வாங்கிய டிக்கட் கட்டணம் – Rule 70 (ii) ரிசர்வேஷன் மற்றும் பர்த் கட்டணம்) வாடகை காரில் பயணம் செய்தால் தகுதியான ரயில்/பஸ் கட்டணம் மட்டுமே கிடைக்கும். (விதி 70(ii)ன்கீழ் உள்ள குறிப்பு). குடும்பத்தினர் மெயில், எக்ஸ்பிரஸ் வண்டியிலும் பயணம் செய்யலாம். (விதி 70(1)ன் கீழ் கண்டுள்ள துணைவிதி). இடமாற்றலின்போது வாடகைக் காரில் புதிய இடம் சென்றால் அவர்களுக்குத் தகுதியுள்ள ரயில் கட்டணம் மட்டும் கிடைக்கும். வாடகைக் காரில் கட்டணம் குறைவாக இருந்தால், அதுவே கிடைக்கும். (விதி 70(ii)ன் கீழே கண்டுள்ள குறிப்பு)

## Incidental Charges and Flat Rate

(1) அரசு ஊழியருக்கு மட்டும் இடைப்பட்ட தூரம் 160 கி.மீ.க்கு குறைவாக இருப்பினும் இரண்டு (ஒன்று அல்ல) Incidental Charges கிடைக்கும். (Note (2) Under T.A. Rule 72 (i)(b) and Govt. Lr. No. 45145/PCII/70-1, Fi., dated 19.11.90) கார்/பஸ்/விமானம் மூலம் பயணம் செய்தால்தான் உண்டு.

(2) குடும்ப உறுப்பினர் மற்றும் அரசு ஊழியர் அனைவருக்கும் இரண்டு இடங்களிலும் Flat Rate மட்டும் கிடைக்கும்.



**வீட்டுச் சாமான்கள் (Personal Effects)**

(1) லாரி அல்லது ரயில் முதலியவைகளில் வீட்டுச் சாமான்களை எடுத்துச் செல்லலாம். லாரியில் (Shortest Route) எடுத்துச் செல்வதற்கு தகுதியான ரயில் கட்டணம் மட்டும் கிடைக்கும். (Note (iii) under rule 70(ii)

(2) இடமாற்றம் செய்யப்பட்ட ஆறு மாதங்களில் புதிய இடத்திற்கு கொண்டு வரலாம். பழைய இடத்திலிருந்தும் புதிய இடத்திற்கு கொண்ட வரலாம். அல்லது பழைய இடத்திலிருந்து புதிய இடம் தவிர்த்து வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்லலாம். ஆனால், இதற்கான தொகை புதிய இடம் எடுத்துச் செல்லும் தொகையைவிட அதிகமாகக் கூடாது. (Rule (70)(ii) and 75(5). ரயில், பஸ் இல்லாத ஊருக்கு சாமான்களை எடுத்துச் சென்றால் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் தகுதியான மூன்று Mileage கிடைக்கும். (விதி 72 (ii) மற்றும் அரசாணை எண் 166 நிதி நாள் 19.3.1982 மற்றும் அரசு க.எண். 107022/படி/1/81–1, நிதி, நாள் 29.11.1983)

## Lump Sum Allowance

வீட்டுச் சாமான்கள் கொண்டு செல்லவில்லை என்றாலும் தகுதியான Lump Sum Allowance–ல் 50% வழங்கப்படும். (Rule 70(x)(b) (2) இடமாற்றம் செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் சாமான்களை எடுத்துச் சென்றால் மீதமுள்ள 50% கிடைக்கும். (3) திருமணமாகாத ஊழியருக்கும், வீட்டுச் சாமான்களை எடுத்துச்சென்றால் இத்தொகை கிடைக்கும். (அ.ஆ.எண். 44, நாள் 31.8.98)

அரசாணை எண். 307, நிதி(சகு) துறை, நாள் 13.10.2017ன்படி கிடைக்கும்.

**மாற்றலின்போது வாகனங்களை அரசு செலவில் எடுத்துச் செல்லுதல்**

(1) வாகனங்களை அரசுச் செலவில் யார் எடுத்துச் செல்லலாம் என்ற விவரங்களை Annexure VI to T.A. Rules-ல் உள்ளது. கார் (அ) இரண்டு சக்கர வாகனம் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இதனை கோர முடியும்.

(2) வாகனத்தை ரயில் வண்டியில் எடுத்துச் சென்றால், ரயில் கட்டணம் மட்டுமே கிடைக்கும்.

சாலை மார்க்கமாக ஓட்டிச் சென்றால், காருக்கு கிலோ மீட்டருக்கு ரூ. 12/–ம், மோட்டார் சைக்கிளுக்கு கிலோ மீட்டருக்கு ரூ. 6/–ம் கிடைக்கும். (பயணப்படி விதி 72(iii) அ.ஆ.எண். 307 நிதி நாள் 13.10.2017)

(3) லாரியில் எடுத்துச் சென்றால் காருக்கு கிலோ மீட்டருக்கு 0.40ம், மோட்டார் சைக்கிளுக்கு கி.மீ.க்கு 0.20ம் கிடைக்கும்.

(4) ரயில்/பஸ் மூலம் பயணம் செய்தால், ஓட்டுநருக்கு கட்டணம் மட்டும் கிடைக்கும். பயணப்படி கிடைக்காது.

**வேலையாளுக்குப் பயணப்படி**

வேலையாளுக்குப் புதிய இடம் செல்ல கீழ்க்கண்டபடி ரயில்/பஸ் கட்டணம் மட்டும் கிடைக்கும். தினப்படி கிடைக்காது. கிரேடு (IV) வகையினருக்கு கிடைப்பது போல் Flat Rate கிடைக்கும். (அ.ஆ.எண். 1054 நிதி, நாள் 5.10.78) பயண மாறுதலின்போது பணியாட்கள் இருந்திருக்க வேண்டும்.

**இடமாற்றப் பட்டியலில் வழங்கவேண்டிய சான்றுகள்**

Certified that (1) the members for whom T.A. is claimed are fully dependent on me; (2) the expenditure towards train fare, etc., were actually incurred by me;

(3) the personal effects were acutally in my possession at the time of receipt of transfer orders; (4) the expenditure towards transportation of personal effects were actually incurred by me (5) the personal servants for whom. T.T.A. is claimed were in my employment at the time of receipt of transfer orders (6) the conveyance for which claim has been preferred is maintained in good operative condition (7) the distance for which flat rate has been claimed exceeds 1/2 km.

## IV. விடுப்புக்கால பயணச் சலுகைகள்

**(1)** தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, ஈடுசெய் விடுப்பு, அரசு விடுமுறையுடன் சேர்ந்த தற்செயல் விடுப்பு மற்றும் பண்டிகை விடுப்புக் காலங்களில் விடுப்புக் கால பயணச் சலுகை அனுபவிக்கலாம். (அரசு க.எண். 156467/படி1/88, நிதி, நாள் 10.2.1989), கோடை விடுமுறையிலும் இந்தச் சலுகை அனுபவிக்கலாம். (அ.ஆ. எண். 407, நிதித்துறை நாள் 15.6.1981)

**(2)** 2017–2018, 2019–2020 என ஈராண்டுக்கு ஒருமுறை ஒரு வழிச் சலுகை அல்லது 2017–2020 என நான்கு ஆண்டுக்கு இருவழிச் சலுகையும் விருப்பப்படி அனுபவிக்கலாம்.

**(3)** பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்கள் ஈராண்டுக்குக் குறைவாக பணிக்காலம் இருப்பின், ஒரு வழிச்சலுகையும், ஈராண்டுக்கு அதிகமாக பணிக்காலம் இருப்பின் இருவழிப் பயணச் சலுகையும் அனுபவிக்கலாம் (அரசு கடித எண் 44312/படி 93–1, நிதித்துறை, நாள் 19.5.93).

**(4)** தலைமையகத்திலிருந்து 160 கி.மீ. அதிகமான தூரத்திற்கு பயணம் மேற்கொள்ள வேண்டும். (அரசாணை எண் 113, நிதி, நாள் 7.10.1989). வெளி மாநிலப் பயணங்களுக்கு தலைமையிடத்திலிருந்து 800 கிலோ மீட்டர் வரை பயணம் செய்யலாம். (அரசு ஆணை எண். 237, நிதி(சக) துறை, நாள் 01.06.2009 முதல் அமுலுக்கு வருகிறது.)

**(5)** அயற்பணியில் பணிபுரியும் அரசு ஊழியருக்கு இத்தொகையை அயற்பணியாளர் வழங்குவார். (அரசாணை எண் 219, நிர்வாகத்துறை, நாள் 3.7.92) அயற்பணியில் கிடைக்கும் சலுகையானது பயனுள்ளதாக இருப்பின் அதனைப் பெறலாம். (Govt. Lt. No. 4558/85-4, P&A.R. dt. 23.5.86).

**(6)** கணவன்/மனைவி இருவரும் மாநில அரசு ஊழியராக இருக்கும் பட்சத்தில், எவரேனும் ஒருவர் மட்டும் அவரின் விருப்பப்படி இச்சலுகை அனுபவிக்கலாம். மாநில அரசு தவிர, கணவன்/மனைவி பிற இடங்களில் பணி புரிந்தால், கணவன்/மனைவி, அந்த அலுவலகத்தில் இச்சலுகை அனுபவிக்கவில்லை என்ற சான்று தேவை.

**(7)** இடமாற்றப் பயணப்படிக்கு குடும்ப உறுப்பினர் என எவர் எல்லாம் கருதப்படுகின்றாரோ அவர்களுக்கு எல்லாம் இச்சலுகை கிடைக்கும். கீழே குறிப்பிட்டவரும் இச்சலுகைக்காக குடும்ப உறுப்மினராகக் கருதப்படுவர்.



| சலுகைக்கு தகுதி உடையவர் | சலுகைக்கு தகுதி அற்றவர் |
|---|---|
| T.A. விதியில் குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர் (விதி 2) | ஓய்வூதியம் பெறும் சார்ந்திராத (Not Dependent) பெற்றோர் |
| திருமணமாகாத அல்லது கணவனைஇழந்த பெண் ஊழியரின் பெற்றோர் | கணவரிடமிருந்து பிரிக்கப்பட்டு ஆனால் விவாகரத்து செய்து கொள்ளாத பெண் ஊழியரின் பெற்றோர் |
| திருமணமான பெண் ஊழியர்கள் பெற்றோர் முழுவதுமாக சார்ந்திருப்பார்களானால் | திருமணமான பெண் ஊழியரின் சகோதரன்/சகோதரிகள் மாமனார் / மாமியார் |
| வேலையில்லாத மகன் | சகோதரன்/சகோதரி |
| விதவையான ஊழியரின் பெற்றோர் | ஓய்வூதியம் பெறும் பெற்றோர் |

**(8)** விடுப்பு முடிவதற்குள் பயணம் துவக்கப்பட வேண்டும். குடும்ப உறுப்பினர் அரசு ஊழியருடன் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ விடுப்புக்காலம் முடிவதற்குள் பயணம் செய்யலாம். ஆனால், பயணம் துவக்கிய நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் பயணம் முடிக்கப்பட வேண்டும்.

**(9)** ரயில் மற்றும் அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் மட்டுமே பயணம் மேற்கொள்ளப்பட வேண்டும். விரைவுப் பேருந்து அல்லது சூப்பர் டீலக்ஸ் பேருந்திலும் பயணம் செய்யலாம். K.K. Express சுற்றுப் பாதையில் சென்றாலும், அதில் பயணம் செய்தவர்களுக்குக் கட்டணம் வழங்கப்படும். (அரசு க.எண். 2861/படிகள்/95 நிதித்துறை, நாள் 16.6.95)

**(10)** இடையில் இறங்கி பயணம் மேற்கொண்டாலும் Through Ticket Basis–ஐ கணக்கிட்டுதான் கட்டணம் வழங்கப்படும்.

**(11)** முதல் வகுப்பு இல்லாத ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது மூன்றாவது வகுப்பு ஏ.சி. ஸ்லீப்பர் (முதல் வகுப்பிற்கு பதிலாக) அனுமதிக்கலாம். இது எல்.டி.சி.க்கு பொருந்தும். (அரசு கடிதம் எண். 58007/நிதி(படிகள்) 2009–1/ நாள் 10.10.2009)

**(12)** ரயில்/பஸ் கட்டணம் தவிர பிற செலவுகள் ஏதும் கிடைக்காது.

**(13)** எதிர்பார்க்கின்ற செலவில் 80% முன்பணமாக வழங்கப்படும். இதற்கு விடுப்பு ஒப்புதல் ஆணையும், இதற்கென அமைந்த படிவம் IIIம் முன்பண விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

**(14)** பயணம் முடிந்த ஒரு மாதத்திற்குள் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலா

**(1)** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாவையும் விடுப்புக்கால பயணச் சலுகையாக அனுபவிக்கலாம். (அரசாணை எண். 352, நிதித்துறை, நாள் 19.5.92)

**(2)** நான்கு ஆண்டுக்கு ஒரு முறைதான் இந்தச் சலுகை அனுபவிக்கலாம்.

ரூ. 25 செலுத்தி கழகத்தில் இதற்குப் பதிவு செய்ய வேண்டும். இதற்கான தொகையை அலுவலகத் தலைவரே சுற்றுலா கழகத்திற்குக் காசோலையாக கொடுத்து விடுவார்.

(3) அடிப்படை ஊதிய வேறுபாடு இன்றி, அனைவரும் இத்திட்டத்தின் கீழ் சுற்றுலா செல்லலாம். (அரசு க.எண். 75898/படிகள்/1192–1 நிதித்துறை, நாள் 6.11.92)

(4) சுற்றுலாக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையில் 80% வரை முன்பணம் வழங்கப்படும். (மேற்படி கடிதம்)

(5) மேற்கண்ட செலவினத்துடன் கழகம் உறைவிடக் கட்டணம் கேட்டால் அதுவும் வழங்கப்படும். (மேற்படி கடிதம்)

## V. பிற பயணப்படி விதிகள்

### தேர்வுக்குச் செல்வதற்கு பயணப்படி (பயணப்படி விதி 86.89)

(அ) ஊழியர்கள் கட்டாயத் தேர்வு எழுதச் சென்றால் பயணக் கட்டணம் மட்டும் வழங்கப்படும். தினப்படி கிடைக்காது. காரில் சென்றால் தகுதியான ரயில் கட்டணம் மட்டும் கிடைக்கும். குறிப்பிட்ட ஒரு தேர்வு எழுத இரண்டு முறை மட்டுமே பயணப்படி கிடைக்கும்.

(ஆ) அலுவலக பணியாக முகாம் சென்றுள்ளவர்கள் தேர்வு எழுத மையம் செல்வதற்கும் பயணப்படி கிடைக்கும் (அ.ஆ. எண். 1206, நிதித்துறை, நாள் 4.9.72)

### மருத்துவக் காரணங்களுக்குப் பயணப்படி வழங்குதல்

தலைமையகத்தில் மருத்துவ வசதி, எக்ஸ்ரே, ரத்தப் பரிசோதனை முதலியன இல்லாது போனால், விடுப்பு பெற மருத்துவர் சான்று பெறுவது (Fitness Certificate கிடையாது) முதலியவற்றுக்கு வெளியூர் சென்றால் ரயில்/பஸ் கட்டணம் மட்டும் கிடைக்கும். பயணப்படி விதி 99–101)

### நீதிமன்றம்/துறைவாயிலான விசாரணைக்குப் பயணப்படி

(அ) இந்தியாவில் நடைபெறும் குற்றவியல் வழக்குகள், துறைப்பூர்வமான விசாரணை முதலியவற்றுக்கு சாட்சிகள் கூறச்சென்றால், ஊழியருக்கு பயணப்படி கிடைக்கும். காரில் சென்றால் தகுதியான ரயில்/பஸ் கட்டணம் மட்டுமே கிடைக்கும். இதற்கு நீதிமன்றம்/துறை அதிகாரி வழங்கும் சான்று இணைக்கப்பட வேண்டும். பயணப்படி பெறுவாராயின் நீதிமன்றத்தில் பணம் ஏதும் பெறக்கூடாது. விடுப்பு அல்லது தற்காலிகப் பணி நீக்கத்தின்போது சாட்சி கூறச் சென்றாலும், பயணப்படி கிடைக்கும். (பயணப்படி விதி 96)

(ஆ) லஞ்ச வழக்குகளில் பிடிபட்டவர்கள், இந்திய பீனல் கோர்ட் சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்தவர்கள் ஆகியோர் சொந்தச் செலவில்தான் பயணம் செய்ய வேண்டும். (அரசாணை எண். 1293, நிதி நாள் 29.12.1976)

(இ) குற்றம் சம்பந்தப்பட்ட ஒருவர் பதிவுகளை பார்வையிடச் சென்றாலும் பயணப்படி கிடைக்கும் (T.A. Rule 96-Note (1)(2)&(3)

(ஈ) அரசு தொடர்பில்லாத வழக்குக்காக நீதிமன்றத்திற்கு வரும்படி ஒருவர் பணிக்கப்பட்டால், உரிய செலவுகளை நீதிமன்றம் வழங்கும்.



(உ) விடுப்பிலிருக்கும்போது அல்லது தற்காலிகப் பணி நீக்கத்திலிருந்து நீதிமன்றம் சென்றால், ஊழியர் தங்கி இருக்கும் இடத்திலிருந்து பயணப்படி வழங்கப்படும். (பயணப்படி விதி. 96)

### தமிழ்த்தேர்வுக்கு பயணப்படி

தமிழ்த்தேர்வு எழுத சென்றாலும் பயணப்படி கிடைக்கும். (அரசு க.எண். 113115/87–2, நிதித்துறை, நாள் 28.11.88)

### விளையாட்டுப் போட்டிக்கு பயணப்படி

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அரசு ஊழியருக்கும் (இந்தியா அல்லது வெளிநாடு) பயணப்படி கிடைக்கும் (அ.ஆ. எண். 1755, நிதித்துறை, நாள் 28.11.88)

## VI. ஊதிய உயர்வு

### பொதுவான விதிகள்

(அ) ஆண்டுதோறும் வழக்கம்போல் pay matrix-ல் உள்ளபடி (ஊதிய அணி) ஊதிய உயர்வு வழங்கப்படும். இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. (அடிப்படை விதி 24) (அ.ஆ.எண்.303, நிதி(சகு) துறை, நாள் 11.10.2017)

(ஆ) ஒரு ஊழியர் மீது குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருந்தாலும்கூட ஊதிய உயர்வு வழங்கலாம். (அடிப்படை விதி 24ன் துணை விதி (6) அரசு க.எண் 41533/பணி என்/87–9, பணியாளர், நாள் 6.4.1988)

(இ) ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களின் முதல் தேதியில் ஊதிய உயர்வு வழங்கப்படும். (அ.ஆ.எண். 1460, நிதித்துறை, நாள் 19.11.1973) மற்றும் அ.ஆ.எண். 303, நிதி (சகு) துறை, நாள் 11.10.2017)

(ஈ) புதியதாக பணி ஏற்கின்ற அல்லது பதவி உயர்வில் பணி ஏற்கின்ற ஒருவருக்கும் முதல் ஊதிய உயர்வு, இணையான காலாண்டின் துவக்கத்தில் வழங்கப்படும். இவர்கள் விஷயத்தில் ஓராண்டு பணி முடிக்க வேண்டிய அவசியமில்லை. (அரசாணை எண் 41 நிதி நாள் 11.1.77 மற்றும் அரசு க.எண். 171550/அவி/1/73 நிதித்துறை, நாள் 1.10.91)

(உ) ஊதிய உயர்வு நிலுவை இருப்பின், அதற்கான சான்று கையொப்பமிட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் வழங்கப்பட வேண்டும். தவறின், அடுத்த உயர் அலுவலரின் முன் தணிக்கை பெற வேண்டும். மூன்று ஆண்டுக்கு மேலும் நிலுவையாக உள்ள இனங்களுக்குத் துறைத் தலைவரின் அனுமதி தேவை. (அரசாணை எண். 1265, நிதித்துறை, நாள் 11.10.1973 மற்றும் அரசாணை எண் 349, நிதித்துறை, நாள் 21.5.1981)

(ஊ) தேர்வுகள் தேர்ச்சி பெறுவதற்காக ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டியிருப்பின், தேர்வுகள் நடந்த கடைசி நாளுக்கு (பிரிவுகளாக நடந்திருப்பின், பிரிவுத் தேர்வு நடந்த கடைசி நாளுக்கு) மறுநாள் முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும் (அடிப்படை விதி 26(எ)ன் துணை விதி (2)

### தற்காலிக மற்றும் தகுதிகாண் பருவத்தினருக்கு ஊதிய உயர்வு

(அ) தற்காலிக ஊழியர்களுக்கும் ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்கப்படும். ஆனால், அவர் வகிக்கும் பதவியில் தகுதிகாண் பருவக் காலத்தில் தேர்வுகள் ஏதேனும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் முதல் ஊதிய உயர்வு மட்டும் வழங்கப்படும். இரண்டாம் ஊதிய உயர்வு குறிப்பிட்ட அந்தத் தேர்வில் தேர்ச்சி

பெற்ற பின்னர்தான் வழங்கப்படும். (அரசாணை எண். 1067, நிர்வாகத்துறை, நாள் 10.11.1982 அரசாணை எண். 231, P&A.R., dt. 16.3.83 மற்றும் அரசு க.எண் 35068/DOI/FI/P&A.R., நாள் 11.1.94) தற்காலிகமாக பதவி உயர்வு பெற்றவருக்கும் ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்கலாம். (Govt. Lr. No. 15285/FR.174-6, Finance dt. 16.8.75)

(ஆ) தகுதிகாண் பருவத்தினருக்கு ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்கப்படும். தகுதிகாண் பருவக் காலத்தில் தேர்வுகள் வரையறை செய்யப்பட்ட பதவிகளுக்கு இரண்டாம் ஊதிய உயர்வு குறிப்பிட்ட அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் வழங்கப்படும். தகுதிகாண் பருவம் முடிந்து ஆணை வழங்கிய பின்னர்தான் இரண்டாவது ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது இனி இல்லை (அ.ஆ.எண். 618, P&A.R., நாள் 6.7.87)

(இ) தகுதிகாண் பருவக் காலத்தில் ஒருவருக்கு 1.4.1988 அன்று ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால், குறிப்பிட்ட தேர்வு தேறாத காரணத்தால் 1.4.1988 ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. 1.4.1989 மற்றும் 1.4.1990 ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை. இவர் 16.9.1990 அன்று நடைபெற்ற தேர்வில்தான் தேர்ச்சி பெறுகின்றார். இவருக்கு 1988, 1989, 1990 ஆகிய மூன்று ஊதிய உயர்வுகளும் சேர்ந்து 17.9.1990 அன்று ஒருசேர வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016 (14/2016) பிரிவு 33) கூறுகிறது. இதனால் இவருக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. நிரந்தரமாக Cumulative நிதி இழப்பு ஏற்படவில்லை.

(ஈ) தகுதிகாண் பருவக் காலத்தில் பவானிசாகர் பயிற்சி முடிக்க வேண்டிய இளநிலை உதவியாளர்களுக்கு இரண்டாவது ஊதிய உயர்வு அப்பயிற்சி முடிந்தபின்னர்தான் வழங்கப்பட வேண்டும். அலுவலக நடைமுறை காரணமாக பயிற்சிக்கு அனுப்புவது தாமதப்பட்டால், அரசின் ஆணை பெற்று விதிகளைத் தளர்த்தி வழக்கமான நாளிலேயே ஊதிய உயர்வு வழங்கலாம். (அரசு க.எண். 6686/90–3, நிர்வாகத்துறை, நாள் 18.4.1990 மற்றும் அ.ஆ.எண். 71720/பணி–பி/92–1, நிர்வாகத்துறை, நாள் 2.12.92)

(உ) ஒரு பதவிக்கு பணி அமர்வு செய்வதற்கான தகுதிகள் அனைத்தும் ஒருவர் பெற்றிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு தகுதி குறைவாக இருந்தாலும் அவருக்கு ஊதிய உயர்வே கிடைக்காது. (அரசு க.எண். 16599A/FRI/74–3 நிதித்துறை, நாள் 21.3.75 & அ.ஆ. எண் 41, நிதித்துறை, நாள் 11.1.77)

(ஊ) பணி இறக்கம் பெறுவதைத் தொடர்ந்து ஒருவர் விடுப்பில் செல்வதால் விடுப்பு முடிந்து மீண்டும் பதவி உயர்வு பெற்று அதே உயர் பதவியில் சேர்ந்தால் விடுப்புக் காலத்திற்கும் ஊதிய உயர்வு கிடைக்கும். அதாவது தள்ளிப் போகாது. (Effective from 25.3.88) G.O.Ms.No. 212, P&A.R., dt. 25.3.88)

**தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர்கள்**

இவர்களுக்கு முதல் ஊதிய உயர்வு மட்டும் வழங்கலாம். இரண்டாம் ஊதிய உயர்வு தமிழ் தட்டச்சு/சுருக்கெழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர்தான் வழங்கப்படும்.

அரசாணை எண் 94 ப.நி.சீ. (B) துறை நாள் : 25.7.2018–ன்படி சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு கீழ்க்கண்டவாறு பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



(i) தகுதிகாண் பருவம் நிறைவு செய்து 15 ஆண்டுகள் பணி முடித்த சு.எ.தட்டச்சர் நிலை III-ல் உள்ளவர்கள் சுருக்கெழுத்து தட்டச்சராக இருக்க விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை II ஆக பதவி உயர்வு வழங்கி துறை தலைவருக்கு உடன் அடுத்த நிலையில் உள்ள அலுவலரைத்தவிர ஏனைய இரண்டாம் நிலை அலுவலக பணியிடங்களுக்களோடு இணைக்கப்பட வேண்டும்.

(ii) சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை II ஆக 15 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை I ஆக பதவியுயர்வு வழங்கி துறைத் தலைவர் அல்லது துறைத் தலைவருக்கு அடுத்த கீழ்நிலையில் உள்ள அலுவலக பணியிடங்களுகளோடு இணைக்கப்படவேண்டும்.

**ஊதிய விகிதத்தில் அதிகபட்சம் பெற்றவருக்கு ஊதிய உயர்வு**

1.1.96 முதல் 1.9.98 (நிதிப்பயன் 1.9.98) ஒரு ஊதிய விதத்தில் அதிகபட்சம் பெற்றுவிட்ட ஒருவருக்கு இரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதான் ஊதிய உயர்வு கிடைக்கும் (அரசாணை எண். 483, நிதி (ஊதியக்குழு) நாள் 8.9.98) அரசாணை எண். 303 நிதி (ஊ.கு) நாள்: 11.10.2017ன் படி 1.1.2016 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

53 வயதை கடந்த நேரடி நியமனம் மற்றும் பிற முறைகளில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்களின் தகுதிகாண் பருவம் விளம்படவும் இவ்வயதை கடந்த நேரடி நியமனம் மற்றும் பிற வகைகளில் நியிமிக்கப்பட்ட தட்டச்சர்கள் உதவியாளர்களாக பதவியுயர்வு பெறும் போதும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறுவதிலிருந்து விளக்களித்து அரசு ஆணையிடுறது. அரசாணை (நிலை) எண்.120 ப. & நி.சீ (பயிற்சி 1) துறை நாள் 05.12.2016

**ஊதிய உயர்வுக்கு சேரும் காலம்**

- பணியேற்பிடைக்காலம் F.R. 26(d)
- அயல்பணி FR.26(d)
- உயர்நிலைப் பதவியின் பணி புரிந்த காலம் கீழ்நிலைப் பகுதிக்கு சேரும் F.R. 26(e)
- பயிற்சிக்கு சென்ற காலம் – (G.O.Ms.No.370, P&A.R., dt. 26.6.89)
- அனைத்து விடுப்புகள் (F.R. 26(bb)
- மருத்துவச் சான்றின் பேரில் ஊதியமில்லா விடுப்பு – (F.R. 26 (bb)

**ஊதிய உயர்வுக்கு சேராத காலம்**

- மருத்துவச் சான்று அல்லாத ஊதியமில்லாத விடுப்பு F.R. 26 (bb)
- அனுமதித்ததற்கும் அதிகமாக எடுக்கப்பட்ட வரன்முறை செய்யாத விடுப்புக் காலம்
- குற்றமாக கருதப்பட்ட தற்காலிகப் பணிநீக்க காலம்
- கீழ்நிலைப் பதவியில் பணிபுரிந்த காலம் உயர் பதவிக்கு சேராது

தண்டனைக்காலம் விடுப்புகளை சேர்த்தோ அல்லது நீங்கலாகவோ என தண்டனை வழங்கப்படும் ஆணையில் குறிப்பிட வேண்டும். இருப்பினும், With Cumulative effectஆக தள்ளப்படும் ஊதிய உயர்வு எப்போதுமே விடுப்புக்காலம் சேர்த்துதான் இருக்கும். (விதி 24 & அதன் அறிவுரை 2 (b))

**தண்டனையாக ஊதிய உயர்வைத் தள்ளிப் போடுதல்**

ஊதிய உயர்வை தண்டனையாக கருதி குறிப்பிட்ட காலத்திற்கு தள்ளிப் போடலாம். அது With cumulative effect and without cumulative effect என இரு வகைப்படும்.

Without cumulative effectல் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டு தண்டனைக்காலம் முடிவுற்றதும் நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வு வழங்கப்படும்.

With cumulative effect–ல் தண்டனையாக நிறுத்தப்பட்ட ஊதிய உயர்வின் இழப்பு பணிக்காலம் முழுவதும் இருக்கும். தண்டனையாக நிறுத்தப்பட்டது மீண்டும் கிடைக்காது.

இதுவன்றி ஊதிய உயர்வு தள்ளிப் போகும் காலத்தில் விடுப்பு அனுபவித்தால் இணையான காலத்திற்கு ஊதிய உயர்வு தள்ளிப் போகும்.

ஒருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பினும், ஊதிய உயர்வு வழங்கலாம். (Ruling 6 under FR 24) ஆணை வழங்குதலை எதிர்பார்த்து ஊதிய உயர்வே தராமல் இருக்கக் கூடாது. ஆண்டு ஊதிய உயர்வு தள்ளிப் போகும் ஆணை வழங்கப்பட்டால், ஆணைக்குப் பின்னர் எதிர்வருகின்ற முதல் ஊதிய உயர்வு தள்ளிப் போகும். ஆணை வழங்கப்பட இருக்கின்றது என எதிர்பார்த்து ஊதிய உயர்வே தராமல் இருக்க முடியாது. (அடிப்படை விதி 24)

**ஊதிய உயர்வு திரள்கின்ற நாளன்று விடுப்பிலிருந்தால்**

ஊதிய உயர்வு திரள்கின்ற நாளன்று விடுப்பில் இருந்தால் (L.L.P. without M.C. தவிர) ஊதிய உயர்வின் நிதிப்பயன் விடுப்பு முடிந்து பணியேற்ற உடன் வழக்கமான ஊதிய நாள் முதல் கிடைக்கும். நிதிப்பயன் தள்ளிப் போகாது. விடுப்பு என்பது எல்லா விடுப்பும் சேரும். L.L.P. Without M.C.ல் இருந்தால் விடுப்பு முடிந்து சேர்ந்த பிறகுதான் அனுமதிக்க முடியும். (அரசு கடித எண். 48747/F.R.D.OI/93–9, dt. 30.5.94) அரசாணை (எம்.எஸ்.) எண்.90 P&A.R., நாள் 28.3.95)

**பணி நீக்கப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்டால் ஊதிய உயர்வு**

(அ) தகுதிகாண் பருவம் முடித்தவர் பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்டால், அவர் பணிநீக்கத்திற்கு முன்னர் பெற்றுவந்த ஊதியமே பெறலாம்.

அத்துடன் முந்தைய பணிக்காலமும், ஊதிய உயர்வுக்குக் கணக்கிடப்படும் (அ.ஆ.எண். 400, நிர்வாகத்துறை, நாள். 7.4.1986) இதனை சாதாரணமாக ஊதியம் நிர்ணயம் செய்யும் அலுவலரே வழங்கலாம் – (அரசு கடித எண் 44316/86–4, நிர்வாகத் துறை, நாள் 29.8.86)

(ஆ) இடைப்பட்ட பணி நீக்கக் காலம் Condone செய்யப்பட வேண்டிய தேவையில்லை (அரசு கடித எண் 44316/86–4, நிதித்துறை, நாள் 29.8.86)

(இ) பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் அதே பதவியில் அல்லாமல் வேறு பதவிக்கு பணி அமர்த்தப்பட்டால், முந்தையப் பணிக்காலம் ஊதிய உயர்வுக்கு சேராது. இருப்பினும் அதே பதவியில் அதே துறையிலோ வேறு துறையிலோ பணி



அமர்த்தப்பட்டால் அதே ஊதியம் வழங்குவதுடன் முந்தைய பணிக்காலம் ஊதிய உயர்வுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். (அரசு க.எண். 76362/87–4, P&A.R. நாள் 27.7.88)

**முன் ஊதிய உயர்வு**

(அ) ஒரு குறிப்பிட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றால் முன் ஊதிய உயர்வு வழங்கலாம் என குறிப்பான அரசாணை உள்ள பதவிகளுக்கு மட்டுமே, முன் ஊதிய உயர்வு வழங்கலாம்.

(ஆ) பணிக்கு வருவதற்கு முன்னரே குறிப்பிட்ட அந்த தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், முன் ஊதிய உயர்வு வழங்கலாம். (அரசாணை எண் 245, நிர்வாகத் துறை, நாள் 16.3.1985)

(இ) தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவருக்கு ஒரு முன் ஊதிய உயர்வும், சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றால் இரண்டு ஊதிய உயர்வுகளும் கிடைக்கும் (அரசாணை எண். 1755, நிர்வாகம், நாள் 22.11.1988). மேற்படி ஊதிய உயர்வு போட்டி நடைபெற்ற மறுநாள் முதல் கிடைக்கும். மொத்த பணிக்காலத்தில் இதுபோன்ற காரணத்திற்கு மூன்று ஊதிய உயர்வுகளுக்கு மேல் கிடைக்காது. இருப்பினும் மேற்படி ஊதிய உயர்வு பதவி உயர்வுக்கான ஊதிய நிர்ணயத்திற்குச் சேராது.

(ஈ) சார்நிலை ஊழியர்களுக்கான கணக்குத் தேர்வு தேர்ச்சி பெற்றவர்களுக்கு Number Gazette பதிவுகளைக் கொண்டு முன் ஊதிய உயர்வு வழங்கலாம். (Govt. Lr. No. 52701/V/அ.வி. iii/87-3 நிர்வாகத்துறை, நாள் 13.8.1987)

(உ) உதவியாளர் பதவி உயர்வை துறக்கின்ற தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோருக்கு முன் ஊதிய உயர்வு கிடைக்காது. (அரசு க.எண். 10302 அ.வி. 2/85–2, நிர்வாகத்துறை, நாள் 4.9.85)

(ஊ) தண்டனையாக ஊதிய உயர்வு தள்ளிப் போகின்ற நிகழ்வில் ஒருவருக்கு Advance Increment பெறுவதற்கான தகுதி கிடைத்தால் அதுவும் வழங்கப்பட வேண்டும். (Govt. Lr. No. 28857/FR.I/77-I, P&A.R. dt. 29.4.77)

(எ) இளநிலை உதவியாளர்/தட்டச்சர், பதிவுரு எழுத்தர் (எஸ்.எஸ்.எல்.சி.) ஆகியவர்களுக்கு பட்டப்படிப்பு முடித்தமைக்கு வழங்கப்பட்டு வந்த இருநிலை ஊதிய உயர்வு 1.4.2013 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண். 241, நிதி(ஊ.பி.)த் துறை, நாள் 22.7.2013) மற்றும்அரசு கடித எண் 16115/ CMPC/2018-1 நிதித்துறை நாள் 25.5.2018

**ஒரு சில பதவிகளுக்கு உயர்கல்வி தகுதி பெற்றிருந்தால், இரண்டு ஊதிய உயர்வுகள் வழங்கலாம்.**

ஒருவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு விடுப்பில் சென்று விடுப்பு முடிந்து மீண்டும் அதே பதவியில் சேர்ந்தால் விடுப்புக்காலம் உயர் பதவியின் ஆண்டு ஊதிய உயர்வுக்கு சேரும் (24.3.1988 வரை விடுப்புக்காலம் பதவி உயர்வுக்கு சேராது என்று விதிகள் இருந்தன) (அ.ஆ.எண். 212, நிர்வாகத்துறை, நாள் 25.3.1988)

அரசு துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் உயர்கல்வி தேர்ச்சி பெற்றதற்கும், சார்நிலை பணிகளுக்கு கணக்கு தேர்வு தொகுதி I தேர்ச்சி பெற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்த முன் ஊக்க ஊதிய உயர்வுகள் அனைத்தும் 15.10.2020 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஏற்கனவே, ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டவர்களுக்கு பணப்பயன் பிடித்தம் செய்ய தேவையில்லையென அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.37/ப.ம.நி.சீ.(FR-IV) துறை நாள் 10.03.2020

அரசாணை (நிலை) எண்.116 / ப.ம.நி.சீ.(FR-IV) துறை நாள் 15.10.2020.

அரசு பணியாளர்களுக்கு கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத்தொகையினை (Lump–sum) இவ்வாணையின் பத்தி 4(i) முதல் (xii) வரையிலான நிபந்தனைகளைப் பின்பற்றி நிதித்துறையுடன் கலந்தாலோசித்து, உரிய துறைகள் தனித்தனியாக ஆணைகள் வெளியிட வேண்டும் எனவும், அவ்வாறு வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையிலேயே அத்துறையின் கீழ் பணிபுரியும் அரசு பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையை பொருத்த வரையில் அரசாணை (நிலை) எண் 293, மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை, நாள் 18.06.2021 வெளியிடப்பட்ட ஆணைகளையே தொடரலாம் எனவும் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 120/ மனிதவள மேலாண்மை (அவி–IV) துறை, நாள் 01.11.2021

## VII. பணியேற்பிடைக் காலம்

**பணியேற்பிடைக் காலம்** (Joining Time)

(அ) எட்டு கி.மீ. அப்பால் உள்ள இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டால் பணியேற்பிடைக்காலம் கிடைக்கும். ஆறு மாதத்திற்கு அதிகமாகாத விடுப்பிலிருந்து ஒருவர் மாற்றப்பட்டாலும் ஆறு மாத விடுப்புக்கு அதிகமானாலும் விரைவில் அடைய முடியாத (Remote) இடங்களுக்கு ஒருவர் மாற்றப்பட்டாலும் பணியேற்பிடைக்காலம் கிடைக்கும். குறிப்பிட்ட ஒரு இடத்தில் மூன்று மாதங்களுக்கு அதிகமாக பயிற்சி எடுத்து அங்கிருந்து புதிய இடம் மாறினால் பணியேற்பிடைக்காலம் கிடைக்கும். சொந்த விருப்பத்தின் பேரில் மாற்றப்பட்டாலும் பணியேற்பிடைக்காலம் கிடைக்கும். Compulsory wait-ல் உள்ளவருக்கு இடமாற்றல் ஆணை கிடைத்த நாளிலிருந்து பணியேற்பிடைக் காலம் கிடைக்கும் (விதி 106)

(ஆ) ஒரே அலுவலகத்தில் அல்லது ஒரே கட்டிடத்தில் இடமாற்றம் இருப்பின் பணியேற்பிடைக்காலம் கிடைக்காது. வேறு அலுவலகத்தில் இருப்பின் ஒருநாள் கிடைக்கும். பணியிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து விடுமுறை தொடருமானால் பணியேற்புக் காலத்திற்கு அவ்விடுமுறைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. (அ.ஆ. எண் 222 ப மற்றும் சீர்திருத்தம் (எப்ஆர் iii) துறை நாள் 7.12.99)

(இ) பணியேற்பிடைக் காலத்தில் இருக்கும்பொழுது இடமாற்றல் செய்யப் பட்டால் புதிய இடம் சேருவதற்கு மீண்டும் தேவையான பணியேற்பிடைக்காலம் (தயாரிப்புக் காலம் நீங்கலாக) வழங்கப்படும். (அடிப்படை விதி 106)

(ஈ) பணியேற்பிடைக் காலத்தில் இருக்கும்பொழுது பழைய இடத்திற்கே பணிஅமர்வு செய்யப்பட்டால், அவர் முன்னர் எடுத்துக் கொண்ட பணியேற்பிடைக் காலத்துடன் மீண்டும் தலைமையிடம் செல்வதற்கான பயணக் காலம் வழங்கப்படும். (அடிப்படை விதி 106)

(உ) தலைமையிடம் தவிர்த்து பிற இடங்களில் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டியது இருப்பின், அந்த இடத்திலிருந்து பணியேற்பிடைக்காலம் கணக்கிட வேண்டும். (அடிப்படை விதி 106ன் அறிவுரை (4)

(ஊ) பணியிலிருந்து விடுபட்டு புது இடத்தில் பணியேற்காது விடுப்பில் சென்றால் பணியேற்பிடைக்காலம் கிடையாது. (அடிப்படை விதி 105)

**அனுபவிக்காத பணியேற்பிடைக் காலம் ஈட்டிய விடுப்பில் சேர்ப்பது**

ஒருவருக்கு தகுதியான பணியேற்பிடைக்காலம் இருந்து, அதை முழுவதுமாக அல்லது பகுதியாக அனுபவிக்கவில்லை என்றால், அனுபவிக்காத நாட்களை



(அதிகபட்சமாக 15 நாட்கள்) ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கலாம். இதற்கு ஆறு மாதங்களுக்குள் எழுதிக் கொடுக்க வேண்டும். (அ.ஆ. எண். 633, நிர்வாகம், நாள் 26.6.1986 மற்றும் அரசு க.எண். 33978/அவி/3/88–1 நிர்வாகம், நாள் 29.9.1988), சனி, ஞாயிறு கழித்து உள்ள மீதி நாட்களே ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கப்படும். (மாநில கணக்காயர் க.எண். 1.8.97 மற்றும் அரசு க.எண். 90507/ அவி. 3/90–2, நிர்வாகத்துறை நாள் 30.11.1990) அனுபவிக்காத பணியேற்பிடை காலமும் நிலுவையிலிருக்கும் ஈட்டிய விடுப்பும் சேர்ந்து 240 நாட்களுக்கு மேற்படக் கூடாது (அ.ஆ. எண். 207 பணியாளர், நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 14.8.97)

**பணியேற்பிடைக்காலம் கணக்கிடுதல் (அ.வி. 105)**

| | | |
|---|---|---|
| 1 | தயாரிப்புக் காலம் | 6 நாட்கள் |
| 2 | ரயில் பயணமானால் 400 கி.மீ.க்கு | 1 நாள் |
| 3 | பஸ் போன்ற மோட்டார் வாகனங்கள் 130 கி.மீ.க்கு | 1 நாள் |
| 4 | பிற வாகனங்கள் 25 கி.மீ.க்கு. | 1 நாள் |

**அரசு விடுமுறைகள் கணக்கிடுதல்**

12.2.1990 முதல் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளை பணியேற்பிடைக் காலத்துடன் பின்இணைப்பாக அனுபவிக்கலாம். பணியேற்பிடைக் காலத்திற்கு முன்னர் வரும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளை விடுமுறைகளாக கருத வேண்டும். பணியேற்பிடைக் காலத்தின் இடையில் வரும் எந்த விடுமுறையும் எவரும் அனுபவிக்க முடியாது. (அரசு கடித எண். 37869/FRiii/96-1 P&AR நாள் 16.7.96 மற்றும் கடித எண் 90507/FRIII/90–2 P&AR நாள் 30.11.1990 மற்றும் அ.ஆ. எண் 207 (பநிசீது) நாள் 14.8.97)

**தகுதிக்கும் அதிகமாக பணியேற்பிடைக்காலம் வழங்க முடியுமா?**

நிர்வாகக் காரணத்தால் பணியேற்க தாமதமானால், அனுமதிக்கப்பட்ட பணியேற்பிடைக் காலத்திற்கும் அதிகமாக (30 நாட்களுக்கு அதிகமாகாமல்) பணியேற்பிடைக்காலம் வழங்கலாம். இதற்கு துறைத்தலைவரின் அனுமதி தேவை. (Instruction 5(1)a; 5(1)b and 5(1) c under F.R. 106)

**விடுப்பிலிருக்கும்பொழுது மாற்றப்பட்டால் பணியேற்பிடைக்காலம்**

விடுப்பிலிருக்கும்போது (ஆறு மாத விடுப்புக்குள் இருக்க வேண்டும்) இடமாற்றம் செய்யப்பட்டால், விடுப்பு அனுபவிக்கும் இடத்திலிருந்து புதிய இடம் அல்லது பழைய இடத்திலிருந்து புதிய இடம் இதில் குறைவான தூரத்திற்குப் பணியேற்பிடைக் காலம் கிடைக்கும். விடுப்பிலிருப்பவர் பழைய இடம் சென்று பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டி இருப்பின் பழைய இடத்திலிருந்து விடுப்பு கணக்கிடப்படும். (அடிப்படை விதி 106ன் கீழ் அறிவுரை (9)

ஆறு மாத விடுப்புக்கு அதிகமானால், பணியேற்பிடைக் காலம் கிடைக்காது.

**பணியேற்பிடைக் காலத்தில் ஊதியம்**

(1) பழைய இடம் புதிய இடம் இந்த இரண்டு இடங்களிலும் உள்ள ஊதியத்தில் எது குறைவோ அந்த ஊதியம் பணியேற்பிடைக் காலத்தில் கிடைக்கும். (அடிப்படை விதி 107)

(2) இரண்டு இடங்களிலும் உள்ள படிகளில் குறைவானதுதான் கிடைக்கும்.

(3) பணியேற்பிடைக் காலத்தில் உயர்த்தப்படுகின்ற அகவிலைப்படியும் கிடைக்கும். (அரசு கடித எண் 81063/படி 1/நிதி/78–3, நாள் 13.11.1973)

(4) பணியேற்பிடைக் காலத்திற்கு நிலையான பயணப்படி (FTA) கிடைக்காது.

(5) பணியேற்பிடைக் காலத்தில் ஊதிய உயர்வு நாள் திரளுமானால், ஊதிய உயர்வு வழங்கப்பட்டு, அதிகமான தொகையும் அனுமதிக்கப்படும். (அடிப்படை விதி 26(சி)

(6) பணியேற்பிடைக் கால ஊதியம் புதிய அலுவலகத்தில் வழங்கப்படும் (Ruling (3) under Art 32 Account Code Vol. 1)

## VIII. பணி அமர்வு விதிகள்
## (Appointment Promotion etc.,)

### அரசு உருவாக்கியுள்ள விதிகளின்படி பணிஅமர்வு செய்யப்படாதவரின் பணியினை வரன்முறை செய்தல்

அரசு உருவாக்கியுள்ள விதிகளின்படிதான் ஒருவரை பணி அமர்வு செய்ய வேண்டும். ஏதோ காரணங்களினால் ஒரு சிலர் முறைகேடாக 31.12.92 வரை பணி அமர்வு செய்யப்பட்டிருப்பின் அவர்களின் பணியை அரசாணையினைப் பெற்று வரன்முறை செய்யலாம்.

அரசு ஆணை எண் 212 பநிசீது நாள் 29.11.01ல் பணி நியமனம் செய்வது தடை செய்யப்பட்டது. ஆசிரியர், மருத்துவர், போலீஸ் ஆகிய பதவிகள் அத்தியாவசியமாக கருதப்பட்டு, அவற்றிற்கு மட்டும் அரசு அனுமதி பெற்று பணி நியமனம் செய்யலாம். பணி நியமனத்தடை நேரடி நியமன பதவிகளுக்கு மட்டுமே பொருந்தும். பதவி உயர்வால் நிரப்பப்படும் பதவிகளுக்கு பொருந்தாது. (அரசு எண் 67770/2001–1/P&AR(P) 19.12.2001)

பணி நியமன தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. (அ.ஆ. எண் 14/ப(ம) நி.சீ. துறை நாள் 07.02.2006)

கொரோனா (கோவிட்-19) பெருந்தொற்று காலத்தில் அரசுத்துறைகளில் புதிய பணியிடங்கள் உருவாக்கிட தடைவிதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தற்சமயம் காலியாகவுள்ள நுழைவு நிலை பணியிடங்கள் நிரப்பிடவும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களும் தொடரலாம். தவிர, மூன்றாண்டுகளுக்கு மேல் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பிட அலுவல் குழுவின் முன் அனுமதி பெறவேண்டும். அரசாணை எண் (நிலை) எண்.382/ நிதி (சி.எம்.பி.சி) துறை நாள் 24.10.2020

### வேலை வாய்ப்பகம் வழியாக பணி அமர்வு செய்தல்

(அ) இதுகாறும் வேலை வாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்று நிரப்பப்பட்டு வந்த நடைமுறையை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. இம்முறையில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களுக்கு, வேலை வாய்ப்பகத்தில் பட்டியல் கேட்டுப்பெறுவதுடன் இரு தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டும். இரு தினசரிகளில் ஒரு தினசரி அப்பிராந்திய மொழியில் வெளியாவதாக இருக்க வேண்டும். (அ.ஆ.எண்.44 தொ(ம) வே.வா.துறை நாள் 04.03.2015)



(ஆ) பணியிடம் இன்மையால் பணிநீக்கம் செய்யப்பட்ட தகுதிகாண் பருவம் முடித்தவர் மற்றும் தகுதிகாண் பருவத்தினர் ஆகியோரை வேலை வாய்ப்பகம் வழியாக பணி அமர்வு செய்ய தேவை இல்லை. மீண்டும் பணி காலியிடம் ஏற்படும்பொழுது அவர்களைத்தான் முதலில் பணி அமர்வு செய்ய வேண்டும். (Sec.11 of T.N. Govt. Servants (Conditions of Service) Act, 2016)

(இ) மேற்படி முறையில் பணி அமர்வு பெற்ற தற்காலிக அரசு ஊழியரைப் பணிநீக்கம் செய்தபின், அதே பணியிடத்திற்கு மீண்டும் 90 நாட்களுக்குள் பணிக் காலியிடம் ஏற்படும்பொழுது, அதே நபரை பணி அமர்த்தலாம். 90 நாள் என்பது வேலை நீக்கம் செய்யப்பட்டு விடுவித்த நாள் முதல் கணக்கிடப்படும். (அரசு கடித எண்.3 நிர்வாகத் துறை நாள்22.5.90) எண் 3834. வேலை வாய்ப்புத் துறை நாள் 28.12.71 & 18.10.75/பணி– ஆர்/90)

(ஈ) வேலை வாய்ப்பு அறிவிப்பில் குறித்த நாளன்று ஒருவர் வயது வரம்புக்குள் இருக்க வேண்டும். பணி அமர்வு வழங்கப்படும் நாளன்று அல்ல. (அ.ஆ.எண். 475 நிர்வாகத் துறை நாள் 2.5.85)

(உ) பணியிலிருக்கும் அரசு ஊழியர் துறைத் தலைவரின் தடையில்லாச் சான்று பெற்று வேறு பணி பெறும் பொருட்டு வேலை வாய்ப்பகத்தில் தன் பெயரை பதிவு செய்யலாம். (அ.ஆ. எண் 1069, வேலை வாய்ப்புத் துறை, நாள் 28.4.80)

(ஊ) டி பிரிவு பதவிகளுக்கு அலுவலக உதவியாளர் தவிர, பிற பதவிகளுக்கு காண்ட்ராக்ட் அடிப்படையில் பணியமர்த்த வேண்டும் (அ.ஆ. எண். 49, நி.சீ. துறை நாள் 14.5.02)

### பணி வரன்முறை (Regularisation)

2016ம் ஆண்டு த.நா. அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் பிரிவு 28

(அ) பணி அமர்வின்போது ஒருவருக்கு அனைத்து தகுதிகளும் இருந்து அப்பணியிடம் தொடர்ந்து இருக்கும் என்று கருதப்பட்டால், அவரின் பணியை உடன் வரன்முறை செய்ய வேண்டும். ஓராண்டு கழிய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. (Hand Book of General Circulars and G.O.Ms.No. 191, Public Dept., dt. 1.2.62)

(ஆ) தேர்வாணையம் வழியாக பணி அமர்த்தப்பட்டவர்கள் பணி அமர்வு ஆணை வழங்கப்படும்பொழுதே பணிவரன் செய்யப்பட்டாக வேண்டும். (அ.ஆ. எண். 191 பொதுத்துறை, நாள் 01.02.62)

### தகுதிகாண் பருவம் துவக்குதல்

(அ) அரசுப் பணி ஒன்றுக்கு பணி அமர்வு செய்யப்பட்ட ஒருவரை முதலில் பணி வரன்முறை செய்ய வேண்டும். பின்னர் தகுதிகாண் பருவம் துவக்கப்பட வேண்டும். ஒரு பதவிக்கான பணி அமர்வு விதிகளில் குறிப்பிட்டபடி தகுதிகாண் பருவக்காலம் இருக்கும்.

(ஆ) ஒரே சர்வீஸில் உள்ள ஒரு பதவிக்கு பதவி உயர்வு பெற்றால் தகுதிகாண் பருவம் கிடையாது. பணி வரன்முறை செய்தால் மட்டும் போதுமானது.

(இ) தற்காலிகப் பணி அமர்த்தப்பட்ட ஒருவர் பின்னர் தேர்வாணையம் அல்லது பிற பணி நியமன அதிகாரிகள் மூலமாக பணி அமர்வு பெற்றால் தற்காலிகமாகப் பணி ஏற்ற நாள் முதலே அவரின் பணி வரன்முறை செய்யலாம். அவ்வாறு செய்வது பணியில் முதுநிலையில் இருப்பவரின் முதுநிலையைப் பாதிக்கக் கூடாது. (அரசாணை எண் 429, பணியாளர் துறை, நாள் 17.4.86)

(ஈ) தகுதிகாண் பருவக்காலத்தில் வரையறை செய்யப்பட்ட தேர்வு ஒன்றில் ஒருவர் தேர்ச்சி பெறவில்லை என்பதற்காக தகுதிகாண் பருவக்காலம் ஐந்து ஆண்டு வரை நீடிக்கலாம். பிற காரணங்களினால் நீட்டிக்கப்படக் கூடாது.

ஐந்து ஆண்டுகளுக்குள் தகுதிகாண் பருவம் முடிக்காவிடில் அவர் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும். பதவி உயர்வாயின், பதவி இறக்கம் செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனை) சட்டம் 2016 பிரிவு 31.

(உ) குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் உரிய அலுவலர் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்குவார். உரிய காலம் முடிந்து ஆறு மாதம் வரை ஆணை வழங்கப்படாவிடில், தகுதிகாண் பருவம் முடிந்ததாக கருதப்படும்.

(ஊ) தேர்வுகளில் தேர்ச்சி பெறாமை போன்ற தகுதியின்மைகளோ குற்றச்சாட்டுகள் நிலுவையோ உள்ள ஒருவர் தம்முடைய தகுதிகாண் பருவம் முடிந்து விட்டதாக தாமாகவே கருதிக்கொள்ள முடியாது. (விதி எண். 26(பி) (iii) F.R)

(எ) தகுதிகாண் பருவத்தைக் கணக்கிடுவதற்கு முதற்கட்டமாக, முழு மாதங்களும் (இந்த முழு மாதங்களில் 31, 30, 29, 28 என மாதத்திற்கேற்ப எத்தனை நாட்கள் இருப்பினும் சரி) அடுத்து உதிரி எண்ணிக்கையிலுள்ள நாட்களும் கணக்கிடப்பட வேண்டும். தகுதிகாண் பருவத்துக்குச் சேராத விடுப்புக் காலங்கள் எவையேனும் இருப்பின் இக்கணக்கீட்டில் அவை சேர்க்கப்படக் கூடாது. (விதி எண். 27(பி) அ.ஆ.எண் 749, பமநிசீதுறை, நாள் 30.9.86) அடிப்படை விதிபிற் சேர்க்கை VIII விதி 2 இன குறிப்பின் (note) தகுதிகாண் பருவ காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர ஏனைய விடுப்புகளுடன் துய்யக்கப்படும் முன் அனுமதியோ (Prefix) அல்லது பின் அனுமதியோ (Suffix) தகுதிகாண் பருவம் கணக்கிடும்போது பணிக்காலமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

(ஏ) தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்களாக, 22.07.2008க்குப் பின்னர் நியமனம் பெறுபவர்கள் தகுதிகாண் பருவத்தை பூர்த்தி செய்ய தொழில்நுட்ப கல்வி இயக்கத்தால் நடத்தப்படும். "Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (அ.ஆ.எண் 130, ப.ம.நி.சீ. துறை நாள் 22.07.2008)

ஆயின், நமது பட்டம் (அ) பட்டயப் படிப்பில் கீழ்க்காணும் ஏதேனும் ஒன்றினை கொண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மேற்காணும் கட்டுப்பாடு பொருந்தாது.

(i) Computer Application (ii) Information Technology

(iii) Software Engineering (or) Computing

(iv) Computer Information System (v) Computer Design

(அ.ஆ.எண் 26, ப.ம.நி.சீ. துறை நாள் 23.02.2017)

**இளநிலை உதவியாளர் - உடன் தட்டச்சர் பதவி**

(1) தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் – உடன் தட்டச்சர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டு, தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ் மற்றும் ஆங்கிலத் தட்டச்சில் கீழ்நிலையில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என்றும், பின்னர் பதவி உயர்வு பெற தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் கீழ்நிலையில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என்றும் வெளியிடப்பட்ட 14.2.1995 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகத்துறையில் அரசாணை எண் 50 ரத்து செய்யப்படுவதாக அரசாணை பணி எண். 174 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் நாள் 8.9.2000ல் ஆணையிடப்பட்டுள்ளது.



(2) 14.2.1995 முதல் இந்நாள் வரை இளநிலை உதவியாளர் உடன் – தட்டச்சர் பதவியில் பணியாற்றி வருபவர்களின் விருப்பத்தினைத் துறைத் தலைவர்கள் பெற்று இளநிலை உதவியாளராகவோ அல்லது தகுதி இருப்பின் தட்டச்சராகவோ தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கலாம்.

(3) 1999 ஜனவரியில் பணியாற்றுபவர்களிடம் துறைத்தலைவர்கள் விருப்பத்தினைப் பெற்று இளநிலை உதவியாளராகவோ தட்டச்சராகவோ தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கலாம். (அரசு ஆணை பணி எண் 174 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 8.9.2000)

(4) எவரொருவர் 18 ஆண்டு காலம் தட்டச்சராக பணியாற்றி, அப்பதவியிலேயே தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறார்களோ அவர்களை தட்டச்சராகப் பணியாற்றும் இடத்திலேயே தட்டச்சர் நிலை–1ஆக பதவி உயர்த்தி தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கலாம்.

(5) காலிப் பணியிடம் (தட்டச்சர் கிரேடு–1) இருந்தால் 18 வருடம் முடிக்கத்தேவையில்லை. (அரசு கடித எண். 4951/94–4, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29.4.1994)

(6) இ.நி.உ./தட்டச்சர் பட்டதாரியாக இருந்தால் ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வந்தது. 1.4.2013 முதல் பணியில் சேர்ந்தவர்களுக்கு இந்த சலுகைகள் நிறுத்தப்பட்டது. (அ.ஆ.எண்.241, நிதித்துறை (ஊ.பி.), நாள் 22.7.2013)

**முதுநிலை**

(அ) முதுநிலை என்பது தேர்வாணையம் அல்லது பிற பணி நியமன அலுவலர், நிர்ணயம் செய்யும் Merit வரிசை எண் ஆகும். முதலில் பணி ஏற்கும் நாள் அல்ல. முன்னதாக பணி ஏற்பதால் மட்டுமே ஒருவர் உயர் முதுநிலை உடையவராகக் கருத முடியாது. Sec. 41(1) of TNGS (C.S.) Act, 2016

(ஆ) தேர்வாணையம் வாயிலாக பணி அமர்வு பெற்றவர் சில காரணங்களினால் ஆறு மாதம் வரை பணி ஏற்பது தள்ளிப் போடலாம். தவிர்க்க இயலாத காரணங்களினால் ஆறு மாதத்திற்குப் பின்னரும் ஒருவர் பணி ஏற்க அனுமதிக்கப்படுவாராயின் அவருக்கு முதுநிலை தள்ளிப் போகும். பணி ஏற்கும் நாளை வைத்து முதுநிலை நிர்ணயம் செய்யப்படும். (அரசாணை எண் 353, நிர்வாகத் துறை, நாள் 20.6.89)

(இ) தகுதிகாண் பருவம் துவக்குவதற்கும், முதுநிலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை Sec. 41(1) of TNGS (C.S.) Act, 2016

(ஈ) ஒவ்வொரு மார்ச் மாதமும் முதுநிலைப் பட்டியல் வெளியிடப்படும். (அரசாணை எண் 1063, நிர்வாகத் துறை, நாள் 14.11.93)

(உ) முதுநிலைப் பட்டியல் வெளியிட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் முதுநிலை பட்டியலில் ஏற்பட்டுள்ள குறைபாடு குறித்து மனு செய்ய வேண்டும். அலுவலகத் தவறு எனில் எப்போதும் மாற்றலாம். (அ.ஆ. எண். 72, நிர்வாகத் துறை நாள் 28.1.83 மற்றும் அ.ஆ. எண். 1140 நிர்வாகத் துறை, நாள் 21.12.83)

**பதவி உயர்விற்குத் தேர்ந்த பட்டியல்**

(அ) பட்டியலில் கண்டுள்ள முதுநிலைப்படிதான் பதவி உயர்வு வழங்கப்படும். ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஒரு குறுதி நாளாகக் (Crucial date)

எனக் கொண்டு முதுநிலைப்படி தகுதியானவர்கள் பட்டியல் தயார் செய்யப்படும். ஓராண்டில் ஏற்படக்கூடிய காலியிடங்களை எதிர்நோக்கி இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும். அமைச்சுப் பணியாளர்களை பொறுத்தவரை மார்ச் 15ஆம் நாள் Crucial Dateஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பணிக் காலியிடம் உருவாகும்பொழுது ஒப்பளிக்கப்பட்ட தேர்ந்த பட்டியலின் முதுநிலைப்படி பதவி உயர்வு வழங்கப்படும். இப்பட்டியல் ஒப்பளிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு வரை நடைமுறையில் இருக்கும். ஓராண்டுக்குள் பட்டியலில் கண்டுள்ளவர் அனைவரும் பதவி உயர்வு பெற்று விட்டால் பதவி உயர்வு பூர்த்தி ஆகாவிட்டால் அடுத்த ஆண்டு ஒன்றை மையமாகக் கொண்டு புதிய பட்டியல் தயாரிக்கப்படும். அந்த நாளில் தகுதியுள்ளவர்களின் முதுநிலைப்படி பட்டியல் இருக்கும். இதனால் பழைய பட்டியலின்படி பெயர் சேர்க்கப்பட்டவர் புதிய பட்டியலில் இடம் பெறாமலும் போகலாம்.

(இ) ST/SC/BC/MBC இனத்தவருக்கு பதவி உயர்வில் சிலதுறைகளில் மட்டும் முன்னுரிமை உண்டு. இவர்களில் தகுதியானவர் இல்லை என்றால் தகுதியான நபர் கிடைக்கும் வரை அப்பணியிடம் நிரப்பக்கூடாது.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் தகுதியின்மை காரணமாக பெயர் சேர்க்கப்படாவிடில் அவருக்கும் ஒப்பளிக்கப்பட்ட பட்டியலின் நகல் ஒன்று அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஏ மற்றும் பி பிரிவு அலுவலராயின் இரண்டு மாதத்திற்குள்ளும் சி மற்றும் டி பிரிவு அலுவலராயின் மூன்று மாதத்திற்குள்ளும், இதுகுறித்து மேல் முறையீடு செய்யலாம். (அரசாணை எண். 707, நிர்வாகத் துறை நாள் 03.07.1981)

**பதவி உயர்வு**

கல்வித் தகுதி தளர்ச்சி ஆணை பெற்ற பணி அமர்வு செய்யப்பட்டவர் ஒருவருக்கு அதே கல்வித் தகுதி உள்ள அடுத்த பதவி உயர்வு வழக்கம்போல் கொடுக்கப்படும். அவர் விஷயத்தில் ஒவ்வொரு முறையும் கல்வித் தகுதியை தளர்த்த வேண்டியதில்லை. (G.O.Ms.N.221. P&A.R., dt. 10.5.90)

(அ) அயற்பணி அல்லது வேறு பணியில் இருப்பவருக்கும் கருத்தியலான பதவி உயர்வு வழங்கப்படும். (Sec. 12 of TNGS (C.S.) Act, 2016

(ஆ) குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு குற்றப்பத்திரிகை கொடுக்கப்பட்டு இருப்பின், அக்குற்றப்பத்திரிகை மீது விசாரணை முடியும் வரை பதவி உயர்வு வழங்க முடியாது. குற்றப்பத்திரிகை கொடுக்காத இனங்களில் பதவி உயர்வு வழங்கலாம். (அரசு ஆணை எண். 367, P&A.R. நாள் 12.11.92)

(இ) ஒருவருக்கு தவறாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டால் அவருக்கு Show cause notice கொடுக்காமல் எந்த நேரத்திலும் பதவி இறக்கம் செய்யலாம் (அரசாணை எண் 1435, Public (Services) dt. 19.8.64)



ஒழுங்கு நடவடிக்கை இனங்களில் வழங்கப்படும் தண்டனைகள் பதவி உயர்வுகளை எந்த அளவிற்கு பாதிக்கும்

| எண் | தண்டனை விவரம் | பாதிப்பின் விவரம் |
|---|---|---|
| 1 | எச்சரிக்கை, கடும் எச்சரிக்கை | பாதிப்பு இல்லை |
| 2 | கண்டனம் (Censure) | ஒரு ஆண்டுக்கு பாதிப்பு (ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து) இருப்பினும் குற்றம் சாட்டப்பட்ட நிகழ்வு நடந்த 5 ஆண்டுகளுக்குப் பின் கண்டனம் வழங்கப் பட்டிருப்பின் இத்தண்டனை நடப்பபில் உள்ளபோதும் பதவி உயர்வு வழங்கலாம். |
| 3 | ஊதிய உயர்வு நிறுத்தி வைப்பு போன்ற இதர தண்டனைகள். | தண்டனை நடைமுறையில் இருக்கும் காலம் வரை. |
| 4 | பதவி உயர்வுக்கு பெயரை பட்டியலில் சேர்ந்து பரிசீலிக்கும்போது வ.எ. (2) மற்றும் (3)ல் குறிப்பிட்ட தண்டனைகள் அமுலில் இருந்தால் | பாதிப்பு உண்டு |
| 5 | பட்டியல் பரிசீலனை தேதிக்கு 5 வருடங்களுக்குமுன் நடைபெற்ற முறைகேடுகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனை இருந்தால். உண்டு (உ–ம்) பரிசீலனை தேதி : 1.4.2020 | பட்டியல் பரிசீலனை தேதியில் வழங்கப்பட்ட தண்டனை அமுலில் இருந்தால் பாதிப்பு |
| | 1.4.2015 முதல் 31.3.2020 வரை நடைபெற்ற முறைகேடு: | பாதிப்பு உண்டு (தண்டனை நடப்பில் இல்லையென்றாலும் ஒருமுறை பதவி உயர்வு நிறுத்தப்படும் (Pass Over)) |
| | 31.3.2015க்கு முன்னர் நடைபெற்றது | பாதிப்பு இல்லை |
| 6 | தண்டனை அமுலில் உள்ள காலம்<br>(அ) குறிப்பிட்ட நாள்<br>(அ) பட்டியல் பரிசீலனை தேதி | பாதிப்பு உண்டு |
| 7 | (பட்டியல் தயாரிக்கும் தேதியல்ல)<br>பட்டியல் தேதிக்குப் பிறகு, பட்டியல் வெளியீட்டுத் தேதிக்கு இடையில் வழங்கப்படும் தண்டனை | பாதிப்பு உண்டு |
| | (அரசு கடித எண் 248 ப.ம.நி.சீ. நாள் 20.10.97) | |

குற்றச்சாட்டு நடவடிக்கைகள் எந்த அளவிற்கு பதவி உயர்வினை பாதிக்கும்

| | விசாரணை விவரம் | பாதிப்பு விவரமும் அரசு ஆணையும் |
|---|---|---|
| 1 | விதி 17(அ)ன் கீழ் குறிப்பாணை | பாதிப்பு இல்லை (அ.க.எண்.248 ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 2 | விதி 17(ஆ)ன்கீழ் குற்றக் குறிப்பாணை | பாதிப்பு உண்டு (அ.க.எண்.248 ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 3 | விதி 17(ஆ)ன் கீழ் குறிப்பாணை குற்றச்சாட்டிலிருந்து விடுதலை (அ) குற்றமற்றவை அறிவித்தல் | இறுதி ஆணை வழங்கிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நியமன அலுவலர் அரசு ஊழியரின் பெயரை தன்னிச்சையாக சேர்த்துக் கொள்ள வேண்டும். |

(அ.ஆ.எண். 368, ப.ம.நி.சீ. நாள் 18.10.93)

| | | |
|---|---|---|
| 4 | விதி 17(ஆ) குற்றக் குறிப்பாணை தண்டனை நிறுத்த உத்தரவு நீதிமன்றம் வழங்கிடின் | நீதிமன்றம் பெயரை சேர்க்கும்படி ஆணையிட்டாலன்றி பெயர் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. (அ.ஆ. எண் 368 ப.ம.நி.சீ.து நாள் 18.10.93 மற்றும் அரசு கடித எண். 90586/94–2, ப.ம.நி.சீ. நாள் 17.5.95) |
| 5 | விதி 17(அ) குறிப்பாணை | பட்டியலில் பெயர் சேர்க்கப்படும். (அ.ஆ. எண். 368 ப.ம.நி.சீ. நாள் 18.10.93 அரசு கடிதம் 90586/94.2 ப.ம.நி.சீ. நாள் 17.5.95) |
| 6 | கிரிமினல் வழக்கில் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் | கிரிமினல் வழக்கில் FIR–ல் பெயர் சேர்க்கப்பட்டிருந்தாலும் பதவி உயர்வு வழங்கலாம். ஆனால் அவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின் பதவி உயர்வு வழங்க இயலாது. (Consolidated Panel Preparation guild lines issued in letter No.18824/S/2005-2 Personnal and Administrative reforms (s) Department Dated 7.10.2005) |
| 7 | லஞ்ச வழக்கு விசாரணை நிலுவையிலிருந்தால் | பாதிப்பு இல்லை (அரசு கடித எண். 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 8 | விசாரணை மட்டும் நிலுவையில் இருந்தால் | பாதிப்பு இல்லை (அரசு குறிப்பு எண் 117611/எஸ்/88–1, ப.ம.நி.சீ. நாள் 15.12.88 அரசு கடிதம் 248 ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 9 | TRAP செய்து கைது செய்யப்பட்டிருந்தால் | பாதிப்பு உண்டு (அரசு கடிதம் எண். 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 10 | ஒழுங்கு நடவடிக்கைக்காக தீர்ப்பாயம் விசாரணை நிலுவை | பாதிப்பு உண்டு (அரசு கடிதம் எண். 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 11 | ஒழுங்கு நடவடிக்கை மீள எடுக்க அறிவுறுத்தி சம்பந்தப்பட்ட அலுவலர் அனுப்பும் இனங்கள் | பாதிப்பு இல்லை (அரசு கடிதம் எண். 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |
| 12 | அரசினால் திருத்தப்பட்ட இனங்களில் விதி 17(ஆ)ன் கீழ் குற்றக்குறிப்பாணை வழங்கிய இனங்கள் | பாதிப்பு உண்டு (அரசு கடிதம் எண் 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97 |
| 13 | தற்காலிக பணிநீக்கத்தில் இருப்பவர் | பாதிப்பு உண்டு, (அ.க. எண். 248, ப.ம.நி.சீ. நாள் 20.10.97) |



**பணி அமர்வில் வயதில் முன்னுரிமை** (Preference in age)

(அ) பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்வு செய்யப்படுபவருக்கு அவர் தற்காலிகமாகப் பணிபுரிந்த காலத்திற்கு ஈடான காலம் வயது வரம்பு தளர்வு செய்யப்படும். (அரசு கடித எண். 102217A/78-1, P&A.R./17/1/79) மற்றும் அரசாணை எண். 530, நாள் 20.5.85

(ஆ) பணிநீக்கம் செய்யப்பட்டவர் 40 வயது நிறைவு பெறாதவராக இருப்பின் அவர் முன்னர் பணிபுரிந்த பணிக்காலம் அளவிற்கு வயதில் முன்னுரிமை தரப்படும் (விதி 50 & அ.ஆ.எண். 248, P&A.R. நாள் 19.3.84)

(இ) உடல் ஊனமுற்றவர்களுக்கு 10 ஆண்டு வரை வயது வரம்பு தளர்த்தப்படும் (விதி 53 & அ.ஆ. எண். 363, நிர்வாகத்துறை, நாள் 21.4.82)

(ஈ) S.S.L.C. கல்வித்தகுதி நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு பதவிக்கு +2 அல்லது பட்டப்படிப்பு படித்த SC/ST/BC/MBC ஒருவர் மனு செய்தால் வயது வரம்பும் பார்க்கத் தேவையில்லை. அவரை எந்த வயதிலும் பணி அமர்த்தலாம்.

## அடிப்படை ஊழியர் பணி நியமனம் வயது நிர்ணயம்:

அடிப்படை பணியாளர்களுக்கு நுழைவு நிலையில் குறைந்த பட்ச பொது கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி (அ) அதற்கு கீழ் உள்ளவர்களுக்கு வயது 30லிருந்து 32 ஆக பி.வ./பி.வ (முஸ்லீம்) மிகவும் பி.ப.வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. விதி - 5 (1) (2) (3) (4)

அரசாணை எண் (நிலை) எண்.113/ப.ம.நி.சீ.(F) துறை நாள் 01.10.2020)

வயது உயர்த்தி அரசாணை எண்.113 ப.ம.நி.சீ.(F-II) துறை நாள் 01.10.2020

தமிழ்நாடு அடிப்படை பணியாளர் வகை – IV ல் உள்ள ஒரு சில பதவியின் பெயர்கள் தூய்மை பணியாளர் என பெயர் மாற்றம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசு ஆணை (நிலை) எண் 39/ ப.ம.நி.சீ(எப்) துறை நாள் 30.03.2021.

**பிறந்த தேதி மாற்றம்**

(1) அரசுப் பணி ஏற்ற ஒருவர் தன்னுடைய பிறந்த தேதியை மாற்ற விரும்பினால் ஐந்து ஆண்டுகளுக்குள் துறைத் தலைவர் வழியாக வருவாய்த் துறை ஆணையருக்கு உரிய படிவத்தில் மனு செய்து மாற்றலாம்.

(2) 24.1.61க்கு முன்னர் பணி அமர்வு பெற்றவர்கள் ஓய்வு பெறுவதற்கு ஓராண்டுக்கு முன்னர் மனு செய்ய வேண்டும் என்ற விதி தற்போது நீக்கப்பட்டு விட்டது.

(3) விதி 49 மற்றும் 49A எல்லா அரசு ஊழியர்களுக்கும் (அரசுப் பணியில் சேர்ந்த தேதி எதுவாயிருந்தாலும்) பொருந்தும்.

(4) உப விதி (சி) விதி 49 நீக்கப்பட்டுவிட்டது. (உச்சநீதிமன்றத் தீர்ப்பு 5422, 1944 தமிழ்நாடு டிரிபியூனல் 6055/94), அரசு கடிதம் 154 நிர்வாக சீர்திருத்தம், நாள் 24.5.95)

பிறந்த தேதி மாற்றம் தொடர்பான நபர் 1977ம் ஆண்டு வரை SSLC தேர்வினை எழுத வயது தகுதி பதினாறு வயது நிறைவு செய்திருக்க வேண்டும்.

1978 முதல் 10ம் ஆண்டு SSLC தேர்வு எழுத வயது தகுதி 15 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பிறந்த தேதி மாற்றம் கோரும் நிகழ்வில் இந்த வயதினை நிறைவு செய்ய தகுதி இழக்கும் பட்சத்தில் அவர்களது பணி நியமனத்தை உடன் ரத்து செய்யவேண்டும்.

மேலும் பணிக்கான எந்த வித பணப்பயனும் வழங்க கூடாது.

மேற்கண்டுள்ள படி வயது நிறைவு பெற்றவராக இருப்பின் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தினை) சட்டம் 2016 பிரிவு 59ம் ஆண்டுபடி (தமிழ்நாடு) சட்டம் (14/2016) பரிசிலனை செய்யலாம்.

அரசு எண்.14914/எஸ்.2/2018–1 நாள்: 18–07–2018

**சொந்த ஊர்**

(அ) பணி ஏற்கையில் பணிப்பதிவேட்டில் குறிப்பிட்ட மாவட்டத்தை மாற்ற முடியாது. (அ.ஆ. எண். 174, P&A.R. நாள் 19.2.85)

(ஆ) மாவட்டங்கள் புதியதாக உருவாக்குவதால் ஏற்படும் மாற்றங்களைப் பணிப்பதிவேட்டில் அலுவலகத் தலைவரே பதிவு செய்யலாம் (Note (9) Annex II-Part III of Rules under F.R. 74(IV)).

**ஜாதி பெயர் மாற்றம்**

(அ) கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோரின் விருப்பப்படி அவர்களில் எவரேனும் ஒருவரின் ஜாதியை அக்குழந்தைகள் சார்ந்தவராகக் கொள்ளலாம். (அரசாணை எண். 477, சமூக நலத்துறை, நாள் 27.6.75)

(ஆ) ஜாதிப் பெயர் மாற்றம் செய்ய விரும்பினால் துறைத்தலைவர் வழியாக மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்ய வேண்டும். (அ.ஆ. எண். 125, நிர்வாகத் துறை நாள் 2.3.89).

இருப்பினும் குறிப்பிட்ட ஒரு ஜாதியானது அரசு பின்தங்கியது என அறிவித்தால் எவ்வித மனுவும் பெறாமலேயே அலுவலகத் தலைவர் பணிப் பதிவேட்டில் பதிவு செய்தாக வேண்டும்.

(இ) தாயின் பெயரை முன்னெழுத்தாக போட்டுக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

## IX. கூடுதல் பொறுப்பு (Additional Charge)

அடிப்படை விதி 49ல் குறிப்பிட்டது போல், பதவிகள் Independentஆக இருந்தால்தான் கூடுதல் பொறுப்பு என கருதப்படும்.

முழுக்கூடுதல் பொறுப்பு 39 நாட்களுக்கு மேல் கூடுதல் பொறுப்பு வகித்தால் கூடுதல் பொறுப்பு சம்பளம் பெற தகுதி உண்டு (அ.ஆ.எண். 122 ப.ம.நி.சீ.து (PR IV) நாள் 3.10.2011 நடைமுறை கூடுதல் பொறுப்பு என்பது கிடையாது.

கூடுதல் பொறுப்பு வகிக்கும் பதவிகள் வெவ்வேறு வகையாக இருந்து அவைகளின் செயல்பாட்டு எல்லையும் வேறாக இருந்தால் கூடுதல் சம்பளம் உண்டு (அ.வி. 49) ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை கூடுதல் பொறுப்பு வகித்தாலும் ஒரு கூடுதல் பொறுப்பு பதவிக்கு மட்டும், கூடுதல் பொறுப்புபடி கிடைக்கும்.

அடிப்படை ஊதியம் மற்றும் பர்சனல் ஊதியம் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். சிறப்பு ஊதியம் கிடையாது. (அ.வி. 49 (iii)ன் கீழ் உள்ள விளக்கம்)

ஒரிஜினல் மற்றும் கூடுதல் பணியிடம் இதில் எந்த பதவிக்கு வீட்டு வாடகைப்படி நகர ஈட்டுப்படி அதிகமாக வழங்கப்படுகிறதோ அதனை அனுமதிக்கலாம்.

முழு கூடுதல் பொறுப்பு சம்பளம், ஒரிஜினல் பதவியில் பெற்றுவரும் சம்பளத்தில் 1/5 பாகம் அல்லது கூடுதல் பதவியின் குறைந்தபட்ச சம்பளத்தில் பாதி, இதில் குறைவோ அதை வழங்கலாம். இந்தக் கூடுதல் பொறுப்பு சம்பளம், காலவரை ஏதும் இல்லாமல் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலருக்கு மட்டும் வழங்கலாம். (அ.வி.49 (1)(III) அ.ஆ.எண்.122 ப.ம.நி.சீ.துறை, நாள் 3.10.2011) மற்றும் அ.ஆ.எண். 153, ப.ம.நி.சீ.துறை நாள் 5.12.17) கூடுதல் பொறுப்பு சம்பளம் C & D பிரிவு அலுவலர்களுக்கு கிடையாது.



## X. படிகள்(Allowances)

**பொது**

(அ) வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற அனைத்துப் படிகளையும் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் சிறப்பூதியம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் (எப்.ஆர். 9(21) மற்றும் அரசு கடித எண். 7/யூ.எஸ். (எ)178, நிதி நாள் 6.11.1978) 1.7.89 முதல் அகவிலைப்படி கணக்கிட சிறப்பூதியம் சேராது (அரசாணை எண். 666 நிதி நாள் 27.6.1989) (அ.ஆ. எண் 305, நிதி 13.10.2017)

(ஆ) கணவன், மனைவி இருவரும் அரசு ஊழியராக இருப்பின் இருவருக்கும் அனைத்துப் படிகளும் கிடைக்கும் (அ.ஆ. எண் 223, நிதி 8.6.1971)

(இ) விடுப்புக் காலத்தில் ஆறு மாதம் வரை படிகள் வழங்கப்படும். (எப்.ஆர். 44)

(ஈ) பணியேற்பிடைக் காலத்தில் இரு இடங்களில் எந்த இடத்தில் குறைவான படிகள் கிடைக்குமோ அது வழங்கப்படும் (அடிப்படை விதி 107)

(உ) தற்காலிகப் பணி நீக்க காலத்திலும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலியவை கிடைக்கும். (அரசு கடித எண் 6/யூ.எஸ்.(எ) 78, நிதி (பி.சி.) 4.11.1978 அரசு ஆணை எண் 113, நிர்வாகம் நாள் 16.2.83 மற்றும் அரசு க.எண். 16680, நிர்வாகம், 83–2, நாள் 16.5.1983)

(ஊ) அலுவலர்கள் கூடுதல் பணி பார்ப்பதற்கான கூடுதல் ஊதியமும் அகவிலைப்படி கணக்கிட எடுத்துக் கொள்ளப்படும் (அரசு க.எண். 39349/படிகள் 1/89–4, நிதி, நாள் 20.9.1989)

**அகவிலைப்படி**

அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படும் அகவிலைப்படி விவரங்கள் பின்வருமாறு (ஐந்தாவது ஊதியக்குழு) (1.6.1988 முதல்)

| எந்த தேதி முதல் | அனுமதிக்கப்படும் அளவு | எந்த தேதி முதல் | அனுமதிக்கப்படும் அளவு |
|---|---|---|---|
| 1.6.88 | 18 சதவீதம் | 1.1.93 | 92 சதவீதம் |
| 1.7.88 | 23 சதவீதம் | 1.7.93 | 97 சதவீதம் |
| 1.1.89 | 29 சதவீதம் | 1.1.94 | 104 சதவீதம் |
| 1.7.89 | 34 சதவீதம் | 1.7.94 | 114 சதவீதம் |
| 1.1.90 | 38 சதவீதம் | 1.1.95 | 125 சதவீதம் |
| 1.7.90 | 43 சதவீதம் | 1.7.95 | 136 சதவீதம் |
| 1.1.91 | 51 சதவீதம் | 1.1.96 | 148 சதவீதம் |
| 1.7.91 | 60 சதவீதம் | 1.7.96 | 159 சதவீதம் |
| 1.1.92 | 71 சதவீதம் | 1.1.97 | 170 சதவீதம் |
| 1.7.92 | 83 சதவீதம் | 1.7.97 | 182 சதவீதம் |

**ஆறாவது ஊதிய விகித மாற்றம் (1.1.96 முதல்)**

| அமல்நாள் | அளவு | ஆணை எண் |
|---|---|---|
| 1.1.1996 | இல்லை | அ.ஆ.எண். 162, நிதித்துறை நாள் 13.4.98 |
| 1.7.1996 | 4% | அ.ஆ.எண். 162, நிதித்துறை நாள் 13.4.98 |

| | | |
|---|---|---|
| 1.1.1997 | 8% | அ.ஆ.எண். 162, நிதித்துறை நாள் 13.4.98 |
| 1.7.1997 | 13% | அ.ஆ.எண். 162, நிதித்துறை நாள் 13.4.98 |
| 1.1.1998 | 16% | அ.ஆ.எண். 180, நிதித்துறை நாள் 24.4.98 |
| 1.7.1998 | 22% | அ.ஆ.எண். 580, நிதித்துறை(படிகள்) நாள் 7.10.98 |
| 1.1.1999 | 32% | அ.ஆ.எண். 217, நிதித்துறை(படிகள்) நாள் 20.5.99 |
| 1.7.1999 | 37% | அ.ஆ.எண். 440, நிதித்துறை(படிகள்) நாள் 8.10.99 |
| 1.1.2000 | 38% | அ.ஆ.எண். 257, நிதித்துறை(படிகள்) நாள் 6.6.00 |
| 1.7.2000 | 41% | அ.ஆ.எண். 522, நிதித்துறை(படிகள்) நாள் 14.11.00 |
| 1.1.2001 | 43% | அ.ஆ.எண். 188, நிதித்துறை(படிகள்) நாள் 26.4.01 |
| 1.7.2001 | 45% | அ.ஆ.எண். 525, நிதித்துறை(படிகள்) நாள் 31.12.01 |
| 1.10.2002 | 49% | அ.ஆ.எண். 346, நிதித்துறை(படிகள்) நாள் 21.10.02 |
| 1.7.2003 | 52% | அ.ஆ.எண். 215, நிதித்துறை(படிகள்) நாள் 23.6.03 |
| 1.2.2004 | 55% | அ.ஆ.எண். 47, நிதித்துறை(படிகள்) நாள் 12.2.04 |
| 1.7.2004 | 59% | அ.ஆ.எண். 537, நிதித்துறை(படிகள்) நாள் 21.10.04 |
| 1.1.2005 | 61% | அ.ஆ.எண். 21, நிதித்துறை(படிகள்) நாள் 19.01.05 |
| 1.4.2005 | 64% | அ.ஆ.எண். 129, நிதித்துறை(படிகள்) நாள் 1.4.05 |
| 1.7.2005 | 67% | அ.ஆ.எண். 272, நிதித்துறை(படிகள்) நாள் 18.7.05 |
| 1.1.2006 | 71% | அ.ஆ.எண். 56, நிதித்துறை(படிகள்) நாள் 13.1.06 |

அரசு ஆணை எண் 105 நிதி (படிகள்) நாள் 7.2.2006ன்படி 1.1.2006 முதல் 50% அகவிலைப்படி Dearness Payஆக வழங்கப்பட்ட பின்னர் அகவிலைப்படி விவரங்கள் மின்வருமாறு:

| எந்த தேதி முதல் +அகவிலை ஊதியத்தில் | அடிப்படை ஊதியம் | அரசு ஆணை எண் |
|---|---|---|
| 1.1.2006 | 21% | அ.ஆ.எண். 106, நிதித்துறை (படிகள்) நாள் 7.2.06 |
| 1.1.2006 | 24% | அ.ஆ.எண். 188, நிதித்துறை (படிகள்) நாள் 17.4.06 |
| 1.7.2006 | 29% | அ.ஆ.எண் 576, நிதித்துறை (படிகள்) நாள் 14.9.06 |
| 1.1.2007 | 35% | அ.ஆ.எண் 100, நிதித்துறை (படிகள்) நாள் 28.3.07 |
| 1.7.2007 | 41% | அ.ஆ.எண் 437, நிதித்துறை (படிகள்) நாள் 13.9.07 |
| 1.1.2008 | 47% | அ.ஆ.எண். 107, நிதித்துறை (படிகள்) நாள் 22.3.08 |
| 1.7.2008 | 54% | அ.ஆ.எண். 491, நிதித்துறை (படிகள்) நாள் 13.11.08 |
| 1.1.2009 | 64% | அ.ஆ.எண். 111, நிதித்துறை (படிகள்) நாள் 21.3.09 |



## தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதங்கள் விதி, 2009

| எந்த தேதி முதல் | அடிப்படை ஊதியம் + தர ஊதியம் | அரசு ஆணை எண் |
|---|---|---|
| 1.1.2006 | அகவிலைப்படி கிடையாது | அரசாணை எண். 234, |
| 1.7.2006 | 2% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | நிதி(ச.கு.) துறை, |
| 1.1.2007 | 6% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | நாள் 1.6.2009 |
| 1.7.2007 | 9% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | ,, |
| 1.1.2008 | 12% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | ,, |
| 1.7.2008 | 16% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | ,, |
| 1.1.2009 | 22% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | ,, |
| 1.7.2009 | 27% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 470, நிதி (படிகள்) துறை, நாள் 22.9.2009 |
| 1.1.2010 | 35% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 96, நிதி (படிகள்) துறை, நாள் 27.3.2010 |
| 1.7.2010 | 45% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 371, நிதி (படிகள்) துறை, நாள் 24.9.2010 |
| 1.1.2011 | 51% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 98, நிதி (படிகள்) துறை, நாள் 28.3.2011 |
| 1.7.2011 | 58% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 273, நிதி (படிகள்) துறை, நாள் 3.10.2011 |
| 1.1.2012 | 65% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 116, நிதி (படிகள்) துறை, நாள் 9.4.2012 |
| 1.7.2012 | 72% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 362, நிதி (படிகள்) துறை, நாள் 5.10.2012 |
| 1.1.2013 | 80% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 145, நிதி (படிகள்) துறை, நாள் 2.5.2013 |
| 1.7.2013 | 90% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 407, நிதி (படிகள்) துறை, நாள் 10.10.2013 |

| | | |
|---|---|---|
| 1.1.2014 | 100% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 96, நிதி (படிகள்) துறை, நாள் 3.4.2014 |
| 1.7.2014 | 107% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 245, நிதி (படிகள்) துறை, நாள் 10.10.2014 |
| 1.1.2015 | 113% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 121, நிதி (படிகள்) துறை, நாள் 22.04.2015 |
| 1.7.2015 | 119% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 262, நிதி (படிகள்) துறை, நாள் 16.10.2015 |
| 1.1.2016 | 125% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண்.117/நிதி (படிவம்) 20.04.2016 |
| 1.07.2016 | 132% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 309, நிதி (படிகள்) துறை, நாள் 16.12.2016 |
| 1.1.2017 | 136% அடிப்படை ஊதியம் + தரஊதியம் | அ.ஆ.ண. எண்.105 நிதி (படிகள்) துறை நாள் 26.4.2017 |
| 1.7.2017 | 139% அடிப்படை ஊதியம் + தரஊதியம் | அ.ஆ.ண. எண்.300 நிதி (படிகள்) துறை நாள் 10.10.2017 |
| 1.1.2018 | 142% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 125, நிதி (படிகள்) துறை, நாள் 11.04.2018 |
| 1.7.2018 | 148% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 321, நிதி (படிகள்) துறை, நாள் 24.09.2018 |
| 1.1.2019 | 154% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.எண். 153, நிதி (படிகள்) துறை, நாள் 20.05.2019 |
| 1.7.2019 | 164% அடிப்படை ஊதியம்+தரஊதியம் | அ.ஆ.(நிலை) எண். 345, நிதி (படிகள்) துறை, நாள் 30.10.2019 |
| 1.1.2020 முதல் 1.7.2021 | இந்தக் காலத்திற்கான தவனைகள் திரளாகச் சேர்த்து 7/2021 அன்றைய திருத்தியவிகிதத்தின்படி 164%–196%மாக1.1.2022 முதல் வழங்கப்பட்டுள்ளன. | அ.ஆ.(நிலை) எண்.4 நிதி (படிகள்) துறை, நாள், 01.01.2022 |



| திருத்திய ஊதிய விகிதங்கள் விதி 2017-ன்படி | | |
|---|---|---|
| 1.1.2016 | அகவிலைப்படி | - இல்லை |
| 1.7.2016 | 2% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.303 நிதி (ஊ.கு) துறை நாள் 11.10.17 |
| 1.1.2017 | 4% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.303 நிதி (ஊ.கு) துறை நாள் 11.10.17 |
| 1.7.2017 | 5% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.303 நிதி (ஊ.கு) துறை நாள் 11.10.17 |
| 1.1.2018 | 7% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.123 நிதி (படிகள்) துறை நாள் 11.04.18 |
| 1.7.2018 | 9% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.313 நிதி (படிகள்) துறை நாள் 18.09.18 |
| 1.1.2019 | 12% அடிப்படை ஊதியம் | அரசாணை எண்.151 நிதி (படிகள்) துறை நாள் 20.05.19 |
| 1.7.2019 | 17% அடிப்படை ஊதியம் | அரசாணை (நிலை).323 நிதி (படிகள்) துறை நாள் 17.10.19 |
| 1.1.2020 முதல் 31.12.2021 முடிய | 17% அடிப்படை ஊதியம் | அகவிலைப்படி முடக்கப்பட்டது (கோவிட் 19) |

அகவிலைப்படி 01/2020, 07/2020, 01/2021 மற்றும் 07/2021 காலத்திற்கான தவணைகள் திரளாகச் சேர்த்து 17%–ல் இருந்து 31% ஆக 01.01.2022 முதல் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 03/ நிதி (படிகள்) துறை நாள் 01.01.2022.

| | | |
|---|---|---|
| 01.01.2022 முதல் பணப்பயன் | 31% அடிப்படை ஊதியம் | அரசாணை (நிலை) எண் 03/ நிதி (படிகள்) துறை நாள் 01.01.2022. |
| 1.7.2022 முதல் பணப்பயன் | 34% அடிப்படை ஊதியம் | அரசு ஆணை எண்: (நிலை) 254 நிதி (படிகள்) துறை நாள்: 18.08.2022. |

01.01.2022 முதல் வழங்க வேண்டிய அகவிலைப்படி 3% 30.06.2022 முடிய முடக்கப்பட்டது. 31% லிருந்து 34% ஆக உயர்த்தி 01.07.2022 முதல் பணப்பயன் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1.1.2023 முதல் பணப்பயன் | 38% அடிப்படை ஊதியம் | அ.ஆ(நிலை எண்: 07 நிதி(படிகள்) துறை நாள் : 06.01.2023. |

01.07.2022 முதல் 31.12.2022 முடிய வழங்க வேண்டிய 4% அ.விலைப்படி முடக்கப்பட்டு, 34% லிருந்து 38% ஆக உயர்த்தி 01.01.2023 முதல் பணப்பயன் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01.04.2023 முதல் | 42% அடிப்படை ஊதியம் | அரசாணை அ.ஆநிலை எண் 142 நிதி (படிகள்) துறை நாள் 17.05.2023. |
| 1.7.2023 முதல்<br>1.1.2024<br>1.7.2024 | 46% அடிப்படை ஊதியம்<br>50% அடிப்படை ஊதியம்<br>53% அடிப்படை ஊதியம் | அரசு ஆணை எண்: (நிலை) 310 நிதி (படிகள்) துறை நாள்: 27.10.2023. |

## பழைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வருபவர்களுக்கு

| | | |
|---|---|---|
| 1.7.2015 | முதல் அடிப்படைசம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 234% | அ.ஆ.எண். 281, நிதி (படிகள்) 26.10.2015 |
| 1.1.2016 | முதல் அடிப்படைசம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 245% | அ.ஆ.எண். 130, நிதி (படிகள்) 02.05.2016 |
| 1.7.2016 | முதல் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 256% | அ.ஆ.எண்.106 நிதி (படிகள்) துறை நாள் 26.4.2017 |
| 1.1.2017 | முதல் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 264% | |
| 1.7.2017 | முதல் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 268% | அ.ஆ.எண்.299 நிதி (படிகள்) துறை நாள் 10.10.2017 |
| 1.1.2018 | முதல் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 274% | அ.ஆ.எண்.125 நிதி (படிகள்) துறை நாள் 11.4.2018 |
| 1.7.2018 | முதல் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படி ஊதியத்தில் 284% | அ.ஆ.எண்.321 நிதி (படிகள்) துறை நாள் 24.09.2018 |
| 1.1.2019 | முதல் அடிப்படை ஊதியம்+ அகவிலைப்படி ஊதியத்தில் 295% | அரசாணை எண்.153 நிதி (படிகள்) துறை நாள் 20.05.19 |
| 1.7.2019 | முதல் அடிப்படை ஊதியம்+ அகவிலைப்படி ஊதியத்தில் 312% | அரசாணை எண்.345 நிதி (படிகள்) துறை நாள் 30.10.19 |
| 1.1.2020முதல் 31.12.2021 முடக்கப்பட்டு | 1.1.2022 முதல் 312% – 368% ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. | அரசாணை எண்.4 நிதி (படிகள்)துறை நாள்.01.01.2022 |
| 1.1.2022 முதல் 30.06.2022 முடக்கப்பட்டு | 01.07.2022 முதல் அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி ஊதியத்தில் 381% | அ.ஆ.எண்.255 நிதி(படிகள்) துறை நாள்: 18.08.2022 |
| | 01.01.2023 முதல் அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி ஊதியத்தில் 396% | அ.ஆ.எண்.8 நிதி(படிகள்) துறை நாள்: 06.01.2023 |
| | 01.04.2023 முதல் அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி ஊதியத்தில் 412% | அ.ஆ.எண்.173 நிதி(படிகள்) துறை நாள்: 21.06.2023 |
| | 01.07.2023 முதல் அடிப்படை ஊதியம் + அகவிலைப்படி ஊதியத்தில் 427% | அ.ஆ.எண்.331 நிதி(படிகள்) துறை நாள்: 09.11.2023 |
| | 1.1.2024 443% அடிப்படை ஊதியம் 1.7.2024 455% அடிப்படை ஊதியம் | |

## வீட்டு வாடகைப்படி மற்றும் அரசுக் குடியிருப்புகள்

(அ) கணவன்/மனைவி இருவரில் யார் பெயரில் அரசுக் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றதோ அவருக்கு மட்டும் H.R.A நிறுத்தப்படும் (அரசாணை எண். 429 நிதித்துறை, நாள் 25.5.94)

(ஆ) மலைப் பிரதேசங்களுக்கு (Tribal Area) இடமாற்றம் செய்யப்படும் அரசு ஊழியர், தான் விரும்பும் வரை பழைய இடத்தில் அரசு குடியிருப்பில் வசிக்கலாம். ஆனால், சலுகை வாடகை கொடுக்க வேண்டும். (அரசு ஆணை எண் 986, வீட்டு வசதி, நாள் 18.7.1988)

(இ) நிலையான சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் அவர்கள் பணி புரியும் ஊரில் வழங்கப்படுகிற குறைந்தபட்ச வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் (அரசு க.எண். 115940/பி.சி./29.10.1990)



(ஈ) சென்னையைச் சுற்றியுள்ள 32 கி.மீ. அல்லது மதுரை மற்றும் கோயம்புத்தூர் சுற்றியுள்ள 16 கி.மீ. தூரத்திற்குள் ஏதாவது பஞ்சாயத்து யூனியன் அமையுமானால் அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் சம்பந்தப்பட்ட மாநகரத்திற்குரிய வீட்டு வாடகைப்படி வழங்கப்படும்.

(உ) அரசுக்குச் சொந்தமான குடியிருப்பில் உள்ளவருக்கு வீட்டு வாடகைப்படியுடன் கீழ்கண்டவாறு கூடுதல் தொகை வாடகையாக பிடித்தம் செய்யப்படும். (அ.ஆ.எண் 305, நிதி (ச.கு.) துறை, நாள் 13.10.17)

| வ. எண் | ஊதிய விகிதம் | கிரேடு1(a) கிரேடு1(b) | கிரேடு II | கிரேடு III | கிரேடு IV |
|---|---|---|---|---|---|
| 1. | 18201 – 26200 | 1.5% | 1.5% | 1% | 1% |
| 2. | 26201–48700 | 3% | 3% | 3% | 2% |
| 3. | 48701 மற்றும் அதற்குமேல் | 4% | 4% | 4% | 3% |

ஊதிய நிலை 5 மற்றும் அதற்கு கீழ்பெறும் ஊழியர்களுக்கு மேற்கண்ட கூடுதல் வீட்டு வாடகைப் பிடித்தம் செய்யத் தேவையில்லை. மேலும் Rent Free (வாடகையில்லா) குடியிருப்பில் வசிப்பவர்களுக்கும் வாடகை பிடித்தம் செய்ய தேவையில்லை.

(ஊ) வாடகையில்லா குடியிருப்பில் உள்ளவர் விடுப்பில் செல்வதை தொடர்ந்து வீட்டை காலி செய்தால் அவருக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படும். (அ.ஆ. எண். 490 நிர்வாகம் 23.9.83) வாடகை இல்லா குடியிருப்பில் இருப்பவர் ஈட்டிய விடுப்பை சரண் செய்தால், வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் (அரசு ஆணை எண். எம்.எஸ். 77, நிதித்துறை, நாள் 7.9.1983) (எ) அரசுக்குச் சொந்தமான குடியிருப்பில் இருப்பவர், இடமாற்றம் செய்யப்பட்டால் கல்வி ஆண்டு முடியும் வரை குடியிருப்பில் வசிக்கலாம். (அரசாணை எண் 102/ ஹவுசிங், நாள் 11.3.1982 மற்றும் அரசுக் கடித எண் 166, ஹவுசிங் நாள் 3.3.1984)

(ஏ) பொதுப்பணித்துறை குடியிருப்பில் வசிப்பவர் ஓய்வு பெற்ற பின்னரும் மூன்று மாதம் வரை அதே குடியிருப்பில் வசிக்கலாம். (அரசாணை எண். 931, பொது, நாள் 18.6.93)

(ஒ) Accommodation Controller அவர்களால் வழங்கப்பட்ட வீட்டில் குடியிருப்பவர் மாற்றப்பட்டால் ஆறு மாதம் வரை அதே வீட்டில் இருக்கலாம். இக்காலத்தில் பழைய இடம் அல்லது புதிய இடம் இதில் குறைவான வீட்டு வாடகைப்படி கிடைக்கும். (அரசாணை எண். 307, நிதி, நாள் 24.5.89)

(ஓ) ஆனால் மேற்படி காலத்திற்கு Concessional வாடகை அல்லது Economical வாடகை இதில் எது குறைவோ அது பிடித்தம் செய்யப்படும். (மே 31 கல்வி ஆண்டின் முடிவாகவும், ஜூலை முதல் ஏப்ரல் வரை கல்வி ஆண்டாகவும் கருதப்படும்) (அரசாணை எண் 307, நிர்வாகத்துறை, நாள் 25.5.1989).

## 01.10.2017 முதல் வீட்டு வாடகைப்படி

### அரசாணை எண். 305, நிதி (சகு) துறை, நாள் 13.10.2017

| S. No. | Revised Pay Range (Pay Level in Pay Matrix) [Rupees per mensem] | Amount of House Rent Allowance (Rupees per mensem) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Grade I(a) | Grade I(b) | Grade II | Grade-III | Grade-IV |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) | Upto - 13600 | 1300 | 700 | 600 | 400 | 250 |
| (2) | 13601 - 17200 | 1500 | 1000 | 700 | 450 | 300 |
| (3) | 17201 - 21000 | 1800 | 1200 | 800 | 500 | 350 |
| (4) | 21001 - 23900 | 2100 | 1400 | 1000 | 700 | 400 |
| (5) | 23901 - 27200 | 2600 | 1700 | 1200 | 800 | 400 |
| (6) | 27201 - 30600 | 3100 | 2000 | 1500 | 1000 | 450 |
| 7) | 30601 - 35400 | 3600 | 2300 | 1700 | 1200 | 500 |
| (8) | 35401 - 37300 | 4200 | 2600 | 1800 | 1500 | 550 |
| (9) | 37301 - 41100 | 4700 | 3000 | 2300 | 1700 | 600 |
| (10) | 41101 - 44500 | 5200 | 3300 | 2600 | 1900 | 650 |
| (11) | 44501 - 50200 | 5700 | 3600 | 2900 | 2000 | 650 |
| (12) | 50201 - 51600 | 6200 | 3800 | 3100 | 2200 | 700 |
| (13) | 51601 - 54000 | 6800 | 4100 | 3200 | 2200 | 750 |
| (14) | 54001 - 55500 | 7300 | 4300 | 3200 | 2200 | 800 |
| (15) | 55501 - 56900 | 7500 | 4300 | 3200 | 2200 | 850 |
| (16) | 56901 - 64200 | 7800 | 4300 | 3200 | 2200 | 850 |
| (17) | 64201 and above | 8300 | 4300 | 3200 | 2200 | 850 |



## 01.10.2017 முதல் வீட்டு வாடகைப்படி

### அரசாணை எண். 305, நிதி (சகு) துறை, நாள் 13.10.2017

### வாடகையில்லா குடியிருப்பிற்கு தகுதி பெற்று குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்படாதோருக்கு வீட்டு வாடகைப்படி

(1.10.2017 முதல்) (அரசாணை எண் 305, நிதி (ஊ.கு) துறை நாள் 13.10.2017)

| S. No. | Revised Pay Range (Pay Level in Pay Matrix) [Rupees per mensem] | Amount of House Rent Allowance (Rupees per mensem) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Grade I(a) | Grade I(b) | Grade II | Grade-III | Grade-IV |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) | Upto - 13600 | 1700 | 1100 | 900 | 600 | 400 |
| (2) | 13601 - 17200 | 1900 | 1300 | 1100 | 700 | 450 |
| (3) | 17201 - 21000 | 1900 | 1600 | 1200 | 700 | 500 |
| (4) | 21001 - 23900 | 2500 | 1800 | 1400 | 900 | 550 |
| (5) | 23901 - 27200 | 3000 | 2100 | 1600 | 1100 | 600 |
| (6) | 27201 - 30600 | 3500 | 2400 | 1800 | 1200 | 650 |
| 7) | 30601 - 35400 | 4100 | 2400 | 2100 | 1500 | 650 |
| (8) | 35401 - 37300 | 4600 | 3000 | 2400 | 1700 | 700 |
| (9) | 37301 - 41100 | 5100 | 3400 | 2700 | 1900 | 750 |
| (10) | 41101 - 44500 | 5600 | 3700 | 2900 | 2100 | 800 |
| (11) | 44501 - 50200 | 6100 | 3900 | 3200 | 2200 | 850 |
| (12) | 50201 - 51600 | 6700 | 4200 | 3500 | 2400 | 900 |
| (13) | 51601 - 54000 | 7100 | 4500 | 3600 | 2400 | 900 |
| (14) | 54001 - 55500 | 7700 | 4700 | 3600 | 2400 | 950 |
| (15) | 55501 - 56900 | 8000 | 4700 | 3600 | 2400 | 1000 |
| (16) | 56901 - 64200 | 8200 | 4700 | 3600 | 2400 | 1000 |
| (17) | 64201 and above | 8200 | 4700 | 3600 | 2400 | 1000 |

**நகர ஈட்டுப்படி (அ.ஆ.எண் 305, நிதி(ஊ.கு)துறை நாள் 13.10.2017**

அனுமதிக்கப்பட்ட நகர ஈட்டுப்படி விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண். | ஊதியம் (Pay of the individual in cell) | சென்னை நகரம் மற்றும் எல்லையிலிருந்து 32 கி.மீ. தூரம் வரை உள்ள பகுதிகள் | கோவை, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் ஈரோடு எல்லையிலிருந்து 16 கி.மீ. தூரம் வரை உள்ள பகுதிகள் |
|---|---|---|---|
| 1. | 20600க்குக் கீழ் | 360 | 180 |
| 2. | 20601–30800 | 500 | 260 |
| 3. | 30801–41100 | 800 | 400 |
| 4. | 41101 மற்றும் அதற்குமேல் | 1200 | 720 |

**பிணைத் தொகைக்கான படி**

பிணைத்தொகை கட்டும் அரசு ஊழியருக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு பிணைத்தொகைக்கான படி (Security Compensatory Allowance) வழங்கப்படும்.

| | பழைய விகிதம் | 1.10.17 முதல் அ.ஆ.எண்.306, நிதி(ஊ.கு) நாள் 13.10.17 |
|---|---|---|
| (1) ரூ. 500க்கு குறைவான பிணைத்தொகை | ரூ. 10/– | ரூ. 20/– |
| (2) ரூ. 500 முதல் ரூ. 999 வரை | ரூ. 20/– | ரூ. 40/– |
| (3) ரூ. 1000 முதல் ரூ. 4999 வரை | ரூ. 30/– | ரூ. 60/– |
| (4) ரூ. 5000ம் அதற்கு மேல் | ரூ. 40/– | ரூ. 80/– |

**மாற்றுத் திறனாளிகளுக்கான போக்குவரத்துப்படி**

1. மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ. 150/– 1.9.98 முதல் திருத்தி வழங்கப்பட்டது. (அரசு ஆணை நாள் 445 நிதித்துறை நாள் 3.10.98)

2. 1.6.09 முதல் ரூ.300 என திருத்தி வழங்கப்பட்டது. (அ.ஆ.எண்.236 நிதி (சகு) துறை நாள். 1.6.09)

3. 1.10.10 முதல் ரூ.300லிருந்து ரூ.1000 என உயர்த்தி வழங்கப்படுகிறது. அ.ஆ.எண்.391 நிதி(படிகள்) துறை நாள் 7.10.10.

4. 1.10.2017 முதல் மாதம்தோறும் ரூ.1000 லிருந்து ரூ.2000 என உயர்த்தி வழங்கப்படுகிறது. (அ.ஆ.எண்.307 நிதி (ஊ.கு) துறை நாள். 13.10.17)

5. Visually Challenged, Locomotor Disabled and Hearing impaired ஆகிய இனங்களுக்கு சிறப்பு இனமாக (special case)ரூ.2500 மாதம்தோறும் வழங்கப்பட வேண்டும். (அரசாணை எண் 307 நிதி (ஊ.கு) துறை நாள் 13.10.17



6.சம்பந்தப்பட்ட அரசு மருத்துவமனையில் உடல் ஊனமுற்றவர்கள் நோய்ப்பிரிவின் மருத்துவ அதிகாரி உடல் ஊனத்தின் அளவு 40 (& above) விழுக்காட்டிற்கு மேல் என இதற்கு சான்றளிக்க வேண்டும்.

7. கண்பார்வை 3/60 அல்லது இரண்டு கண்களிலும் 100% குறைவாக கண்பார்வை உள்ளவருக்கு இந்தப் படி கிடைக்கும்.

8. விடுப்புக் காலம், பணியேற்பிடைக் காலம் மற்றும் தற்காலிகப் பணிநீக்க காலம் ஆகியவற்றின்போது இந்தப் படி கிடைக்காது.

9. துறைத்தலைவர் இதற்கான ஒப்புதலை வழங்குவார். துறைதலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அத்துறையின் மாவட்ட அளவிலான சார்பு அலுவலருக்கு ஒப்படைப்பு (Delegation of power) அளித்துள்ளது. அரசு ஆணை எண்.316 நிதி (படிகள்) துறை நாள் 22–12–2015

10. தற்காலிக ஊழியருக்கும் இந்தப் படி கிடைக்கும். (அரசு க.எண். 1450524/பி.சி.1/89–1, நிதி, நாள் 24.12.1989)

11. ஒட்டுமொத்த சம்பளம் வாங்குகின்றவர்களுக்கும் இந்தப் படி கிடைக்கும். (அரசாணை எண். 150262/பி.சி.1/89–1, நிதி, நாள் 3.1.1990)

12. அலுவலக வளாகத்திலேயே வசிக்கும் ஊழியர்களுக்கு இந்தப் படி கிடைக்காது. (அரசு கடித எண். 59719/பி.சி.1/90–1, நிதி, நாள் 6.8.1990)

13. அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பாஸ் வைத்துள்ள ஊழியர்களுக்கும் இத்தொகை கிடைக்கும். (அரசு க.எண். 93612PC/93–1 நிதித்துறை, நாள் 13.6.1994)

14. மாற்றுத் திறனாளிகள் தொழில்வரி செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளனர்(தமிழ்நாடு மாவட்ட முனிசிபாலிட்டி சட்டம் விதி 124–J)

## இதர படிகள்

அரசாணை எண் 306 நிதித்துறை (ஊதியக்குழு) நாள் 13.10.17ல் கீழ் குறித்தவாறு படிகள் 1.10.2017 முதல் மாற்றி அமைக்கப்பட்டது.

**(i) CLERICAL ALLOWANCE**

This allowance shall be enhanced from Rs.120/- to Rs.240/- p.m.

**(ii) COOKING ALLOWANCE**

Cooking Allowance admissible to the Bungalow Watcher-cum-Cook employed in the bungalows of Forest Department located in remote areas shall be enhanced to Rs. 100/- p.m.

**(iii) PROVISION ALLOWANCE**

The existing quantum of Provision Allowance shall be doubled and rounded off to the next 10 rupee.

**(iv) RATION (MESSING) ALLOWANCE**

The Nurses and Nursing Supervisors Rs.120/- p.m. Nursing Superintendent Grade-I and Grade-II Rs.180 (in Chennai City) and Rs.160 (Outside Chennai),

Nursing Tutors Grade-I and Grade-II Rs.180/- (in Chennai City), and Rs.160/- (Outside Chennai) and Auxiliary Nurse Midwives are allowed Rs.120/- per month.

**(vi) WASHING ALLOWANCE**

The Washing Allowance is enhanced as follows:

**(vii) HILL ALLOWANCE**

| S. No. | Department / Name of Post | Revised Rate (per month) (in Rs.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **I.** | **General** | |
| 1. | Nursing Categories | 500 |
| 2. | Office Assistant | 200 |
| 3. | Driver | 200 |
| 4. | Technical Employees of Govt. Press | 200 |
| 5. | Conservancy Worker | 200 |
| 6. | Others wearing Uniforms daily | 200 |
| **II.** | **Police Personnel - General** | |
| 1. | Head Constable, Police Constable, Grade-1 and Grade-II and Driver PC, Sub-Inspector, Inspector, Deputy Superintendent of Police and Additional Deputy Superintendent of Police. | 500 |
| **III.** | **Traffic Police Personnel** | |
| 1. | Driver Police Constable, Police Constable, Grade - I & Grade - II, Head Constable, Sub-Inspector and Inspector | 500 |
| **IV.** | **Fire and Rescue Services** | |
| 1. | Fireman to Joint Director | 500 |
| **V.** | **Prison** | |
| 1. | Warder, Grade-II to Superintendent of Prison | 500 |
| **VI.** | **Forest Personnel** | |
| 1. | Forest Personnel | 500 |



The existing rate of Hill Allowance shall be retained at the same rate of 20% of pay subject to enhancement of the maximum ceiling limit from Rs.1,500/- p.m. to Rs.6000/- p.m. (G.O.No.306 Fin. (P.C.) Dept. dated 13.10.2017.

**(viii) WINTER ALLOWANCE**

The revised rated of Winter Allowance shall be as below:

| | | |
|---|---|---|
| i) | Those working in the places at 1000 metres to 1,499 metres above M.S.L | 5% of basic pay subject to a maximum of Rs.1200/- p.m. |
| ii) | Those working in the places of 1,500 metres above M.S.L. | 10% of basic pay subject to a maximum of Rs.1500/- p.m. |

**(ix) UNIFORM ALLOWANCE**

The Uniform Allowance is enhanced from 1.10.2017 as follows:

**(x) STITCHING CHARGES**

| S. No. | Department / Name of Post | Revised Rate (per month) (in Rs.) | Revised Rate (per month) (in Rs.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **HEALTH AND FAMILY WELFARE** | | |
| 1. | Staff Nurse, Nursing Superintendent, Grade-1 / Nursing Superintendent, Grade-II / Theatre Nurse. | 1800 | 3600 |
| 2. | Maternity Assistant / Auxiliary Nurse Midwives/ Village Health Nurse / Health Inspector Grade - I / Health Inspector Grade-II | 1000 | 2000 |
| 3. | Health Visitor | 900 | 1800 |

From 1.10.17, the Stitching Charges shall be enhanced at the rate of Rs. 500/- per set uniformly to all eligible personnel of police, fire and rescue services, prisions and stationery and printing and Rs. 400/- per set for all other eligible categories.

**(xi) RISK ALLOWANCE**

i) Risk Allowance paid to police and fire and rescue services personnel was revised in April 2017 and therefore shall be continued (G.O.M.S. No. 306 fin (p.c.) dated 13.10.2017) as indicated below:

| Sl. No. | Department / Name of Post | Existing Rate (per month) [In Rs.] |
|---|---|---|
| [1] | [2] | [3] |
| **I.** | **Police Personnel-General** | |
| 1. | Head Constable, Police Constable, Grade-I and Grade-II and Driver PC. | 800/- |
| 2. | Sub-Inspector | 800/- |
| 3. | Inspector | 800/- |
| 4. | Deputy Superintendent of Police | 900/- |
| 5. | Additional Deputy Superintendent of Police | 900/- |






| Sl. No. | Department / Name of Post | Existing Rate (per month) [In Rs.] |
|---|---|---|
| [1] | [2] | [3] |
| **II.** | **State Crime Record Bureau (SCRB) Police Personnel / Officers** | |
| 1. | ORS [Head Constable, Police Constable, Grade-I and Grade-II and Driver PC.] | 400/- |
| 2. | Sub-Inspector | 400/- |
| 3. | Inspector | 400/- |
| 4. | Deputy Superintendent of Police | 450/- |
| 5. | Additional Deputy Superintendent of Police | 450/- |
| **III.** | **STF Police Personnel / Officers** | |
| 1. | ORS [Head Constable, Police Constable, Grade-I and Grade-II and Driver PC.] | 6000/- |
| 2. | Sub-Inspector | 6000/- |
| 3. | Inspector | 6000/- |
| 4. | Deputy Superintendent of Police | 6000/- |
| 5. | Additional Deputy Superintendent of Police | 6000/- |
| 6. | Additional Director General of Police | 6000/- |
| **IV.** | **BDDS Personnel** | |
| 1. | Head Constable | 6000/- |
| 2. | Sub-Inspector | 6000/- |
| 3. | Inspector | 6000/- |
| 4. | Deputy Superintendent of Police | 6000/- |
| **V.** | **Bomb Detection & Disposal Squad (BDDS) Personnel** | |
| 1. | Head Constable | 6000/- |
| 2. | Sub-Inspector | 6000/- |
| 3. | Inspector | 6000/- |
| 4. | Deputy Superintendent of Police | 6000/- |
| **VI.** | **TN Commando School / TN Commando Force Personnel / Officers** | |
| 1. | ORS [Head Constable, Police Constable, Grade-I and Grade-II and Driver PC.] | 6000/- |
| 2. | Sub-Inspector | 6000/- |
| 3. | Inspector | 6000/- |
| 4. | Deputy Superintendent of Police | 6000/- |
| 5. | Additional Deputy Superintendent of Police | 6000/- |
| 6. | Superintendent of Police | 6000/- |
| **VII.** | **Fire and Rescue Services** | |
| 1. | Personnel below the rank of Divisional Officer | 800/- |
| 2. | Divisional Officer | 900/- |

| S. No. | Department / Name of Post | Revised Rate (per month) (in Rs.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **I.** | **Staff Working in the TB Institutions** | |
| 1. | Medical Officer | 400 |
| 2. | Nursing Superintendent | 200 |
| 3. | Other Superior Staff | 200 |
| 4. | Office Assistatnt | 100 |
| 5. | Chief X-ray Technician / Radiographer / Dark Room Assistant | 500 |
| **II.** | **Dairy Development Dept.** | |
| 1. | Veterinary Assistant Surgeon working in certain branches | 800 |
| **III.** | **Forensic Science Dept.** | |
| 1. | Scientific Officer (Scientific Assistant, Grade-I) | 400 |
| 2. | Junior Scientific Officer (Scientific Assistant, Grade-I) | 400 |
| 3. | Laboratory Assistant | 300 |
| 4. | Photographer, Grade-I | 300 |
| 5. | Technician (Laboratory) | 300 |
| 6. | Packer | 300 |
| **IV.** | **Stationery and Printing** | |
| 1. | Technical Employees of the Govt. Press | 400 |
| **V.** | **Police Radio Branch Staff** | |
| 1. | Technical Officer | 250 |
| 2. | Inspector (Technical/Sub Inspector (Technical) | 200 |
| **VI.** | **Prisons** | |
| 1. | Grade-II Warder to Deputy Jailor | 800 |
| 2. | Jailor to Superintendent of Prison | 900 |
| **VII.** | **Forests** | |
| 1. | Forest Watcher to Firest Range Officer | 800 |
| 2. | Assistant Conservator of Forests and State Deputy Conservator of Forests. | 900 |



**(xii) FARM ALLOWANCE**

The Farm Allowance sanctioned to Veterinary Assistant Surgeons working in Livestock Farms shall be enhanced from Rs.200/- to Rs.400/-

**(XIII) SPECIAL COMPENSATORY ALLOWANCE**

This allowance from 1.10.2017 is as detailed below:

| | |
|---|---|
| i) Drivers in Secretariat / Drivers in State Guest Houses and Motor Cycle Messengers of Public (MV) Department | From Rs.350/- p.m. to Rs.700/- p.m. |
| ii) Drivers attached to Ministers | From Rs.380/- p.m. to Rs.700/- p.m. |
| iii) Office Assistants, Duffadars and basic service personnel of all departments including hospital workers in hospitals | Ordinary Grade Rs. 100<br>Selection Grade Rs. 150<br>Special Grade - Rs. 200 |

**(xiv) OFFICE ACCOMMODATION ALLOWANCE**

This Allowance payable to Assistant Public Prosecutors shall be as shown below w.e.f. 1.10.2017

| | |
|---|---|
| i) For Assistant Public Prosecutor Grade-I | From Rs.360/- to Rs.750/- p.m. |
| ii) For Assistant Public Prosecutor Grade-II | From Rs.240/- to Rs.500/-p.m. |

**(xv) SUPERVISORY ALLOWANCE**

The allowance payable to the Assistant in Tamilnadu Ministerial Service for supervising three Junior Assistants shall be Rs. 80/- and Rs. 100/- for supervising more than 3 Junior Assistants. w.e.f. 1.10.2017

**(xvi) PROJECT ALLOWANCE / INVESTIGATION ALLOWANCE**

The existing quantum of this allowance shall be retained at 3% of the pay. Similarly investigation Allowance shall be 5% of the Basic Pay.

**(xvii) NON-PRACTISING ALLOWANCE**

The Non-Practising Allowance shall be as below w.e.f. 1.10.2017

| | |
|---|---|
| a) Assistant Surgeons / Assistant Professors / Non-clinical Lectures | From Rs.1200 to Rs.2400/- p.m. |
| b) Civil Surgeons and equivalend categories | From Rs.1800/-toRs.3600/- p.m. |
| c) Director / Joint Director (Now Additional Director including Deans) | From Rs.2000/- to 6000/- p.m. |

**(xviii) OTHER COMPENSATORY ALLOWANCE (For Restricted Private Practice)**

The existing Other Compensatory Allowance for restricted Private Practice shall be as given below w.e.f. 1.10.2017

| | |
|---|---|
| a) Assistant Surgeons in Primary Health Centres attached to Rural Family Welfare Units | From Rs.500 to Rs.1000/- p.m. |
| b) Lecturer / Assistant Professors / Tutors in Clinical Wing / Assistant Surgeons in General line and those serving in non-municipal areas but excluding those in Primary Health Centres | From Rs.300/- to Rs.600/-p.m. |
| c) inspecting Medical Officer (Indian Medicine) | From Rs. 200/- to Rs. 400/- p.m. |

**(xix) RURAL ALLOWANCE (PHC Allowance)**

The allowance for Medical Officers working in primary Health Centres as below: w.e.f 1.10.2017

a) Those provided with quarters — From Rs.750/- to Rs.1500/- p.m.
b) Those not provided with quarters — From Rs.1050/- to Rs.2100/-p.m.

**(xx) EQUIPMENT ALLOWANCE**

This allowance presently sanctioned to Officers going abroad on deputation to colder countries shall be subject to a minimum of Rs.3000/- and maximum of Rs.8,000/-. w.e.f. 1.10.2017

**(xxi) OVERCOAT ALLOWANCE**

The existing Over Coat Allowance payable to Civil Surgeons and Assistant Civil Surgeons shall be enhanced by 100% from Rs. 600/- to Rs. 1200/- per month, w.e.f. 1.10.2017

**(xxii) LEPROSY ALLOWANCE / SPECIAL LEPROSY ALLOWANCE**

Existing rates of Leprosy Allowance shall be enhanced as per Para 17 of G.O. (Ms) No. : 306 Fin (P.C.) dt. 13.10.17 w.e.f. 1.10.2017

**(xxiii) POST-MORTEM ALLOWANCE**

The allowance shall be given below as indicated below w.e.f. 1.10.2017

| DIRECTORATE OF MEDICAL EDUCATION SIDE : | Revised rate/ per case |
|---|---|
| One Medical Officer | Rs.300/- |
| One Mortuary Attendant | Rs.150/- |
| One Scientific Assistant (or) Steno-Typist | Rs.100/- |
| One Laboratory Technician from Forensic Science Department | Rs.100/- |
| One Basic Servant | Rs.75/- |



| DIRECTORATE OF MEDICAL & RURAL HEALTH SIDE | |
|---|---|
| One Medical Officer | Rs.300/- |
| One Mortuary Attendant or one Sanitary Worker | Rs.150/- |
| One Pharmacist | Rs.120/- |

**CASH ALLOWANCE**

Cash allowance in lieu of compulsory surrender of residential Office Assistant to the Officer shall be Rs.1000/- p.m. The cash allowance in respect of surrendering of the second office Assistant at their option shall be Rs. 1500/ (w.e.f. 1.10.2017)

**NURSING ALLOWANCE :**

Staff Nurses, Nursing Superindendents and Nursing Tutors working in medical departments are presently allowed nursing allowance. The existing rate shall be enhanced to Rs. 1000/- per month.

**DRIVING ALLOWANCE :**

The Driving Allowance to Office Assistant - cum - Driver in Secretariat and all Heads of Departments shall be enhanced from Rs. 60/- to Rs. 90/- per month.

## XI. அரசு ஊழியருக்கு மருத்துவ உதவிகள்

**மருத்துவச் செலவினைத் திரும்பப் பெறுதல்**

தகுதிகள் :

(அ) அரசு பணியில் 21.4.1995க்கு முன்னர் பணியில் சேர்ந்து மருத்துவபடிக்கு விருப்பம் தெரிவிக்காதவர்கள் மட்டுமே மருத்துவ செலவினை மீளப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள். 2017 திருத்திய ஊதியத்தில் என்று ஊதியம் பெறுகிறார்களோ (Date of Migration) அன்றைய தேதியில் உள்ள ஊதியத்தில் 15% தொகை வருடத்திற்கான உச்சவரம்பு ஆகும். (அரசு ஆணை எண்.306 நி.நி.(ஊகு) நாள் 13.10.2017).

(ஆ) தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டவர், தனக்கும், தன் குடும்பத்தினர் அனைவருக்கும் மருத்துவச் செலவுத் தொகையைத் திரும்பப் பெறலாம்.

(இ) தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவர்கள், தன் பொருட்டு ஏற்பட்டச் செலவினத் தொகையை மட்டுமே திரும்பப் பெற முடியும். விடுப்பில் இருந்தாலும் இந்த செலவினை திரும்ப பெறமுடியும் (அரசாணை எண். 2696, சுகாதாரம், நாள் 19.11.70)

(ஈ) கணவன்/மனைவி இருவரும் அரசுப் பணியில் இருந்தால், இருவரில் ஒருவர் மட்டும் இத்தொகைக்கான பட்டியலை அவர் பணிபுரியும் அலுவலகத்தில் கோரி பெறமுடியும். இதற்காக கணவன்/மனைவி பணிபுரியும் அலுவலகத்திலிருந்து மருத்துவச் செலவுக்கான தொகையை கணவன்/மனைவி பெறவில்லை எனச் சான்று அளிக்கப்பட வேண்டும்.

(உ) ஒட்டுமொத்த சம்பளம் பெறுபவர்களும் இந்த சலுகையினை

பெறமுடியும். ஆனால், குடும்ப உறுப்பினர்களுக்கு பெற முடியாது. (அரசு கடித எண் 20810/டி1/80–6, சுகாதாரம் நாள் செப்டம்பர் 80)

(ஊ) சிகிச்சையின்போது அரசு ஊழியர் இறந்தால், சட்டப்பூர்வ வாரிசிற்கு இந்த சலுகையினை ஈடு செய்யலாம். (அ.ஆ. எண். 2380, சுகாதாரம், நாள் 19.12.69)

### மருத்துவ பட்டியலுக்கு சான்று அளிப்பது

(அ) மருந்துகள் வாங்கிய பட்டியல்களை இன்றியமையாச் சான்றிதழில் பட்டியலிட்டு அரசு மருத்துவமனையில் பணிபுரியும் Authorised Medical Attendant (A.M.A.) அவர்களிடம் கொடுத்து அதில் கையெழுத்து பெற்று அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

(ஆ) மருத்துவமனையில் பணிபுரியும் சித்த மருத்துவம் பார்க்கும் மருத்துவர் பட்டியலில் கையெழுத்து இடலாம். (அரசாணை எண். 3111, சுகாதாரம், நாள் 18.12.1973)

(இ) ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலரும் மருத்துவப் பட்டியலில் கையெழுத்திடலாம் (அரசு எண். 2465 எச் 3/65–5, நாள் 27.5.65)

### இச்செலவினைத் திரும்பப் பெற தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்கள்

கீழ்க்குறிப்பிட்டவர்கள் குடும்ப உறுப்பினராகக் கருதப்படுவர்.

(1) கணவன்/மனைவி, குழந்தைகள், தத்தெடுத்த மகன் அல்லது மகள் தத்தெடுத்த தாய் மாற்றாந்தாயின் குழந்தைகள், கைவிடப்பட்ட அல்லது விதவையான மகள், விதவைத் தாய், மணமாகாத சகோதரி, தத்தெடுத்த தாய், தந்தை, வயது நிரம்பாத (Minor) சகோதரர். (அ.ஆ. எண். 1357, சுகாதாரம், நாள் 1.6.62 மற்றும் பிற அரசாணைகள்)

### அதிகமாக திரும்பப் பெறக்கூடிய தொகை

21.4.95 அன்று அல்லது அதற்கு முன்னர் மருத்துவ செலவினங்களை திரும்பப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஒரு ஊழியர், ஒரு ஆண்டுக்கு 1.1.2016 அன்று பெறும் திருத்திய அடிப்படை ஊதியத்தில் 15%க்கு மிகாமல் தொகையை திரும்பப் பெறலாம். (அரசாணை எண். 306, நிதித்துறை, (ஊதியக்குழு) நாள். 13.10.2017) இருவரும் அரசு ஊழியர்களாக இருப்பின் அவரவர் பெறும் சம்பளம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இச்செலவினை ஈடுகட்டி பெறலாம். (அரசு கடித எண். 82544/இசட்/சுகாதாரம் 15.5.97) நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புக்கு மேலே உள்ள தொகையை பிறகு வரும் வருடங்களில் அனுமதிக்க இயலாது. (அரசுக் கடித எண். 33935ZI\96-3 Health நாள் 22.7.96)

### பொதுவான விதிகள்

(அ) அவசரக் காலங்களில் தனியார் மருத்துவமனைகளில் ஏற்படும் செலவினங்களையும் அரசுக்கு எழுதி திரும்பப் பெறலாம். (அரசாணை எண். 1023, சுகாதாரம், நாள் 17.6.80)

(ஆ) தான் பணிபுரியும் இடத்தில் அல்லாமல் தமிழகத்தில் எங்கு வேண்டுமானாலும் சிகிச்சை பெறலாம். (அரசின் அனுமதியுடன்) – (விதி 4)



(இ) ஒரிஜினல் பில் காணாமல் போனாலும் டூப்ளிகேட் பில் நகலை வைத்துத் தொகை பெறலாம். (அ.ஆ.எண் 2635, சுகாதாரம், நாள் 12.11.70)

(ஈ) Essentiality படிவத்தில் A.M.A. கையொப்பம் மட்டும் போதுமானது. மருத்துவமனையில் மருந்துகள் இல்லை என்றச் சான்று தேவை இல்லை. (அ.ஆ.எண். 1937, சுகாதாரம், நாள் 21.10.81)

(உ) மருந்து வாங்கிய நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பட்டியலை அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். மூன்று மாதத்திற்கு மேல் ஆகிவிட்டால், பில் தொகையில் 15% குறைக்கப்படும். ஓராண்டு முடிந்து பட்டியல் கொடுத்தால் தொகை கிடைக்காது. (அ.ஆ. எண். 2308, சுகாதாரம், நாள் 24.12.81)

(ஊ) நோயாளியை வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும், மருத்துவமனையிலிருந்து வேறு மருத்துவமனை எடுத்துச் செல்லவும் ஆகும் ஆம்புலன்ஸ் செலவுகளையும் திரும்பப் பெறலாம். (அ.ஆ.எண். 49, சுகாதாரம், நாள். 10.1.68)

### மருத்துவப்படி ரூ.300

(அ) 1.10.17 முதல் அரசு ஊழியர் ஒருவர் ரூ. 300 படியாகப் பெறுவர். மருத்துவச் செலவு ஈடு செய்பவருக்கு ரூ. 300 கிடைக்காது. இரண்டில் ஒன்றினை மட்டுமே பெறமுடியும். (அரசாணை எண். 515, நிதித்துறை, நாள் 26.7.88, அரசாணை எண் 293, நிதித்துறை, நாள் 4.4.94 மற்றும் அரசாணை எண் 306, நிதி (சகு) துறை, நாள் 13.10.17)

(ஆ) மருத்துவப்படி அல்லது மருத்துவச் செலவினை ஈடு செய்தல். இதில் ஏதேனும் ஒன்றினைப் பெறலாம். (அ.ஆ.எண். 306, நிதித்துறை, நாள் 8.4.94)

(இ) ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இந்த மருத்துவப் படி கிடைக்கும். (1.4.94) (அரசாணை எண். 314, நிதித்துறை, நாள் 8.4.94)

(ஈ) கணவன்/மனைவி இருவரும் அரசு ஊழியராக இருந்து அவர்கள் இருவரும் ரூ. 300 பெற விருப்பம் தெரிவித்தால் இருவருக்கும் மருத்துவப்படி வழங்கப்படும். (அரசு க.எண். 3304/படி 1/90–3, நிதித்துறை நாள் 17.11.93) அதேபோன்று இருவரில் ஒருவர் மருத்துவப்படியும் மற்றும் ஒருவர் மருத்துவச் செலவினை ஈடு செய்யவும் முடியாது.

(உ) சிற்றேவல் பணியினருக்கு (பகுதி நேரப்பணி) இந்தப்படி கிடைக்காது. (அரசு க.எண். 30421/படி/1/89–1, நிதித்துறை, நாள் 5.5.89)

(ஊ) ஒப்புவிப்பு விடுப்பு மற்றும் தற்காலிகப் பணி நீக்க காலத்தில் இந்தப்படி கிடைக்காது. (அரசு க.எண். 34419/நிதி/படிகள்/1/89–2, நாள் 5.5.89)

(எ) அனைத்து விடுப்புக் காலத்திலும் இந்தப்படி கிடைக்கும். (அரசு க.எண். 107557/படிகள்/1/89–2, நிர்வாகத்துறை, நாள் 8.11.91)

(ஏ) இத்தொகை பெறுபவர் மூக்குக்கண்ணாடி தொகையான ரூ. 40ம் பெறலாம் (அரசு க.எண். 141170/90–3, படிகள், நிதித்துறை, நாள் 27.12.90)

(ஐ) ரூ. 300 மருத்துவப்படி பெறுபவர் அவசர காலங்களில் தனியார் மருத்துவமனைகளில் உட்புற நோயாளிகளாக இருக்க நேருமாயின், அச்செலவினைப் பிற நிபந்தனைக்குட்பட்டு திரும்பப் பெறலாம். (அரசு. க.எண். 85009/பணி/192–4 நாள் 9.3.93) (இதற்கான விதிகள் அரசாணை எண் 1023, சுகாதாரம், நாள் 17.6.80ல் தெளிவாக்கப்பட்டுள்ளன.)

**புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் . 2016 Wef 1.7.2016**

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012 அரசாணை எண்:243/நிதித்துறை (ஊதியம்) நாள் 29.6.2012ன்படி 1.7.2012 முதல் பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

Block period of four years from 01-07-2016 to 30-06-2020 monthly deduction Rs.180/- Rs.4 Lakhs limited in Annexure-II Rs.7.5 lakhs in Annexure - II A overall limit not exceed Rs.7.5 lakhs per family in a block four years. vide Go MS No.202 fin. (salary) Dept. dt.30.06.2016 wef 01.07.2016

இதன்படி அரசுத்துறை, பொதுத்துறை, அரசு வாரியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், மாநில அரசின் பல்கலைக்கழகங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் வகையில் 1.7.2012 முதல் 30.6.2016 வரையுள்ள நான்காண்டு காலத்திற்கும் ரூ. 4 லட்சம் வரை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1–7–16 முதல் 30–06–2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

இதற்கான மாத சந்தா ரூ.180/– வீதம் ஜூலை 2016 முதல் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். ஊழியர் மற்றும் குடும்ப உறுப்பினர் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

அரசாணை எண் (வாலாயம்) 589 நிதி (ஊதியம்) துறை நாள் 12–07–2018ல் மற்றும் அ.ஆ. (வாலாயம்) எண்.12 நிதி (ஊதியம்) துறை நாள் 02–01–2019ல் மருத்துவ காப்பீடு திட்டத்தில் கூடுதலான மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ செலவினம் ஊழியர்களால் செலுத்தப்பட தேவையில்லை. காப்பீட்டு நிறுவனங்களில் அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம்.

தொகுப்பூதியம், மதிப்பூதியம், கௌரவ ஊதியம், தினக்கூலி, ஒப்பந்தமுறை, மறுபணி நியமனம், தற்காலிகப் பணியில் TNGS (C.S)Act,2016 பிரிவு 17(1)ன் கீழ் வேலைவாய்ப்புத் துறையின் வழியாக தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணிகளில் பணியமர்த்தப்பட்டவர்கள் புற ஆதார முறையில் (அவுட் சோர்சிங்) பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் இந்த காப்பீட்டு திட்டத்தின்கீழ் வரமாட்டார்கள்.

குறிப்பு : நீட்டிக்கப்பட்ட முந்தைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 10.6.2012ல் காலாவதியான நிலையில், 11.6.2012 முதல் 30.6.2012 வரை அங்கீகரிக்கப்பட்ட நோய்களுக்கான மருத்துவச் சிகிச்சை பெற்றவர்கள், மருத்துவச் செலவினை திரும்பப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. உரிய படிவத்தில், துறைத் தலைவருக்கு விண்ணப்பித்து மருத்துவச் செலவினை திரும்பப் பெற இயலும். (அரசாணை எண். 221, நிதி (ஊதியம்) துறை, நாள் 20.6.2012)

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016ன் கீழ், அவசர மருத்துவ கவனிப்பு தேவைப்படும் நிகழ்வுகளில், இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத மருந்துவமனைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை / அறுவை சிகிச்சை வசதிகளை பெற்றுக்கொள்ளலாம். ஆயின், இந்நேர்வுகளில், சிகிச்சைக்கான முழுத்தொகையையும் மருத்துவ மனைக்கு செலுத்திவிட்டு தொகையினை மீளப் பெற விண்ணப்பிக்க வேண்டும். உச்சவரம்பிற்குட்பட்டு தொகை மீள வழங்கப்படும்.



அங்கீகரிக்கப்படாத மருத்துவ சிகிச்சை / அறுவை சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

இருப்பினும், த.நா. மருத்துவ கவனிப்பு விதிகள் [TN Medical Attendance] மற்றும் அ.ஆ.(MS)எண் 1023, சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள் 17–06–80ல் வரையறுக்கப்பட்டுள்ள அளவிற்கு மீளப்பெற தகுதி உண்டு.

மேற்படி தகுதி அவசரத் தேவையின் பொருட்டன்றி தனியார் மருத்துவ மனைகளில் மேற்கொள்ள த.நா. மருத்துவ கவனிப்பு விதிகளில் வழிவகை இல்லை. தவிர்க்க இயலாத நேர்வுகளில், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றால் ஆகும் செலவுக்கு மிகாமல் மீளப்பெற இயலும்.

த.நா. மருந்துகவனிப்பு விதிகளின் கீழான மீளக்கோரும் விண்ணப்பங்கள், ஊழியர் பணியாற்றும் துறை அலுவலகம் மூலம் சமர்ப்பிக்கவேண்டும்.

அவசரத் தேவை ஏழாத சிகிச்சைகளை இத்திட்டத்தின் கீழ் வராத மருத்துவமனைகளில் மேற்கொண்டால், செலவுத்தொகையை மீளப்பெற இயலாது.

(அரசாணை (MS)எண். 391, நிதி (ஊதியம்) துறை, நாள் 10.12.2018) அரசாணை எண் (வாலாயம்) எண்.712/நிதி (சம்பளம்) துறை நாள் 11.11.2020

தமிழ்நாடு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2016 மற்றும் 2018 திட்டத்தில் உட்படாத மருத்துவ பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அரசு ஊழியர் / ஓய்வூதியர்களால் செலவிடப்பட்ட தொகையினை தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதிகள் (TamilNadu Medical Attendance Rules)ன் படி மீள பெற, 1995க்கு பிறகு 26 ஆண்டுகள் கழித்து தற்போது அதற்கான திருத்திய விலை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 401 / மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு (Z1) துறை, நாள் 09.09.2021

கூடுதலாக 133 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளும் 29 நவீன சிறப்பு மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவ மனைகளும் இணைக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2016, 30.06.2020 அன்று முடிவுறுவதால் தற்போது 01.07.2020 முதல் 30.06.2021 வரை இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் (நிலை) எண்.279/நிதி (சம்பளம்) துறை நாள் 24.06.2020

நீட்டிக்கப்பட்ட முந்தைய மருவத்துவ காப்பீட்டுத்திட்டம் 30.06.2021ல் காலாவதியான நிலையில், புதிய மருத்துவ காப்பீட்டுத்திட்டம் 2021, 01.07.2021 முதல் 30.06.2025 வரை 4 ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் 4 ஆண்டு காலத்தற்கும் ரூ.5 லட்சம் வரை மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. ,இணைப்பு 1–A ல் உள்ள மருத்துவ சிகிச்சைகளுக்கு மட்டும் 10 லட்சம் வரை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான மாத சந்தா ரூ.300 வீதம் 01.07.2021 முதல் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் 203 வகையான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை அரசால் அங்கீகரிக்கப்பட்ட 1,169 மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம்.

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் – 2021 மூன்றாம் நபர் நிர்வகிப்பவர்கள், இணை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நோடல் அலுவலர்கள் விவரம் அரசு நிதித்துறை கடித எண் 34135/ நிதி(HI/1)/ 2021–1, நாள் 01.11.2021.

அரசு ஊழியர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல், முதல் V வரை இவ்வாணையில் உள்ள நிபந்தனைகளின்படி இத்திடத்தின் கீழ் பயன்பெற ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 293/ நிதி(ம.கா. 1),

**அரசாணை எண்.130 நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள் 7.6.2024–ல் அரசு மருத்துவமனைகளில் புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தில் பயன் பெறுவது குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.**

## *N.G.G.O. CERTIFICATE*

துறை நாள் 30.12.2021.

1) I Certify that Thiru ............................................. .................... is a non-gazetted officer getting a salary of Rs. ................................ is employed ............................ .............................................. in the .............................. ................ .......................................... is eligible of the concession granted is G.O.Ms. No. 2678 / Health dated 13-6-82 and G.O.Ms. 3638 / Health dated 1-11-82

2) The details of Pay and allowance drawn by the individuals are furnished below :

| | | |
|---|---|---|
| 1) Pay | ... | Rs. |
| D.P. | ... | Rs. |
| P.P. | ... | Rs. |
| 2) D.A. | ... | Rs. |
| 3) Other Allowances | ... | Rs. |
| 4) H.R.A. | ... | Rs. |
| | Total | Rs. |

Office Seal — Signature

Designation with Seal



**ANNEXURE-III**

**CERTIFICATE TO BE ISSUED IN LIEU OF IDENTITY CARD UNDER THE NEW HEALTH INSURANCE SCHEME, 2021.**

TRUTH ALONE TRIUMPHS

**CERTIFICATE**

***(New Health Insurance Scheme, 2021 ordered in G.O.Ms.No.160, Finance (Salaries) Department Dated: 29-06-2021)***

| | |
|---|---|
| ***NHIS 2016 ID Card No:*** | ***Date of Birth :*** |
| ***Date of Joining :*** | ***Date of Retirement:*** |
| ***GPF/TPF/CPS No :*** | ***Mobile No :*** |

Certified that Thiru/Tmt./Selvi ________________ is employed as ________________ in ________________ ________________ and his/her eligible Family Members as detailed below are eligible for treatments / surgeries covered under the New Health Insurance Scheme, 2021. The Identity Card under the New Health Insurance Scheme, 2021 is yet to be supplied by the United India Insurance Company Limited, Chennai / Third Party Administrator. This certificate is issued to enable the Employee and their eligible Family Members under the above scheme for availing approved treatments / surgeries in the empanelled hospitals approved by the Insurance Company / Third Party Administrator. The approved hospitals concerned shall provide CASHLESS health care coverage as envisaged under this Scheme:

| Sl No | Name | Date of Birth | Relation -ship to the Employee | Marital Status | Employ -ment Status | Whether Physically Challanged/ Mentally Retarded.** (Yes/No) | Passport Size Photo |
|---|---|---|---|---|---|---|---|

**** Details of Physically Challenged and Intellectually Disabled Children as ordered in para 3 (4 ) (4)of Annexure-A of the GO to be furnished.**

**Signature of the Employee**

*Certified that the above particulars are verified with the Service Register of the Employee.*

**Signature of Drawing and Disbursing Officer in Government Departments**

**Signature of Pay Drawing Officers in Organisations covered under this Scheme.**

Name :

Designation :

Date :

# XII. கடன் மற்றும் முன்பணம்

## இடமாற்றல் சம்பள முன்பணம் (Art.239, Financial Code, Vol.1)

(அ) இடமாற்றலின்போது ஒரு மாத அடிப்படைச் சம்பளம் முன்பணமாக வழங்கப்படும். புதிய இடத்தில் பணி ஏற்று முதல் முழு ஊதியம் பெறும் மாதத்திலிருந்து மூன்று தவணைகளில் இத்தொகை பிடித்தம் செய்யப்படும். குறைவாக சம்பளம் பெறும் மாதத்தில் தொகை பிடித்தம் செய்யக்கூடாது.

(ஆ) புதிய இடத்தில் பணி ஏற்ற பின்னரும் ஒரு மாதத்திற்குள் இந்த முன்பணம் வாங்கலாம். (Instruction 1(1) Treasurey Rule 19)

(இ) இதுவன்றி எதிர்பார்க்கின்ற செலவினத்தில் 75% இடமாற்றப் பயணப்படி முன்பணமாக வழங்கப்படும். இது ஒரே தவணையாக பிடித்தம் செய்யப்படும். குடும்ப உறுப்பினர் தனியாக செல்வாராயின், அவர்களுக்கு தனியாக முன்பணம் வழங்கப்படும். புதிய இடத்தில் பணி ஏற்ற பின்னர் முன்பணம் வாங்க முடியாது. இதற்கான பட்டியலை பயணம் முடிந்த நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் கொடுக்க வேண்டும்.

(ஈ) சொந்த விருப்பத்தின் பேரில் மாற்றல் பெறுபவருக்கும் ஊதிய முன்பணம் கிடைக்கும் (அரசாணை எண். 480, நிதி, நாள் 28.7.92)

(உ) விடுப்பிலிருக்கும் பொழுது இடமாற்றம் செய்யப்பட்டாலும் இந்த முன்பணம் கிடைக்கும். (நிதித்தொகுப்பு விதி 239)

## கைத்தறி துணி வாங்க முன்பணம் (வட்டியில்லா முன்பணம்)

(அ) ஐந்து ஆண்டு பணி முடித்த ஊழியர்கள் இந்த முன்பணம் பெறலாம் (ஆ) ஒரு மாத அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியமும் சேர்த்து முன்பணமாக கிடைக்கும். (இ) காதி/கைத்தறி முன்பணம் நிலுவை இருப்பின் மீண்டும் முன்பணம் வழங்கப்படும். ஆனால் மொத்த முன்பண நிலுவை ஒரு மாத அடிப்படை ஊதியத்திற்கு மிகைப்படக் கூடாது (ஈ) ஒரு காலண்டர் வருடத்திற்கு ஒரு முறைதான் இக்கடன் வழங்கப்படும். (உ) இத்தொகை பத்து தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். (ஊ) தொகை வழங்கப்பட்ட அடுத்த மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

## பண்டிகை முன்பணம் (Appx. 28 of Financial Code Vol. II)

(1) தீபாவளி, பொங்கல், ஓணம், ரம்சான், மிலாடிநபி, பக்ரீத், ஈஸ்டர், கிறிஸ்துமஸ், குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினம் ஆகிய பண்டிகைகளுக்கு ரூ. 10,000/– முன்பண மாகக் கிடைக்கும். அரசு ஆணை (நிலை) எண்.240/ நிதி (ஊதியம்) நாள் 02.08.2019.

(2) இத்தொகை பத்துத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். (3) ஒரு காலண்டர் ஆண்டுக்கு ஒரு முன்பணம் மட்டும் வழங்கப்படும். (4) விடுப்பில் இருப்பவருக்கும் இத்தொகை வழங்கப்படும். ஆனால் தற்காலிக வேலை நீக்கத்திலிருப்பவருக்கு இத்தொகை கிடைக்காது. (5) தற்காலிகப் பணியாளர் ஓராண்டு பூர்த்தி செய்து இருக்க வேண்டும். (6) பண்டிகை நாளுக்கு முன்னர் ஒரு மாதத்திலிருந்து இத்தொகை வழங்கப்படும். (7) 15ஆம் தேதிக்குள் பண்டிகை வருமானால் அதே மாதத்திலும், 15ஆம் தேதிக்கு பின்னர் பண்டிகை வருமாயின் அடுத்த மாதத்திலும் தொகை பிடித்தம் செய்யலாம். (8) ரம்ஜான் பண்டிகை முன்பணம் ஒரு வருடத்தில் இரண்டு தடவை அளிக்கலாம். (அரசு கடிதம் 16374 கி.பி./2000–2 கூட்டுறவு உணவு மற்றும் நு.பா. துறை நாள் 30.6.2000) (9) கணக்குத் தலைப்பில் போதிய நிதி இருந்தால் மார்ச் மாதத்தில்கூட பண்டிகை முன்பணம் அனுமதித்து தொகையை வழங்கலாம். (அ.ஆ.எண். 144 நிதி (சம்பளம்) துறை, நாள் 9.4.99) இந்த முன்பணம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு 1.4.2002 முதல் திரும்பவும் அனுமதித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.



பண்டிகை முன்பணம் வழங்க ஊதியம் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ள (D.D.O.S) அலுவலர்களே ஒப்பளிப்பு ஆணை வழங்கலாம். appendix. 28 (Annexure-I Rule 7 of T.N. Financial Code Vol. I)

## மோட்டார் சைக்கிள் வாங்க முன்பணம் (TNFC 231 (a))

(அ.ஆ. எண். 719, நிதித்துறை, நாள் 13.10.93, 485 நிதித்துறை நாள். 13.01.05, 467 நிதி (சம்பளம்) துறை நாள் : 22-09-2009 மற்றும் 27, நிதி (சம்பளம்) துறை நாள் 20.01.2021).

அரசுக்கடித எண்: 36753/ நிதி (சம்பளம்) துறை நாள்: 08.10.2022–ன்படி, மின்சார வாகனம் (e–vehicle) வாங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எ | வாகன வகைபாடு | ஊதியம் | முன்பணத்தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய மோட்டார் கார் | ஊதிய நிலை 28 (Level 28) மற்றும் அதற்கு மேல் | ரூ. 14,00,000 |
| | | ஊதிய நிலை 21 முதல் 27 வரை | ரூ. 10,00,000 |
| | | ஊதிய நிலை 10 முதல் 20 வரை | ரூ. 6,00,000 |
| 2 | மோட்டார் இரு சக்கர வாகனம் | ஊதிய விகிதத்திலுள்ள அனைத்து நிரந்தர அரசு ஊழியர் களுக்கும் ஒரேவிதமாக வழங்கப்படும். அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை | ரூ. 1,00,000 |

2. இந்த வாகன முன்பணம் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படும்.

அ) வாகனம் வாங்கும் விலை உச்சவரம்பு தொகைக்குள் இருந்தால் வாங்கப்படும் விலை, வரிகள், பதிவுக் கட்டணம் மற்றும் காப்பீடு தொகை உட்பட உள்ள தொகைக்கு ஒப்பளிப்பு செய்ய வேண்டும்.

ஆ) பழைய கார் / மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு இந்த முன்பணம் கிடையாது.

இ) இந்த திருத்திய உச்சவரம்பு தொகை 2020–2021ம் ஆண்டிற்கானது. இந்த உச்சவரம்பு முன்பணம், ஒவ்வொரு ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டைவிட 5 சதவீதம் உயர்த்தி வழங்கப்படும்.

ஈ) இந்த முன்பணம் பிடித்தம் செய்வதற்கான விதிமுறைகளும், ஒப்பளிப்பு செய்வதற்கான மற்ற விதிமுறைகளும், ஏற்கனவே உள்ளவற்றில் எந்தவித மாற்றமும் இல்லை.

(2) துறைத்தலைவரால் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். (3) குறிப்பிட்ட கடையைத் தவிர முன் அனுமதி பெற்று வேறு கடையில் வாகனங்கள் வாங்கலாம். (அரசு கடித எண் 12381/Sal.11/83–4 நாள் 23.6.84) புதிய மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், மொபெட், புதிய மோட்டார் கார் ஆகியவைகளை வாங்கிட முன்பணம் சம்பந்தப்பட்ட டீலர் பெயருக்குத்தான் காசோலையாக வழங்கிட வேண்டும். (4) முன்பணம் ஒப்பளிப்பதற்கான மனுவில் குறிப்பிட்ட வாகனம் தவிர பிற வாகனமும் வாங்கலாம். விண்ணப்பத்தில் குறிப்பிட்ட வாகனத்தை தவிர வேறு வாகனம் வாங்க விரும்பினால், காசோலை பெறுவதற்கு முன் துறைத்தலைவரின் அனுமதி பெற வேண்டும். அரசு அறிவித்துள்ள பட்டியலில் உள்ள வாகனங்களுக்கு மட்டுமே முன்பணம் வழங்க இயலும். 8 இருக்கைகள் கொண்ட மாருதி ஆம்னி வேன்களை வாங்க முன்பணம் வாங்கலாம். எப்.ஐ.ஆர் போட்டு காணாமல் போன வாகனம் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், அரசுக் கடனை மாதாந்திர தவணையிலும் திருப்பிச் செலுத்த அனுமதிக்கலாம். காப்பீட்டுத் தொகை பெறப்பட்டு மீதமுள்ள

தொகை மற்றும் வட்டியை திருப்பி செலுத்த அனுமதிக்கலாம். (அரசுக் கடிதம் எண் 44367/சம்பளங்கள்/99–1 நாள் 22.9.99) (5) முன்பணம் ஒப்பளிப்பு பெறுவதில் தாமதம் ஏற்படின் முன்பணம் கிடைப்பதற்கு முன்னரே துறைத்தலைவர் அனுமதி பெற்று புதிய வாகனம் வாங்கலாம். (அரசு கடித எண் 8127 (Sal.2) 97–4 நிதி, நாள் 17.2.1988. (6) கருவூலத்துறை இயக்குநர் இதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதால் அவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே துறைத்தலைவர் இதற்கான ஆணை வழங்குவார். (7) லைசென்ஸ் வாங்கினால்தான் கடன் வழங்க முடியும் என்று வற்புறுத்த வேண்டியதில்லை. (அரசு கடித எண் 62367/நிதி 90, நாள் 21.8.1990) (8) முந்தைய ஆண்டில் தொகை பெற்று வண்டி வாங்காமல் தொகையைச் செலுத்தியவருக்கும் இத்தொகை வழங்கப்படும். (மேற்படி கடிதம்) (9) துறைத்தலைவரின் அனுமதி பெற்று வண்டியை விற்கலாம். ஆனால் வண்டியை விற்ற நாளிலிருந்து நான்கு ஆண்டுகள் சென்ற பின்னர்தான் புதிய கடன் கிடைக்கும். (10) சைக்கிள் முன்பணம் பெற்றவர் பாக்கித் தொகையை ஒரே தவணையில் செலுத்திவிட்டு ஸ்கூட்டர் முதலியவைக்கான முன்பணம் பெறலாம். (மேற்படி கடிதம்) (11) துறைத்தலைவரின் அனுமதி பெற்று ஒப்பளிக்கப்பட்டதற்கு மாறாக வேறு வண்டியும் வாங்கலாம். (மேற்படி கடிதம்) (12) பழைய கார்கள் வாங்குவதற்கு அளிக்கப்படும் முன்பணங்களுக்கான காசோலைகள் டீலர் பெயருக்கே வழங்க வேண்டும். (அரசு கடிதம் எண். 56236 (சம்பளம்) 99–1 நாள் 24.11.99) (14) பழைய மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் மற்றும் மொபெட் வாங்க முன்பணம் இனி கிடையாது. (அ.ஆ.எண். 16, நிதித்துறை, நாள் 13.1.05).

**கல்வி முன்பணம்**

(1) தொழிற்கல்வி (பி.இ. போன்றவை) பயில்பவருக்கு ரூ. 2,500/–, கலை மற்றும் விஞ்ஞானக் கல்வி பயில்பவருக்கு ரூ. 2,000/–ம், பாலிடெக்னிக் பயில்பவருக்கு ரூ. 1,500/–ம் முன்பணமாகக் கிடைக்கும். (அரசாணை எண். 82, நிதி, நாள் 13.6.79) அரசாணை எண் 968, நிதி, நாள் 1.12.1988 மற்றும் அரசாணை எண் 220 நிதி (சம்பளம்) நாள் 23.3.93) (2) கல்லூரியில் வழங்கப்படுகின்ற சான்றின் அடிப்படையில் இத்தொகை வழங்கப்படும். (3) ஒரு கல்வி ஆண்டில் ஒரு முன்பணம் மட்டும் கிடைக்கும் (4) முந்தைய முன்பணம் நிலுவை இருப்பின் மேலும் ஒரு முன்பணம் கிடைக்காது (5) அஞ்சல் வழிக்கல்வி பயில இத்தொகை கிடைக்காது (6) இன்ஸ்டிடியூட் ஆப் செராமிக் டெக்னாலஜி டிப்ளமா படிப்பவர்களுக்கும் இத்தொகை கிடைக்கும் (7) பாலிடெக்னிக் பயில்பவருக்கு ரூ. 1500 வழங்க வகை உள்ளதால் பாலிடெக்னிக் போன்ற டிப்ளமா படிக்கும் அனைவருக்கும் இத்தொகை வழங்கலாம். (8) எம்.ஃபில். பயில்பவருக்கும் இக்கடன் கிடைக்கும் (9) பார்மசி டிப்ளமா வகுப்பு படிப்பவர்களுக்கும் இக்கடன் கிடைக்கும். (அரசு கடிதம் எண் 2039/க/96–1, நிதி (சம்பளம்) துறை நாள் 6.3.96) (10) குழந்தைகளின் கல்விக்கான முன்பணங்கள் 1.6.2012 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. (அரசாணை நிலை எண் 200 நிதி (சம்பளங்கள்) துறை நாள் 07.06.2012).

அ.ஆ. (நிலை) எண்: 271 நிதி (Procurement cell) துறை, நாள்: 24.08.2023ன் படி குரூப் ‘C’ மற்றும் ‘D’ பிரிவு ஊழியர்களுக்கு, ஒரு மாத அடிப்படை ஊதியம் அல்லது கீழ்க்காணும் நிர்ணயிக்கப்பட்ட தொகை, இதில் எது அதிகமோ அதை கல்வி முன்பணமாக பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே, கல்வி முன்பணம் பெற வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளில் மாற்றம் எதுமில்லை. இந்த ஆணை 2023 – 2024 கல்வி ஆண்டு முதல் அமலுக்கு வருகிறது.

குரூப் ‘A’ மற்றும் ‘B’ பிரிவு அலுவலர்கள், அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கீழ்க்காணும் நிர்ணயிக்கப்பட்ட தொகை, இதில் எது அதிகமோ அதை கல்வி முன்பணமாக பெற்றுக் கொள்ளலாம். 10 தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். இம்முன்பணத்திற்கு வட்டி கிடையாது.

தொழிற் பட்டப்படிப்பு – ரூ.50,000/–, கலை, அறிவியல் பட்டப்படிப்பு– ரூ.25,000/– பட்டப்படிப்பு – ரூ.25,000/–



**சைக்கிள் முன்பணம்** (Art 232. Financial Code, Vol. I)

(1) ஐந்து ஆண்டு பணி முடித்த ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு ஊழியருக்கும் இத்தொகை கிடைக்கும் (2) ரூ. 1500 முன்பணமாகக் கிடைக்கும் (3) நாற்பது மாத தவணைகளில் இத்தொகை பிடித்தம் செய்யப்படும் (4) இதற்கான காசோலை சைக்கிள் வாங்க இருக்கும் கடையின் பெயருக்கு வழங்கப்படும் (5) ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த முன்பணம் வாங்கலாம் (6) சைக்கிள் திருட்டுப்போனால், ஐந்து ஆண்டு முடிவதற்குள் புதிய கடன் வழங்கலாம். (அரசு கடிதம் எண். 62367/நிதி/90, நாள் 21.8.90 மற்றும் அரசாணை எண். 485, நிதி (சம்பளம்) துறை, நாள் 8.8.96)

**திருமண முன்பணம் (அரசு கடித எண் 2495/சம்பளங்கள்.2/81.2 நிதித்துறை, நாள் 29.3.1983)**

(1) தகுதிகாண் பருவம் முடித்தவரின் குழந்தைகள் தத்தெடுத்த குழந்தைகள் ஆகியவரின் திருமணத்திற்கு இத்தொகை கிடைக்கும். (அ.ஆண். எண் 234, நிதித்துறை (சம்பளம்), நாள் 30.3.95) (2) மகன் திருமணத்திற்கு ரூ. 6000மும் மகள் திருமணத்திற்கு ரூ. 10,000மும் கிடைக்கும் (3) மகன் 21 வயதும், மகள் 18 வயதும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். (4) சென்னையில் பணிபுரிபவருக்கு துறைத்தலைவரும், மாவட்டத்தில் பணிபுரிபவருக்கு மாவட்ட ஆட்சியரும் ஒப்பளிப்பார்கள். (5) இதற்கென அமைத்த படிவத்துடன் தகுதிகாண் பருவம் முடித்த ஒருவரிடமிருந்து ஜாமீன் இணைக்க வேண்டும். நிரந்தரமானவருக்கு ஜாமீன் இணைக்கத் தேவையில்லை. (6) அரசு ஊழியரின் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு வாங்க கடன் நிலுவையில் இருக்கும்போது இரண்டாவதாக ஒரு திருமணத்திற்கு கடன் வாங்க தற்போது தடையில்லை (7) மனு செய்த பின்னர் அந்த நிதி ஆண்டில் முன்னுரிமை அளித்து முன்பணம் வழங்கப்படும். (அ.ஆ.எண். 999, நிதித்துறை, நாள் 12.9.80) (8) தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டு மூன்று ஆண்டு பணி முடித்த ஒருவருக்கு தகுதிகாண் பருவம் அலுவலகக் காரணங்களினால் முடிவு பெறாமல் இருப்பினும் திருமண முன்பணம் வழங்கலாம். (அரசு கடிதம் எண். 34726/ஊதியம், 90–3, நிதித்துறை, நாள் 30.11.90)

வட்டி கணக்கீடு முறை : $\frac{\text{அசல் x தவணைகளின் எண்ணிக்கை}}{500}$

The D.T.A Shall be the administrator of marriage advance scheme from the yr 2016-2017 vide GO No.140 Fin (salary) dept. dted. 13-05-2016

### பாடப்புத்தகங்களுக்கான செலவினம் திரும்பப் பெறுதல்

(G.O.Ms.No.761, Fin, dated 29.7.78)

(1) ரூ. 5200க்கு (நான்காவது ஊதியக்குழு ஊதியத்தின்படி) குறைவான ஊதியம் பெறும் அடிப்படை ஊழியர்கள் அவர்களின் குழந்தைகளுக்காக வாங்கிய பாடப்புத்தகங்களுக்கான செலவினை திரும்பப் பெறலாம். (2) உயர்நிலைப் பள்ளி படிப்பு வரை இத்தொகை கிடைக்கும் (3) இதற்கென அமைந்த படிவத்துடன் புத்தகங்கள் வாங்கியதற்கான பட்டியல் மற்றும் பள்ளித்தலைவரின் சான்று ஆகியவையும் இணைக்க வேண்டும் (4) தற்காலிகமாகப் பணிபுரிபவருக்கு இத்தொகை கிடைக்காது (5) அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியில் மட்டுமே குழந்தைகள் படிக்க வேண்டும். நர்சரி பள்ளியில் பயின்றால் தொகை கிடைக்காது.

### காசநோய், தொழுநோய் மற்றும் புற்றுநோய் கண்டுள்ளவருக்கு முன்பணம் (Art. 225 of T.N.F.C. Vol. I)

(1) காசநோய், தொழுநோயாளிகள் மற்றும் புற்று நோயாளிகள் ஆகியோருக்கு இரண்டு மாதம் அடிப்படை ஊதியம் (ரூ. 1600க்கு மிகாமல்) முன்பணமாக வழங்கப்படும். (2) முழு விடுப்பூதியம், பணி ஊதியம் பெறும் நாளிலிருந்து 18 மாதத் தவணையில் இத்தொகை பிடித்தம் செய்யப்படும் (3) பணிக்காலத்தில் ஒரு முறைதான் வழங்கப்பட வேண்டும். (4) விடுப்பிலிருந்தாலும் (ஊதியமில்லா விடுப்பு தவிர) இந்த முன்பணம் கிடைக்கும் (அரசுக் கடித எண் 23057/ஊதியம்/ II/94–3 நிதித்துறை 13.5.94 மற்றும் அரசு கடித எண் 70395/ஊதியம் II/94–3 நிதித்துறை நாள் 29.12.94)

### டான்சி பொருள் வாங்க முன்பணம் (அரசாணை எண். 25 தொழில் துறை, நாள் 14.1.88 மற்றும் அரசு கடிதம் எண் 36256/Sal-I/88-3 தொழில் துறை, நாள் 16.9.88)

(1) இரண்டு மாத அடிப்படை ஊதியம் அல்லது ரூ. 8000/– இதில் குறைவான தொகை டான்சி பொருள் வாங்க முன்பணம் கடனாக வழங்கப்படும். அசல் பத்து மாதத் தவணைகளிலும், வட்டி இறுதியாக இரண்டு மாதத் தவணைகளிலும் பிடிக்கப்படும் (அ.ஆ.எண். 170, நிதித்துறை (சம்பளம்) நாள். 29.4.99).

(2) ஏதாவது ஒரு டான்சி விற்பனை நிலையத்திலிருந்து Proforma Invoice பெற்று இதற்கான விண்ணப்பத்தை அளிக்க வேண்டும்.

(3) கைத்தறி முன்பணம் வழங்குவது போன்று இதற்கான பட்டியலை கருவூலத்திற்கு அனுப்பி காசோலையை சம்பந்தப்பட்ட விற்பனை நிலையத்திற்கு அனுப்பி பொருள்கள் வழங்கப்படும்.

(4) இதற்கான ஒப்புதலை அலுவலகத் தலைவர் வழங்குவார்.

### குளிர்கால உடைகள் வாங்க முன்பணம்

மலையிடங்களில் பணி அமர்த்தப்பட்ட அல்லது மலையிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ள அரசு ஊழியருக்கு ரூ. 1000 முன்பணமாக கிடைக்கும். இத்தொகை 20 தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். அலுவலகத் தலைவரே இத்தொகையை வழங்குவார். சைக்கிள் முன்பணத்திற்கு வழங்கப்பட வேண்டிய வட்டி இதற்குக் கணக்கிடப்படும். கூனூர் ஐ.எப்.யில் பணிபுரியும் சில்லரை செலவின ஊழியருக்கு ரூ. 400 குளிர்கால உடைகள் வாங்கிட முன்பணமாக



வழங்க வேண்டும். (அ.ஆ.எண். 236, நிதித்துறை, நாள் 18.2.80 அ.ஆ.எண். 292 நிதித்துறை, நாள் 4.4.94)

### கணிப்பொறி வாங்கிட முன்பணம் (அரசு ஆணை எண். 231, நிதித்துறை நாள் 1.4.1992)

(1) அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் கணிப்பொறி வாங்கிட முன்பணம் ஒப்பளிக்கலாம்.

(2) கணிப்பொறி வாங்க முன்பணம் ரூ. 50,000 அல்லது கணிப்பொறியின் விலை இதில் எது குறைவோ அத்தொகையை முன்பணமாக வழங்கலாம். (அ.ஆ.எண். 59, நிதி, நாள் 16.1.2006)

(3) இந்த முன்பணத்திற்கு வட்டி வீதம் அரசால் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

(4) 7610 கணக்கு தலைப்பின் கீழ் வழங்கப்படும் கடன் மற்றும் முன்பணத் தொகை ஒப்பளிப்பு செய்யப்படும் ஆணையினை மாநில கணக்காயருக்கு அனுப்பக் கூடாது (அரசு கடிதம் எண்.26540/நிதி (க.மு.குழு)/2015 நாள்.13.05.2015)

## XIII. வீடு கட்ட முன்பணம்

அ.ஆ. எண்: 46 வீ.வ. மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 10.04.2018—ன் படி நான்கு ஆண்டுகள் பணி முடித்து முறையாக பணி அமர்த்தப்பட்டவர்களுக்கு இத்தொகை கிடைக்கும். அடிப்படை ஊதியம் + தரஊதியம் + அகவிலைப்படி + தனிஊதியம் மொத்தத் தொகையில் 90 மடங்கு கிடைக்கும். 20 ஆண்டுகளுக்கு குறைவாக பணிக்காலம் இருப்பின் இத்தொகை அதற்கேற்றவாறு குறைக்கப்படும். அதிகபட்சமாக ரூ.40,00,000 கிடைக்கும். வீட்டை விரிவாக்க அல்லது மேம்படுத்த அதிகபட்ச வரையறையில் 50 சதம் (ரூ.20,00,000) மட்டுமே கிடைக்கும். (அரசாணை எண்.135 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை (HBA) நாள் 20.6.2012).

அ.ஆ.எண்: 52 (வீட்டுவசதி நகர்புற வளர்ச்சித்துறை HBA நாள் 17.05.2023 ன்படி வீடு கட்டும் முன்பணம் அதிகபட்சமாக ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(அரசாணை (நிலை) எண் 24வீ.வ(ம) ந.மே(வீமுக) துறை நாள் 02.02.2021)

அ.ஆ.எண்.26 வீவ(ம) ந.மே (வீமுக) துறை நாள்.02.02.2021

வங்கி, பிறநிதிநிறுவனத்தில் கடன்பெற்று வீடு கட்டி இருந்தாலும் அரசுக்கடன் பெற்று செலுத்தலாம். ஒரே தவணையில் பணம் வழங்கப்படும். ஒரு மாதத்திற்குள் பயனீட்டு சான்று கொடுக்க வேண்டும்.

நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் மீதும், முன்பணம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு தவணை தொகை பெறாமல் உள்ளவர்களுக்கும், இந்த புதிய முன்பணத் தொகை வீதத்தில் வழங்கப்படும்.

இதற்கென அமைந்த படிவத்துடன், கட்டுமான மதிப்பீடு, அரசு வழக்கறிஞர் சான்று, பஞ்சாயத்து அங்கீகரித்த வீடு கட்டும் வரைபடம், Encumbrance Certificate மற்றும் பத்திர நகல் இணைக்கப்பட வேண்டும்.

கட்டியுள்ள வீட்டை வாங்கவும் முன்பணம் வழங்கப்படும். இதற்கான படிவம், வீடு விற்பனை செய்பவரிடம் செய்துகொண்டு ஒப்பந்தம், பொதுப்பணித்

துறையிலிருந்து வீட்டின் உறுதியைப் பற்றிய சான்று, அரசு வழக்கறிஞர் சான்று, கட்டிடத்தின் வரைபடம் இணைக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட ஆவணங்களைச் சேர்ந்து வீட்டுமனை/வீடு இருக்கின்ற மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பத்தை நேராக அனுப்ப வேண்டும். 15.10.2010 முதல் அரசு ஊழியர் எந்த மாவட்டத்தில் பணிபுரிகின்றார்களோ, அந்த மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இனி அரசு ஊழியர்கள் சொந்தமாக வீட்டுமனை / வீடுகட்டுதல் / கட்டியவீடு எந்த மாவட்டத்தில் வாங்கினாலும் அரசு கடித (நிலை) எண்.156/HBA/ 2020 - 1 நாள் 15.10.2020 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை.

15.10.2020 முதல் அரசு ஊழியர் எந்த மாவட்டத்தில் பணிபுரிகின்றார்களோ, அந்த மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அரசு கடிதம் எண் (நிலை) எண்.156/HBA / 2020-1 நாள் 15-10-2020

வேறு மாநிலத்தில் பணியில் உள்ள தமிழக அரசு ஊழியர்கள், வீடுகட்ட முன்பணம் பெற்று தமிழ்நாட்டில் வீடுகட்ட/கட்டிய வீடுவாங்க உத்தேசித்தல், அவ்வூழியர்கள் எந்த மாவட்டத்தில் வீடுகட்ட/கட்டிய வீடு வாங்க உத்தேசித்துள்ளாரோ அந்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். அந்த மாவட்ட ஆட்சித்தலைவரே, வீடுகட்ட முன்பணம் வழங்க ஒப்புதல் வழங்குவார். வீடு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசு கடித (நிலை) எண்.3/விகமு/2020-21 நாள் 06.01.2021.

துறை வழியாக அனுப்பிடத் தேவையில்லை. விவரங்கள் சரியாக இல்லாதவற்றை மாவட்ட ஆட்சியர் திருப்பி விடுவார். பூர்த்தியான விவரங்கள் உள்ள விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியர் நேராக துறைத்தலைவருக்கு அனுப்பி தேவையான விவரங்கள் பெற்றுக்கொண்டு முன்பணம் வழங்கிட ஆணையிடுவார்.

**கடன் பெறும் காரணங்கள்**

(அ) வீட்டு மனை வாங்கவும், அதன் மீது வீடு கட்டவும்

(ஆ) சொந்தமாக உள்ள மனையில் வீடு கட்ட

(இ) கட்டிய வீட்டை வாங்க

(ஈ) சொந்தமான வீட்டை விரிவாக்க/மேம்படுத்த (பூர்வீகமாக கிடைத்த வீடும் இதில் அடங்கும்) ஊழியருக்கு சொந்தமாக உள்ள வீட்டில் புதியதாக கட்டுமானப் பணிகள், சமையலறையை மாற்றி அமைப்பது, மாடங்கள் கட்டுவது, தண்ணீர் தொட்டி கட்டுவது, காம்பவுண்டு சுவர் கட்டுவது ஆகிய வேலைகளுக்கு Enlargement Loan வாங்கலாம். ஆனால், சுண்ணாம்பு அடித்தல், மின் இணைப்புகள், வீட்டு பராமரிப்பு போன்றவைகளுக்கு இந்த முன்பணம் கிடைக்காது. (அரசாணை எண் 1853, வீட்டு வசதி, நாள் 7.12.87)

வீட்டுக்கான கடன்தொகையில் permitted to include the cost of Roof top solar photo voltomic power plant as a component including the cost of installation with in the overall ceiling of eligiable HBA, as an optional item of expenditure. vide Go. MS No. 35 H & UD (SBA) dept. dt.23-02-2016

(உ) நெருங்கிய உறவினரிடம் இருந்து கட்டிய வீடு வாங்க முன்பணம் கிடைக்காது.

(ஊ) சொந்த வருவாய் இனங்களில் வீட்டு வேலை துவங்கி பாதியில் நிறுத்தப்பட்டால், அந்த வீட்டை கட்டி முடிக்க (அ.ஆ.எண். 1760, ஹவுசிங், நாள் 6.9.79)



(எ) வீட்டு வசதி வாரியம் கட்டிய ஒதுக்கீடு வீட்டை வாங்க

(ஏ) கூட்டுறவு வங்கிக் கடனில் கட்டிய வீட்டை விரிவாக்க

(ஐ) தனியார்கள் கட்டும் Flat வாங்க

(ஒ) மனைவி/கணவனுக்கு சொந்தமான வீட்டுமனையில் வீடு கட்ட

(ஓ) மனைவி/கணவனுக்கு சொந்தமான வீட்டை விரிவாக்க

(ஔ) கூட்டுறவுக் கடன் திருப்பிச் செலுத்த முன்பணம் கிடைக்காது. ஆனால் கூட்டுறவு கடன் பெற்று கட்டிய வீட்டை விரிவாக்க அவர்களிடம் தடையில்லாச் சான்று பெற்று வழங்கினால் அதற்கான முன்பணம் கிடைக்கும். (அரசு க.எண். 17030/CI/180–2, நாள் 7.5.80)

(ஃ) அரசு ஊழியர் மனைவி/கணவனுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் வீடு ஒதுக்கப்பட்டால், ஒதுக்கீடு அரசு ஊழியரின் பெயருக்கு மாற்றாமலேயே அரசு ஊழியர் கடன் பெறலாம். (அரசு க.எண். 7168/CI/88–5 வீட்டு வசதித்துறை, நாள் 1.7.89)

**முன்பணம் விடுவித்தல்**

(G.O.Ms.No. 688, Housing, dt. 1.10.92) & G.O.Ms.No.171, Housing and Urban Development(HBA) Dept. Dt.26.11.2014

| முன்பண விவரம் | ஒவ்வொரு தவணை எவ்வளவு என்பது |
|---|---|
| 1. பிளாட் வாங்கவும் அதில் வீடு கட்டவும் | 1. முதல் தவணை<br>பிளாட் வாங்க, கடன் தொகையில் 50% |
| | 2. இரண்டாம் தவணை:<br>மீதி உள்ளதில் 50% (கூரை வரை) |
| | 3. மூன்றாம் தவணை:<br>மீதி தொகை முழுவதும் (கட்டி முடிக்க) |
| 2. வீடு கட்ட அல்லது விரிவாக்க | 1. முதல் தவணை:<br>கடன் தொகையில் 50% கூரை வரை |
| | 2. இரண்டாம் தவணை:<br>கடன் தொகையில் 50% (கட்டி முடிக்க) |
| 3. கட்டிய வீடு வாங்க | ஒரே தவணை |

கடன் வாங்குவதற்கான Formal ஆணை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்தவுடன், படிவம் 5ல் ஒப்பந்தம் ஒன்றினை ஊழியர் எழுதித்தர வேண்டும். அதோடு மீதம் உள்ள கடன் தொகையை பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என்றும் எழுதித் தர வேண்டும். இதன் பிறகு முதல் தவணை பெறுவதற்கான ஆணையை மாவட்ட ஆட்சியர் வழங்குவார்.

இதன் பிறகு கட்டுமான வேலை Roof Level வரை முடிந்துள்ளது என பொறியாளர் ஒருவரின் சான்றினைக் கொடுப்பதுடன், கட்டுமானம் ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படிதான் செய்யப்படுகின்றது என்றும் கடன்தாரர் எழுதி கொடுக்க வேண்டும். இதன்பிறகு இரண்டாம் தவணையை மாவட்ட ஆட்சியர் வழங்குவார்.

கூரைமட்டம் வரை கட்டுமானம் முடிவுற்றுள்ளது எனப் பொறியாளர் வழங்கும் சான்றின் அடிப்படையில் இரண்டாம், மூன்றாம் தவணை வழங்கப்படும்.

**முன்பணம் எதிர்நோக்கி தனியார் கடன் பெற்று கட்டுதல்**

முன்பணம் அரசிடமிருந்து கிடைப்பதற்கு தாமதப்பட்டால், அரசு ஊழியர் தனியாரிடமிருந்து கடன் பெற்று வீட்டு வேலையைத் துவங்கலாம். அதேபோன்று வீட்டையும் வாங்கலாம். (அரசு கடித எண். 1525/C/90–4 வீட்டு வசதி துறை நாள் 3.8.90 மற்றும் அரசு ஆணை எண். 1682/27.8.79) கடன் பெறுவதற்கு அரசு அனுமதி தேவை.

ஒவ்வோர் ஆண்டும், இக்கடனுக்கான வட்டிவீதம் அரசாணையாக வெளியிடப்படுகிறது.

**கடன் தொகை விடுவித்தல் (பிளாட்டிற்கும் அதன் மீது வீடு கட்டவும்)**

பிளாட் விற்பவரிடம் செய்து கொண்ட விற்பனை ஒப்பந்தத்தையும் அரசு வழக்கறிஞரின் கருத்தினையும் கடன்தாரர் கொடுத்தவுடன் முதல் தவணை வழங்கப்படும்.

பணம் பெற்றுக் கொண்ட இரண்டு மாதத்திற்குள் பிளாட்டை பதிவு செய்து கொண்டுப் பத்திரத்தைத் துறைத்தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். தேவைப்பட்டால் இரண்டு மாதக் காலக் கெடுவை துறைத் தலைவர் நீட்டிக்கலாம். இதன்பிறகு இந்த பிளாட்டையும் அதன் மீது கட்டும் வீட்டைபும் அரசுக்கு அடமானம் செய்ய வேண்டும். இவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் இரண்டாம் தவணை விடுவிக்கப்படும்.

இப்பணத்தைப் பெற்றுக் கொண்டு கட்டுமானம் கூரை மட்டம் வரை பூர்த்தி செய்ததாக பொறியாளர் அளிக்கும் சான்றின் மேல் மூன்றாம் தவணை விடுவிக்கப்படும்.

**முன்பணம் பிடித்தம் செய்தல்**

முதல் தவணை வழங்கப்பட்ட 18ஆம் மாதத்திலிருந்து அல்லது வீடுகட்டி முடிக்கப்பட்ட சான்று வழங்கிய பின்பு, இதில் எது முன்னரோ அம்மாதத்திலிருந்து கடன் தொகை பிடித்தம் செய்யப்படும். கடன் தொகை முடிந்த பிறகு வட்டி பிடித்தம் செய்யப்படும். கடன் தொகையில் சேம நல நிதி 1% பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

கட்டிய வீடு வாங்க வழங்கப்படும் கடன் தொகை பணம் பட்டுவாடா செய்த அடுத்த மாதத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

**மாதிரி வட்டி கணக்கீடு விவரம்**

(வீடு கட்ட முன்பணம் மற்றும் வாகன முன்பணம் ஆகியவற்றிற்கு)

1.முன் பணத்தொகை : ரூ. 49,200 (பெறப்பட்ட மாதம் 9/1991, தவணைத்தொகை பிடித்தம் செய்யப்பட்ட மாதம்10/1991)

2. செயல்முறை ஆணை எண் : .........................

3. வட்டி விகிதம் : 9%

4. பிடித்தம் விவரம் ரூ. 328x150 தவணைகள் (10/91 முதல் 3/2004 வரை)



| மாதம் | நிலுவைத் தொகை | தவணை விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 9.91 | 49,200 | | |
| 10.91 | 49,200 | 1/150 | |
| 11.91 | 48,872 | 2/150 | |
| 12.91 முதல் 2.2004 முடிய | | மேலுள்ளபடி கணக்கிடலாம் | |
| 3.2.2004 | 328 | 150/150 | |
| மொத்தம் | 37,66,752 | | |

மொத்த வட்டி = 37,66,752x1/12x9/100=ரூ. 28,250.64 (அ) ரூ. 28,251/–

இந்த வட்டிக் கணக்கீடு ஒருமுறை வீட்டுக் கடன் (Single loan only) பெறுபவர்களுக்கு மட்டும் பொருந்தும்.

17.7.1987க்கு பிறகு, அரசு ஊழியர் ஒருவருக்கு, 17.7.87க்கு முன்னரும், அதற்கு பின்னரும் ஒப்பளிக்கப்பட்ட வீடு கட்டும் முன்பணம், வீடு விரிவாக்கம், வீடு மேம்படுத்துதல், மனை/கட்டிய வீட்டிற்கான கூடுதல் முன்பணம் ஆகிய தொகைகள் அனைத்தும் ஒருமித்த தொகையாக கணக்கில் எடுத்துக் கொண்டு வட்டிக் கணக்கீடு அட்டவணையில் விவரித்துள்ளவாறு கணக்கிடப்பட வேண்டும்.

**கடன் பெற்ற அரசு ஊழியர் இறக்க நேர்ந்தால்**

கடன் பெற்ற அரசு ஊழியர் ஒருவர் இறக்க நேர்ந்தால், மீதம் உள்ளத் தொகை பிடித்தம் செய்ய வேண்டாம் (அரசாணை எண். 613, வீட்டு வசதித் துறை, நாள் 30.4.86)

மீதமுள்ள தொகை சரி செய்து (Adjustment) ஆணை வழங்கிய பின்னர்தான் பணிக்கொடை வழங்க வேண்டும் (அரசு கடித எண் 41982/ HBA–1/93/23.12.93)

Housing Development Finance Corporation–லிருந்து கடன் பெறுதல்

அரசுக் கடன் பெறுவது போன்று அனைத்து படிவங்களும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். கோவை, சென்னை மற்றும் மதுரையில் பணிபுரிபும் அரசு ஊழியர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் கடன் பெறலாம்.

மாவட்ட ஆட்சியர் மூலமாக இந்த நிறுவனத்திலிருந்து இதற்கான விண்ணப்பம் பெற வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்க வேண்டும்.

அனைத்து நடைமுறைகளும் முடித்து கடன் தொகையை மேற்படி நிறுவனம் மாவட்ட ஆட்சியர் மூலமாக வழங்கும்.

அரசு மேற்படி கழகத்திலிருந்து 13.75% வட்டி விகிதத்திற்கு கடன் பெற்று அரசு ஊழியர்களுக்கு 10% வட்டிக்கு வழங்குகிறது.

**பதிவுக் கட்டணம்**

அரசு ஊழியர்கள் தாங்கள் பெறும் கடன்களுக்கு வீட்டை அரசுக்கு அடமானம் மற்றும் அடமானத்திலிருந்து விடுவிப்பதற்கும் பதிவுத் துறைக்கு செலுத்தும் பதிவு கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளித்து அரசு கடிதம் எண் 27848/ ஜே/97–1, வணிக வரித்துறை நாள் 24.7.97 இதுகுறித்து நிர்வாக மாவட்ட பதிவாளர்களுக்கு ந.க.எண்.7269/சி2/97 நாள் 17.10.97ல் அறிவுரைகள் வழங்கியிருப்பதாக சென்னை பதிவுத்துறை தலைவர் கடிதம் எண் 18359/ சி2/99 நாள் 8.6.99ல் தெரிவித்துள்ளார்.

வீடு கட்டும் முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் தங்களது முன்பணத் தொகையை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் முன்கூட்டியே செலுத்துவதற்கு எந்த வகைகளில் நிதி திரட்டப்பட்டது என்ற விவரங்களுடன் த.நா. அரசு பணியாளர் நடத்தை விதிகளின் கீழ்துறை தலைவர்/அரசுக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.

அவ்வாறு பெறப்பட்ட அனுமதியுடன் பகுதி அசல் தொகையை பிடித்தும் செய்யும் அலுவலக தலைவரிடம் விண்ணப்பம் சமர்பித்து அதற்கான அனுமதி பெறவேண்டும். அதன் நகல்களையும் தொகை செலுத்தப்பட்டதற்கான செலான் நகலையும் மாநில கணக்காயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அரசு கடித எண்.125 வீட்டுவசதி மற்றும் நகர்புறமேம்பாட்டு (HBA) துறை நாள் 27–08–2018

## XIV. பொது வருங்கால வைப்பு நிதி

(அ) மாதாந்திர சந்தா தொகையினை வருடத்தில் எந்த மாதத்திலும் இரண்டு முறை உயர்த்திக் கொள்ளலாம். ஆனால், ஒருமுறை மட்டுமே அதாவது மார்ச் திங்கள் ஊதியத்தில் மட்டும் குறைத்துக் கொள்ள முடியும். (அரசாணை எண். 701 நிதி (படி) துறை, நாள் 26.5.93)

திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய அடிப்படையில் உரிய நிலைகளில் பெரும் ஊதியம் (pay matrix) சிறப்பு ஊதியம் (special pay) தனி ஊதியம் (personal pay) அகவிலைப்படி ஆகியவற்றின் மொத்த தொகையில் 12 சதவீதம் பொது வருங்கால வைப்பு நிதியின் மாதாந்திர சந்தாவாக தொடர்ந்து பிடித்தம் செய்திட வேண்டும். கணக்கிடும் சந்தா தொகை அடுத்த 100 ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும். (அரசாணை எண் 362 நிதி (படிகள்) துறை நாள் : 11–12–2017)

பொது சேமநலநிதி சந்தா நிதி ஆண்டிற்கு 5 லட்சத்திற்கு மேல் பிடித்தம் செய்யக் கூடாது. அ.ஆ.நிலை (எண் 15 நிதி (படிகள்) துறை நாள் 18.01.2023

(ஆ) தற்காலிகப் பணிநீக்க காலம், ஊதியமில்லா விடுப்பு, சொந்தக் காரணங்களுக்காக ஈட்டா விடுப்பு ஆகிய காலங்களில் சந்தாத் தொகை பிடித்தம் செய்யக் கூடாது. ஓய்வு பெறுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் சந்தா பிடிப்பது நிறுத்தப்படும்.

**இந்த நிதியிலிருந்து தற்காலிக முன்பணம்**

(அ) மருத்துவம், குழந்தைகள் கல்வி, சடங்குகள் மற்றும் வழக்குகள் போன்றவைகளுக்கு இந்த நிதியிலிருந்து தற்காலிக முன்பணம் பெறலாம். அரசாணை எண். 247 நிதித்துறை (படிகள்) நாள் 12.5.97ல் கீழ்குறிப்பிட்ட காரியங்களுக்காக கடன் அனுமதிக்கலாம்.

விதி 14 : டெலிவிஷன், வீடியோ கேசட் பிளேயர், வாஷிங் மெஷின், சமையல் பாத்திரம், கெய்சர் மற்றும் கம்ப்யூட்டர்

இருப்பில் உள்ள தொகையில் 50% வரை கடன் கிடைக்கும். கடன் தொகை 36 தவணைகளில் (இரண்டு மாத ஊதியத்திற்கு குறைவாக தொகை இருப்பின் 24 தவணைகளில்) பிடிக்கப்படும். (அ.ஆ. எண். 437 நிதி நாள் 6.10.99)

இருப்பில் உள்ள தொகைகளில் 75% வரை இந்த நிதியிலிருந்து கடன் பெறலாம். (அ.ஆ. எண். 129/நிதி ஊதியம்/நாள் 21.2.2006)

(ஆ) ஒருமுறை தற்காலிக முன்பணம் பெற்றால், அந்த ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதம் இடைவெளி சென்ற பின்னர்தான் அடுத்த முன்பணம் வழங்கமுடியும்.

வட்டி கணக்கீடு முறை அரசு ஆணை எண் 484, நிதி (ஊ.கு.) நாள் 8.10.07ல் கொடுக்கப்பட்டுள்ளது. வட்டி வீதத்திற்கான அரசாணை அவ்வப்போது வெளியிடப்படுகிறது.

**ஓய்வு பெற இருப்போர் 90% வரை பகுதி இறுதித் தொகை பெறல்**

(அ) ஓய்வு பெற இருக்கின்ற அரசு ஊழியர் (தற்காலிக பணி நீக்கத்தில் உள்ளவர் உட்பட) ஒருவர் ஓராண்டு பணிக்காலம் இருக்கும்பொழுது எவ்வித காரணமும் குறிப்பிடாமல் இருப்புத் தொகையில் 90% வரை பெறலாம். (அ.அ.எண். 535, நிதித்துறை நாள் 19.7.91 மற்றும் அரசு கடிதம் ந.க.எண். 99253/படிகள்/96–நிதித்துறை நாள் 4.7.97)

(ஆ) கடைசி நான்கு மாதக் காலத்திலும் 90% தொகை வழங்கலாம். (அரசு க.எண். 83692/படிகள் I/92–1 நிதி, நாள் 12.2.92)

(இ) ஐந்தாவது ஊதியக்குழு தொகை மற்றும் முடக்கப்பட்ட அகவிலைப்படி ஆகியவையும் சேர்த்து 90% பகுதி இறுதித் தொகை பெறலாம். (அ.க. எண் 140075 படிகள்/93–1 நிதித்துறை, நாள் 15.1.93)

(ஈ) இரண்டு பகுதி இறுதித் தொகைக்கு 12 மாத இடைவெளி மற்றும் தற்காலிக முன்பணம் பெற்று ஆறு மாத இடைவெளி ஆகிய

நிபந்தனைகள் இதற்கு கிடையாது. (அரசு க.எண். 140075/படிகள்/93–1, நிதித்துறை, நாள் 15.1.93)

(உ) 75% தொகை வழங்க அதிகாரம் உள்ள அலுவலரே இதனை வழங்கலாம். (அரசு க.எண். 140075/படிகள்/I/93–1, நிதித்துறை, நாள் 15.1.93)

(ஊ) இதன்கீழ் நிலுவையில் உள்ள தற்காலிக முன்பணத்தை மாற்ற இயலாது. (அரசு க.எண். 83892/படிகள்/I/92–1, நிதித்துறை, நாள் 12.8.92)

(எ) வருங்கால வைப்பு நிதிக்கான விதிகள் இதற்குப் பொருந்தாது.

(ஏ) மாநில கணக்காயரின் அனுமதி எதுவும் இதற்குத் தேவையில்லை.

ஓய்வு பெறும் வயது 58ல் இருந்து 59 ஆக உயர்த்தப்பட்டதினால் செலுத்தவேண்டிய விடுபட்ட இடைப்பட்ட கால பொது வருங்கால வைப்பு நிதிக்கான சந்தா தொகை முழுவதுமாகவோ அல்லது தவணைகளாகவோ விருப்பத்தின் பேரில் செலுத்தலாம்.

ஏற்கனவே 90% பகுதி இறுதித் தொகை பெற்ற சந்தாதாரர்கள், அதனை பெற்ற ஓர் ஆண்டு இடைவெளிக்கு பின்பு , GPF விதி 15–B ன் படி பகுதி இறுதித் தொகையும் பெறலாம். அரசு கடித எண். 1074/ நிதி(படிகள்/ 2020 நாள் 05.06.2020.

**தற்காலிக முன்பணம் ஒப்பளித்தல்** (அ.ஆ.எண். 1606, நிதி, நாள் 7.12.79)

| ஒப்பளிக்கும் அலுவலர் | யாருக்கு ஒப்பளிக்கப்பட வேண்டும் |
|---|---|
| 1. அரசு | துறைத்தலைவர் |
| 2. துறைத்தலைவர் | ‘அ’ பிரிவு அலுவலர்கள் மற்றும் துறைத் தலைவரின் நேரடி ஆளுகையில் உள்ள ‘ஆ’ பிரிவினர் |
| 3. மண்டல அலுவலர் | அனைத்து ‘ஆ’ மற்றும் ‘இ’ பிரிவு ஊழியர் அலுவலகத் தலைவராக இருப்பின் அடுத்த உயர் அதிகாரிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மண்டல அலுவலர் இல்லாத துறையில், அலுவலகத் தலைவர் |
| 4. அலுவலகத் தலைவர் | அனைத்து ‘இ’ மற்றும் ‘ஈ’ பிரிவினர் |

**பகுதி இறுதித் தொகை**

| | |
|---|---|
| (1) சந்தாதாரரின் இருப்பிலுள்ள தொகையில் 50% வரை | தற்காலிக முன்பணம் ஒப்பளிக்க தகுதி படைத்த அலுவலர் |
| (2) சந்தாதாரரின் இருப்பிலுள்ள தொகையில் 50% க்கு மேல் 75% வரை | (1)ல் குறிப்பிட்டுள்ள அலுவலருக்கு அடுத்த உயர் அலுவலர் |



**இரண்டு முன்பணத்திற்கும் பகுதி இறுதி தொகைக்கும் இடையில் இருக்க வேண்டிய காலக்கெடு**

| வ. எண். | பெறும் தொகையின் பெயர் | இடையில் இருக்க வேண்டிய காலக்கெடு |
|---|---|---|
| 1 | அடுத்த தற்காலிக முன்பணம் | 1. இரண்டு தற்காலிக முன்பணத்திற்கு இடையில் ஆறு மாதம் இடைவெளி |
| 2 | அடுத்த பகுதி இறுதித் தொகை | 2. இரண்டுக்கும் இடையில் ஒரு ஆண்டு இடைவெளி |
| 3 | நிலுவையில் இருக்கும் தற்காலிக முன்பணத்தை பகுதி இறுதித் தொகையாக மாற்றிய பின்னர் மேலும் ஒரு தற்காலிக முன்பணம் | 3. தற்காலிக முன்பணத் தொகை பகுதி இறுதியாக மாற்றியதிலிருந்து ஆறு மாத இடைவெளி |
| 4 | பகுதி இறுதித் தொகை வாங்கிய பின் அடுத்த தற்காலிக முன்பணம் | 4. பகுதி இறுதித் தொகை வாங்கிய திலிருந்து ஆறு மாத இடைவெளி |
| 5 | தற்காலிக முன்பணம் வாங்கியதிலிருந்து பகுதி இறுதித் தொகை வாங்க | 5.ஆறு மாத இடைவெளி |

**பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதித் தொகைப் பெறுதல்**

(அ) 15 ஆண்டு பணியினை முடித்தவருக்கு மட்டுமே இத்தொகை பெற தகுதி உண்டு. இருப்புத் தொகையில் 50% அல்லது ஆறு மாத ஊதியம் இதில் குறைவானது வழங்கப்படும். சிறப்புக் காரணங்களுக்காக 75% வரை பெறலாம். பொது வருங்கால வைப்பு நிதி விதி 15(பி) உப விதி (1) பகுதி இறுதித் தொகை உச்ச வரம்பு ரூ.5,00,000 என உயர்த்தப்பட்டுள்ளது. (அரசாணை எண்.103, நிதி (படிகள்) துறை, நாள் 1.4.2013. வீடு கட்டும் காரணத்திற்காக மட்டுமே ரூ. 9 லட்சம் வழங்கலாம்.

(ஆ) குழந்தைகளின் உயர்கல்விக்கு விதி 15A(a)(ii)(1) மற்றும் 15A(a)(i)(2) ஓராண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் – (அரசாணை எண் 36, நிதித்துறை, நாள் 27.1.81

(இ) வீடு கட்ட, புதிய வீடு வாங்க, முன்னரே கட்டிய வீட்டிற்காக வாங்கப்பட்ட கடனை அடைக்க, சொந்தமாக உள்ள வீட்டை மாற்றி அமைக்க அல்லது விரிவாக்க, வீட்டு மனை வாங்க போன்றவைகளுக்கு அதிகபட்சமாக ரூ. 9,00,000 வரை பகுதி இறுதித் தொகை பெறலாம். (விதி 15A மற்றும் அரசாணை எண் 232, நிதித்துறை, நாள் 2.6.2000) அரசிடமிருந்து வீடு கட்டும் கடன் அல்லது பிற வழிகளிலிருந்து கடன் பெற்றாலும் இத்தொகை கிடைக்கும். (விதி 15Aன்கீழ் கண்டுள்ள குறிப்பு) வீடு கட்டும் முன்பணம், மாநில அல்லது மத்திய அரசு அல்லது தனியார் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் முன்பணம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி துணை விதியின்படி பெறும் முன்பணமும் சேர்த்து ரூ.25 லட்சத்துக்கு மேல் அதிகரிக்கக் கூடாது. மனைவிக்கு சொந்தமாக உள்ள ஒரு வீட்டு மனையில் வீடு கட்டவும் இத்தொகையிலிருந்து பணம் பெறலாம். (அரசாணை எண். 461, நிதித்துறை, நாள் 21.6.1982).

(ஈ) மகன், மகளின் திருமணம், அரசு ஊழியரைச் சார்ந்துள்ள உறவினர் பெண் ஒருவரின் திருமணம் மற்றும் திருமண நிச்சயதார்த்தம் ஆகியவற்றுக்கு இத்தொகை கிடைக்கும். அதே காரணத்திற்கு தற்காலிக முன்பணம் பெற்றால் பகுதி இறுதித் தொகை கிடைக்காது – (விதி 15A(1)(b))

(உ) அரசு ஊழியர் மற்றும் உறவினர் ஆகியவரின் மருத்துவச் செலவுக்கு இந்த நிதியிலிருந்து முன்பணம் பெறலாம். – விதி 15(சி)

**GPF Rules - 15(A) (1)(a) (ii)**

(3) Only one withdrawal shall be allowed for the same purpose.

Explanation : (1) The marriage of the different sons or daughters or any other female relation dependent on the subscriber or the Education of different sons or daughters or the illness of the subscriber or his dependent on different occaionals will not be treated as the same purpose.

(ஊ) பிடித்தம் செய்து கொண்டு இருக்கும் தற்காலிக முன்பணத் தொகை பகுதி இறுதித் தொகையாக மாற்றலாம். இதனால் தற்காலிக முன்பணம் பிடித்தம் நிறுத்தப்படும். (விதி 15(சி))

(எ) தற்காலிகப் பணி நீக்கத்திலிருப்பவருக்கும் பிற தகுதிகள் இருப்பின் பகுதி இறுதித் தொகை வழங்கப்படும் (Note (2) under Rule 15A)

பணி நீக்கம் / பணி அகற்றல்/ கட்டாய ஓய்வு /இயலாமைக்கான ஓய்வு பெற்றவர்கள் 15.06.2021 முதல் சந்தாதாரர்களின் இருப்பில் உள்ள தொகை வழங்கப்படும். GPF Rule 28(1) அரச ஆனை (நிலை) எண் 142/ நிதி (படி) துறை நாள் 15.06.2021

### வாரிசுதாரர் நியமனம் செய்தல்

(அ) கணவன்/மனைவி, குழந்தைகள், இந்து குடும்பமாயின் தத்தெடுத்தக் குழந்தை மற்றும் இறந்துபோன மகனுடைய மனைவி மற்றும் குழந்தைகள் முதலியவர்களில் ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ இந்த நிதியிலிருந்து பணம் பெறுவதற்கு நியமனம் செய்யலாம். (விதி (2)(1)(சி) அரசு ஆணை எண். 1260 நிதித்துறை, நாள் 21.11.89) வாரிசுதாரர் நியமனத்தை பெற்று வைப்பது அந்தந்த அலுவலகத் தலைவரின் சொந்த பொறுப்பாகும் (அரசு கடித எண் 104935/படிகள்/96–2, நிதி, நாள் 24.8.97)

(ஆ) பெண் அரசு ஊழியர் தன் கணவரை நியமனத்திலிருந்து நீக்க விரும்பினால் அலுவலகத் தலைவருக்கு எழுதிக் கொடுத்தால் போதுமானது. ஆனால், ஆண் அரசு ஊழியர் தன் மனைவி விவாகரத்து செய்தால் மட்டுமே நியமனப் பிணையிலிருந்து நீக்கமுடியும். (மேற்கண்ட விதி மற்றும் அரசாணை எண் 1260 நிதி, நாள் 29.11.89)

(இ) மேலே குறிப்பிட்ட குடும்ப அங்கத்தினர் உயிரோடு இருக்கும்பொழுது குடும்ப உறுப்பினராக இல்லாத ஒருவரை இந்த நிதிக்கு நியமனம் செய்ய முடியாது. குடும்பமே இல்லாதவராக இருப்பின் அவர் தனி நபர் அல்லது ஒரு சங்கம் அல்லது அவர் விரும்புகின்ற ஒரு அமைப்பு ஆகிய எதைபும் நியமனம் செய்யலாம்.

(ஈ) இந்த நிதியில் இருக்கும் தொகையை தனக்குப் பின்னர் பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுதாரரை நியமனம் செய்ய ஒருவர் விரும்பினால் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பங்கு அளிக்க வேண்டும் எனவும் நியமனப் பத்திரத்தில் தெரிவிக்க வேண்டும்.

(உ) தான் எழுதிய நியமனத்தை சந்தாதாரர் விரும்பினால் எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். குடும்பம் உள்ள ஒருவர் குடும்பத்தினரை மட்டுமே நியமனம் செய்ய வேண்டும்.



### பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் கணக்கு தீர்வு செய்தல்

1. இறுதி நிலுவைத் தொகை பெறுவதற்கு ஓய்வு பெறும் நாளிலிருந்து 4 மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்ப வேண்டும். (அரசு கடித எண் 39068/ படி/96–2, நாள் 5.6.95)

ஓய்வு பெறும் நாளிலிருந்து 4 மாதத்திற்கு முன்பாக சந்தாத் தொகை பிடித்தம் நிறுத்தம் செய்ய வேண்டும்.

2. ஓய்வு/இறப்புக்கு பின்னர் தாமதமின்றி தொகை வழங்கப்பட வேண்டும். தாமதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். (Govt. Lr. No. 390/A/95-2, Finance, dt. 15.6.95)

**Rules for Temporary Advance**

| | Purpose | Rule |
|---|---|---|
| i. | Medl. Treatment (Self and dependent) | 14(1) (a) (i) & c (iii) |
| ii. | Higher Edn. (Self and dependent) | 14(1) (a) (ii) & c (iii) |
| iii. | Marriage, Betrothal, Funerals or other Cermony | 14(1) (a) (iii) & c (iii) |
| iv. | To meet the cost of legal expenses | 14(1) (a) (iv) & c (iii) |
| v. | To meet the cost of legal expenses | 14(1) (a) (v) & c (iii) |
| vi. | To purchase T.V., VCR, VCD, W.M. Computer | 14(1) (a) (vi) & c (iii) |
| | Max 75% and No Ceiling Limit | 14(1) (c) (iii) |

**GPF Part Final**

| | Purpose | % | Rule |
|---|---|---|---|
| i. | Higher Edn. of Child outside of India | 50% | 15A(1)(a)(i) |
| ii. | Higher Edn. of Child inside of India | 50% | 15A(1)(a)(ii) |
| iii. | Higher Edn. of Child outside of India | 75% | 15A(1)(a)(i) & 15(B)(1) |
| iv. | Higher Edn. of Child inside of India | 75% | 15A(1)(a)(ii) & 15B(1) |
| v. | Marriage Betrothal of the son or daughter of the subscriber | 50% | 15(A)(1)(b) |
| vi. | Marriage Betrothal of the son of daughter of the subscriber | 75% | 15(A)(1)(b) & 15(B)(1) |
| vii. | Medical Expenses | 50% | 15(A)(1)(c) |
| viii. | Medical Expenses | 75% | 15(A)(1)(c) & 15B(1) |
| ix. | Cost of site, House purchase, Construction reconstruction and alteration | 50% | 15(A)(1)(d) |
| x. | Cost of site, House purchase, construction Reconstruction and alteration | 75% | 15(A)(1)(d) & 15B(1) |

| | | |
|---|---|---|
| Max. ceiling for the purpose 15-A Clauses (a), (b), (e) and (h) | - | Rs. 5 Lakhs (75% which ever is less) |
| Max. ceiling for the purpose ix & x 15-A Clauses (d), (e), (t) and (g) | - | Rs. 9 Lakhs (75% which ever is less) |

**PART FINAL FOR CAR**

- 25 Years of service or within 5 years before retirement, which ever is earlier
- Pay should be Rs.12,000 or more (This is in pre revised scale, The pay was not revised according to revised scales of pay) Pay Band.3 (15600-39100) GP-6600/- present pay level 25 in pay matrix.
- Amount is limited to one third of actual price of car or the amount prescribed by the Govt. from time to time, which ever is less. In special cases withdrawal upto one half of balance will be allowed.15-D-ன் படி
- Withdrawal is allowed only once for this purpose.
- Withdrawal for extensive repairs or overhauling of car may be allowed subject to the conditions prescribed in the rule 15-E (1)

**GPF 90% Part Final**

G.O.Ms. No. 535/Fin. (All-I) Dept., Dt. 19.07.1991

- No payment of Part Final Withdrawal shall be made during the last 4 months of service as per provision under 2 below rule 15A of TNGPF rules.
- 90% Part Final Withdrawal may be sanctioned as per rule 27A of TNGPF rules within 12 months of his retirement.

**G.P.F. Account Slip**

- From the year 2014-15 Account Statement only as electronic copies to the website. Govt. Letter No.40490/Allowance/2014-1, dated 25.08.2014.

# XV. ஓய்வு காலச் சலுகைகள்

## ஓய்வூதியத்திற்கு சேரும் பணிக்காலங்கள்

**(1)** தற்காலிகப் பணிக்காலம்கூட ஓய்வூதியத்திற்குச் சேரும். பணியிலிருந்து நீக்கப்பட்டு மீண்டும் பணி ஏற்றவர் விஷயத்தில் முந்தையப் பணிக்காலம் ஓய்வூதியத்திற்கு சேரும். பணி முறிவுக் காலம் சேராது. **(அரசாணை எண். 520,** நிதித்துறை, நாள் **23.6.94** மற்றும் அரசாணை எண் **349,** நிதித்துறை, நாள் **5.5.95)**

**(2)** கண்டின்ஜென்ஸி பணியிடத்தில் தற்காலிகப் பணி புரிந்தவர்களுக்கு அப்பணிக்காலத்தில் பாதி ஓய்வூதியத்திற்குச் சேரும். **(அரசாணை எண்.437, நிதி (ஓய்வூதியம்), 23.6.1988)**

**(3)** தமிழக அரசில் பணி ஏற்பதற்கு முன்னர் மைய அரசில் பணி புரிந்திருப்பின் (இடைமுறிவு இருந்தாலும்கூட) அக்காலமும் ஓய்வூதியத்திற்குச் சேரும். **(அரசு ஆணை எண். 977,** ப.ம.நி.&சீ. துறை நாள் **23.10.87** மற்றும் அரசு ஆணை எண் **404,** நிதித்துறை நாள். **6.6.91** மற்றும் அரசு ஆணை எண். **38,** நிதித்துறை, நாள் **13.1.95).**

**(4)** உள்ளாட்சித் துறை, பல்கலைக்கழகம் மற்றும் கூட்டுறவுத் துறையில் அயற்பணிக்குச் சென்று நிரந்தரமாக அங்கேயே இருந்து விட்டவர்களுக்கு அரசுப் பணிக்காலத்திற்கும் ஓய்வூதியம் கிடைக்கும். **(**G.O. Ms.No. 638, Finance, dt. 7.6.90**)**

**(5)** தமிழக அரசு ஊழியர் ஒருவர் மைய அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றில் பணி ஏற்று நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டால் தமிழக அரசுப் பணிக்காலம் ஓய்வூதியத்திற்குச் சேரும். **(**G.O.Ms. No. 274, Finance, dt. 28.3.94**)**

**(6)** மருத்துவக் காரணத்தால், அலுவலக உதவியாளராக பணியிறக்கம் செய்யப்பட்ட ஊர்தி ஓட்டுநர், அலுவலக உதவியாளராக தற்போது பணிபுரிந்தாலும் உயர்நிலைப் பணியிலுள்ள **(ஊர்தி ஓட்டுநர்)** ஊதியத்தைப் பெற்று வருவதால், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் வயது வரம்பை **58**ஆக எடுத்துக் கொள்ள வேண்டும். **(அரசு கடித எண். 30005/சி.எல்.2/98–2,** கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் **2.12.98)**

01.01.2025 முதல் IFHRMS மூலம் இணையதள வாயிலாக (Online) ஓய்வூதிய கருத்துருவை அனுப்ப வேண்டும்.

## ஓய்வூதியம் வழங்காமல் இருத்தல்

ஓய்வு பெறும் ஊழியர் ஒருவர் அரசுக்கு மீதம் செலுத்த வேண்டிய தொகையை நிர்ணயம் செய்ய முடியாதபோது ஓய்வு பெறுபவரிடமிருந்து படிவம் **9**ல் பிணைப்படிவம் அல்லது ஈடான தொகையைப் பெற்றுக்கொண்டு பணிக்கொடை வழங்கலாம். **(விதி 71)**

## ராஜினாமா செய்தால் ஓய்வூதியம் கிடைப்பது தொடர்பாக

பொதுவாக அரசுப் பணியை ராஜினாமா செய்தால் ஓய்வூதியம் கிடைக்காது. ஆனால், தமிழ்நாடு அரசுத் துறை ஏதேனும் ஒன்றில் முறையான முன்அனுமதியோடு பணி ஏற்பதாக இருப்பின் ஓய்வூதியம் கிடைக்கும். **(விதி 21&23)**

தமிழக அரசுத்துறை ஒன்றில் பணி ஏற்க வேண்டி இருந்தால் பணியை ராஜினாமா செய்யத் தேவை இல்லை. பணியிலிருந்து விடுவிக்க வேண்டும். **(அரசாணை எண். 2391,** பொதுத்துறை, நாள் **14.12.65** மற்றும் அரசு க.எண். **61688** U.R./**81–14** நாள் **5.4.83)**

## உரிய காலத்தில் ஓய்வூதியம்

**(1)** ஓய்வு பெறுவதற்கு **18** மாதங்களுக்கு முன்னரே ஓய்வூதியப் பிரேரணைகளை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். **(விதி 5 முதல் 7 வரை) (2)** ஒவ்வொரு ஆறு மாதமும் பணிப் பணிவேட்டில் பணிச்சான்று இருக்கின்றதா என பார்க்க வேண்டும் **(3)** பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் மற்றும் பிற நிதிகளுக்கு வாரிசுதாரர்கள் நியமனம் செய்யப்பட்டு உரிய அலுவலரால் சான்றளிக்கப் பட்டுள்ளதா என பார்க்க வேண்டும். திருமணமான பின்னர் வாரிசுதாரர் பத்திரத்தை மாற்றி எழுத அனுப்பி பதிவுகள் சரியாக உள்ளதா எனப் பார்த்துக் கொள்ள வேண்டும் **(5)** ஓய்வு பெற்ற அன்றே பணிக்கொடை வழங்கப்பட வேண்டும். மாநில கணக்காயரின் ஒப்புதல் கிடைப்பதில் தாமதம் ஏற்படின், ஓய்வூதியம் ஒப்பளிக்கும் அதிகாரியே புரவிஷனல் தொகை வழங்க வேண்டும். **(அரசாணை எண். 220,** நிர்வாகத்துறை, நாள் **20.3.88** மற்றும் அரசு கடித எண் **1521**/பிசி III **89–1,** நிர்வாகத்துறை நாள் **11.1.1989) (6)** ஓய்வூதியக் கருத்துருக்கள் அனுப்பி வைப்பதில் தாமதத்திற்கு காரணமாக இருந்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். **(**Govt. Lr. No./97766/83-5P&AR dated 19.2.1984**)**

அடிப்படை விதி எண்.56ன் படி வயது முதிர்வு ஓய்வு/தன் விருப்பு ஓய்வு / கட்டாய ஓய்வு மற்றும் இயலாமைக்கான ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு ஓய்வுதியப்பயன் உடன் கிடைக்க ஏதுவாக இணைப்பில் உள்ள தரநிலை படிவத்தின்படி பணி ஓய்வு

ஆணையினை வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் (நிலை) எண்.193/ப.ம.நி.சீ. (FR-III) துறை நாள் 23.12.19

பணிக்கொடை மற்றும் GPF இறுதிநிலுவை தொகையை மாநில கணக்காயரின் ஒப்புச்சான்றின் படி இணைப்பு 1 மற்றும் 2–ல் உள்ள திருத்திய செயல்படு முறையின் அடிப்படையில் இனி நேரடியாக கருவூலம் /சம்பள பட்டுபாடா அலுவலரே வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு ஆணை (நிலை).எண். 393 நிதி (ஒய்வூதியம்) துறை நாள் 20–12–2019

**புரவிஷனல் பென்ஷன் மற்றும் பணிக்கொடை**

(அ) ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படின் ஓய்வூதியம் வழங்கிட தகுதி பெற்ற அலுவலர் 100% வரை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கிடலாம். (அ.ஆ.எண். 525, நிதி, நாள் 15.6.1987/அரசு கடித எண் 10530/87–2 நிர்வாகம், நாள் 29.4.87 மற்றும் அ.ஆ.எண். 101897 ஒய்வூதியம்/86–1, நிதி, நாள் 16.9.87) தமிழ்நாடு ஓய்வூதிய விதி 1978 விதி எண்.60 (i) (a).

(ஆ) புரவிஷனல் பென்ஷனுக்கு ஈடான அகவிலைப்படியும் வழங்க வேண்டும். துறை நடவடிக்கை நிலுவையிலிருக்கும்பொழுது பணியினின்று ஒய்வு பெற அனுமதிக்கப்பட்டவருக்கு புரவிஷனல் பென்ஷன் வழங்கப்பட்டால் அந்த நிகழ்விலும் அகவிலைப்படி வழங்கப்படும். (அரசாணை எண். 575, நிதித்துறை, நாள் 7.7.94) மற்றும் அ.க.எண். 3579/ஓய்வு/95–1 நிதித்துறை, நாள் 19.5.95)

(இ) 1.4.95 முதல் புரவிஷனல் ஓய்வூதியம் பெறுபவருக்கு மருத்துவப் படியும் கிடைக்கும். (அரசாணை எண்.எம்.எஸ். 326, நிதி நாள் 24.4.95)

**குற்றச்சாட்டுகள் நிலுவை இருப்பின் ஓய்வூதியம் வழங்க முடியுமா?**

(1) குற்றச்சாட்டுகள் நிலுவையில் இருந்தாலும் புரவிஷனல் பணிக்கொடை வழங்கலாம். (அ.எண். 467, நிதி நாள் 4.7.88 மற்றும் அரசாணை எண். 286, நிதித்துறை நாள் 7.4.95)

வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும்போதோ ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமில்லாமல் விடுவிக்கும்போதே அகவிலைப்படி தற்காலிக ஓய்வூதியத்திற்கு கணக்கிட்டு தரலாம். (அரசாணை எண். 689, நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 5.11.96)

(2) நிலுவையில் உள்ள குற்றங்கள் காரணமாக ஒருவருக்குச் சேரவேண்டிய தொகை தாமதப்பட்டு, பின்னர் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றாலோ அல்லது ஊழியர் இறக்க நேரிட்டாலோ குற்றங்கள் அனைத்தும் கைவிடப்படுவதாக கருதப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படும். (அ.ஆ.எண். 2999, பொதுத்துறை நாள் 4.12.69 அரசு க.எண். 230, நிர்வாகத்துறை, நாள் 7.4.88 மற்றும் அ.ஆ.எண். 751 நிதித்துறை, நாள் 8.10.91)

(3) அடிப்படை விதி 56(1) (சி)ன்படி நியமன அலுவலரே (Appointing authority) ஓய்வு பெறும் தேதியில் அரசு அலுவலரை தற்காலிக பணிநீக்கம் செய்யலாம் என அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை எண். 216, ப.நீ.சீ. (IV) நாள் 1998)

ஓய்வூதியம், அரசு ஊழியர், பணியல் இருக்கும் போது இறந்தால் குடும்ப ஓய்வூதியம் மற்றும் GPF இறுதி நிலுவை தொகை ஆவணங்கள் தயாரித்தல் குறித்த படிவங்கள் அனைத்தும் இறுதி பக்கங்களில் உள்ளது

அரசு ஆணை (நிலை) எண் : 321/ நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 15.10.2019



ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேளாண்மை திட்டத்தினை அமுல்படுத்தவதினால், ஒய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மற்றும் பொதுசேம நல நிதி இறுதி நிலுவை தொகை ஒப்பளிப்பு தொடர்பாக ஒவ்வொன்றிற்கும் வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மாநில கணக்காயருக்கு கருத்துரு அனுப்புவதை பின்பற்றுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நிதி (படி) துறை கடித எண்.965/FS/ நிதி (படி) / 2020 நாள் 21.05.2020

ஓய்வூதிய கருத்துருவுடன் - GPF இறுதி நிலுவை ஆவணங்களை இனி இணைத்து அனுப்பகூடாது - GPF இறுதி நிலுவை ஆவணங்களை 15.10.2019 நாளிட்ட ஆணையில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் தயாரித்து 21.05.2020 கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளையும் பின்பற்றி இனி தனியாக அனுப்ப வேண்டும்

**ஓய்வு பெறும்பொழுது நிலுவையில் உள்ள பிடித்தங்கள் (விதி 70)**

1. நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

2. நிலுவைத் தொகை எவ்வளவு என்று சரியாக அறிய முடியாத பட்சத்தில் படிவம் 9ல் செக்யூரிட்டி பாண்ட் எழுதிக் கொடுப்பது அல்லது ஈடான தொகையை பிணையாக வைப்பது (விதி 71)

3. அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை பணிக்கொடை, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் அல்லது அகவிலைப்படி இவைகளிலிருந்து பிடித்தம் செய்யலாம். (அரசு.க. எண். 26132/ஊதியம்/1189–2, நிதி நாள் 29.5.89)

4. நீண்டகால அரசுக் கடன்கள் குறித்து மாநில கணக்காயரின் Clearance Certificate இல்லாமல் பணிக்கொடை வழங்கலாம். (அரசாணை எண் 1234, நிதி நாள் 22.11.90 மற்றும் 741, நிதி நாள் 9.7.90)

5. அரசு சொத்துக்கு ஏற்பட்ட இழப்பு காரணமாக துறைபூர்வமான குற்றச்சாட்டு நிலுவையாக உள்ள ஒருவர் பணியிலிருந்து ஓய்வு ஊதியத் தொகையை பிணையமாக பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள பணிக்கொடையை வழங்க மாநில கணக்காயருக்கு பரிந்துரை செய்யலாம். (அரசு ஆணை எண் 784, நிதி நாள் 16.10.91 மற்றும் அரசு க.எண். 13755 அ/ஒய்வு/922 நிதி/நாள் 20.2.92) ஆனால் இதற்கிடையில் அவர் இறந்தால் ஓய்வூதிய சலுகைகள் முழுமையாக அனுமதிக்க வேண்டும். (அரசு ஆணை எண் 900 நிதித்துறை நாள் 4.12.95)

சட்டப்பூர்வ வாரிசு அல்லது எழுத்துபூர்வ வாரிசு மைனராக இருக்கும் பட்சத்தில் ரூ. 10,000 வரை கார்டியன் சான்றிதழ் இல்லாமல் வழங்கலாம். (அரசாணை எண் 1114, நிதி நாள் 7.10.89)

ஒய்வு பெற இருக்கும் ஒரு ஊழியர் இறக்கிறார். அவருக்கு சில நிதிப்பயன்கள் தரவேண்டியுள்ளது. இறந்த ஊழியர் உயிருடன் இருக்கும்பொழுது யாருக்கு நாமினேஷன் அளித்தாரோ அவருக்குதான் தொகைகள் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், வாரிசு சான்றிதழ் பெற்று நாமினேஷன் செய்யப்பட்டிருக்கும் பெயர் அதில் உள்ளதா என பரிசோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதர சட்டபூர்வ வாரிசு உறுப்பினர்களிடம் ஆட்சேபணையில்லை என்ற சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் இல்லை. (அரசு ஆணை எண் 96, நிதித்துறை, நாள் 5.2.96)

**ஓய்வூதியம் கணக்கிடும் முறை**

ஒய்வு பெறும் வயது

உயர்நிலைப் பணி – 59 வயது 07.05.2020 முதல் உயர்த்தப்பட்டுள்ளது அரசாணை எண் (நிலை) எண்.62/ப.ம.நி.சீ.(FR-II) துறை நாள் 01.06.2020

அடிப்படைப்பணி – 60 வயது (அலுவலக உதவியாளர்கள், இரவு காவலர்கள்) (Level - 1)

உயர்நிலைப்பணி, அடிப்படைப்பணி இரண்டிற்கும் பணி மூப்பு ஓய்வு பெறும் வயது 60 (இவ்விதி திருத்த ஆணை 25.02.2021 முதல் நடைமுறைக்கு வருகிறது. FR 56(1) (a) விளக்கம் I மற்றும் விளக்கம் II அரசாணை (நிலை) எண்.29 ப & நி சீ(எஸ்) துறை நாள் 25.02.2021. அரசாணை (நிலை) எண் 92 / மனிதவள மேலாண்மைத் (FR II) துறை நாள் 13.09.2021. (விதிதிருத்தம்)

**ஓய்வூதியநாள் (மாத முடிவு நாள்தான் கணக்கில் எடுக்க வேண்டும்)**

**உதாரணம்**

| | ஒய்வு நாள் | |
|---|---|---|
| பிறந்த தேதி | உயர்நிலைப் பணி | அடிப்படைப்பணி |
| 1.4.1962 | 31.3.2020 A.N. | 31.3.2022 A.N. |
| 2.4.1962 | 30.4.2022 A.N. | 30.4.2022 A.N. |
| 30.4.1962 | 30.4.2022 A.N. | 30.4.2022 A.N. |
| குறைந்தபட்ச பணிக்காலம் | | 10 வருடங்கள் (9 வருடங்கள் 9 மாதங்கள் மற்றும் அதற்கு மேல்) |
| முழு ஓய்வூதியத்திற்கு தேவையான பணிக்காலம் | | 30 வருடங்கள் (29 வருடங்கள் 9 மாதங்கள் மற்றும் அதற்கு மேல் |

மூன்று மாதங்களும் அதற்கு மேலும் ஒரு அரை வருடமாகவும், 9 மாதங்களும் அதற்கு மேலும் உள்ள காலத்தை ஒரு முழு வருடமாக (அல்லது) இரண்டு அரை வருடங்களாக கருதலாம். அரசு ஆணை 71 நிதி (ஓய்வூதியம்) நாள் 19.3.2003ல் 1.4.2003 முதல் இது 30 வருடங்களிலிருந்து 33ஆக உயர்த்தப்பட்டது.

முழு ஓய்வூதியம் பெற 31.7.2006லிருந்து மறுபடியும் 30 ஆண்டாகக் குறைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அ.ஆ. எண் 496, நிதி, நாள் 1.8.2006)

1.4.2003 முதல் 31.7.2006 வரை ஒய்வு பெற்றவர்களுக்கு முழு ஓய்வூதியம் பெற மறுபடியும் 30 ஆண்டுகளாக குறைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை எண் 127 நிதி (ஓய்வூதியம்) நாள் 11.4.07)

01–10–1979 முதல் 01–07–1996க்கு இடைப்பட்ட காலத்தில் ஒய்வு பெற்றவர்களுக்கு முழு ஒய்வுதியம் பெற 33 ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும். என்பதற்கு மாற்றாக் தற்போது நடைமுறையில் உள்ளது போல் 30 ஆண்டுகள் பணி முடித்திருந்தால் முழு ஒய்வுதிய பயன் வழங்க ஆணை வழங்கபட்டுள்ளது.

அரசாணை எண் 245 நிதி (PGC -1) துறை நாள்: 19–07–2018.

### தகுதியான பணிக்காலம்

அனைத்து பணிகளும் தற்காலிகம் (அ) நிரந்தரம் (Officiating or Substantive) ஓய்வூதியம் பணியிடத்தில் பயிற்சி காலம் உட்பட கண்டின்ஜென்ட் சர்வீஸ் பாதி உட்பட 1.1.61லிருந்து கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.



### மொத்த பணிக்காலம்

பின்ன நாட்கள் (Broken Days) தனியாக கணக்கிட்டு, முழு மாதங்கள் தனியாக கணக்கில் எடுக்க வேண்டும். உதாரணம்

| | வருடம் | மாதம் | நாட்கள் |
|---|---|---|---|
| 2.3.91 முதல் 31.3.91 | 0 | 0 | 30 |
| 1.4.91 முதல் 30.9.91 | 0 | 6 | 00 |
| 1.10.91 முதல் 10.10.91 | 0 | 0 | 10 |
| மொத்தம் | 0 | 6 | 40 |
| மொத்தம் கணக்கில் எடுக்க வேண்டியது | 0 | 7 | 10 |

மேற்குறிப்பிட்டபடி கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். (பின்ன நாட்கள் மற்றும் முழு மாதங்கள் தனித்தனியாக)

**கணக்கில் எடுக்க முடியாத பணிக்காலம்** (Non-Qualifying Service)

1. சம்பளமில்லா விடுப்பு (மருத்துவ சான்றிதழுடன் இருந்தால் கணக்கில் எடுக்கலாம்)

2. பணியில் ஏற்பட்ட முறிவு (முறிவதற்கு முன் உள்ள பணிக்காலத்தை கணக்கில் எடுக்க அரசு ஆணை தேவையில்லை. (அரசாணை எண் 530, நிதித்துறை, நாள் 20.6.94)

3. அங்கீகரிக்கப்படாத காலம் (தற்காலிக பணிநீக்கம் உட்பட)

4. 18 வயதுக்கு கீழ் ஆற்றிய பணிக்காலம் (Boy Service)

சராசரி ஊதியம் கணக்கிடுதல் (Period of Average Emouluments) (கடைசி 10 மாதங்கள்)

1. அரை சம்பளத்துடன் ஈட்டா விடுப்பு – முழு சம்பளம் எடுக்கலாம்.

2. சம்பளமில்லா விடுப்பு – (மருத்துவ சான்றுடன் அல்லது சான்று இல்லாமல் தற்காலிக பணிநீக்க காலம் தவிர்க்க வேண்டும். அதற்கு முன்னர் உள்ள 10 மாதங்கள்

31.7.2006லிருந்து LPD அதாவது கடைசியாக பெற்ற ஊதியம் (அ) பத்து மாத சராசரி இதில் எது அதிகமோ அதனை ஒய்வு ஊதியம் கணக்கிட எடுத்துக் கொள்ளலாம். (அ.ஆ.எண். 496, நிதி நாள் 1.8.06)

ஒரு ஊழியரால் உள்ளாட்சி நிறுவனத்தின் கீழ் பணிமாற்றப்பட்டிருப்பின் அப்பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலம் சரிபார்க்கப்படும். இது குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் வழங்கப்படும் சான்றிதழ் சென்னை மாநிலக் கணக்காயர் (ஏ&இ)க்கும் சம்பந்தப்பட்ட துறைக்கும் அனுப்பப்படும். இந்த விவரம் சம்பந்தப்பட்ட அலுவலரால் ஊழியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும். (அரசு கடித எண் 101650 ஒய்வூதியம் 97–2 நிதி, நாள் 12.2.98)

30 வருட பணிக்கு முழு ஒய்வூதியம்

சராசரி ஊதியம் x 50/100xஅரையாண்டுகள் எண்ணிக்கை/60

அடுத்த உயர்வில் உள்ள பத்து ரூபாய்க்கு சுழிக்க வேண்டும்.

1.1.2016 முதல் ஒய்வூதியத்திற்கு கணக்கிட கடைசியாக பெற்ற ஊதியம் + தனி ஊதியம் + சிறப்பு ஊதியம்.

1.1.2016 லிருந்து ஊதிய நிலை (Pay Level) ல் உள்ள தளம் (செல்) ல் கடைசியாக பெற்ற ஊதியம் அல்லது பத்துமாத சராசரி ஊதியம் இதில் எது அதிகமோ அதனை ஓய்வூதியமாக கணக்கிடலாம்.

அரசாணை எண் 313 நிதி (ஊதியக்குழு) நாள் 25.10.2017ன் படி குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7850.00 அதிக பட்ச ஓய்வூதியம் 1,12,500.00 (நிதிப் பயன் 1.10.2017 முதல்) 1.1.2016 முதல் 30.9.2017க்குள் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வுக்கால பயன்களான, ஓய்வூதிய தொகுப்புத் தொகை, பணிக்கொடை நிலுவைத் தொகைகள், விடுப்பு ஒப்பளிப்பு தொகைகள், இரண்டு தவணைகளில் அதாவது 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்படும். (நிதிப்பயன் 1.1.2016 முதல்)

ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் 1.1.2016 முதல் 30.9.2017 முன்பு வரை இறந்திருந்தால், அவர் சார்பிலான நிலுவைத் தொகை முழுவதையும் அவர்களது வாரிசுதாரர்களுக்கே வழங்க வேண்டும்.

**1.** அரசு ஊழியர் முழு அளவு ஓய்வூதியம் பெற **30** ஆண்டுகள் பணி புரிந்திருக்க வேண்டும்.

**2. 10** மாத சராசரி அடிப்படை ஊதியத்தில் **50** சதவிகிதம் அல்லது கடைசியாக வாங்கிய அடிப்படை ஊதியத்தில் **50** சதவிகிதம் இதில் எது அதிகமோ அது ஓய்வூதியமாக நிர்ணயிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அரசாணை எண். **461** நிதி (ஓய்வூதியம்) துறை நாள் **31.7.96** (அரசு கடிதம் எண் **86628**/ஓய்வூதியம்/**96–2** நிதி நாள் **18.11.96**)

**31.7.2006**லிருந்து கடைசியாக பெற்ற ஊதியம் (அ) பத்து மாத சராசரி ஊதியம் இதில் எது அதிகமோ அதனை ஓய்வூதியம் கணக்கிட எடுத்துக் கொள்ளலாம் (அ.ஆ.எண். **496**, நிதி **31.8.2006**)

இச்சலுகை **1.4.2003** முதல் **31.7.2006** வரை ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை எண். **127** நிதி (ஓய்வூதியம் நாள் : **11.4.07**)

பத்து ஆண்டுகள் அல்லது இருபது அரை ஆண்டுகளுக்கு குறைவான நிகர தகுதியான பணிக்காலம் உள்ள அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதிய தகுதி இல்லை. ஓய்வூதியத்திற்குப் பதிலாக சர்வீஸ் கிராசுவிடி அனுமதிக்கப்படும். கடைசி சம்பளம் வாங்கியது x½x அரையாண்டுகளின் எண்ணிக்கை (Pay+PP+SP) அடுத்த ரூபாய்க்கு சுழிக்க வேண்டும். (அரசாணை எண் **1030** நிதி (ஓய்வூதியம்) நாள் **14.12.87**)

ஓய்வூதியம் மற்றும் சர்வீஸ் கிராசுவிடி நீதிமன்ற ஆணைகள் மூலம் வசூல் செய்ய இயலாது – (G.O.Ms.No.763, Finance dt. 5.9.94) ஆனால் சம்மதக் கடிதம் இல்லாமலேயே ஓய்வூதியத்தின் பேரில் உள்ள அகவிலைப்படியிலிருந்து நிலுவையினை வசூல் செய்து கொள்ளலாம்.

நிர்வாக உத்தரவு தேவையில்லை – ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில்லை என்ற சான்று மட்டுமே கணக்காய்வுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

**31.12.2014** முதல், அரசு ஊழியர் ஒருவருடம் முழுமையாக பணிபுரிந்து வருடாந்திர ஊதிய உயர்வுக்கு முந்தைய நாள் ஓய்வுபெறுபவருக்கு ஓய்வூதிய பலன்களுக்காகமட்டும் கருத்தியலான ஒரு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. (அ.ஆ.எண் **311**, நிதி(CMPC)துறை நாள் **31.12.2014**) (அடிப்படை விதிகள், விதி **26**)



ஊதிய உயர்வு வழங்க வேண்டிய அந்த நாளுக்கான காலாண்டு காலத்தில் என்று ஓய்வு பெற்றாலும் / இறந்து போனாலும் அந்த ஆண்டிற்கான ஆண்டு ஊதிய உயர்வு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அடிப்படை விதி **26(a)** உள்வதி **13 (ix)**)

(அ.ஆ.எண் **148**, ப.ம.நி.சீ.(FRII)துறை நாள் **31.10.2018**) மற்றும் அ.கடித எண்.**784**/ FR-11/2019 - **1**, நாள் : 04-03-2019

(i) **31–12–2014**க்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கு இச்சலுகை நிட்டிக்கப் பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாள் முதல் கருத்தியலாக ஊதிய உயர்வு வழங்கி ஓய்வு கால பண பலன்கள் **31–12–2014** முதற்கொண்டே வழங்கப்பட வேண்டும் என ஆணையிட பட்டுள்ளது. FR 26-A (அ.ஆ.எண் **140**, நிதி(PC)துறை நாள் **25.04.2018**).

விதிதிருத்தம் அரசாணை (நிலை) எண் 98 மனிதவள மேலாண்மை (FRII) துறை நாள் 21.09.2021**.**

(ii) மேற்கண்ட ஆணை தொடர்ந்து ஓய்வு பெறும் அண்மை காலத்தில் பதவி உயர்வு பெறப்பட்டு இருந்தால் அடிப்படை விதி 22 (B) உட்பிரிவு 8 (ii) ன் படி மேற்கண்டுள்ளப்படி ஒராண்டு பணிபுரிந்து ஆண்டு ஊதிய உயர்விற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு / பெறுபவர்களுக்கு கீழ்நிலை பதவியில் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கி பதவி உயர்வுக்கான ஊதிய உயர்வினை வழங்கி ஓய்வு கால பணப்பயன்கள் மட்டும் பெற தகுதி உடையவர்களாகின்றனர்.

(ப.&நி.சி.துறை.க.எண் **8730**/FRI/**2018-1** நாள் **13.08.2018**)

(iii) ஓய்வு பெற்றவர்களுக்கும் ஊதிய நிர்ணிய அலுவலரே நிர்ணயம் செய்ய வேண்டும் அரசுக்கு, அனுப்ப வேண்டாம் என ஆணையிடபட்டுள்ளது.

13.08.2018 கடிதத்தின்படி ஓய்வு பெறும் அண்மை காலத்தில் ஒருவர் பதவி உயர்வு வரப்பெற்றிருந்தால் அவரது கீழ்நிலைப்பதவியின் ஆண்டு ஊதிய உயர்வு ஓய்வு பெறும் நாளுக்கு முதல்நாள் வரும் நேர்வுகளில் அவர்களது பதவி உயர்வுக்குரிய ஊதியத்தை ஓய்வு பெறும் நாளில் நிர்ணயிக்க அரசு ஊழியர் விருப்பம் தெரிவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இக்கடித எண்.**8742** FR-I **2020–1** நாள்.**15.06.2020**ன் படி ஓய்வு பெற்றவர்களும் மேற்படி ஊதியம் நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறு விருப்பம் தெரிவிப்பதற்கு கால அளவு இல்லை. ஏற்கனவே கூடுதல் ஊதியம் பெற்றிருந்தால், அதனை திருத்திய ஓய்வூதிய நிலுவையில் சரிகட்டிக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பணிக்கொடை (D.C.R.G.)**

(அ) ஓய்வூதிய இனங்களில்

குறைந்தபட்ச பணி – (**5** வருடங்கள் அல்லது **4** வருடங்கள், **9** மாதங்கள் மற்றும் அதற்கு மேலும்)

கணக்கிடும் முறை

சம்பளம் கடைசியாக வாங்கியது x 1/4 x அரையாண்டுகளின் எண்ணிக்கை

(Pay+DA+PP+SP) அடிப்படை சம்பளம், அகவிலைப்படி, **1.1.2016** முதல் (சிறப்பு ஊதியத்திற்கு மட்டும் DA கணக்கிடக்கூடாது).

**(33** ஆண்டுகள் பணிபுரிந்தால் அதிகபட்சம் **66** அரையாண்டுகள்)

**31** ஆண்டுகள் சர்வீஸ் **15**½ மாதங்கள்

**32** ஆண்டுகள் சர்வீஸ் **16** மாதங்கள்

**33** ஆண்டுகள் சர்வீஸ் **16**½ மாதங்கள்

அதிகபட்ச தொகை ரூ. **20,00,000** (ரூபாய் இருபது லட்சம்)

இப்பணிக்கொடை தொகை எதிர்காலத்தில் 50% அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும்போது அதற்கு ஈடாக பணிக்கொடைத் தொகை ரூ. 5,00,000/- கூடுதலாக உயர்த்தப்படும்.

இறப்பு பணிக்கொடை அதிகபட்சம் 33 மாத ஊதியத் தொகை (உச்ச வரம்பு ரூ. 20,00,000/-)

(ஆ) இறந்து போனவர் இனங்களில்

| | |
|---|---|
| 1. ஒரு வருடத்திற்கு கீழ் | – இரண்டு மாத சம்பளம் கடைசியாக வாங்கியது (Pay+SP) |
| 2. 5 வருடங்களுக்கு கீழ் | – 6 மாத சம்பளம் (Pay+SP) |
| 3.12 வருடங்களுக்கு கீழ் | - 12 மாத சம்பளம் (Pay+SP) |
| 4. 20 வருடங்களுக்கு கீழ் | – 15 மாத சம்பளம் (Pay+SP) |
| 5. 20 வருடங்களுக்கு மேலும் | – கடைசியாக வாங்கிய சம்பளம் x 1/2 x அரையாண்டுகளின் எண்ணிக்கை (அதிகபட்சம் 66) (அடுத்த பத்து ரூபாயிற்கு சுழிக்க வேண்டும்) |

(இ) பணிக்கொடை வழங்குவது தாமதப்பட்டால், பொது சேமநல நிதிக்குரிய வட்டி விகிதம் வழங்கப்படும். (அ.ஆ.எண். 173 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 1.4.04)

(ஈ) சம்பந்தப்பட்ட துறை மூலம்தான் 1.10.91 முதல் பணிக்கொடை தரப்பட வேண்டும்.

(உ) நீதிமன்ற ஆணையினால் பணிக்கொடை நிறுத்தி வைக்க முடியாது. ஆனால், அரசு பாக்கி தொகை கூட்டுறவு சங்க நிலுவை சம்மத கடிதம் இல்லாமலேயே பிடித்தம் செய்யலாம்.

(ஊ) குற்றம் சுமத்தப்பட்டவர் விஷயத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக தாமதம் இருப்பின் வட்டி வழங்கப்படும். (அரசு க.எண். 103354/ஓய்வு/87–1 நிதித்துறை நாள் 7.9.87)

(எ) சுய ஓய்வு, கட்டாய ஓய்வு, முடியாமை காரணமாக ஓய்வு இவற்றின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறுபவருக்கும் ஆறு மாதங்களுக்குள் பணிக் கொடை வழங்கப்பட வேண்டும். தவறின் வட்டி வழங்கப்படும். (மேற்படி கடிதம்)

(ஏ) மாநில கணக்காயர் அல்லது அரசு மட்டத்தில் தாமதம் ஏற்பட்டாலும் வட்டி வழங்கப்படும். (அரசாணை எண். 816, நிதித்துறை நாள் 18.12.88)

(ஐ) வட்டி வழங்குவதற்கான ஆணையை அரசு வழங்கும். இதற்கு மாநிலக் கணக்காயரிடமிருந்து தனியாக ஆணை தேவையில்லை. (அரசாணை எண் 517, நிதித்துறை நாள் 12.6.84) அரசாணை எண் 527 நிதித்துறை நாள் 15.6.87 மற்றும் அரசு கடித எண் 103354/87–2 நிதி நாள் 7.10.87)

(ஒ) ஊதிய மாற்றம்/திருத்தம்/உயர்வு முதலியவற்றால் வழங்க வேண்டிய திருத்திய பணிக்கொடை தாமதப்பட்டாலும் வட்டி வழங்கப்படும்.

### வாரிசுதாரர் நியமனம் (விதி 45)

(அ) குடும்ப உறுப்பினர் ஒருவரை வாரிசாக நியமனம் செய்ய வேண்டும். குடும்ப உறுப்பினர் உயிரோடு இருந்தால் வேறு எவரையும் நியமனம் செய்யக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுதாரர் நியமிக்கப்பட்டால் ஒவ்வொருவருக்கும் பங்கு தொகை எவ்வளவு என்பதையும் குறிக்க வேண்டும். வாரிசுதாரர் குறிப்பிடாமல் ஒருவர் இறக்க நேரிட்டால் Succession Certificate கொடுப்பவருக்குத் தொகை வழங்கப்படும். (விதி 46 மற்றும் அரசாணை எண். 147, நிதித்துறை, நாள் 12.1.1990)

(ஆ) குடும்பத்தினருள் ஒருவரைத்தான் நியமனம் செய்ய வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர் இருக்கும்பொழுது அவருக்குத்தான் தொகை வழங்க வேண்டும். அதேபோன்று முறையான நாமினேஷன் உள்ள இனங்களில் வாரிசு சான்று தேவையில்லை. (அரசு க.எண். 135030/ஓய்வு/86–2, நிதித்துறை, நாள் 17.11.1987)

(இ) விவாகரத்து செய்து கொண்டவருக்கு குழந்தைகள் இல்லாதிருப்பின் பணிக்கொடை விதி 45(5) கண்டுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு சமமாக தொகை பங்கிட்டு தரப்படும்.



## குடும்ப ஓய்வூதியம் (விதி 49)

1. பணிக்காலத்தில் இறப்பவர் அல்லது ஓய்வுக்குப் பின்னர் இறப்பவர் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் குடும்ப ஓய்வூதியம் ஆகும். கடைசியில் பெறும்/பெற்ற ஊதியத்தில் 30% குடும்ப ஓய்வூதியமாக இருக்கும். 1.1.16 முதல் குறைந்தபட்சம் ரூ. 7850. அதிகபட்சம் ரூ.67,500.

2. இத்தொகை முதலில் மனைவிக்கு அவர் மறுமணம் செய்து கொள்ளாதவரை வாழ்நாள் முழுவதும் கிடைக்கும். ஓய்வுக்கு பின்னர் அரசு ஊழியர் திருமணம் செய்து கொண்டாலும் மனைவிக்கு இத்தொகை கிடைக்கும். அரசாணை எண்.569, நிதித்துறை நாள். 2.8.91. அவருக்குப் பிறகு குழந்தைகளில் முதல் மகன்/மகள் 25 வயது அடையும் வரை இந்த ஓய்வூதியம் கிடைக்கும். மகளாக இருப்பின் 25 வயதுக்குள் திருமணமானால் தொகை நிறுத்தப்படும். மாற்றுத் திறனாளி குழந்தைகளாக இருந்தால் வாழ்நாள் முழுவதும், மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மருத்துவ சான்றிதழ் தரப்பட வேண்டும். விதவை மனைவி காலமான பிறகு, மூத்த மகன் என்ற வரிசையில்தான் தகுதி காலம் முடியும் வரை குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்க இயலும். இறந்த அரசு ஊழியரின் மனநிலை பாதிக்கப்பட்ட Mental Disabled மகனுக்கு த.நா. ஓய்வூதிய விதிகள் 49 (6)(iii)ன்படி அவரது வாழ்நாள் முழுவதற்கும் ஓய்வூதியம் வழங்கலாம். ஆனால் அவர் இறந்த பின்னர் அவருடைய மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் கிடையாது. அ.க.எண்.17109/நிதி (ஓய்வூதியம்)/2010/ நாள் 24.6.2010.

பணி நிரந்தரமாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் திருமணமாகாத/ விதவை/விவாகரத்து பெற்ற மகள் ஆகியோருக்கு அவர்கள் 25 வயதை கடந்த பின்னும் குடும்ப ஓய்வூதியம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம். (அரசாணை எண். 325, நிதி (ஓய்வூதியம்) நாள் 28.1.2011, அரசாணை எண்.165, நிதி (ஓய்வூதியம்) நாள் 21.5.2012). அரசு ஊழியர் இயற்கையெய்திய தேதியிலிருந்து 10 ஆண்டுகள் அல்லது இறந்த அரசு ஊழியரின் வயது என்றைக்கு 65 பூர்த்தி அடைகிறதோ இவற்றில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை மேம்படுத்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் (Enhanced Family Pension) வழங்கப்படும். அரசாணை 313 நிதி (ஊ.கு.) நாள்: 25.10.2017

### குறைந்தபட்ச பணிக்காலம்

1. சாதாரண குடும்ப ஓய்வூதியம் பணிக்காலம் : குறைந்தபட்சம் ஒரு வருட (9 மாதமும் அதற்கு மேலும்)

2. அதிகரிக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் : 7 வருட பணிக்காலம் (அதாவது 6 வருடம் மற்றும் 9 மாதமும் அதற்கு மேலும்)

3. 9 மாத பணிக்குள் இறந்தாலும் குடும்ப ஓய்வூதியம் உண்டு (மருத்துவ தகுதி சான்றிதழ் ஆரம்பத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால்).

### விகிதம்

1. சாதாரண குடும்ப ஓய்வூதியம் சம்பளம் கடைசியாக வாங்கியது.

(Pay x 30/100 = (அடுத்த ரூபாய்க்கு சுழிக்க வேண்டும்)

2. 1.1.2016 முதல் அதிகரிக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் (அரசாணை எண். 313 Fin (P.C) dt. 25.10.17) - 10 ஆண்டுகளுக்கு அல்லது ஓய்வூதியருக்கு

65 வயது நிறைவு பெறுகின்ற இதில் எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை வழங்கலாம்)

கடைசியாக வாங்கிய சம்பளம் x 50 / 100 =

1. கணவனும், மனைவியும் அரசு ஊழியர்களாக இருந்து, ஒருவர் இறந்தால் மற்றவருக்கு குடும்ப ஓய்வூதியம் உண்டு. (விதி 4)

2. கணவனும், மனைவிபும் அரசு ஊழியர்களாக இருந்து இருவரும் இறந்தாலும் தகுதியுள்ள குழந்தைகள் இரண்டு குடும்ப ஓய்வூதியங்கள் பெறமுடியும். (விதி 49)

3. மேற்குறிப்பிட்ட இனங்களில் குறைந்தபட்சம் ரூ. 7850/– இரண்டு குடும்ப ஓய்வூதியங்கள் பெறும் இனங்களில் மட்டும் ரூ. 7850+7850 பெறமுடியும். (அரசு ஆணை எண். 326, நிதித்துறை நாள் 14.5.96)

4. இரண்டு குடும்ப ஓய்வூதியங்களில், ஒன்று அதிகரிக்கப்பட்ட விகிதத்திலும் இன்னொன்று சாதாரண விகிதத்திலும் இருந்தாலும்கூட இரண்டு குடும்ப ஓய்வூதியங்களும் குறைந்தபட்சம் ரூ. 15,700/–ஆக இருக்கும்.

5. இரண்டு குடும்ப ஓய்வூதியங்களும் சாதாரண விகிதங்களில் இருந்தாலும் குறைந்தபட்சம் ரூ. 15,700/–ஆக இருக்க வேண்டும்.

6. ஒருவர் காலை 0.01 மணிக்கு இறந்தால் அந்த நாள் கூட பணிக்காலமாக கருதி அடுத்த நாளிலிருந்துதான் குடும்ப ஓய்வூதியம் கணக்கிட வேண்டும்.

1.6.60 முதல் 31.5.88 வரை ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு 1.6.88 முதல் ஓய்வூதியம் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1. ஓய்வூதியம் ரூ.500க்குள் பெறுபவர்களுக்கு 60 %

2. ஓய்வூதியம் ரூ.600க்கு மேல் பெறுபவர்களுக்கு 50 %

1.1.96 முதல் 30.6.96 வரை ஓய்வு பெற்றவர்களுக்கும் 1.1.96 முன்பும், 1.7.96க்கு பின்னரும் ஓய்வு பெற்றவர்களுக்கும் தகுதியான ஓய்வூதியம் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அ.ஆ.எண். 446, நிதி (ச.கு.) நாள் 18.9.07).

தேர்வுநிலை சிறப்புநிலை பதவியிலிருந்து 1.1.2016க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் குறைந்தபட்ச ஊதியம்+தர ஊதியத்தில் 50 சதம் / 30 சதம் நிர்ணயம் செய்யலாம். பெறப்படும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் 50 சதம் / 30 சதத்திற்கும் மேலிருந்தால் திருத்தம் தேவையில்லை. 50 சதம் / 30 சதத்திற்கும் கீழிருந்தால் அரசாணை 313. நிதி (சகு) துறை, நாள் 25.10.2017இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி துறைத் தலைவர் நிர்ணயம் செய்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கு பரிந்துரை செய்யலாம். பத்தி 5 (ii)

இதேபோல் ஒரு நபர் குழு பரிந்துரை மூலமாக ஏற்பட்டுள்ள சாதாரண நிலை பதவிகளின் ஊதிய விகிதம் மாற்றத்தினால் தேர்வுநிலை/சிறப்புநிலை பதவியிலிருந்து 1.1.2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் குறைந்தபட்ச ஊதியம் + தர ஊதியம் + தர ஊதியத்தில் 50 சதம் / 30 சதம் நிர்ணயம் செய்யலாம். (அரசு நிதித்துறை கடித எண்.63305/சகு/2010–2/நாள் 8.11.2010)

1.1.2016 மற்றும் அதற்கு பின்பு ஓய்வு பெற்றவர்/இறந்தவர்களுக்கு பத்தி 15முதல் 25 வரை உள்ள விவரத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாணை எண். 313 நிதி(ஊ.கு.) துறை நாள்: 25.10.2017



**ஓய்வூதியத்தை தொகுத்துப் பெறுதல்** (Commutation of Pension)

ஒருவர் 1.1.96 முதல் முழு ஓய்வூதியத்தின் 40 சதவிகிதத்தை தொகுத்து பெறலாம். (பின்னத்தை முழுவதுமாக தவிர்க்க வேண்டும். அடுத்த ரூபாய்க்கு சுழிக்க வேண்டும்) (அ.ஆ.எண். 162, நிதித்துறை நாள் 1.4.98) 1.4.2003 முதல் 1/3 பங்காக இது குறைக்கப்பட்டுள்ளது. (அ.ஆ.எண். 74 நிதி (ஓய்வூதியம்) நாள் 19.3.2003) இவ்வாணை இன்றும் தொடர்கிறது.

தொகுத்துப் பெறுவதின் மதிப்பு (அ.ஆ.எண். 313 நிதி (சகு)துறை நாள் 25.10.17)

| | |
|---|---|
| உயர்நிலை பணி மற்றும் கீழ்நிலைப் பணி | : (61 வயது என கருதி) 8.194 வருடங்கள் |
| அதிகபட்ச வரையறை | : அதிகபட்ச வரையறை எதுவும் இல்லை. |
| முழு ஓய்வூதியம் திரும்ப பெறுவது | : 15 ஆண்டுகளுக்கு பிறகு |

ஓய்வூதியத்தை தொகுத்துப் பெற மனு செய்தவர் ஈடான தொகை பெறுவதற்குள் இறக்க நேர்ந்தால், அத்தொகையை அவர் இதற்கென எழுதிக் கொடுத்த நியமனதாரருக்கு வழங்க வேண்டும். (G.O.Ms.No. 888 Finance Dt. 20.10.87)

குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் அரசு ஊழியராக இருக்கும் பட்சத்தில் ஓய்வூதியத்திற்கான அகவிலைப்படி 16–02–1996 முதல் பெற தகுதியற்றவர் அரசு ஆணை 19 நிதி 16/3/96 அகவிலைப்படி பெற தகுதி உண்டு wef 24–03–2008 அரசு ஆணை எண் 112/நிதி நாள் 24–03–2008

07.05.2020 முதல் ஓய்வு பெறும் வயது 59 ஆக உயர்த்தப்பட்டுள்ளது FR56(1)(a) திருத்திய அரசு (நிலை) எண்62/ ப.ம.நி.சீ.(FR-II) துறை நாள் 01.06.2020

வயது முதிர்வினால் 31.05.2021 அன்று பணியில் உள்ள அரசு ஊழியர் / ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது 59ல் இருந்து 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (FR.56(1)(a) விளக்கம் I மற்றும் விளக்கம் II). அரசாணை எண் 29/ ப & நி சீ(எஸ்) துறை, நாள். 25.02.2021. விதிதிருத்தம். அரசாணை (நிலை) எண். 92/ மனிதவள மேலாண்மைத் (FR II) துறை, நாள் 13.09.2021.



**G.O.Ms.235, Finance (P.C.) Dept. dated 01.06.2009**
Revised Commutation Table w.e.f. 01.01.2006
*Coomutation value for pension of rupee one per annum*
*(G.O.(Ms.)No. 318, Fin.(pension) Dept. Dated 23.07.2009)*

| *Age next birhtday* | *Commutation value expressed as number of year's purchase* | *Age next birhtday* | *Commutation value expressed as number of year's purchase* |
|---|---|---|---|
| 20 | 9.188 | 51 | 8.808 |
| 21 | 9.187 | 52 | 8.768 |
| 22 | 9.186 | 53 | 8.724 |
| 23 | 9.185 | 54 | 8.678 |
| 24 | 9.184 | 55 | 8.627 |
| 25 | 9.183 | 56 | 8.572 |
| 26 | 9.182 | 57 | 8.512 |
| 27 | 9.180 | 58 | 8.446 |
| 28 | 9.178 | 59 | 8.371 |
| 29 | 9.176 | 60 | 8.287 |
| 30 | 9.173 | 61 | 8.194 |
| 31 | 9.169 | 62 | 8.093 |
| 32 | 9.164 | 63 | 7.982 |
| 33 | 9.159 | 64 | 7.862 |
| 34 | 9.152 | 65 | 7.731 |
| 35 | 9.145 | 66 | 7.591 |
| 36 | 9.136 | 67 | 7.431 |
| 37 | 9.126 | 68 | 7.262 |
| 38 | 9.116 | 69 | 7.083 |
| 39 | 9.103 | 70 | 6.897 |
| 40 | 9.090 | 71 | 6.703 |
| 41 | 9.075 | 72 | 6.502 |
| 42 | 9.059 | 73 | 6.296 |
| 43 | 9.040 | 74 | 6.085 |
| 44 | 9.019 | 75 | 5.872 |
| 45 | 8.996 | 76 | 5.657 |
| 46 | 8.971 | 77 | 5.443 |
| 47 | 8.943 | 78 | 5.229 |
| 48 | 8.913 | 79 | 5.018 |
| 49 | 8.881 | 80 | 4.812 |
| 50 | 8.846 | 81 | 4.611 |

Basis : *LIC (94-96) Ultimate Tables and 8.00% Interest*

அரசுக்கடித எண்: 593235/FR II 2022 நாள்: 27.04.2022—ன்படி அடிப்படைவிதி 56(1) (a)—ன் கீழ் 60 வயது நிறைவுபெறும் மாதத்தின் இறுதி நாளில் ஓய்வுக்கு அனுமதிக்க தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள குற்றச்சாட்டுகள் காரணமாக ஓய்வூதியம் தாமதமாக வழங்கப்படும் இனங்களிலும் ஓய்வூதியம் தொகுத்துப் பெறலாம். அந்த இனங்களில் குற்றச்சாட்டு முடிந்ததற்கான ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் ஓய்வூதியம் தொகுத்துப் பெற மனு செய்தால் மருத்துவக் குழு பரிசீலனை தேவையில்லை. (G.O.Ms. No. 836, Finance dt. 30.12.81) அதேபோன்று முன்னதாகவே விண்ணப்பம் (Compulsory Retirement) கொடுத்த ஒருவர் துறை நடவடிக்கைக்குட்பட்டு பணியிலிருந்து ஓய்வு பெற்று துறை நடவடிக்கை முடிவு பெறுவதற்குள் இறக்க நேர்ந்தால் அத்தொகையை வாரிசுக்கு வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற ஒரு அரசு ஊழியர் இரண்டாவது தடவையாக ஓய்வூதியத்தை தொகுத்து (Second Commutation) பெற முடியாது. சம்பளம் மாற்றி



அமைக்கும்போது மட்டும் இரண்டாவது தடவையாக ஓய்வூதியத்தை தொகுத்து பெறமுடியும். (அரசு ஆணை எண் 30, நிதி நாள் 9.1.96) முதல் ஓய்வூதிய தொகுப்பு முடிவுற்றபின் 15 ஆண்டுகள் கழிந்த பின் சம்பந்தப்பட்ட கருவூல அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். கருவூல அலுவலரே அசல் ஓய்வூதியம் திரும்பலுக்கு உத்தரவிட்டு வழங்குவார்.

அரசு ஊழியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளிலிருந்து 2 ஆண்டுக்குள் சுயமாக/தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதாக இருப்பின் அரசின் முன்அனுமதி பெற வேண்டும். (தமிழ்நாடு ஓய்வூதியம் 1970 விதி 10ன்படி)

### தன்விருப்ப ஓய்வு (அ.வி. 56(3) அரசாணை ப.ம.நி.சீ. 7.10.91 மற்றும் 376 ப.ம.நி.சீ. 11.12.95)

1. குறைந்தபட்ச பணி : 20 வருட பணிக்காலம் (அ) 50 வயது
2. நோட்டீஸ் காலம் : நியமன அலுவலருக்கு (Appointing Authority) 3 மாத நோட்டீஸ்
3. நோட்டீஸ் காலத்தில் விடுப்பு : சம்பளமில்லா விடுப்பு எடுக்கக் கூடாது. ஈட்டிய விடுப்பு மற்றும் மற்ற விடுப்பு எடுத்தால், நோட்டீஸ் காலம் முடிவதற்கு முன் பணியேற்க வேண்டும்.
4. நோட்டீஸ் வாபஸ் : நோட்டீஸ் காலம் முடியும்முன் நியமன அலுவலரின் அனுமதியுடன் வாபஸ் பெறலாம்.

5. தன் விருப்ப ஓய்வில் செல்லும் அரசு ஊழியர்கள், தமிழ்நாடு அடிப்படைப் பணி ஊழியர்கள் உட்பட அனைவருக்கும், கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு அவர்கள் பணிபுரிந்த பணிக்காலம் மற்றும் வயதுக்கு ஏற்ப 31.7.2006 முதல் அனுமதிக்கப்படும் weightage அளவு. (அரசாணை எண். 197, ப&மி.சீ.(அவிIV) துறை, நாள் 24.10.2008) இந்த weightage அளவு, 1.4.2003 முதல் வழங்கலாம். அரசாணை எண். 41, ப&மி.சீ.(அவிIII) துறை, நாள் 15.4.09.

| **ஓய்வூதியம்** | | | **குடும்ப ஓய்வூதியம்** | | |
|---|---|---|---|---|---|
| காலம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | காலம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
| 1.4.78முதல் | 100 | 1500 | 1.4.79 முதல் | 100 | |
| 1.4.82முதல் | 125 | 1500 | 1.4.82 முதல் | 125 | |
| 1.10.84 முதல் | 235 | உச்சவரம்பு | 30.9.84 வரை | | 500 |
| | | இல்லை | 1.10.84 முதல் | 235 | 800 |
| | | | 1.4.88 முதல் | 245 | 1000 |
| 1.4.88 முதல் | 245 | 1.4.88 முதல் | 1.6.88 முதல் | 375 | 1250 |
| 1.6.88 முதல் | 375 | „ | 1.1.96 முதல் | 1275 | 9000 |
| 1.1.96 முதல் | 1275 | | 1.1.06 முதல் | 3050 | 23100 |
| 1.1.06 முதல் | 3050 | 38500 | 1.1.2016 முதல் | 7850 | 67500 |
| 1.1.16 முதல் | 7850 | 1,12,500 | | | |

**The Table**

| *Weightage with reference to qualifying service (for all the Govt. servants)* | | *For all the Government servants in the Tamil Nadu basic service* | |
|---|---|---|---|
| qualifying Service (a) | Weightage (b) | Age below 54 years | Weightage 5 years of weightage |
| 25 years and below | 5 years of weightage | 55 years | 4 years of weightage |
| 26 years | 4 years of weightage | 56 years | 3 years of weightage |
| 27 years | 3 years of weightage | 57 years | 2 years of weightage |
| 28 years | 2 years of weightage | 58 years | 1 years of weightage |
| 29 years | 1 year of weightage | | |
| *For all the Government servants other than the Govenment servants in the Tamil Nadu Basic Service:* | | | |
| Age | Weightage | | |
| 55 years | 5 years of weightage | FR 56 (3) in clause (d) for Sub clause (i) and (ii) G.O. MS 197 P & A.R. (FR IV) Dept. dt. 24.10.2008 | |
| 56 years | 4 years of weightage | | |
| 57 years | 3 years of weightage | | |
| 58 years | 2 years of weightage | G.O.MS.No: 53 HRM dt 08.06.2022 | |
| 59 years | 1 years of weightage | | |

### தன் விருப்ப ஓய்வு இனங்களில் அரசு ஊழியர் மீது நடவடிக்கை

கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை இயக்குநரின் தடையின்மை சான்று பெற வேண்டும். தன் விருப்ப ஓய்வு இனங்களில் அரசு ஊழியர் மீது எந்த கிரிமினல் நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்றோ கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்ட பரிசீலிக்கப்படவில்லை என்றோ நியமன அதிகாரி திருப்தியடைந்ததால் போதுமானது. சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, சிஐடி மற்றும் தொடர்புடைய நிறுவனங்களை தொடர்பு கொள்வது தொடர்பாக நியமன அதிகாரி முடிவெடுத்துக் கொள்ளலாம். (அரசு கடித எண் 77839/97–1, பநிசீது நாள் 2.6.98)

உயர்நீதிமன்றம் அன்மையில் வழங்கியுள்ள தீர்ப்பில், பதவி துறப்பு (Resignation) செய்பவர்களுக்கு, பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பணப்பயன்கள் எதுவும் கிடையாது என்று ஓய்வூதிய விதிகளின்படி தீர்ப்பு வழங்கியுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு எண் Civil Appeal No.9076 of 2019
SLP(C) No.6553 of 2018 Dated 05-12-2019

### ஓய்வு பெற்றவர்களின் முறையீடுகள்

ஓய்வு பெற்றவர்களின் முறையீடுகள் தற்போது கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள அலுவலகத்தில் கவனிக்கப்படுகிறது.



ஓய்வூதிய இயக்குநர் ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகம், 571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை–600 035 தொலைபேசி: 044–24331918

### காணாமல் போனவருக்கு ஓய்வுக்காலப் பயன்கள்

**1.** அரசு ஊழியர் ஒருவர் காணாமல் போனால் ஒரு ஆண்டு கழிந்த பின்னர் பணிக்கொடை மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். (அரசாணை எண். 43, நிதித்துறை, நாள் 22.1.91 மற்றும் அரசாணை எண் 540, நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 5.7.95)

**2.** ஏழு ஆண்டு கடந்த பின்னர் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் காணாமல் போனவர் இறந்துவிட்டதாக Indian Evidence Act படி தீர்ப்பு பெற்று கொடுத்தால் மட்டும் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ. 3 லட்சம் கிடைக்கும்.

**3.** காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்த நாளிலிருந்து ஓராண்டு/ஏழாண்டு கணக்கிடப்பட வேண்டும்.

**4.** காவல் துறையிடம் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த நாளிலிருந்து ஓராண்டு கணக்கிட வேண்டும். 6.12.1988 அன்று காவல் துறையிடம் தகவல் அறிக்கை தாக்கல் செய்தால் 5.12.1989 அன்று ஓராண்டு முடிவுற்றதாக கருத வேண்டும். (அரசு கடித எண் 21396/ஓய்வு/912, நிதித்துறை, நாள் 9.4.1991)

**5.** அரசு ஊழியர் கடைசியாகப் பணியில் இருந்த நாள் அல்லது கடைசியாக ஒப்பளிக்கப்படும் விடுப்பில் இருந்த நாளன்று பெற்று இருக்கக்கூடிய ஊதியத்தைக் கணக்கிட்டு அவருக்குச் சேர வேண்டிய பலன்கள் கணக்கிடப்படும். (மேற்படி கடிதம்)

**6.** பணிக்கொடையைப் பொறுத்தவரை ஓய்வு பெற்றவர் என கணக்கிட்டு ஓராண்டுக்கு அரை மாத ஊதியம் முதலில் வழங்கப்படும். ஏழு ஆண்டு சென்று இறந்தவர் என அறிவிக்கப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு ஒரு மாத ஊதியம் என கணக்கிட்டு வழங்கப்படும். (மேற்படி கடிதம்)

**7.** மேற்படி தொகையைப் பெற்றிட பிணை முறிவுப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டும். (மேற்படி கடிதம்)

**8.** வருங்கால வைப்பு நிதி மற்றும் விடுப்பூதியம் முதலியவை காணாமல் போன தகவல் கிடைத்தவுடன் அலுவலகத் தலைவர் வழங்கி வருவார். (அரசாணை எண். 478, நிதித்துறை, நாள் 4.6.87)

**9.** சிறப்பு வருங்கால வைப்பு நிதி (SPF) காணாமல் போன நாளிலிருந்து ஓராண்டு கடந்த பின்னர் வழங்கப்படும். அரசு மான்யம் கிடைக்காது. (அரசு கடித எண் 75868/ஓய்வு/872, நிதித்துறை நாள் 21.7.87)

**10.** காணாமல் போனவர் எங்கு தேடியும் கிடைக்கவில்லை என காவல் துறை சான்று ஒன்று கொடுக்க வேண்டும்.

### மருத்துவச் சலுகை

ஓய்வு பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 300 மருத்துவப் படியாக 1.10.2017 முதல் வழங்கப்படும். (அ.ஆ.எண். 313 Fin (Pay Cell) dt. 25.10.17)

இறந்த ஊழியரின் குடும்பத்தினருக்கு ஊழியர் உயிரோடு இருந்திருந்தால் ஓய்வு பெற்று இருக்கும் நாள் வரை Medical Reimbursement சலுகை அல்லது மருத்துவ படி ஏதாவது ஒன்றினைப் பெறலாம். (அரசு க.எண். 116821 பி.சி./1/62, நாள் 4.11.86)

தமிழ்நாடு அரசு புதிய மருத்துவ காப்பீட்டுதிட்டம்2014 (1995ன்படி ரூ.1,00,000 (அல்லது) சிகிச்சை செலவின் 75 சதவீதத்தை ஓய்வூதியர்கள் திரும்பப் பெற

முடியும். இதற்கு ஒய்வூதியர்கள் 1.9.2012 முதல் மாதம் ரூ. 150 செலுத்த வேண்டும்.) இந்த திட்டம் spouseக்கும் உண்டு. தற்போது புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் **2013–14** to Block perid of four yrs Rs.2.00 lakhs vide GO No.462 Fin (Pen) 27-12-2013

(ஜூலை 2018 முதல் ரூ.350 செலுத்த வேண்டும்.) தற்போது புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் **2018–22** to Block perid of four yrs Rs.4.00 lakhs vide GO No.222 Fin (Pen) 30-06-2018 (Rs.7.50 Lakhs for specified treatment and surgeries)

## ஓய்வூதிய நாளன்று விடுப்பிலிருக்கும் ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு பணமாக்குதல்

1. ஒரு ஊழியர் ஓய்வு பெற்றாலோ அல்லது பணிக்காலத்தில் இறக்க நேரிட்டாலோ அவரின் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்புக்கு 240 நாட்கள் விடுப்பூதியம் பெறலாம். (அ.ஆ.எண். 999 நிர்வாகத்துறை நாள் 31.10.87 மற்றும் அ.ஆ.எண். 488 நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 12.8.96)

2. ஊதியத்துடன் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலியன 240 நாட்களுக்கு இனிமேல் பெறலாம். (அ.ஆ.எண். 545 P&AR நாள் 30.9.89 மற்றும் அ.ஆ.எண். 488 நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 12.8.96) ஆனால் இடைக்கால நிவாரணம் கிடைக்காது. (அரசு க.எண். 28968/PC/94–1 நிதித்துறை நாள் 3.5.94) 240 நாட்கள் ஈட்டிய விடுப்பு மற்றும் 180 நாட்கள் (90 நாட்கள் ஊதியத்துடன்) சொந்த காரணத்திற்கான ஈட்டா விடுப்பும் ஒப்படைப்பு செய்து ஊதியம் + அகவிலைப்படி + வீட்டு வாடகைப்படி + நகர ஈட்டுப்படி வழங்கலாம். (அ.ஆ.எண். 409 நிதித்துறை (ஓய்வூதியம்)/நாள் 31.7.04) சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு கணக்கில் வருகின்ற ½ நாள் விடுப்பினை முழு நாளாக எடுத்துக் கொள்ள வேண்டும். (அரசாணை எண். 324, ப.ம.நி.சீ. (எப்.ஆர்.ஐஏ) துறை, நாள் 18.8.2004) 1.1.2016க்கு பிறகும் தொடர்கிறது. அரசு ஆணை எண். (313 நிதி (ஊ.கு) துறை நாள்: 25.10.2017)

3. ஓய்வு பெறுபவரிடம் எந்தவித விண்ணப்பமும் கோராமல் (அலுவலகத் தலைவரே) விடுப்பூதியம் வழங்கலாம். இத்தொகை ஓய்வு பெறும் அன்றோ அல்லது மறுநாளோ வழங்கப்பட்டாக வேண்டும். விடுமுறையாக இருப்பின் அடுத்த பணி நாளன்று வழங்கப்பட்டாக வேண்டும். (அ.ஆ.எண். 339, நிர்வாகத் துறை நாள் 10.6.88– அ.ஆ.எண் 345, நிர்வாகத்துறை நாள் 31.7.90)

4. ஓய்வு பெறும்போதே அயல் பணியிலிருப்பவருக்கு தாய்த்துறை இத்தொகை வழங்கும் (அரசு க.எண். 42611/அ.வி. II நிர்வாகத்துறை நாள் 24.6.85)

5. சுய ஓய்வில் செல்பவருக்கும் இச்சலுகை கிடைக்கும். (அ.ஆ.எண். 1546 நிதி நாள் 16.11.79) மருத்துவ தகுதியின்மையில் மற்றும் கட்டாய ஓய்வில் செல்பவருக்கும் இத்தொகை கிடைக்கும். (அ.ஆ.எண். 345, நாள் 31.7.90) அரசு பதவி ஒன்று குறைக்கப்படுவதால் அல்லது அரசுத்திட்டம் ஒன்று முடிவடையாமல் பணியிலிருந்து வெளியேற்றப்படுபவருக்கும் இச்சலுகை கிடைக்கும். (அ.ஆ.எண். 345 P&AR நாள் 31.7.90)

6. ஓய்வு நாளன்று சொந்த அலுவல்களுக்காக வழங்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து, இருப்பிலுள்ள 50 சதவிகித விடுப்பிற்கு முழுச் சம்பளம் பெறலாம். (அரசு ஆண் எண். 488, நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 12.8.96)

7. Full monetary powers for sanction of pay and allowances and leave salary to the family of the deceased government employee to head of office. (G.O. 336, Fin (Sal) Dept. dt. 21.7.99)

## அரசு ஊழியர் சிறப்பு நல நிதி மற்றும் பணிக்கொடை (Employees Special Provident Fund) (அ.ஆ.எண் 136, நிதி (ஓய்வூதியம்) நாள் 29.2.84)

1. மாதம் ரூ. 20 வீதம் ஊழியரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். இத்தொகை 148 தவணைகள் ஆகும் வரை பிடிக்கப்படும். பணிக்காலத்தில் ஊழியர் இறக்க நேரிட்டால் ஊழியரின் பங்கு மற்றும் வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும். பணியிலிருந்து ஓய்வு பெற்றால் கட்டிய தொகை மற்றும் அதற்கான வட்டியுடன் அரசு மான்யம் ரூ. 10,000 வழங்கப்படும். அலுவலகத் தலைவரே 'இ' மற்றும் 'ஈ' ஊழியருக்கு இத்தொகை வழங்குவார். (நிதிப்பயன் 15.9.2000 முதல்) (அ.ஆ.எண். 42 நிதி (ஓய்வூதியம்) நாள் 15.9.2000)

2. ஓய்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே இதற்கான பிடித்தம் நிறுத்தப்படும். (அரசு க.எண். 15811/பி.சி/90–1 நிதி நாள் 28.2.90)

3. இத்தொகையிலிருந்து எவ்வித பிடித்தமும் செய்யக்கூடாது. (அரசாணை எண். 865, நிதி நாள் 13.10.87)

4. தற்காலிக பணி நீக்க காலத்திற்கும் வருங்கால வைப்புநிதி சந்தா தொகை பிடித்தம் செய்ய வேண்டும். (அரசு க.எண். 128219/ஓய்வு/90–1, நிதி நாள் 6.12.90)

5. அரசு ஊழியர் காணாமல் போனால் அவர் செலுத்திய தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்படும். அரசு மான்யம் கிடைக்காது.

6. சுயமாக பணியிலிருந்து ஓய்வு எடுப்பவருக்கும், உடல் தகுதியின்மை காரணமாக ஓய்வு பெறுபவர்களுக்கும் அரசு மான்ய தொகை ரூ. 10,000 வழங்கப்படும். (அரசாணை எண். 351, நிதித்துறை நாள் 25.4.94)

7. இந்த தொகை பெறுவதற்கு அரசு ஊழியர் நாமினேஷன் தரவேண்டும். (அரசு கடிதம் 24584/ஓய்வூதியம்/85–1, நாள் 4.5.85)

8. ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் தனித்தனியாக அட்டை பேணப்பட வேண்டும் என்ற நிபந்தனை தற்போது நீக்கப்பட்டு விட்டது. தற்போது சம்பள வழங்கும் அலுவலர் தான் முழுமையான பிடித்தத்திற்கும் பொறுப்பானவர் (அ.ஆ.எண். 409 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 25.5.95)

9. ஜூலை 96 மாதம் 148 தவணைகள் பிடித்தம் முடிந்த அலுவலர்களுக்கு கீழ்கண்டவாறு வட்டி வழங்கப்படும். (ரூ. 5021+வட்டி)

ஆகஸ்ட் 1996 முதல் ஜூலை 2000 முடிய 12%

ஆகஸ்ட் 2000 முதல் ஜூலை 2001 முடிய 11%

ஆகஸ்ட் 2001 முதல் ஜூலை 2002 முடிய 9.5%

ஆகஸ்ட் 2002 முதல் ஜூலை 2003 முடிய 9%

ஆகஸ்ட் 2003 முதல் 8% என தொடர்கிறது.

(அ.ஆ.எண் 62 நிதி (ஓய்வு) துறை நாள் 11.2.97 அ.ஆ.472 நிதி (ஓய்வூதியம்) நாள் 17.10.2000, 334 (ஓய்வூதியம்) துறை நாள் 5.9.2001 அ.ஆ.எண். 268 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 31.7.2002 அ.ஆ.எண் 280 நிதி (ஓய்வூதியம்) நாள் 22.8.2003 அ.ஆ.எண். 482 நிதி (ஓய்வூதியம்) நாள் 10.9.04)

ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 1984ன்கீழ் வழங்கப்படும் வட்டித்

தொகையினை அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு அரசால் வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

அ.ஆ.எண்: 61 நிதி ஓய்வூதியம், துறை நாள்: 28.02.2013

**சிறப்பு சேமநல நிதி . முதிர்ச்சித் தொகை**

சிறப்பு சேமநல நிதித் திட்டத்தில் **31.7.96**ல் **148**வது தவணை பிடித்தம் செய்யப்பட்டு நிறைவுற்றுள்ளது. இவ்வாறு **148** தவணைகளையும் **7/96**ல் செலுத்தி முடித்தவர்களில் **31.05.2022** ஓய்வு பெற்றால் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய முதிர்வுத் தொகையின் விவரம் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

வயது முதிர்வில் ஓய்வு பெற்றவர்களுக்கும் **30.8.93**லிருந்து சுயஓய்வு பெற்றவர்களுக்கும் சந்தாத் தொகை அதற்குரிய வட்டி ஆகியவற்றுடன் அரசுப் பங்குத் தொகையும் கிடைக்கும்.

அ.க.எண் 26299/2022–2 நிதித் (ஓய்வு) துறை நாள்: 01.12.22ன்படி

**1984**ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம் வட்டித் தொகை கணக்கீட்டுத்தாள்

பெயர் மற்றும் பதவி : திரு/திருமதி

பணியிலிருந்து ஓய்வு பெற உள்ள நாள் : **31–12–2023**

**WORKING SHEET FOR SPF - 1984 (upto 31–12–2023)**

Subscription for 148 Installments at Rs.20/- per month :
**(From 01.04.1984 to 31.07.1996)** Rs. 2960/-

Interest allowed upto 31.07.1996 as per table of payment : Rs. 2061/-

**Total Amount** : Rs.5021/- **Rs.5021/-**

| From | To | Percentage of Interest | Principal amount for Interest Calculation | Interest Amount | Total Amount |
|---|---|---|---|---|---|
| 01.08.1996 | 31.07.1997 | 12/100 | 5021 | 603 | 5624 |
| 01.08.1997 | 31.07.1998 | 12/100 | 5624 | 675 | 6299 |
| 01.08.1998 | 31.07.1999 | 12/100 | 6299 | 756 | 7055 |
| 01.08.1999 | 31.07.2000 | 12/100 | 7055 | 847 | 7902 |
| 01.08.2000 | 31.07.2001 | 11/100 | 7902 | 869 | 8771 |
| 01.08.2001 | 31.07.2002 | 9.5/100 | 8771 | 833 | 9604 |
| 01.08.2002 | 31.07.2003 | 9/100 | 9604 | 864 | 10468 |
| 01.08.2003 | 31.07.2004 | 8/100 | 10468 | 837 | 11305 |
| 01.08.2004 | 31.07.2005 | 8/100 | 11305 | 904 | 12209 |
| 01.08.2005 | 31.07.2006 | 8/100 | 12209 | 977 | 13186 |
| 01.08.2006 | 31.07.2007 | 8/100 | 13186 | 1055 | 14241 |
| 01.08.2007 | 31.07.2008 | 8/100 | 14241 | 1139 | 15380 |
| 01.08.2008 | 31.07.2009 | 8/100 | 15380 | 1230 | 16610 |
| 01.08.2009 | 31.07.2010 | 8/100 | 16610 | 1329 | 17939 |
| 01.08.2010 | 31.07.2011 | 8/100 | 17939 | 1435 | 19374 |
| 01.08.2011 | 30.11.2011 | 8/100*4/12 | 19374 | 517 | 20446 |
| 01.12.2011 | 31.03.2012 | 8.6/100*4/12 | 19374 | 555 | |
| 01.04.2012 | 31.03.2013 | 8.8/100 | 20446 | 1799 | 22245 |
| 01.04.2013 | 31.03.2014 | 8.7/100 | 22245 | 1935 | 24180 |
| 01.04.2014 | 31.03.2015 | 8.7/100 | 24180 | 2104 | 26284 |
| 01.04.2015 | 31.03.2016 | 8.7/100 | 26284 | 2287 | 28571 |
| 01.04.2016 | 30.09.2016 | 8.1/100*6/12 | 28571 | 1157 | 30871 |
| 01.10.2016 | 31.03.2017 | 8.0/100*6/12 | 28571 | 1143 | |
| 01.04.2017 | 30.06.2017 | 7.9/100*3/12 | 30871 | 610 | |
| 01.07.2017 | 31.12.2017 | 7.8/100*6/12 | 30871 | 1204 | |
| 01.01.2018 | 31.03.2018 | 7.6/100*3/12 | 30871 | 587 | 33272 |
| 01.04.2018 | 30.09.2018 | 7.6/100*6/12 | 33272 | 1264 | 35867 |
| 01.10.2018 | 31.03.2019 | 8/100*6/12 | 33272 | 1331 | |
| 01.04.2019 | 30.06.2019 | 8/100*3/12 | 35867 | 717 | 38709 |
| 01.07.2019 | 31.03.2020 | 7.9/100*9/12 | 35867 | 2125 | |
| 01.04.2020 | 31.03.2021 | 7.1/100 | 38709 | 2748 | 41457 |
| 01.04.2021 | 31.03.2022 | 7.1/100 | 41457 | 2943 | 44400 |
| 01.04.2022 | 31.03.2023 | 7.1/100 | 44400 | 3152 | 47552 |
| 01.04.2023 | 31.12.2023 | 7.1/100X9/12 | 47552 | 2532 | 50084 |
| subscription paid for 148 instailment @ Rs.20/- Per month | | | | | 2960 |
| Interest ( Rs.50084 - 2960) | | | | | 47124 |
| Goverment Contribution | | | | | 10000 |
| TOTAL PAYABLE | | | | | 60084 |



கொடுக்கப்படவேண்டிய வட்டி (ரூ.50084 – ரூ.2,960) = ரூ.47,124

| | | |
|---|---|---|
| தவணை தொகை | = | ரூ. 2,960 |
| வட்டி தொகை | = | ரூ. 47,124 |
| அரசு வழங்கும் தொகை | = | ரூ. 10,000 |
| மொத்தம் | = | ரூ. 60084 |

**தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு வருங்கால நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 2000**

**GPF Rate of Interest**

8% from 1.1.17 to 31.3.17 G.O. No. 35/Fin (AII) Dept. Dt. 15.2.17
7.9% from 1.4.17 to 30.6.17 G.O. No. 102/Fin (AII) Dept. Dt. 25.4.17
7.8% from 1.7.17 to 30.9.17 G.O. No. 227/Fin (AII) Dept. Dt. 28.7.17
7.8% from 1.10.17 to 31.12.17 G.O. No. 320/Fin (AII) Dept. Dt. 27.10.17
7.6% from 1.1.18 to 31.03.18 G.O. No. 11/Fin (AII) Dept. Dt. 10.01.2018
7.6% from 1.4.18 to 30.06.18 G.O. No. 135/Fin (AII) Dept. Dt. 23.04.2018
7.6% from 1.7.18 to 30.09.18 G.O. No. 252/Fin (AII) Dept. Dt. 26.07.2018
8% from 1.10.18 to 31.12.18 G.O. No. 337/Fin (AII) Dept. Dt. 12.10.2018
8% from 1.1.19 to 31.3.19 G.O. No. 25/Fin (AII) Dept. Dt. 21.1.19
8% from 1.4.19 to 30.6.19 G.O. No. 126/Fin (AII) Dept. Dt. 24.4.19
7.9% from 1.7.19 to 30.9.19 G.O. No. 223/Fin (AII) Dept. Dt. 18.7.19
7.9% from 1.10.19 to 31.12.19 G.O. No. 334/Fin (AII) Dept. Dt. 24.10.19
7.9% from 01.01.2020 to 31.03.2020 G.O.Ms No. 27/Fin (All) Dept. Dt. 27.01.2020
7.1% from 01.04.2020 to 30.06.2020 G.O. 231/Fin Dt. (All) 23.04.2020
7.1% from 01.07.2020 to 30.09.2020 G.O. 306/Fin (All) Dt. 27.07.2020
7.1% from 01.10.2020 to 31.12.2020 G.O. 386/Fin (All) Dt. 02.11.2020
7.1% from 01.01.2021 to 31.03.2021 G.O. MS No.30/Fin (All) Dt. 22.01.2021
7.1% From 01.04.2021 to 30.06.2021 G.O. Ms.No.125/Fin(All) Dept.dt.28.04.2021
7.1% From 01.07.2021 to 30.09.2021 G.O. MS.No.173/Fin(All) Dept.dt.19.07.2021
7.1% From 01.10.2021 to 31.12.2021 G.O. Ms.No.238/Fin(All) Dept.dt.26.10.2021
7.1% From 01.01.2022 to 31.03.2022 G.O. Ms.No.29/Fin(All) Dept.dt.27.01.2022
7.1% From 01.04.2022 to 30.06.2022 G.O. Ms.No.109/Fin(All) Dept.dt.19.04.2022
7.1% From 01.07.2022 to 30.09.2022 G.O. Ms.No.227/Fin(All) Dept.dt.26.07.2022
7.1% From 01.10.2022 to 31.12.2022 G.O. Ms.No.335/Fin(All) Dept.dt.22.10.2022
7.1% From 01.01.2023 to 31.03.2023 G.O. Ms.No.21/Fin(All) Dept.dt.23.01.2023
7.1% From 01.04.2023 to 30.06.2023 G.O. Ms.No.115/Fin(All) Dept.dt.25.04.2023
7.1% From 01.07.2023 to 30.09.2023 G.O. Ms.No.225/Fin(All) Dept.dt.17.07.2023
7.1% From 01.10.2023 to 31.12.2023 G.O. Ms.No.299/Fin(All) Dept.dt.12.10.2023
7.1% From 01.01.2024 to 31.03.2024
7.1% From 01.04.2024 to 30.06.2024
7.1% From 01.07.2024 to 30.09.2024
7.1% From 01.10.2024 to 31.12.2024

**CPS Rate of Interest**

8% from 01.01.2019 to 31.03.2019 G.O. No. 50/Fin (PGC-1) Dept. Dt. 06.02.2019
8% from 01.04.2019 to 30.06.2019 G.O. No. 150/Fin (PGC-1) Dept. Dt. 05.05.2019
7.9% from 01.07.2019 to 30.09.2019 G.O. No. 263/Fin (PGC-1) Dept. Dt. 14.08.2019
7.9% from 01.10.2019 to 31.12.2019 G.O. No. 36/Fin (PGC-1) Dept. Dt. 08.11.2019
7.9% from 01.01.2020 to 31.03.2020 G.O. Ms.No. 29/Fin (PGC-1) Dept. Dt. 19.02.2020
7.1% from 01.04.20 to 30.06.20 G.O. 236/Fin G.O. Dt. 04.05.2020
7.1% from 01.07.20 to 30.09.20 G.O. 350/Fin G.O. Dt. 24.09.2020
7.1% from 01.10.20 to 31.12.20 G.O. 394/Fin G.O. Dt. 10.11.2020
7.1% From 01.01.2021 to 31.03.2021 G.O. Ms.No.51/Fin(PGC-I) Dept.dt.22.02.2021
7.1% From 01.04.2021 to 30.06.2021 G.O. Ms.No.132/Fin(PGC-I) Dept.dt.24.05.2021
7.1% From 01.07.2021 to 30.09.2021 G.O MS.No.183/Fin(PGC-I) Dept.dt.03.08.2021
7.1% From 01.01.2021 to 31.03.2021 G.O. Ms.No.51/Fin(PGC-I) Dept.dt.22.02.2021
7.1% From 01.04.2021 to 30.06.2021 G.O. Ms.No.132/Fin(PGC-I) Dept.dt.24.05.2021
7.1% From 01.07.2021 to 30.09.2021 G.O MS.No.183/Fin(PGC-I) Dept.dt.03.08.2021

குறிப்பு: C.P.S. திட்டத்திற்கும் GPF க்கு வழங்கப்படும் வட்டியே கணக்கிடப்படுகிறது. அரசாணை எண். **115**, நிதி (பிஜிஜி) துறை, நாள் **9.5.2013)**

இது தவிரவுள்ள அனைத்து நேர்வுகளிலும் (பணிக்காலத்தில் மரணமடைதல் உள்பட) சந்தாத் தொகையும் அதற்குரிய வட்டியும் மட்டுமே கிடைக்கும். (அ.ஆ.எண். **351**, நிதித்துறை நாள் **25.4.94**)

அரசு ஊழியர் பணியிலிருக்கும்போது இறந்தால், அவர் மறைந்த மாதத்துக்குரிய சிறப்பு சேமநிதிச் சந்தாவைப் பிடித்தம் செய்வதில் தாமதம் இருப்பினும்கூட அந்த மாதத்துக்கும் வட்டி அனுமதிக்கப்படும். (அரசுக் கடிதம் நிதி (ஓய்வூதியம்) துறை எண் **59152**/ஓய்வூதியம்/**94–1** நாள் **26.12.94**)

தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு வருங்கால நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் **2000** என்ற திட்டம் அரசு ஆணை எம்.எஸ். எண். **504** நிதி (ஓய்வூதியம்)

நாள் 2.11.2000ன்படி துவங்கப்பட்டு 148 தவணை முடித்தவர் மாதம் ரூ. 50/–ம் 1.10.2000 அன்று மற்றும் பிறகு பணியில் சேர்ந்த புதியவர்கள் ரூ.70/–ம் செலுத்திட வேண்டும். (1.10.2000 முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நல நிதி – 2000
மற்றும் பணிக்கொடைத் திட்டம்
வட்டித்தொகை கணக்கீட்டுத்தாள்

பெயர் மற்றும் பதவி

திரு/திருமதி.

பணியிலிருந்து ஓய்வு பெற உள்ள நாள் 31–05–2022

தவணை தொடக்கம் (ம) முடிவு : 10/2000 முதல் 04/ 2022 வரை – 259 தவணைகள்

| அரசாணை எம் எஸ் எண்.504 நிதி (Pen) துறை நாள் : 02.11.2000–ன்படி 01.10.2000 முதல் 31.03.2013 வரை அசல் மற்றும் வட்டித்தொகை (அசல் ரூ.7500/–(ம) வட்டி ரூ.7935/– (12 வருடம் 6 மாதம்) | | |
|---|---|---|
| 01.04.2013 முதல் 31.03.2014 வரை சந்தா ரூ. 600 | 600 + 15435 = 16035 x 8.7/100 | 1,395<br>17,430 |
| 01.04.2014 முதல் 31.03.2015 வரை சந்தா ரூ. 600 | 600 + 17430 = 18030 x 8.7/100 | 1,569<br>19,599 |
| 01.04.2015 முதல் 31.03.2016 வரை சந்தா ரூ. 600 | 600 + 19599 = 20199 x 8.7/100 | 1,757<br>21,956 |
| 01.04.2016 முதல் 30.09.2016 வரை சந்தா ரூ. 300 | 300 + 21956 = 22256 x 8.1/100 x 6/12 | 901 |
| 01.10.2016 முதல் 31.03.2017 வரை சந்தா ரூ. 300 | 300 + 22256 = 22256 x 8/100 x 6/12 | 902<br>24,359 |
| 01.04.2017 முதல் 30.06.2017 வரை சந்தா ரூ. 150 | 150 + 24359 = 24509 x 7.9/100 x 3/12 | 484 |
| 01.7.2017 முதல் 31.12.2017 வரை சந்தா ரூ. 300 | 300 + 24509 = 24809 x 7.8/100 x 6/12 | 968 |
| 01.01.2018 முதல் 31.03.2018 வரை சந்தா ரூ. 150 | 150 + 24809 = 24959 x 7.6/100 x 3/12 | 474<br>26,885 |
| 01.04.2018 முதல் 30.09.2018 வரை சந்தா ரூ. 300 | 300 + 26885 = 27185 x 7.6/100 x 6/12 | 1033 |
| 01.10.2018 முதல் 31.03.2019 வரை சந்தா ரூ. 300 | 300 + 27185 = 27485 x 8/100 x 6/12 | 1099<br>**29,617** |
| 01.04.2019 முதல் 30.06.2019 வரை சந்தா ரூ.150 | 150 + 29617 = 29767 x 8/100 x 3/12 | 595 |
| 01.07.2019 முதல் 31.03.2020 வரை சந்தா ரூ.450 | 450 + 29767 = 30217 x 7.9/100 x 9/12 | 1790<br>32602 |



| | | |
|---|---|---|
| 01.04.2020 முதல் 31.03.2021 வரை சந்தா ரூ.600 | 600 + 32602 = 33202 x 7.1/100 | 2357<br>35559 |
| 01.04.2021 முதல் 31.03.2022 வரை சந்தா ரூ.600 | 600 + 38726 = 39326 x 7.1/100 | 2567<br>38726 |
| 01.04.2022 முதல் 31.03.2023 வரை | 600 + 38726 = 39326 x 7.1/100 | 2792<br>42118 |
| 01.04.2023 முதல் 31.12.2024 வரை | 600 + 42118 = 42718 x 7.1/100 | 2990<br>45708 |
| 01.04.2024 முதல் 31.12.2024 வரை | 450 + 45708 = 46158 x 7.1/100 | 3277<br>49435 |

அசல் தொகை = **291 x 50 = 14550**

கொடுக்கப்படவேண்டிய வட்டி = (ரூ.**49435** – ரூ.**14550** = ரூ.**34885)**

## ஓய்வுக்குப் பின்னர் சொந்த ஊர் செல்ல பயணப்படி

1. ஓய்வுக்குப் பின்னர் இந்தியாவில் எவ்விடத்திலும் தங்குவதற்கு (ஓய்வூதியப் படிவத்தில் குறிப்பிட்டபடி) இடமாறுதலைப் போன்றே பயணப்படி கிடைக்கும். (அ.ஆ.எண். 283, நிதி நாள் 18.2.71 மற்றும் அ.ஆ.எண் 796, நிதி நாள் 8.6.79)

2. சுயமாக ஓய்வில் செல்பவருக்கும் இச்சலுகை கிடைக்கும். (அரசு குறிப்பாணை எண் 45769/படி 1/76–1 நிதி நாள் 4.6.79)

3. தண்டனையாக FR56(d) படி கட்டாய ஓய்வில் செல்பவருக்கும் இச்சலுகை உண்டு. (அரசாணை எண் 1021 நிதி நாள் 10.11.80) 1-10-16 to 31-12-2016 = 8.00% rate internet GPF vide GO No. 276 /Fin (All) Dep of af 24.10.2016 Dt CPS - 8% 1-10-16 to 31-12-16 vide Go No.279/Fin (Pac) Dgit off 27-10-2016

4. பணியிலிருந்து ஓய்வு பெற்று சொந்த ஊர் செல்வதற்குள்ளாக இறக்க நேரும் ஊழியரின் குடும்பத்திற்கும் இச்சலுகை கிடைக்கும். (Note under T.A. Rule 110)

### இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தினர் சொந்த ஊர் செல்வதற்குப் பயணப்படி

1. குடும்பத்தினர் அனைவரும் சொந்த ஊர் செல்லவும், வீட்டுச் சாமான்கள் முதலியன எடுத்துச் செல்லவும், இட மாற்றத்தைப் போன்ற T.T.A கிடைக்கும். (பயணப்படி விதி 110)

2. விடுப்புக் காலத்தில் ஒருவர் இறக்க நேர்ந்தால் தலைமையகத்திலிருந்து குடும்பத்தினர் நிரந்தரமாக தங்குவதற்கு உத்தேசித்துள்ள இடம் வரை T.T.A. கிடைக்கும் (பயணப்படி விதி 110)

3. இதற்காக ஆகும் உத்தேச செலவில் 75% பயணப்படி வழங்கும் அலுவலர் முன்பணம் வழங்கலாம். (T.A. Rule 110 and Art. 242-B, Financial Code, Vol.I)

4. இறந்த அரசு ஊழியரின் ஊதியம் மற்றும் விடுப்பு ஊதியம் ஆகியவைகளை அலுவலகத் தலைவர் எவ்வித நிதி வரம்பு (Monetary Limit) இல்லாமல் விதி 80 (பி) (I) தமிழ்நாடு நிதி விதிகள் பாகம் 1ன் படி பெற்று வழங்கலாம். (அ.ஆ.எண் 336, நிதித்துறை (சம்பளம்) நாள் 21.7.99)

**ஈமச்சடங்கிற்கு முன்பணம்** (Art 242(c) Financial Code Vol.I)

1. பணிக்காலத்தில் இறக்கும் அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு இறந்த ஊழியரின் ஈமச்சடங்கிற்கான முன்பணம் ரூ. 5,000–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது (அ.ஆ.எண் 282 நிதி( ஓய்வூதியம்)துறை நாள் 26.10.2015) (அலுவலகத் தலைவரிடம் இருக்கும் எவ்விதமான பணத்திலிருந்தும் இந்த முன்பணத்தை வழங்கலாம், அலுவலகத் தலைவரே இத்தொகைக்கு ஒப்புதல் வழங்குவார். (அ.ஆ.எண். 484, நிதி நாள் 13.7.88 அ.ஆ.எண். 657 நிதி நாள் 19.9.88 மற்றும் அ.ஆ.எண். 217 நிதி (ஓய்வூதியம்) நாள் 24.4.97) சத்துணவு ஊழியர்களுக்கும் இந்த முன்பணம் தரப்படும். (G.O.Ms.No. 209 SW. dept. dt. 28.1.95)

2 இந்த முன்பணத்தை ஊழியரின் குடும்பத்தினருக்குச் சேரவேண்டிய குடும்ப பாதுகாப்பு நிதியிலிருந்து பிடித்தம் செய்து நேர்செய்யப்படும்.

3. இறந்தவரின் நெருங்கிய வாரிசுக்கு இது தரப்படும். (அ.ஆ. (நிலை) எண். 196 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 17.5.99).

குடும்ப பாதுகாப்பு நிதி 1–2–2016 ரூ.3 லட்சம் monthly Subscription Rs.60/- in case death of Govt. servant while in service enhanced Rs.1.5 Lakhs to Rs.3 Lakhs. GO. No. 57/Fin (P) 22-02-2016)

**பணிக்காலத்தில் இறப்பவரின் குடும்பத்தினருக்கு குடும்ப (தற்காலிக) ஓய்வூதியம்**

அலுவலகத் தலைவரிடம் தாக்கல் செய்யப்படும் சான்றின் அடிப்படையி லேயே குடும்ப (தற்காலிக) ஓய்வூதியத்திற்கான அனுமதியையும் உடனடியாக அலுவலகத் தலைவர் (துறைத்தலைவர் அல்ல) தகுதியான குடும்ப உறுப்பினருக்கு வழங்கிடுவார். இதற்கென சட்டபூர்வ வாரிசுச் சான்றினை வலியுறுத்த வேண்டியதில்லை.

இந்த உத்தரவு சென்னை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்/கருவூல அலுவலர்/சார் அலுவலருக்கும் அனுப்பப்படும். இந்த அலுவலர்களால் குடும்ப (தற்காலிக) ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்படும். அரசு ஊழியர் எந்த மாதத்தில் இறந்தாரோ அந்த மாதத்திற்கு அடுத்த மாதத்திலிருந்து ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்படும்.

இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திலிருந்து உரிய விண்ணப்பம் இறப்புச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் போன்ற சம்பந்தப்பட்ட ஆவணங்களை அலுவலகத் தலைவர் பெற்று 15 நாட்களுக்குள்ளாக சென்னை, மாநிலக் கணக்காயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**பணிக்காலத்தில் இறப்பவரின் சடலத்தை சொந்த ஊர் எடுத்துச் செல்லுதல்**

1. இறந்தவரின்/உறவினரின் விருப்பப்படி தகனம் செய்யும் இடத்திற்கோ சொந்த ஊருக்கோ அல்லது வீட்டிற்கோ அரசு செலவில் சடலத்தை எடுத்து செல்லலாம். அரசு வாகனம் இல்லாவிடில், தனியார் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். (அ.ஆ.எண். 2630, உள்துறை நாள் 13.10.72)

2. பணிக்காலத்தில்/விடுப்பில்/தற்காலிகப் பணி நீக்கத்தில் இறப்பவர் அனைவருக்கும் இச்சலுகை கிடைக்கும். (அ.ஆ.எண். 2985, உள்துறை நாள் 14.12.81)



3. அண்டை மாநிலங்களில் சிகிச்சை பெறும்பொழுது இறப்பவருக்கு இச்சலுகை கிடைக்கும். (மேற்படி அரசாணை)

4. வெளி மாநிலங்களில் இறக்க நேரிடின் விமானம் மூலமாகவும் சடலத்தை எடுத்துச் செல்லலாம். (அ.ஆ.எண். 1010, உள்துறை. நாள் 17.4.86)

5. தேவைப்பட்டால் வாடகை வண்டி அமர்த்த வேண்டியது சம்பந்தப்பட்ட அலுவலரின் கடமையாகும். இதற்கான செலவினம் அலுவலக Contigencies–ல் இருந்து செலவழிக்கப்படும். (அ.ஆ.எண். 74263/72–10 உள்துறை நாள் 4.5.73)

6. குடும்பத்தினர் இதற்கான செலவினத்தை முதலில் செலவு செய்து இருப்பின் அவர்களுக்கு இத்தொகை ஈடு செய்யப்படும். (மேற்படி குறிப்பாணை)

7. பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளத்திற்கும் சடலத்தை எடுத்துச் செல்லலாம். (அ.ஆ.எண். 702, உள்துறை நாள் 10.3.80)

8. நெருங்கிய உறவினர்/குடும்பத்தினரும் சடலத்துடன் பயணம் செய்யலாம். (மேற்படி அரசாணை)

9. அயற் பணிக்காலத்தில் இறக்க நேரிடின், இச்செலவினத்தை அயற் பணியினர் ஏற்பர் (அரசு கடித எண் 450004/86–6, நிர்வாகம் நாள் 2.2.87 மற்றும் அ.ஆ.எண் 420 நிர்வாகத்துறை, நாள் 27.9.90)

தமிழக அரசு ஓய்வூதியர்கள் இறக்க நேரிடும் போது குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்தின்படி மனைவி / கணவன் / ஓய்வூதியர்களின் வாரிசு ஒருவருக்கு ரூ.50000 நிதி 07.06.2013 முதல் வழங்கப்படுகிறது. இதற்கான ஓய்வூதியத்தில் இருந்து மாதாந்திர பிடித்தம் தொகை ரூ.80ல் இருந்து ரூ 150 ஆக 01.07.2021 முதல் உயர்த்த ப்பட்டது. அரசு துறை (நிலை) எண் 164 / நதி (ஓய்வூதியம்) துறை நாள் 07.07.2021.

**இறந்த அரசு ஊழியரின் குழந்தைகள் கல்விக்கான சலுகைகள் (அரசு ஆணை எண் 1699, கல்வித்துறை நாள் 14.9.78)**

1. பட்டப்படிப்பு பயிலும் குழந்தைகளுக்கு (மாலை நேரக் கல்லூரி உட்பட) ட்யூஷன் பீஸ் மற்றும் சிறப்புக் கட்டணங்கள் ஏதும் கட்டத் தேவையில்லை.

2. ஆங்கில வழிக்கல்வி பயின்றாலும் இச்சலுகை கிடைக்கும். (அரசு ஆணை எண். 864, கல்வித்துறை நாள் 21.5.80)

3. குடும்பத்தினர் நிதி நிலையை இச்சலுகை அளிக்க கணக்கில் கொள்ளத் தேவையில்லை.

4. கட்டணம் ஏதும் முன்னரே செலுத்தப்பட்டிருப்பின் அது திருப்பி வழங்கப்படும். (அரசு கடித எண் 21710/எஸ்/1–79–6 கல்வித்துறை, நாள் 5.10.79)

5. சொந்த ஊரிலிருந்து 2கி.மீ. தூரத்திற்கு மேலாக கல்லூரி இருப்பின் குழந்தைகள் விடுதியில் தங்கும் செலவு ஈடு செய்யப்படும். (அரசு கடித எண் 109168/ஆர்.எ.2.82–2 நாள் 9.4.1983)

6. கட்டணம் வாங்கும் கல்லூரியில் பயின்றால் இச்சலுகை கிடைக்காது.

7. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்வி பயில்பவருக்கும் இத்தொகை கிடைக்கும்.

8. ஒரு வருடம் தேர்வில் தேறவில்லையென்றால் அந்த ஆண்டு மட்டும் இச்சலுகை கிடைக்கும்.

9. கல்லூரி வழங்கும் உதவித்தொகை இதைவிட அதிகமாக இருப்பின் அதனைப் பெறலாம். (அரசு குறிப்பாணை எண். 5094/S1/78–3 கல்வி, நாள் 7.12.78)

**10.** பள்ளிக் கல்வி பயில்பவருக்கும் கீழ்கண்ட அளவில் ஆண்டுதோறும் புத்தகம் வாங்க உதவித்தொகை கிடைக்கும்.

1) 1 முதல் 5 வகுப்புகள் ரூ. 20 2) 6 முதல் 7 வகுப்புகள் ரூ. 30

3) 8 முதல் 10 வகுப்புகள் ரூ. 40 4) 11 முதல் 12 வகுப்புகள் ரூ. 50

**11.** முன்னமே இதற்கான கட்டணம் செலுத்தப்பட்டிருப்பினும் இத்தொகையை மீண்டும் பெறலாம். (அரசு குறிப்பாணை எண். 1275 கல்வித்துறை நாள் 7.8.87)

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

**1.** 1.4.2003 முதல் புதிதாக பணியில் சேர்பவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. (அ.ஆ.எண். 430 நிதி (ஓய்வூதியம்) நாள் 6.8.04)

**2.** 1.4.2003 முதல் நியமிக்கப்படும் புதிய அரசு ஊழியர்களுக்கு இத்திட்டத்தில் சேருவது கட்டாயமாகும்.

**3.** ஒவ்வொரு ஊழியரும் மாதா மாதம் தனது அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதத்தை சந்தாவாக செலுத்துவார். இந்தத் தொகைக்கு இணையான தொகையை அரசு தனது பங்காக செலுத்தும். பொது நல நிதி பிடித்தம் போல் இத்திட்டத்திற்கு தொகை பிடித்தம் செய்யப்படும்.

**4.** பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர அரசு ஊழியர்கள் கொடுத்த விண்ணப்பத்தினை பரிசீலித்து, மாநில கணக்காயர் ஒவ்வொருவருக்கும் ஒரு Index Number ஒதுக்கீடு செய்வார். (31.12.2013 முடிய)

தற்போது 1.1.2014 முதல் பங்கேற்பு ஓய்வூதிய கணக்குகள் Data Centre-ல் பராமரிக்கப்படுகிறது. (அரசாணை எண். 463, நிதி (பி.ஜி.சி) துறை, நாள் 27.12.2013) அரசு கடித எண்.59, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 22.02.2016)

**5.** திட்டத்தில் சேரும்போதும் சந்தாதாரரின் திருமணத்தின்போதும் அதற்கு பின்பு ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒரு முறையும் வாரிசுதாரர் நியமனம் தர வேண்டும்.

**6.** Index No. பெற்ற பின்புதான் பணப்பிடித்தம் துவங்க வேண்டும்.

**7.** பணிப்பதிவேட்டின் முதல் பக்கத்தில் Index No. ஐ குறிக்க வேண்டும்.

**8.** நிலுவைச் சந்தாவை நடப்புச் சந்தாவோடு சேர்த்து நடப்பு மாதத்திற்கு, ஒரு தவணை நிலுவைச் சந்தா ஒரு தவணை என்று பிடிக்க வேண்டும். (அ.ஆ. எண். 259நிதி (ஓய்வூதியம்) நாள் 6.8.03 மற்றும் அரசு ஆணை எண் 430 நிதி (ஓய்வூதியம்) நாள் 6.8.04)

**9.** பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் ஊழியர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் பொருந்தாது (அ.ஆ.எண். 364, நிதித்துறை நாள் 27.5.04)

**10.** பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட சந்தா மற்றும் நிலுவை சந்தா பிடித்தம் குறித்த தெளிவுரை. (அரசு கடிதம் எண். 35574/பி.ஜி.சி./201–13/23.4.2012)

**11.** பங்களிப்பு ஓய்வுதிய திட்டத்தின் கீழ் பணி ஓய்வு / பணி ராஜினாமா, இறப்பு மற்றும் பணியிலிருந்து நிறுத்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து திரட்டப்பட்ட



நிதிபங்களிப்பு மற்றும் அரசின் பங்களிப்பு, சம்பந்தப்பட்ட நாக்கு கணக்கு தலைப்புகளில் தீர்வு செய்யப்படும். (அரசாணை எண்.59 நிதி (பிஜிசி) துறை, நாள் 22–02–2016)

12) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (CPS) உள்ளவர்களுக்கு கடைசி பங்களிப்பு தொகை வழங்கும் (CPS Final Payment Authorisation) அதிகாரம் இதுவரை கருவூலக் கணக்கு துறை முதன்மைச் செயலாளருக்கு இருந்ததிற்கு பதிலாக தற்போது தலைமை கணக்கு அலுவலருக்கு (Chief Accounts Officer) வழங்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண். 236 நிதி (PGC-1) துறை நாள்:4.8.2017. பங்களிப்பு ஓய்வுதியத் திட்டத்தில் இருந்து தமிழ்நாடு ஓய்வூதியத் திட்டம் 1978க்கு மாற்றலுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டும் செலுத்திய பங்களிப்பு தொகை மற்றும் வட்டியினை அவர்களது பொது வருங்கால வைப்பு நிதி கணக்கிற்கு மாற்றுவது தொடர்பாக ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண். 288 நிதி (PGC) துறை நாள்:10.11.2017.

## XVI. கருணை அடிப்படையிலான பணி நியமனம்

### இறந்தவரின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு

**1.** குடும்ப உறுப்பினர் ஏற்கனவே பணியில் இருந்து இறந்து போன அரசு ஊழியரின் குடும்பத்தை காப்பாற்றாமல் தனியாக வசித்து வந்தாரானால், இந்த நேர்வில் வேறு ஒரு குடும்ப உறுப்பினர் கருணை அடிப்படையில் நியமனம் செய்யக் கோரலாம். (அரசாணை எண். 155, தொழிலாளர் துறை, நாள் 16.7.93) அரசு கடித எண் எம்.எஸ்.எண். 20/g/2002 பநிசீதுறை நாள் 01.03.02ன்படி Filing up of posts, through appointments on compassionate grounds shall be permitted in the essential category & posts subject to satisfaction of necessary qualifications and after placing the proposals in the staff committee for approval explaining the essentiality in filling up of those posts.

சி&டி பிரிவு பதவிகளுக்கு கருணை அடிப்படையில் நியமனம் வழங்கலாம் என ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அ.ஆ.எண். 101 L&E/19.7.06)

பணி நியமனம் வழங்கும் அலுவலர் அரசு ஊழியர் இறப்பு நாளை கணக்கிட்டு முதுநிலை வழங்கி நியமனம் வழங்கலாம். (அ.ஆ.எண். 1351 L&E 4.10.06)

அரசு கடித எண் (பலவகை) நாள் 202 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 8.10.07ல் The crux of the matter is that the time limit shall be 3 years for filing of application from the date of death of Government servant is applicable to all cases, including where the Government servant has died in service even prior to 26.6.1995 also என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் 18 வயதிற்குட்பட்ட வாரிசுதாரருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம். (அரசு கடித எண்.66813/க்யூ1/92–3/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 22.11.91)

கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பிக்க அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகள் என கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(அரசாணை நிலை எண்.120, தொ.ம.வே.வா.து., நாள் 26.6.95)

அரசுப் பணிக்கான குறும வயது 18 எனவும், காலிப் பணியிட அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலை திங்கள் முதல் நாளில் 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். இந்த ஆணை 23.8.05 முதல் நடைமுறைக்கு வருகிறது. இவ்வாணை, கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கும் பொருந்தும். (அரசாணை எண்.112, ப.(ம)நி.சீ.துறை, நாள் 23.8.05)

இதர வழிகாட்டுதல்களுடன் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பாக, உச்சநீதிமன்றத்தால் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்க வேண்டும். (அரசாணை (நிலை) எண். 42, தொ.ம.வே.வா.துறை, நாள் 12.3.07)

i) 23.8.05க்கு முன்னர் பணிநியமனம் கோரி 3 ஆண்டுக்குள் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 18 வயதினை நிறைவு பெறாமல் இருந்தாலும், ஏனைய பிற தகுதிகளை நிறை வு செய்திருந்தால் தகுதியானதாக கருதப்பட வேண்டும்.

ii) 23.8.05 முதல் குறும வயது 18 என்பதால், அரசு கடித எண்.66813/க்யூ1/91–3, தொ.ம.வே.வா.துறை, நாள் 22.11.91ல் தெளிவுரைகள் நீக்கப்பட்டதாக கருதப்பட்டு 23.8.05க்கு பின்னர் 18 வயது நிரம்பியவர் மட்டுமே பணி நியமனம் பெற தகுதியானவர் என கருதப்பட வேண்டும்.

iii) அரசு ஊழியர் இறந்து 3 ஆண்டிற்குள் விண்ணப்பம் அளிக்கும் நாளினையே கணக்கில் கொண்டு, வயது மற்றும் கல்வித்தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

iv) மேலே பத்தி (iii)ல் உள்ள தெளிவுரை 4.5.2010 முதல் நடைமுறைக்கு வரும். (அரசு கடித (நிலை) எண். 86/க்யூ.1/2010–2/தொ.ம.வே.வா.துறை/நாள் 4.5.10)

கருணை அடிப்படையில் நியமனம் கோரி விண்ணப்பம் அனுப்பும்போது கீழ்குறிப்பிட்ட ஆவணங்களை இணைத்து அனுப்பிட வேண்டும்.

அரசு கடித (நிலை) எண் /2 தொழிலாளர் & வேலைவாய்ப்பு துறை நாள் 04–01–2006 இணைக்கப் பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

இப்படிவத்தில் கலம் 4–ல் திருத்தமும் கலம் 18 நீக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

அரசு கடித (நிலை) எண் 219/க்யூ.1/2019 தொ.வே.வா.துறை நாள்: 09.11.2019)

i) இறந்த அரசு அலுவலரின் மனைவி/கணவரின் விண்ணப்பம் (தகுந்த அலுவலரால் மேலொப்பம் செய்யப்படல் வேண்டும்)

ii) பணி வேண்டும் வாரிசுதாரர் விண்ணப்பம் (தகுந்த அலுவலரால் மேலொப்பம் செய்யப்படல் வேண்டும்.

iii) விண்ணப்பதாரரின் கல்வித்தகுதி சான்றிதழ் (அசலில்)

iv) விண்ணப்பதாரரின் பள்ளி இறுதிச் சான்றிதழ் (அசலில்)

v) விண்ணப்பதாரரின் மாற்றுச் சான்றிதழ் (அசலில்)

vi) விண்ணப்பதாரரின் நன்னடத்தை சான்றிதழ் (அசலில்)

vii) இறப்புச் சான்றிதழ் (அசலில்)

viii) தகுந்த அலுவலரால் மேலொப்பம் செய்யப்பட்ட இதர வாரிசுதாரர்களின் ஆட்சேபனையின்மை கடிதங்கள் (தனித்தனியாக)



ix) வாரிசு சான்றிதழ் (அசலில்)

x) குடும்பத்தில் அசையும் அசையா சொத்து விவரம் சான்று (வட்டாட்சியர்) (அசலில்)

xi) குடும்பம் வறுமையில் உள்ளது என வட்டாட்சியர் சான்று

xii) குடும்பத்தில் எவரும் அரசுப் பணியிலோ வேறு பணியிலோ இல்லை என்பதற்கான வட்டாட்சியரின் சான்று (அசலில்)

xiii) இறந்த அரசு அலுவலர் மனைவி மறுமணம் செய்து கொள்ளவில்லை என்பதற்கான வட்டாட்சியரின் சான்று (அசலில்)

xiv) குடும்ப வருமானச் சான்று (வட்டாட்சியர்) (அசலில்)

xv) குடும்ப நலநிதி பணிக்கொடை ஆகியவற்றில் வரவு–செலவு விவரம் (தகுந்த அலுவலரால் மேலொப்பம் இடப்பட வேண்டும்.)

xvi) தகுந்த அலுவலரால் மேலொப்பம் செய்யப்பட்ட எந்த மாவட்டத்திலும் பணிபுரிய சம்மதம் தெரிவிக்கும் கடிதம்.

xvii) விண்ணப்பதாரரின் உறுதி மொழிச் சான்று (அ.ஆ.எண். 29, நாள் 7.3.09ன்படி)

xviii) அரசுக் கடித எண் 31 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 25.2.94ன்படி அமைந்த படிவத்தின் விவரங்கள்

xix) இறந்த அரசு அலுவலரின் பணிப் பதிவேடு

xx) அரசிடமிருந்து பெறப்பட்ட தொகையைக் கொண்டு சுயமாக தொழில் நடத்த இயலுமா என்பது குறித்து விண்ணப்பதாரரின் உறுதிமொழி (தகுந்த அலுவலரால் மேலொப்பம் இடப்பட வேண்டும்.)

2. மனைவி/கணவன், மகன், கல்யாணமாகாத மகள் ஆகியோர் கருணை அடிப்படையில் நியமனம் பெற்றிட தகுதி உடையவர்கள் ஆவர். (அ.ஆ.எண். 560, தொழிலாளர் துறை, நாள் 3.8.77) திருமணமாகாத மகள் என்ற நிலையில் விண்ணப்பம் அளித்து பணி நியமனம் செய்யப்படுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இதர தகுதிகளை பெற்றிருந்தால் பணி நியமனம் செய்யலாம்.

(i) திருமணமாகாத நிலையில் பிற வாரிசுதாரர்கள் அளித்த மறுப்பின்மை சான்றிதழ். திருமணமானபின்னர் அப்பெண்ணுக்கு பணி அளிக்கும்போது மீண்டும் மற்ற வாரிசுதாரர்கள் மறுப்பின்மை சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(ii) திருமணமான பின்னர் பணி வாய்ப்பு பெறும் தனியர் தனது பெற்றோரின் குடும்பத்திற்கு உதவி புரியும் வகையில் உறுதி ஆவணம் வழங்க வேண்டும்.

(iii) அப்பெண்ணை திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நபர் எதிர்காலத்தில் அப்பெண்ணின் பெற்றோருக்கு செய்யும் உதவிக்கு மறுப்பு ஏதும் ஏற்படுத்த மாட்டேன் என உறுதி மொழியை அளிக்க வேண்டும். (அரசாணை நிலை எண்.165 தொ.மா.வே.வா. துறை, நாள் 30.8.2010)

அரசு அலுவலர் இறந்த தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குத் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர் கருணை அடிப்படையில் நியமனம் கோரி இறந்த அலுவலர் பணியாற்றிய அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். (அ.ஆ.எண். 20, தொழில் துறை நாள் 26.6.95)

இறந்த அரசு ஊழியரின் பெண் வாரிசுதாரர் (மகள்) கருணை அடிப்படையில் பணிக்காக விண்ணப்பிக்கும்போது திருமணம் ஆனவராக இருந்தாலும், அவரது விண்ணப்பித்தினை ஏற்று கருணையடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படும்போது நிபந்தனைக்குட்பட்டு பரிசீலனை செய்யுமாறு ஆணை வழங்கப்பட்டது. அரசாணை எண்.78 நாள் 21.4.2017 தொ&வே (க்யூ 1) துறை

**3.** சட்டபூர்வமாக தத்து எடுக்கப்பட்ட மகன், சட்டப்பூர்வமாக தத்து எடுக்கப்பட்ட கல்யாணமாகாத பெண் ஆகியோரும் நியமனம் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஆனால் இறந்துபோன அரசு ஊழியர் தனது பணிக்காலத்தில் சட்டப்பூர்வமாக தத்து எடுத்து அதனை பதிவும் செய்திருக்க வேண்டும். (அரசு கடிதம் எண் 15672/எண் 1/78–2, தொழிலாளர் துறை 4.5.78 அரசு ஆணை எண் 2607 தொழிலாளர் துறை 20.11.81 அரசு ஆணை எண். 2899, தொழிலாளர் துறை நாள் 23.12.88)

**4.** கருணை அடிப்படையில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட விதவைகள் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டியதில்லை. (அரசு ஆணை எண். 654, சமூகநலத் துறை நாள் 23.4.87)

**5.** இறந்துபோன பெண் ஊழியரின் கணவரும் கருணை அடிப்படையில் நியமனம் பெற தகுதியுடையவர் (அரசு குறிப்பாணை 312575/76.2 தொழிலாளர் துறை நாள் 16.7.93)

**6.** கல்யாணமான மகள் ஆனால் கணவரால் கைவிடப்பட்டவர், விவாகரத்து பெற்ற மகள், விதவை மகள் குடும்பத்துடன் வாழ்பவர் ஆகியோர் கூட நியமனம் பெற தகுதியுடையவர்கள் (அரசு ஆணை எண். 155, தொழிலாளர் துறை நாள் 16.7.93)

**7.** இறந்துபோன பெண் அரசு அலுவலரின் கணவர் வருவாய்திறன் கொண்டவரெனில் குடும்பத்தில் இதர உறுப்பினருக்கு அரசு உத்தரவின்பேரில் வேலை அளிக்கப்படும். (அரசு கடிதம் எண். 4480/பி1/87–2 ப.ம.நி.சீ. துறை நாள் 11.2.88)

**8.** இறந்துபோன அரசு ஊழியரின் கணவர்/மனைவி பரிந்துரை செய்யும்பட்சத்தில் விதவை அல்லது விவாகரத்து பெற்ற மகளையும் நியமிக்கலாம். அரசு கடித எண் 2286/க்யூ1/90/2 தொழிலாளர் துறை 17.6.91 மற்றும் அரசு கடிதம் எண் 101806/ஏ1/ஓய்வு/91–1நிதி 4.10.91)

**9.** இறந்துபோன அரசு ஊழியரின் குடும்ப உறுப்பினர் யாராவது ஒருவர் வேலையில் இருந்துகொண்டு மாதாமாதம் ஊதியம் பெற்று வருவாரானால் இன்னொரு குடும்ப உறுப்பினருக்கு கருணை அடிப்படை நியமனம் பெற தகுதியில்லை. (அ.ஆ. 40, தொழிலாளர் துறை, நாள் 5.1.90)

**10.** ஒரு குடும்ப உறுப்பினர் ராணுவத்தில் பணிபுரிந்தால் இன்னொரு குடும்ப உறுப்பினருக்கு நியமனம் அளிக்கலாம். (அ.ஆ.எண். 1044, தொழிலாளர் துறை நாள் 23.11.90)

**11.** வேலையிலிருக்கும் குடும்ப உறுப்பினர் தனியாக வசித்து இறந்துபோன அரசு ஊழியரின் குடும்பத்தை ஆதரிக்காமல் இருந்தால் இன்னொரு குடும்ப உறுப்பினருக்கு வேலை தரலாம். நிலுவை இனங்களையும் அனுமதிக்கலாம். (அ.ஆ.எண். 155, தொழிலாளர் துறை நாள் 16.7.93, அரசு கடிதம் எண் 57630/க்யூ1/1.93–1 வேலை வாய்ப்புத் துறை நாள் 27.7.94)

**12.** தற்காலிக ஊழியர்களை சார்ந்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் நியமனம் பெற தகுதி இல்லை. (அ.ஆ. 560, தொழிலாளர் துறை நாள் 3.8.77)



**13.** ஓய்வு பெற்ற பிறகு இறக்கும் அரசு ஊழியரின் குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த சலுகை கிடையாது. (அரசு ஆணை எண். 1263, தொழிலாளர் துறை, நாள் 23.5.80)

**14.** ஓய்வு தேதிக்குப் பிறகு தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கப்பட்டிருப்பவர் இறக்க நேரிடின் அவருடைய குடும்ப உறுப்பினரும் கருணை அடிப்படையில் நியமனம் பெற தகுதியுடையவர்கள் (அரசு கடிதம் 43074/க்யூ/1–90 தொழிலாளர் துறை நாள் 4.3.91)

**15.** பணிநீக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கும்போது இறந்துவிட்டால் அவருடைய குடும்ப உறுப்பினருக்கு இந்த சலுகை உண்டு. (டபிள்யூ.பி.5329/1981 உயர்நீதிமன்றம் சென்னை, முதன்மை பொறியாளர் P.W.D (பொது) எதிர் – ஐ அமலேர்ப மாரி மற்றும் இதரர்கள்)

**16.** ஓய்வு தேதிக்குப் பிறகு கால நீடிப்பில் வேலை பார்க்கும் அரசு அலுவலர்களின் மகன்/மகள்களுக்கு இந்த சலுகை உண்டு. ஆனால், மறு நியமனம் பெற்றவர்களுக்கு இச்சலுகை கிடையாது. (அரசு ஆணை எண் 41, தொழிலாளர் துறை, நாள் 23.3.88)

**17.** இறந்து போனவரின் மனைவி/கணவர் கருணை அடிப்படை வேலை கோரி மனு சமர்ப்பிக்க வேண்டும். மனைவி/கணவன் அல்லது தகுதியுள்ள இதர குடும்ப உறுப்பினருக்கு வேலை நியமனம் தரப்படும். (அரசு ஆணை எண் 8, தொழிலாளர் துறை, நாள் 7.1.87)

**18.** இறந்தபோனவருக்கு இரண்டு மனைவிகள் இருக்கும் பட்சத்தில் யார் உண்மையில் வறுமையில் உள்ளவர்களோ அவருக்கு வேலை தரலாம். (அரசு கடிதம் எண். 125/81–85) அரசு ஊழியர் இறந்த நாளை கணக்கிட்டு முதுநிலை பணி நியமனம் வழங்க வேண்டும். (ஆணை எண். 135 L&E நாள் 4.10.06)

**19.** கொலை மற்றும் தற்கொலை மூலம் இறந்த அரசு ஊழியரைச் சார்ந்தவர்களுக்கும் பணி நியமனம் தரப்படும். (அரசு ஆணை எண் 560, தொழிலாளர் துறை நாள் 3.8.77)

**20.** இறந்தவரின் குடும்பத்திற்கு நில சொத்துக்கள் இருப்பினும் அதன்மூலம் கிடைக்கும் வருமானம் குடும்பத்தை சமாளிக்க போதுமானதாக இல்லையென்றால் விதவை யாரை தேர்ந்தெடுக்கிறாரோ, அந்த குடும்ப உறுப்பினருக்கு நியமனம் தரலாம். ஆனாலும், தாசில்தாரிடமிருந்து சான்று பெற்று தர வேண்டும். (அ.ஆ. எண். 155, தொழிலாளர் துறை நாள் 16.7.93)

**21.** குடும்ப உறுப்பினர் எவர் முதலில் ஏற்கக்கூடிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கிறாரோ அவருக்கு முதல் வாய்ப்பு தரப்படும். (அரசு கடித எண் 1499/பி/ 3/87–3, தொழிலாளர் துறை 23.5.88)

**22.** இறந்து போனவரின் கணவர்/மனைவியும் இறந்து போயிருந்தால் குடும்ப உறுப்பினரில் மூத்த தகுதியுள்ள நபருக்கு மற்றவரின் சம்மதத்துடன் பணி தரலாம். (அரசு கடித எண் 4480/பி1/87–3, தொழிலாளர் துறை 11.2.88)

**23.** மருத்துவ ரீதியாக தகுதியிழந்து ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் இறந்தாலும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்த சலுகை உண்டு. (அரசு ஆணை எண் 1/82–2. தொழிலாளர் 4.10.92) 53 வயதுக்குள் மருத்துவ ரீதியாக தகுதியிழப்பு பெற்றிருக்க வேண்டும். (அரசு கடிதம் 168/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை 19.10.2000)

**24.** தமிழ்நாடு பொது நிர்வாக ஆணையத்தின் ஆளுகைக்குட்பட்ட பதவிகளுக்கும் **9.4.90**லிருந்து இந்த மருத்துவ ரீதியாக தகுதியிழந்த அரசு அலுவலர்களின் மகன்/மகள் விண்ணப்பிக்கலாம். (அ.ஆ.எண் **554**, தொழிலாளர் துறை, நாள் **9.4.90**)

**25.** மகன்கள், கல்யாணமாகாத மகள்கள் ஆகியோர்கள் முப்பத்தைந்து வயதிற்குள்ளும் பணியமர்த்தப்படலாம். (அ.ஆ.எண். **1579**, தொழிலாளர் துறை நாள் **21.7.81**, அ.ஆ.எண் **2440** தொழிலாளர் துறை நாள் **19.11.82** அ.ஆ.எண். **39924**/க்யூ **1/95–1** தொழிலாளர் துறை நாள் **11.10.95** அ.ஆ.எண். **20** ப.ம.நி.சீ. துறை நாள் **22.2.99** மற்றும் அ.ஆ.எண். **20** ப.ம.நி.சீ. துறை நாள் **2.2.98**) அரசாணை எண்.78, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யு1) துறை நாள்: 21.04.2017–ன் படி பணியிடையே மரணமடைந்த அரசு ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களும் கருணை அடிப்படை பணி நியமனம் பெறலாம். இறந்துபோன பெண் ஊழியரானால் கணவரின் வயது வரம்பு **50** இயலாமையால் ஓய்வானால் கணவர்/மனைவி நியமன வயது **50** (அ.ஆ.எண் **83** L&E நாள் **13.6.97**)

**26.** மருத்துவ நிறுவனங்களில் ஆயாக்கள், பெருக்குபவர்கள், சுகாதார வேலையாட்கள், மருத்துவமனை ஊழியர்கள், சமையல்காரர்கள், சமையல் உதவியாளர்கள், தண்ணீர் வைக்கும் பணியாளர்கள் பதவிகளை வயது வித்தியாசமில்லாமல் விதவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பணி அமர்த்தலாம். (அரசு ஆணை எண் **1232** நிர்வாகம் நாள் **30.12.84**)

**27.** காணாமல் போன அரசு ஊழியர் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் இறந்துவிட்டார் என்று கூறி அறிவிப்பு செய்த நாளிலிருந்து மூன்று வருடங்களுக்குள் சட்டபூர்வ வாரிசு விண்ணப்பிக்க வேண்டும். (அரசு ஆணை எண். **78**, தொழில் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் **17.7.98**)

**28.** கல்யாணமாகாத அரசு ஊழியர் இறந்தால் அவருக்கு கல்யாணமாகாத சகோதரர் அல்லது சகோதரி இருக்கும் பட்சத்தில் அவரும் நெருங்கிய உறவினர் ஆவார். (அ.ஆ.எண். **134**, தொழில் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் **22.10.98**). அரசாணை எண்.80, தொ.வே(க்யூ) துறைநாள் **02–03–2016**

**29.** தற்காலிகமாக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன் முறைப்படுத்த திருத்தி அமைக்கப்பட்ட 18 கலங்கள் கொண்ட படிவம் மற்றும் முக்கிய சான்றுகளை மட்டுமே தேர்வாணையத்தின் இசைவிற்கு அனுப்ப வேண்டும் (அரசாணை (நிலை) எண்.235, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ–1) துறை, நாள் **26.9.2013**)

**30. 01.02.2016** வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்திட பின்பற்றப்பட்ட வேண்டிய ஆணை மற்றும் வழிமுறைகள் (அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ–1) துறை, நாள் **02.03.2016**)

தமிழ்நாடு தேர்வாணையத்தின் கருத்தின் அடிப்படையில் தேர்வாணைய வரம்பின் உட்பட்ட பதவிகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த தேர்வாணையின் ஒப்புதல் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண் : 100/ ப நி.சீ.துறை (M) நாள் **01.08.2018**

கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு தற்போது கூடுதலான நடைமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. (அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு / கியு / துறை நாள்:23.01.2020)



கருணை அடிப்படை பணி நியமனம்

அரசு ஆணை (நிலை) எண்: 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி (Q 1) துறை நாள்: 08.03.2023ன் படி கருணை அடிப்படையிலான நியமனத்திற்கான விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

இறந்த அரசு ஊழியரின் மகன், மகள் சகோதரர் மற்றும் சகோதரி கருணை அடிப்படையிலான நியமனம் பெற வயது உச்சவரம்பு 40 வயதினை பூர்த்தி அடையாதவராக இருத்தல் வேண்டும் (விதி எண் 6(1)(b).

இறந்த / மருத்துவ இயலாமையினால் ஓய்வில் செல்பவரது கணவன் / மனைவி அல்லது திருமணம் ஆகாமல் இறந்துபோன அரசு ஊழியரின் பெற்றோர் கருணை அடிப்படையிலான நியமனம் பெற வயது உச்சவரம்பு 50 வயதினை பூர்த்தி அடையாதவராக இருத்தல் வேண்டும் (விதி எண் 6(1)(a).

கருணை அடிப்படையிலான நியமனம் பெற தகுதி வாய்ந்த குடும்ப உறுப்பினர்கள் இறந்த / மருத்துவ இயலாமையின் காரணமாக ஓய்வில் செல்லுபவர் இறுதியாக பணிபுரிந்த அலுவலகத் தலைவருக்கு எழுத்து மூலமாகவோ அத்துறைக்கென உருவாக்கப்பட்டுள்ள வலைத்தளம் மூலமாகவோ நியமனம் வேண்டி விண்ணப்பிக்கலாம். விதி எண்: 8(1)

கருணை அடிப்படையிலான நியமனம் கோரும் விண்ணப்பதாரர், கோரும் பதவிக்கான வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியுடன் தமிழில் போதுமான தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். (விதி எண்:7).

கருணை அடிப்படையிலான நியமனத்திற்கு இடஒதுக்கீடு விதி பொருந்தாது (விதி எண்: 11)

'C' வகை பணியிடத்திற்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்யப்படும்போது, துறையிலுள்ள 'C' வகை பணியிடங்கள் அனைத்தின் மொத்த பணியிடங்களில் (நிரந்தரம் / தற்காலிகம் எதுவாகினும் 5 சதவீகிதத்திற்கு மிகாமல் நியமனம் செய்யப்பட வேண்டும். (விதி எண் 12(1))

'D' வகை பணியிடங்களுக்கு கருணை அடிப்படையிலான நியமனங்களுக்கு உச்சவரம்பு இல்லை. (விதி எண்: (12(2)).

பணியிலிருக்கும்போது இறந்துபோகும் ஊழியர் குறித்த தகவலை உடனடியாக அலுவலகத் தலைவர் அவரது துறைத் தலைமைக்கு தெரிவிக்க வேண்டும். (விதி எண்: 14 (1) அலுவலகத் தலைவர் இறந்த அரசு ஊழியரின் குடும்ப உறுப்பினர்களுக்கு கருணை அடிப்படையிலான நியமனம் வழங்கும் திட்டம் குறித்த தகவலை எழுத்து மூலமாக 30 தினங்களுக்குள் தெரிவித்து, அதற்கான, ஒப்புகை இறந்த அரசு ஊழியரது குடும்ப உறுப்பினர்களிடமிருந்து பெற வேண்டும். (விதி எண்: 14(2)

கருணை அடிப்படையிலான நியமனம் வழங்கிட அரசு ஊழியரின் இறந்த நாள், காணாமல் போன அரசு ஊழியராக இருப்பின் அவர்களின் இறந்த நாளாக நீதிமன்றம் அறிவிக்கும் நாள், மருத்துவ இயலாமை காரணமாக அரசு

ஊழியர் ஓய்வு பெறும் நாள் இதன் அடிப்படையிலேயே முன்னுரிமை பின்பற்றப்பட வேண்டும். (விதி எண்: 13)

கருணை அடிப்படையிலான நியமனம் வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் நியமனம் வழங்கிட வகுக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றிருக்காத நிலையில் விண்ணப்பங்கள் ஒரு மாத காலத்திற்கும் நிராகரித்து, அதன் விபரத்தை உரிய மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். (விதி எண்.14(4)

நிராகரிக்கப்படும் விண்ணப்பத்தின் மீது துறைத் தலைமைக்கு இரு மாதங்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

துறைத்தலைமையால் நிராகரிக்கப்படும் விண்ணப்பம் பெறப்பட 15 தினங்களுக்குள் அரசுக்கு முறையீடு செய்து விண்ணப்பிக்கலாம் (விதி எண்: 14(5)

கருணை அடிப்படையிலான நியமனம் வழங்கிட பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது நியமனம் வழங்கிட காலிப்பணியிடம் துறையில் இல்லாத நிலையிலும் மற்றும் மூன்று மாதங்களுக்குள் காலிப்பணியிடம் ஏற்பட வாய்ப்பு இல்லாத நிலையிலும், நியமனம் கோரும் விண்ணப்பங்களை ஊழியர் இறுதியாக பணிபுரிந்த அலுவலக தலைமை மூலமாக அம்மாவட்ட ஆட்சியருக்கு உரிய அறிக்கையுடன் பரிந்துரை செய்ய வேண்டும். (விதி எண்: 14(6))

அதேபோன்று துறையில் நிரப்பப்பட வேண்டிய காலிப்பணியிடத்திற்கான கருணை அடிப்படையிலான நியமனத்திற்கு வழங்க தகுதியான விண்ணப்பங்கள் இல்லாத நிலையில், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடமிருந்து, கருணை அடிப்படையிலான பணி நியமனம் வேண்டி காத்திருப்போர் யாரும் இல்லை என்பதற்கான உரிய சான்றிதழ் பெற்ற பின்னரே, தேர்வாணையம் மூலமாகவோ வேலை வாய்ப்பு பயிற்சி, இயக்குநரகம் மூலமாகவோ நிரப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும் (விதி எண்: 14(9).

விதி எண்3–ல் உபவிதி (2)–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தகுதியான குடும்ப உறுப்பினர் கருணை அடிப்படையிலான நியமனம் வேண்டி விண்ணப்பித்திருக்கும் நிலையில், விண்ணப்பதாரரின் உடல்நிலை/ வேறு இதர காரணங்களுக்காக, தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு வேறு ஒருவருக்கு நியமனம் வழங்கிட மாற்று விண்ணப்பம் ஓராண்டு காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம். இதனை பணி நியமன அலுவலர் அனுமதிக்கலாம். (விதி எண்:9)

மாற்று விண்ணப்பம் ஒரு முறைக்கு மேல் அனுமதி இல்லை நியமனம் வழங்கிய பிறகு மாற்று விண்ணப்பத்திற்கு அனுமதி இல்லை விதி எண்: (9(1)

விண்ணப்பதாரர் இயற்கை எய்தும் பட்சத்தில் விதி 3–ல் உப விதி (2)– ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, அதே குடும்பத்தில் உள்ள தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு நியமனம் கோரி மாற்று விண்ணப்பம் அளிக்கலாம். விதி எண்: 9(2)

கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்களது பணியினை, பணி நியமன அலுவலரே, விதிகளுக்கு உட்பட்டு, தகுதி அடிப்படையில் பணியில் சேர்ந்த ஓராண்டிற்குள் வரன்முறை செய்யலாம். (விதி எண்: 16) இப்பணி நியமனத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி குறித்த விதித்தளர்வு அளிக்க இயலாது. (விதி எண்.17)

கருணை அடிப்படையிலான நியமனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள இந்த விதிகளினால் ஏற்கனவே நியமனத்திற்காக விண்ணப்பித்துள்ளவர்கள் அல்லது கருணை அடிப்படையில் எந்த பதவியில் நியமனம் பெற்றுள்ளவர்களானாலும் இந்த விதி நடைமுறைப்படுத்தப்படுவதினால். எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தக் கூடாது. (விதி எண்: 19)



## குடும்ப பாதுகாப்பு நிதி

1. 1.7.96 முதல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 1,00,000 அளிக்கப்பட்டு வந்தது. (அ.ஆ.எண். 501 நிதி (பென்ஷன்) துறை நாள் 14.8.96) இதற்கு மாதந்தோறும் ரூ. 20 சந்தா வசூலிக்கப்பட்டது. (அ.ஆ.எண். 483, நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 12.9.97)

1.2.2016 முதல் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ. 1,50,000லிருந்து (Death of Govt. Servant while in service) ரூ.3 லட்சம் ஆக உயர்த்தப்பட்டது. இதற்கு மாத சந்தா மாதம் ரூ. 60/– Wef 01.02.2016 (vide Go.No. 57/ Fin (P) Date of. 22-02-2016) ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அ.ஆ.எண்: (நிலை) 197 நிதி (ஓய்வு) துறை நாள்: 01.09.2021–ன்படி ரூ.3,00,000லிருந்து ரூ.5,00,000/–ஆக உயர்த்தப்பட்டது. மாத சந்தா ரூ.110ஆக 01.09.2021 முதல் உயர்த்தப்பட்டது.

2. ஓய்வு பெற்று வீட்டுக்குச் சென்ற அன்று இரவு 12 மணிக்குள் இறந்தாலும் இத்தொகை கிடைக்கும். (அரசு கடித எண் 113476/ஓய்வு/89–7, நிதி நாள் 10.4.90)

3. முறையாக பணியமர்த்தப்பட்ட தற்காலிகப் பணியாளர் உள்ளிட்ட அனைவரும் இத்திட்டத்தில் சேர தகுதியுடையவர்கள்.

4. தொகுப்பூதியம் பெறுபவர்கள் part Time ஊதியம் பெறுபவர்கள் (2.12.92க்கு முன்னர் வேலை வாய்ப்பு நிறுவனத்தை கலந்து ஆலோசிக்காமல் நியமனம் ஆனவர்கள் உட்பட) honorarium பெறுபவர்கள் சத்துணவில் பணிபுரிபவர் ஆகியோரும் இத்திட்டத்தில் சேரலாம். (அ.ஆ.எண். 1151, நிதித்துறை நாள் 7.11.90 மற்றும் அரசு கடித எண் 145089/ஓய்வு/90–1 நிதித்துறை நாள் 25.2.91 மற்றும் அ.ஆ.எண். 435 நிதி நாள் 17.8.91)

5. காணாமல் போனவர் ஏழு ஆண்டு வரை திரும்பவில்லை என்றால் Indian Evidence Act படி குடும்பத்தினர் நீதிமன்றத்தில் காணாமல் போனவர் இறந்ததாக கருதப்படலாம் என ஆணை பெற்று வழங்கினால் இத்தொகை வழங்கலாம். தவிரவும் காணாமல் போனவுடன் காவல்துறைக்கு தகவல் தெரிவித்து F.I.R. பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த உடன் மேற்படி ஊழியர் கண்டுபிடிக்க முடியவில்லை என காவல் துறையினர் சான்றளிக்க வேண்டும். (அரசாணை எண் 43, நிதித்துறை நாள் 22.1.91 மற்றும் 21396ஏ/ஓய்வூதியம்/91–2 நிதித்துறை நாள் 9.4.91)

6. வாரிசுதாரர் ஒருவரை இதற்கென ஊழியர் நியமனம் செய்ய வேண்டும். மனைவி/கணவன் உயிரோடு இருக்கும்பொழுது வேறு ஒருவரை வாரிசாக நியமனம் செய்யக்கூடாது. அப்படியே கணவன், மனைவி உயிருடன் இருக்கும்பொழுது நாமினேஷன்படி வேறு யாருக்கும் வழங்கக்கூடாது. கணவன்/மனைவி உயிரோடு இல்லையென்றால்தான் சட்டபூர்வ வாரிசு சான்றுபடி எல்லோருக்கும் சம விகிதங்களில் வழங்க வேண்டும். (அரசு கடித எண் 66491, ஓய்வூதியம் 94–7 நிதி நாள் 27.3.96) மனைவி இல்லை என்றால் குழந்தைகள் தந்தை/தாயார் என்ற வரிசைப்படிதான் நியமனம் செய்ய வேண்டும். (அரசு ஆணை எண். 690, நிதித்துறை நாள் 24.10.81) அரசு ஊழியராக பெற்றோரைச் சார்ந்த பிள்ளைகள் என்பவர் 25 வயது நிரம்பப் பெறாதவராகவும் திருமணம் ஆகாதவராகவும் அரசு/தனியார்/ சுயமாக பணிகளில் ஈடுபடாதவராகவும் இருக்க வேண்டும். (அரசு கடிதம் எண். 34193/சம்பளங்களில்/20–1/நிதி சம்பளங்கள் துறை நாள் 8.6.2000)

7. குடும்பம் இல்லாத ஊழியர்கள் இந்த திட்டத்தில் சேருவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

8. வாரிசுதாரர் நியமனம் முறைப்படி இல்லாதபட்சத்தில் உயிரோடு உள்ள வாரிசுகளுக்கு இத்தொகை சமமாக பங்கிட்டு கொடுக்கப்படும். (அரசு ஆணை எண். 806 நிதித்துறை நாள் 21.9.83)

**9.** அலுவலகத் தலைவரே இதற்கானத் தொகையை வழங்குவார். தற்கொலை மற்றும் கொலை விஷயத்தில் காவல் துறைச் சான்று பெறாமலேயே இத்தொகை வழங்கலாம். அரசுக்கு இதற்கான கருத்துருவினை அனுப்பாமல் சாதாரணமாக ஒப்புதல் வழங்கும் அலுவலரே வழங்கலாம். (அரசாணை எண் 180, நிதித்துறை நாள் 27.3.89) அயல்பணி என்றால் துறைத்தலைவர் ஒப்புதல் வழங்குவார். (அரசு கடித எண் 16799/பென்ஷன்/74–1 நிதி நாள் 4.4.74 அரசு க.எண். 30469/பென்ஷன்/77–1 நிதி, நாள் 27.9.76 மற்றும் அரசு ஆணை எண் 475, நிதித்துறை நாள் 22.7.82)

**10.** இத்தொகையிலிருந்து நீதிமன்றம் எவ்வித பிடித்தமும் செய்ய இயலாது (அரசு ஆணை எண் 31, சட்டத்துறை நாள் 19.1.77)

**11.** ஈமச்சடங்கிற்கென வழங்கிய முன்பணம் தவிர, பிற பிடித்தங்களை இத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யக்கூடாது. (அரசு ஆணை எண். 339, நிதித்துறை நாள் 14.5.86)

**12.** அரசு ஊழியரை கொலை செய்ததாக சட்டபூர்வ வாரிசுதாரர் நாமினேஷன்படி தொகை பெற தகுதிபுடையவர் மீது கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பின், இத்திட்டத்தின் கீழ் அவருக்கு ரூ. 3,00,000 வழங்கக்கூடாது. (அரசு ஆணை எண். 197, நிதி (ஒய்வூதியம்) துறை நாள் 16.4.97)

**13.** தமிழ்நாடு அரசு ஒய்வூதிய குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ. 80 மாதந்தோறும் பிடிக்கப்பட்டு ஓராண்டிற்கு பிறகு ஒய்வூதியம் பெறுபவர் இறந்தால் ரூ. 50,000 தரப்படும். (அரசு ஆணை எண் 189, (ஒய்வூதிய துறை) நாள் 7.6.13)

**14.** புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 1.7.2014 முதல் பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த ஒய்வூதியம்/குடும்ப ஒய்வூதியர்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது. (அரசாணை எண்.171, நிதி (ஒய்வூதியம்) துறை, நாள் 26.6.2014)

## XVII. தற்காலிகப் பணிநீக்கம்

### பொதுவாக

**1.** கீழ் குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டுமே ஒரு ஊழியரைத் தற்காலிக பணிநீக்கம் செய்யலாம். (TNCS (D&A) Rule 17(e)

(i) அரசு விதிகளை மீறியது ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வது அல்லது கடுமையான குற்றச்சாட்டுகளின் பேரில்

(ii) ஒரு கிரிமினல் குற்றத்திற்காக நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால்

(iii) கையூட்டு, அரசு பணத்தை கையாடல், அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல், பினாமி சொத்து சேர்த்தல்.

**2.** தற்காலிக பணிநீக்க ஆணையில் குறிப்பிடப்படும் நாள் முதல் தற்காலிக பணிநீக்கம் செயலுக்கு வரும். (அரசாணை எண் 798 P&AR 10.8.84)

**3.** தற்காலிக பணிநீக்க காலத்தில் நிர்ணயிக்கிற இடத்தில்தான் வசிக்க வேண்டும்.

**4.** ஒய்வு பெறும் நாளன்று அல்லது சமீபத்தில் ஒய்வு பெற இருக்கும் நாளன்று ஒரு அரசு ஊழியரை தற்காலிக பணிநீக்கம் செய்யக்கூடாது. (அரசு கடித எண் 75671/நிர்வாகத்துறை/92–1 நாள் 9.12.92)



**5.** ஒழுங்கு நடவடிக்கை இனங்களில் கடும் தண்டனை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும் இனங்களில்கூட தற்காலிக பணிநீக்கம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். அதனையும் மீறி கடுங்குற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் மட்டும் சூழ்நிலையின் அவசியம் கருதி தற்காலிக பணிநீக்கம் செய்யப்படலாம்.

(அலுவலக நிர்வாகக் கையேடு பக்கம் 39)

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் விசாரனை மற்றும் குற்றவியல் நடவடிக்கை உள்ளவைகளை தவிர்த்து ஒய்வு பெறும் நாளில் அரசு பணியாளர்கள் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கும் நடைமுறை தவிர்க்க வேண்டும். அரசாணை (நிலை) எண். III / மனிதவள மேலாண்மைத் (எண்) துறை நாள் 11.10.2021

Suspension should not be resorted to as a matter of course in disciplinary proceedings even if they are likely to result in the imposition of a major penalty unless the nature of the misdemeanours of offence and other attendant circumstances also justify action.

**6.** தற்காலிக பணிநீக்க உத்தரவினில் தற்காலிக பணிநீக்கத்திற்கான காரணங்களை தெளிவாக குறிப்பிட்டாக வேண்டும். மழுப்பலாக Public Interest என மட்டும் குறிப்பிடுதல் கூடாது. (தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் எண் 196/91நாள் 18.6.91)

**7.** தற்காலிக பணிநீக்க உத்தரவினை எதிர்த்து தமிழ்நாடு சிவில் சர்வீஸ் விதிகள் 36ன் சீராய்வு (review) மனு சமர்ப்பிக்கலாம். (அடுத்த உயர் அதிகாரிக்கு)

தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் தனது O.A எண். 1961/1991 நாள் 18.6.92ல் கீழ்க்குறிப்பிட்டபடி தெரிவித்துள்ளது.

“The order of suspension should contain sufficient details as would enable him to make his representations to the higher authorities for review in excercise of the powers under Rule 36 of the TNCS (D&A) Rules vested with such authority. An order of suspension, though intention in nature and not the punishment by itselsf would still require reasons and with reference to such reasons and basis the concerned individual should also have an opportunity to make his representation to the higher authorities. The nature and scope of the information that could be furnished would be limited by the needs of the enquiry and the confidentiality required at that stage. But the applicant should have some indication of the reasons for which he was placed under suspension”.

### தற்காலிக பணிநீக்கத்தில் எத்தனை நாள் வைத்திருக்கலாம்?

**(1)** பொதுவாக 6 மாதங்களுக்குள் இதற்கான முடிவு எடுக்க வேண்டும். லஞ்சவியல் இயக்குநருக்கு வழக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பின் 12 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். Tribunal for Disciplinary Proceedings அனுப்பி வைக்கப்பட்டிருப்பின் ஓராண்டுக்குள் முடிக்க வேண்டும். இக்காலக் கெடுவுக்குள் முடிக்கவில்லை என்றால் காலக்கெடு நீடிப்பதற்கு அரசின்/துறைத் தலைவரின் ஆணை பெற வேண்டும். கிரிமினல் குற்றங்களுக்கு இக்காலக்கெடு பொருந்தாது. (அரசாணை எண் 211, பணியாளர், நாள் 27.2.80 மற்றும் அரசாணை எம்.எஸ்.எண். 2455, பணியாளர், துறை நாள் 12.3.81 அ.ஆ.எண் 40 ப.ம.நி.சீ. (எண்) துறை நாள் 30.1.96)

### அயற் பணிக்காலத்தில் பணிபுரியும்பொழுது தற்காலிகப் பணிநீக்கம்

**(1)** அயற் பணிக்காலத்தில் பணிபுரியும்பொழுது ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டால் அவருக்கு அரசாணை எண் 737, நிர்வாகத் துறை நாள் 24.7.89ல் கண்டுள்ளவாறு பிழைப்பூதியம் வழங்கப்படும்.

### தற்காலிகப் பணிநீக்கக் காலத்தில் ஊதியம் மற்றும் படிகள்

(1) தற்காலிகப் பணிநீக்க காலத்தில் 50% பிழைப்பூதியம் கிடைக்கும். ஏழாவது மாதம் முதல் 75% ஆக இந்த ஊதியம் உயர்த்தப்படும். தற்காலிக பணிநீக்க காலம் 6 மாதத்திற்கு மேல் நீட்டியதற்கு தனியர் காரணமாக இருப்பின் பிழைப்பூதியம் 25 சதவீதமாக குறைக்கப்படும். அலுவலத் தலைவரே அதனை ஒப்பளிக்கலாம். (எப்.ஆர்.53–1(எ)(1)

(2) இக்காலத்தில் வழங்கப்படும் ஊதியத்தைக் கணக்கிட்டு அதற்காக அகவிலைப்படி வழங்கப்படும். தற்காலிகப் பணிநீக்க காலத்தில் அகவிலைப்படி உயர்த்தப்பட்டாலும் அதுவும் கிடைக்கும். (எப்.ஆர். 53(1)(எ)(3) மற்றும் அரசு கடித எண் 11297/All–1/நாள் 2.9.76)

(3) இக்காலத்தில் நகர ஈட்டுப்படி மற்றும் வீட்டு வாடகைப்படி ஆகியவை முழு அளவில் கிடைக்கும். இதைக் குறைக்கக் கூடாது (எப்.ஆர். 53(1) மற்றும் 53 (1)(சி)

(4) இக்காலத்தில் மருத்துவப்படி கிடைக்காது (அரசு கடித எண் 30421/ படிகள்I/89–1, நிதி, நாள் 5.5.89)

(5) இக்காலத்தில் Cash Allowance கிடைக்காது. (G.O.Ms.No.108 P&A.R.dt.4.4.95)

### பிழைப்பூதியத்தில் செய்யப்படும் பிடித்தங்கள்

கட்டாயமான பிடித்தங்கள்: வருமான வரி, வாடகை மற்றும் தொடர்பான பிடித்தங்கள், கடன் மற்றும் முன்பணம்.

ஊழியரின் விருப்பமான பிடித்தங்கள்: அஞ்சலக காப்பீட்டு தொகை, கூட்டுறவு சங்கத்திற்கான கடன், பொது வைப்பு நிதி

கூடுதல் சம்பளம் கொடுத்ததை (Recoveries of over-Payment) அலுவலகத் தலைவர் விரும்பினால் பிடித்தம் செய்யலாம்.

### பிடிக்கக் கூடாதவை

பொது சேம நலநிதி முன்பணம், நீதிமன்ற ஆணையின் பேரில் செய்யப்படும் பிடித்தம், ஊழியரின் கவனக்குறைவாக அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கான பிடித்தங்கள்.

### தற்காலிகப் பணிநீக்க காலத்தில் கடன் பெற முடியுமா?

தற்காலிகப் பணி நீக்கக் காலத்தில் வருங்கால வைப்பு நிதியிலிருந்து தற்காலிக முன்பணம் வழங்கலாம். (அ.ஆ.எம்.எஸ். 497, நிதி நாள் 30.5.77)

### குற்றமற்றவரென நிரூபிக்கப்பட்டால் தற்காலிகப் பணி நீக்க காலம் முறைப்படுத்தல்

1. குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் தற்காலிகப் பணி நீக்கக் காலத்திற்கான முழு ஊதியம் வழங்கப்படுவதுடன் இக்காலத்தை பணிக்காலமாகவும் கருதி ஆணை வழங்கிட வேண்டும். (எப்.ஆர். 54 மற்றும் அரசாணை எண் 167 பணியாளர், நாள் 10.6.93 மற்றும் அரசு க.எண். 69702/அவி 3/90/–1 பணி நாள் 20.9.91)

2. குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு தற்காலிகப் பணிநீக்கக் காலத்திற்கான முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும். பணி அமர்வு ஆணை வழங்குவதில்



தாமதம் ஏற்படின் தாமதமாகும் காலத்தை கட்டாயக் காத்திருப்பாக கருதி ஊதியம் வழங்கப்படும். (அ.ஆ.எண். 798 பணியாளர் துறை நாள் 10.8.84)

3. பணி அமர்வு ஆணை வழங்குவதிலிருந்து பணி ஏற்கும் வரை உள்ள இடைப்பட்டக் காலத்திற்கு பணியேற்பு இடைக்காலம் கிடைக்கும்.

4. தற்காலிகப் பணி நீக்க காலம், தண்டனையாக கருதப்படின், அக்காலம் எவ்வாறு வரன்முறை செய்யப்படுகிறது என்று குறிப்பாக ஆணையில் குறிப்பிட்டாக வேண்டும். (அடிப்படை விதி 54ன் துணை விதி)

5. நீதிமன்றம் ஒன்றினால் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு தற்காலிகப் பணி நீக்கக் காலம் பணிக்காலமாகவே கருதப்படும். (அரசாணை எண் 261, பணியாளர் துறை, நாள். 4.8.92)

6. கிரிமினல் வழக்கின் குற்றச்சாட்டுகளுடன் ஒழுங்கு நடவடிக்கையின் குற்றச்சாட்டுகளும் ஒரே தன்மையாக இருந்து கிரிமினல் வழக்கில் நிரபராதி என விடுதலை ஆகியிருந்தால் புதிதாக குற்றச்சாட்டு தொடர்ந்து அதே காரணத்திற்காக தண்டனை வழங்கிட முடியாது. (சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ரிட் மனு 7108/81 நாள் 18.1.83 மற்றும் அரசாணை எண் 261 பணியாளர் துறை நாள் 4.8.92)

7. கிரிமினல் குற்றத்திலிருந்து நீதிமன்றத் தீர்ப்பின்படி குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்ட ஒருவருக்கு அவர் தற்காலிக பணிநீக்கத்திலிருந்த காலம் முழுவதற்கும் பணிக்காலமாக கருதி முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும். (அரசு ஆணை எண். 544 பணியாளர், நாள். 19.6.87 மற்றும் அரசாணை எண் 238 பணியாளர், நாள் 13.4.89)

8. அரசு ஊழியர் தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கப்பட்டால் கடும் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நிலுவை இருந்தாலும் விசாரணை தொடங்க இருந்தாலும் ஒரே நேரத்தில் அதே குற்றச்சாட்டுக்கு குற்றவியல் நடவடிக்கை தொடங்கினாலும் பிறகு தற்காலிக பணிநீக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டால் தற்காலிக பணிநீக்க காலத்தை

(அ) துறை விசாரணையில் தண்டனை அளிக்கப்பட்டிருந்தபோதிலும் தகுதியுள்ள நீதிமன்றத்தில் திட்டவட்டமான உத்தரவு இருப்பின் அதனை பணிக்காலமாக கருதலாம்.

(ஆ) குற்றவியல் நடவடிக்கை முடிவாகும் முன்னரே துறை விசாரணையில் தண்டனை முடிவாகியிருந்தால் கிரிமினல் வழக்கில் நிரபராதி என அறிவிக்கப்பட்டால் அ.வி. 54ன்கீழ் அந்த காலத்தை முறைப்படுத்தலாம். (அ.ஆ.எண் 84, பணியாளர் சீர்திருத்தம் நாள் 24.3.95)

9. நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர் அப்ரூவர் ஆக மாறும்பட்சத்தில் நீதிமன்றம் அளிக்கும் மன்னிப்பு இனங்களைக்கூட பணிக்காலமாக கருதவேண்டும். (அ.ஆ.எண். 386, நிர்வாக சீர்திருத்தம், நாள் 22.12.95 மற்றும் அ.ஆ.232 நிர்வாகச் சீர்திருத்தம், நாள் 7.6.96)

### தற்காலிகப் பணி நீக்கத்திலிருக்கும் போது வயது முதிர்வு

தற்காலிகப் பணிநீக்கத்தில் இருக்கையில் வயது முதிர்வு வருமாயின் தொடர்ந்து தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்க வேண்டும். இதுபோன்ற இனங்களில் வழங்கப்படும் Subsistance Allowance தொகையானது Provisional Penssion தொகைக்கு அதிகமாகக்கூடாது. (Govt. Lr. No. 9705/FR.III/95-2

P&A.R. dt. 9.6.95 அரசுக் கடிதம் எண் **118,** பணியாளர் நிர்வாக சீர்திருத்தம் நாள் **7.5.97)** Provisional Pension– க்குரிய அகவிலைப்படியும் வழங்கலாம். **(மேற்படி கடிதம்)** இது போன்றவர் பின்னர் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டால் அந்த ஆணை வழங்கப்படும் காலம் வரை H.R.A. மற்றும் C.C.A வழங்க வேண்டும். **(மேற்படி கடிதம்)** (FR 53-5)

ஓய்வு தேதிக்கு பிறகும் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டவர்கள் பிழைப்பூதியம் மற்றும் அதற்குரிய அகவிலைப்படி பெறுவதற்கு தகுதியுண்டு. ஆனால் Provisional Pension மற்றும் அகவிலைப்படிக்கு அதிகப்படக் கூடாது. **(அரசு ஆணை எண். 206,** நிர்வாக சீர்திருத்தம், நாள் **8.5.96)**

## XVIII. ஊதிய நிர்ணயம்

### அரசுப் பணியில் முதன் முதலாக சேரும்போது

(அ) பணி நியமனம் பெறும் பதவிக்குரிய ஊதிய விகிதத்தில் குறைந்தபட்சத்தில் ஆரம்ப ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

(ஆ) ஏற்கனவே அரசுப் பணியில் இருப்பவரை நேரடி நியமனம் மூலம் சர்வீஸ் கமிஷன் அவரை வேறு ஒரு பதவியில் நியமித்தால் அந்த பதவியின் ஊதிய விகிதத்தின் ஆரம்ப ஊதியம் கிடைக்கும். அ.வி.22(பி) இதற்கு பொருந்தாது.

(இ) பதவி உயர்வு ஊதிய நிர்ணயத்திற்கு சிறப்பூதியம் சேராது.

(ஈ) பதவி உயர்வின்போது ஒருவருக்கு நிர்ணயம் செய்யப்படும் ஊதியம் அவர் கீழ்நிலைப் பதவியில் பெற்று வந்த ஊதியத்தைவிடக் குறைவாக இருக்கக் கூடாது. (அடிப்படை விதி **19**ன் துணை விதி) (ஆனால் Direct Recruitment வாயிலாக பணி அமர்வு பெற்றால் இந்த விதி பொருந்தாது)

பதவியுயர்வு பெற்றவருக்கு ஊதிய நிர்ணயம்:

(அ) பதவி உயர்வு இருவகைப்படும். Feeder Category-யிலிருந்து பதவி உயர்வு செய்தல், Appointment by Transfer -ல் பதவி உயர்வு செய்தல், இவை இரண்டுக்கும் கீழ்க்கண்டவாறு ஊதிய நிர்ணயம் செய்யலாம்.

(ஆ) பதவி உயர்வு பெறுகின்ற ஒருவருக்கு சாதாரணமாக அடிப்படை விதி 22(பின்) படிதான் ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு ஊதிய நிர்ணயம் செய்யப்படும்போது கீழ்க்காணும் வழிமுறைகளைக் கருத்தில் கொண்டால் பதவி உயர்வு பெறுகின்றவர்களுக்கு அதிக நிதிப்பயன் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது.

1. சாதாரணமாகப் பதவி உயர்வில் அடிப்படை விதி 22(பி)ன்படிதான் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்வதால் ஒரு ஊதிய உயர்வும் தர ஊதியத்தில் ஏற்படும் வித்தியாசத் தொகையும் கிடைக்கும்.

Identical Scale கொண்ட பதவியில் இருந்தவர் பதவி உயர்வு பெறும்போது அவர் பெற்றுவரும் அடிப்படை சம்பளத்தில் 3 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். அரசு தெளிவுரை கடிதம் எண். 48211/ச.கு./2012-1/4, நாள் 9.10.2012)

2. பதவி உயர்வு பெறுபவர் உயர் பதவியில் பணி ஏற்றுக் கொண்ட பின்னர் கீழ்நிலைப் பதவியில் கிடைக்கக்கூடிய ஆண்டு ஊதிய உயர்வையும் கணக்கிட்டு உயர்பதவியில் ஊதிய நிர்ணயம் பெற விருப்பம் 30 நாட்களில் தெரிவிக்க வேண்டும்.



3. இந்த வழிகளில் அதிக நிதிப்பயன் கிடைக்கக்கூடிய ஊதிய நிர்ணயத்தை கண்டறிந்து அதற்கு ஏற்ப உயர் பதவியில் பணி ஏற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விருப்புரிமை கொடுக்க வேண்டும்.

4. குறைந்தபட்ச நிதிப்பயன் 5% எப்.ஆர். 22(பி) ஊதிய நிர்ணயம் 31.12.2005 வரை மட்டுமே கிடைக்கும். பிற ஊதிய நிர்ணயங்களுக்கு கிடைக்காது.

அரசாணை எண். 234, நிதி (ச.கு) துறை, நாள் 1.6.2009 மற்றும் அரசு கடித எண். 45113/Pay cell/2009-1/ நாள் 17.8.09

அடிப்படை விதி 22(பி)ன் படி வழங்கப்பட்டு வந்த 5 சதவீத பணப்பயனுக்கு பதிலாக, பதவி உயர்வுக்கு 3 சதவீதம் ஊதிய உயர்வும் மற்றும் தர ஊதியத்தில் ஏற்படும் வித்தியாசத் தொகையும் வழங்கப்படும். இவ்வாணை 1.1.2006முதல் அமுலுக்கு வருகிறது.

**5.** பதிவறை எழுத்தர் (Record Clerk) பணியிடத்தில் இருப்பவர்கள் வாங்கி வந்த தனி ஊதியம் (Personal Pay) பதிவறை உதவியாளர் (Record Assistant) பணியிடத்தில் **1.1.96**க்கு முன்னர் ஊதிய நிர்ணயம் செய்யும்போது ஊதியத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். **27.7.89** மற்றும் **1.8.92**க்குப் பிறகு புதியதாக ஏற்படுத்தப்படும் பணியிடங்களுக்கு **5%** தனி ஊதியம் **1.8.92** அல்லது **1.9.98**லிருந்து கிடைக்காது. **(அரசு கடிதம் எண். 38877/பி.சி/2000–1** (ப.சி.) துறை நாள் **30.8.2000)**

**(இ)** தகுதிகாண் பருவத்தினர் அல்லது தகுதிகாண் பருவம் முடித்த ஒருவர் பணிஇறக்கம் செய்யப்பட்டு மீண்டும் அதே பணிக்கு அமர்த்தப்பட்டால் அவர் கடைசியாக பெற்று வந்த ஊதியமே வழங்கப்படும். **(அரசாணை எண். 1072,** ப.ம.நி.சீ., துறை நாள் **31.10.1986)**

(ஈ) காலி இடமில்லாததால் பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி ஏற்பவர் பணிநீக்கத்திற்கு முன்னர் பெற்ற அதே ஊதியம் பெறலாம். **(அரசாணை எண். 400,** நிர்வாகத்துறை நாள் **7.4.86)**

(உ) அ.வி. **22**ன் கீழ் **5** சதவிகித பயனும் பெற்று கீழ்நிலை பதவிகளில் உள்ள சம்பள விகிதத்தின் அதிகபட்ச நிலையை எய்துவதற்கு முன் உயர்நிலைக்கு ஒருவர் பதவி உயர்வு பெறுவாரானால் உயர்நிலை பதவியின் அதிகபட்ச ஊதியத்தைவிட அந்த ஊதியம் அதிகமாக இருக்குமானால் உயர்நிலை பதவியின் அதிகபட்ச சம்பளத்தை உயர்த்தி நிர்ணயிக்கலாம். **(அ.ஆ.எண். 292,** ப.ம.நி.சீ. துறை நாள் **15.12.98)**

(ஊ) பயிற்சி காலத்தில் பதவி உயர்வு பெற்றாலும் ஊதியம் நிர்ணயம் செய்து அதிக ஊதியம் அளிக்க வேண்டும். **(அ.ஆ.எண். 590,** நிர்வாகம், நாள் **22.6.82)**

(எ) பதவி உயர்வு ஆணை வழங்கப்படும் ஆணையில் பதவி உயர்வு பெற்றவர் எந்த விதிப்படி ஊதியம் நிர்ணயம் செய்ய விரும்புகிறார் என்று ஒரு மாதத்திற்குள் விருப்புரிமை எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற விவரமும் தெரிவிக்க வேண்டும். **(அரசு கடித எண். 92188/அ.வி.1/90–2** பணியாளர் நாள் **22.10.90)**

### தற்காலிக பதவி உயர்வின்போது ஊதிய நிர்ணயம்

தற்காலிக பதவி உயர்விற்கும் 22(பி)ன்படி ஊதிய நிர்ணயம் செய்யலாம். ஆனால், முறையான பதவி உயர்விற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகள் அனைத்தும்

முழுமையாக பூர்த்தி செய்யப்படுமானால் கீழ்க்குறிப்பிட்ட சான்றினை நியமன அதிகாரி (Appointing Authority) அளித்து நிர்ணயிக்கலாம். (Govt. Lr. No. 8119/F.R.I/80-1, P&AR., dt. 30.4.80)

It is certified that Thiru .................. satisfies all the rules relating to regular promotion /appointment to the post of ..................... to which he has been temporarily promoted/appointed w.e.f............

**பதவி இறக்கத்திற்கு பின் பதவி உயர்வு பெற்றால் ஊதியம் நிர்ணயம் செய்தல்**

உயர் பதவியில் பணிபுரிந்த ஒருவர், பின் பதவி இறக்கம் செய்யப்படுகின்றார். சில காலம் கழித்து மீண்டும் பதவி உயர்வு பெறுகின்றார். இதுபோன்ற நிகழ்வுகளில் கீழ்க்கண்டவாறு ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

பதவி இறக்கத்திலிருப்பின் மீண்டும் பதவி உயர்வு பெறும்பொழுது எப்.ஆர்.22(பி)படி ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு ஊதியம் நிர்ணயம் செய்யும்பொழுது கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஊதிய நிர்ணயம் இருக்க வேண்டும்.

i) F.R. 22(B) படி நிர்ணயம் செய்யப்படுகின்ற ஊதியம் முன்னர் இதே பதவியில் இருந்தபொழுது பெற்று வந்த ஊதியத்தைவிடக் குறையக்கூடாது.

ii) அதேபோன்று பதவி இறக்கம் பெறாமல் உயர் பதவியிலேயே தொடர்ந்து இருந்தால் (மீண்டும் பதவி உயர்வு பெறும் நாளில்) பெற்று இருக்கக்கூடிய ஊதியத்திற்கு அதிகமாகக் கூடாது.

iii) பதவி இறக்க காலத்தில் தேர்வு நிலை தகுதி பெற்று தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கலாம். அவர் மீண்டும் பதவி உயர்வு பெற்றால் மேலே (ii)ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பொருந்தாது. (அரசாணை எண். 181 நிர்வாகத்துறை நாள் 5.3.1983 மற்றும் அரசாணை எண் 383 நிர்வாகத்துறை நாள் 24.4.82)

"(iv) ஒவ்வொரு முறை பதவி இறக்கம் ஆன பின் பதவி உயர்வு பெற்றால் ஒவ்வொரு முறையும் எப்.ஆர் 22(பி)படி ஊதிய நிர்ணயம் செய்யும் பொருட்டு கிடைக்கும் நிதிப்பயன் 5% இருக்க வேண்டும். அவ்வாறு 5% கிடைக்கும்போது சென்ற முறை அதே பதவியில் பெற்ற ஊதியத்திற்கு அதிகமாக கூடாது. (அரசு கடித எண். 55146/அ.வி.1/81-3, நிர்வாகத்துறை, நாள் 21.11.1981.

v) மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு சென்ற முறை பெற்று வந்த அதே ஊதியம் மீண்டும் பதவி உயர்வு பெறும்பொழுது நிர்ணயம் செய்யப்பட்டால் முந்தைய பணிக்காலமும் ஊதிய உயர்வுக்குச் சேரும். ஆனால், பதவி இறக்க காலம் ஊதிய உயர்வுக்குச் சேராது.

vi) 1.6.88க்கு முன்னர் பதவி உயர்வு அளிக்கப்பட்டு பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் 1.6.88க்குப் பின்னர் மறுபடியும் பதவி உயர்வு செய்யப்பட்டவர்களுக்கும் ஊதிய நிர்ணயத்தில் ஏற்படும் இழப்புகளை அரசு ஆணை எண் 727, நிதித்துறை நாள் 4.10.91ல் தெரிவித்த வழிமுறைகளில் பாதுகாக்க வேண்டும்.

vii) அரசு ஆணை எண். 497, நிதி (பி.சி.) துறை நாள் 15.9.98ன்படி 1.9.98ல் பெற்றுக்கொண்ட தனி ஊதியம் பெற்ற அரசு ஊழியர் உயர் பதவியிலிருந்து கீழ்நிலை பதவிக்கு பதவி இறக்கம் செய்யப்பட்டு மீண்டும் 1.9.98க்கு பிறகு பதவி உயர்வு பெற்றால் அ.வி. 22(பி)ன் கீழ் ஊதிய நிர்ணயம் செய்து கொள்ளலாம். அ.வி.22(பி)ன் கீழ் உள்ளியிருப்பவை விதி (5) இதற்கு பொருந்தாது. (அரசு கடிதம் எண் 22361/பிசி/99–2 நாள் 13.7.99)



**Identical Scale பெறுபவர் பதவி உயர்வு பெற்றால் ஊதிய உயர்வு நிர்ணயம் செய்தல்** (01–01–2006க்கு முன்போ (அல்லது) பழைய ஊதியத்தில் தொடர்ந்து 01–01–2006 முதல் 31–05–2009 முடிய உள்ளவர்கள்)

கீழ்நிலைப் பதவியின் ஊதிய விகிதமும், உயர் ஊதிய விகிதமும் ஒன்றாக இருந்தால், கீழ்க்கண்டவாறு ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

(அ) தேர்வு நிலை ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து இருப்பதுடன், கூடுதலாக ஒரு ஊதிய உயர்வு பெறலாம். கீழ்நிலை பதவியின் ஆண்டு ஊதிய உயர்வும் பதவி உயர்விற்கான ஊதிய உயர்வும் சேர்த்து இரண்டு ஊதிய உயர்வு பெறலாம் (அல்லது)

(ஆ) பதவி உயர்வு பெற்ற நாளன்று சாதாரண நிலைப் பதவியில் இருந்தபின் இவருக்கு கிடைத்திருக்கக்கூடிய ஊதியத்தைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றவருக்கு அடிப்படை விதி 22(பி)ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யலாம். இவ்விரண்டில் அனுகூலமாக உள்ள ஊதிய நிர்ணயத்திற்கு பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விருப்பம் தர வேண்டும்.

(இ) "அ" -ல் கண்டுள்ளபடி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டால், அவர் வாங்கி வருகின்ற தனி ஊதியம் (பி.பி) அடுத்த பதவி உயர்வு வரை தொடரும் (அரசு கடித எண். 9517/FR 186-7 நிர்வாகத்துறை நாள் 28.4.87

(ஈ) பதவி இறக்கம் பெற்று மீண்டும் பதவி உயர்வு பெற்றாலும், அ-ல் கண்டுள்ளபடி ஊதிய நிர்ணயம் செய்யலாம். (அரசு கடித எண். 119177/FR-I/87-3 நிர்வாகத்துறை நாள் 12.4.88.

**பணியில் இளநிலையில் உள்ளவர் முதுநிலையில் உள்ள வரைவிட அதிக ஊதியம் பெறுதல் குறைபாடு சரி செய்தல்**

ஒரு பணியில் இளநிலையில் உள்ளவர் முதுநிலையில் உள்ளவரைவிட அதிக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு ஏற்படுமானால் முதுநிலையில் உள்ளவர் ஊதியத்தையும் இளநிலையில் உள்ளவர் ஊதியத்துடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஈடு செய்ய வேண்டும்.

i) ஊதிய முரண்பாடு சரி செய்வதற்கு பணிவரன்முறை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தற்காலிகமாகப் பணிபுரிபவருக்கிடையே ஏற்படும் ஊதிய முரண்பாட்டையும் ஈடு செய்யலாம். (அரசுக் கடிதம் எண் 77032/அ.வி.1/93–2 நிர்வாகத்துறை நாள் 15.12.93)

ii) ஐந்தாம் ஊதிய குழு அரசாணை எண் 666, நிதி நாள் 27.6.89ன்படி புதிய ஊதிய விகிதங்கள் அறிவிக்கப்பட்ட பிறகு பதவி உயர்வு பெற்று அல்லது பதவி இறக்கம் பெற்று இளநிலையில் உள்ள ஊழியர்கள் சிலர் முதுநிலையில் உள்ள ஊழியர்களைவிட அதிக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் முதுநிலையில் உள்ள ஒருவர் எந்த நாளிலிருந்து விருப்புரிமை கொடுத்திருந்தாலும் ஊதிய முரண்பாடுகளை சரி செய்யலாம். (அரசு கடித எண். 17221/பி.சி./91–1, நிதித்துறை நாள் 22.7.91)

iii) 7.8.92 அன்று பத்து ஆண்டு முடிந்து பதவி உயர்வுக்கான தகுதி இல்லாதவர் மற்றும் 7.8.92 அன்று 20 ஆண்டுப் பணி முடித்து பதவி உயர்வுக்கான தகுதி இல்லாதவர் முறையே தேர்வு நிலைக்கும், சிறப்பு நிலைக்கும் உயர்த்தப்படுவர்.

இதன்படி முதுநிலையில் உள்ளவர் 20 ஆண்டு முடித்தால் நேராக சிறப்பு நிலைக்கும், இளநிலையில் உள்ள ஒருவர் முதலில் தேர்வு நிலைக்கும், பின்னர் சிறப்பு நிலைக்கும் உயர்த்தப்பட்டதன் காரணமாக, இளநிலையில் உள்ளவர் அதிக ஊதியம் பெறுகின்ற வாய்ப்பு உருவாகலாம். இதனை அரசின் பின்னேற்பை எதிர்நோக்கித் துறைத்தலைவர் சரி செய்யலாம். (அ.ஆ.எண் 188, நிர்வாகத்துறை நாள் 13.7.1994 மற்றும் அ.ஆ.எண் 896 நிதித்துறை நாள் 10.9.86)

iv) முதுநிலையில் உள்ளவர் சாதாரண நிலையில் இருக்கும்பொழுதே பதவி உயர்வு பெறுகின்றார். இளநிலையில் உள்ளவர் தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னர் பதவி உயர்வு பெறுகின்றார். இதனால் இளையவருக்கு இரண்டு ஊதிய நிர்ணயங்கள் கிடைப்பதால் இளையவர் அதிகமாக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு ஏற்படலாம். இதுபோன்ற நிகழ்வில் இளநிலையில் உள்ளவர் எந்த நாளிலிருந்து அதிக ஊதியம் பெற்று வருகின்றாரோ அந்நாளிலிருந்து உயர்த்தினால் இருவர் ஊதியமும் ஒன்றாகிவிடும். இதனைத் துறைத்தலைவரே செய்யலாம். (அ.ஆ.எண் 151, நிர்வாகத்துறை, நாள் 20.2.1982 மற்றும் அ.ஆ.எண். 896, நாள் 10.9.1986)

v) இளநிலையில் உள்ளவர் பதவி உயர்வுக்குப் பிறகும் தனக்கு கீழ்நிலைப் பதவியில் வழக்கமாகக் கிடைக்கும் ஊதிய உயர்வினைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என விருப்புரிமை அளித்து உயர் பதவியில் ஊதிய நிர்ணயம் பெற்று இருக்கலாம். இதனால் இளநிலையில் உள்ளவர் முதுநிலையில் உள்ளவரைவிடக் கூடுதலாக ஊதியம் பெற நேரிடலாம். இந்த நிகழ்வுகள் முதுநிலையில் உள்ளவர் ஊதியத்தை இளநிலையில் உள்ளவர் ஊதியத்துக்கு ஈடாக உயர்த்துவதன் மூலம் இந்த முரண்பாட்டை சரி செய்யலாம். அரசின் பின்னேற்பினை எதிர்நோக்கி துறைத் தலைவரே சரி செய்யலாம். (அ.ஆ.எண். 1071, நிர்வாகத்துறை நாள் 11.11.82) FR 22 B Ruling (2)

vi) உயர்கல்வி ஒன்றில் தேர்வு பெற்றதற்காக முதுநிலையில் உள்ள ஒருவருக்கு முன் ஊதிய உயர்வு கிடைத்திருக்கும். இளையவர் சில நாள் கழித்து முன் ஊதியம் பெறுகிறார். இவர் முதுநிலையில் உள்ளவரைவிட அதிகமான ஊதியம் பெற வாய்ப்புண்டு. இது போன்ற நிகழ்வுகளில் முதியவர் ஊதியம் , இளையவரின் ஊதியத்திற்கு ஈடாக ஊதிய முரண்பாடு ஏற்பட்ட நாள் முதல் உயர்த்த வேண்டும். இந்த விதி 1.1.84 முதல் நடைமுறைக்கு வரும். (அ.ஆ.எண். 320, நிதித்துறை நாள் 2.4.90) Account Test for Subordinate Officers Part I தேறினால் ஏற்படும் முரண்பாட்டையும் சரி செய்யலாம். (அரசு கடித எண் 37668/பிசி II/1960–1 நிதித்துறை நாள் 25.7.90) உயர்கல்வி தேர்வு பெற்றமைக்காக 1.4.78க்கு முன்னர் முதுநிலையில் உள்ளவர் முன் ஊதிய உயர்வு பெறுகின்றார். இளநிலை உள்ளவர் 1.4.78க்குப் பின்னர் அந்த தேர்வில் தேர்ச்சி பெறுவதன் வாயிலாக முன் ஊதிய உயர்வு பெறுகின்றார். இதனால் ஏற்படுகின்ற ஊதிய முரண்பாடு 1.6.88க்குப் பின்னரும் தொடரலாம். இதுபோன்ற ஊதிய முரண்பாடுகளை 2.10.70லிருந்து சரிசெய்து பணி அமர்வு அதிகாரி ஆணை வழங்கலாம். (G.O.Ms. No. 710 நிதித்துறை, நாள் 23.8.94)

vii) ஐந்தாம் ஊதியக்குழு அறிக்கையின்படி தேர்வு நிலை/சிறப்பு நிலை முதலில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் அ.ஆ.எண். 304, நிதித்துறை நாள் 28.3.90ன்படி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் காரணமாக இளநிலையில் உள்ள ஒருவர் அதிக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு உருவானால் அதனை மேற்படி அரசாணை பத்தி 10ல் குறிப்பிட்டபடி சரி செய்யலாம்.

viii) தனி ஊதியம் 5% நடைமுறையில் இல்லாதபொழுது முதுநிலையில் உள்ள ஒருவர் பதவி உயர்வு பெற்று இருக்கலாம். இளநிலையில் உள்ள ஒருவரோ தனி



ஊதியம் அறிமுகப்படுத்தியவுடன் பதவி உயர்வு பெற்று இருக்கலாம். இதனால் இளையவர் கூடுதலாக ஊதியம் பெற நேர்ந்தால் அரசு க.எண். 1539/பிசி/93–1இ, நிதித்துறை நாள் 13.5.93ன்படி இந்த ஊதிய முரண்பாட்டை அரசின் அனுமதி எதிர்நோக்கி துறைத்தலைவர் சரிசெய்யலாம். அ.ஆ. 497 நிதித்துறை (பி.சி.) 15.9.98ன்படி 1.9.98லிருந்து தனி ஊதியம் பெற்றுவரும் இளையவர், 1.9.98க்கு முன்னர் பதவி உயர்வு பெற்ற தனது முதியவரைவிட 1.9.98க்கு பிறகு அதிக ஊதியம் பெற்றால் இந்த முரண்பாடுகளை அரசு கடிதம் ந.க. 1539/பிசி/93–1 நிதித்துறை நாள் 13.5.93க்குட்பட்டு சரி செய்யலாம். (அரசு கடிதம் 2299/பிசி/99–1 நிதித்துறை நாள் 11.2.99)

ix) முதுநிலையில் உள்ளவருக்கு அலுவலகத் தவறு காரணமாக பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அவர் முறையீடு செய்தபிறகு தவறு உணரப்பட்டு அவருக்கு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. பதவி உயர்வு வழங்கப்பட்ட அவருக்கு ஊதிய நிர்ணயம் செய்வதெப்படி ? அவரின் நேர் இளையவர் எந்த நாளில் பதவி உயர்வு பெற்றாரோ, அந்த நாளில் அவர் பதவி உயர்வு பெற்றதாகக் கருதிக்கொண்டு அந்த நாளன்று அவர் விரும்புகிற விதிப்படி ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு ஊதிய நிர்ணயம் செய்யப்படும் நாளிலிருந்து (To be advanced) ஓராண்டு சென்ற பின்னர் அடுத்த ஊதிய உயர்வு வழங்க வேண்டும். (Ruling (16) under FR 27 அரசு ஆணை எண் 977, நிர்வாகத்துறை, நாள் 6.10.86 மற்றும் அரசு கடிதம் எண் 4251/FRI/81-9/P&AR நாள் 18.10.89)

| வ. எண் | பதவி | தற்போது அறிவிப்பால்.... |
|---|---|---|
| 1 | இடைநிலை ஊழியர் (கீழ் நிலையில் உள்ள நிலையை ஊழியர்) உயர்நிலை பதவியில் பணியாற்றய சாதாரண நிலை தலைமை வகிப்பவர் | ரூ 2000/- |
| 2 | துணை வட்டார வளர்ச்சி | ரூ 1300/- |
| 3 | துணை வட்டடார வளர்ச்சி அலுவலர்கள் | ரூ 1300/- |

x) முதுநிலையில் உள்ளவரும் இளநிலையில் உள்ளவரும் Identical Scale–ல் ஊதியம் பெற்று விடுகின்றனர். முதுநிலையில் உள்ளவருக்கு பதவி உயர்வு கிடைக்கின்றது. Identical Scale என்பதால் பதவி உயர்வுக்கென ஒரு ஊதிய உயர்வு பெற்றுக் கொள்கிறார். அவர் கேட்டபடி உயர் பதவியில், ஒரு ஊதிய உயர்வு சேர்த்து ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. அவரைவிட இளையவர் சில நாட்கள் கடந்த பின்னர் பதவி உயர்வு பெறுகின்றார். அவருக்கு அவர் விரும்பியபடி பதவி உயர்வு நாளன்று கீழ்நிலைப்பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதத்தில் ஊகமான ஊதியத்தைக் கண்டுபிடித்து அந்த ஊதியத்திலிருந்து F.R.22(B)ன்படி ஊதிய நிர்ணயம் பெறலாம். 5% நிதிப்பயனும் கிடைக்க வேண்டும். இதனால் முதுநிலையில் உள்ளவர் இளநிலையில் உள்ளவரிடையே ஊதிய முரண்பாடு ஏற்படுகின்றது. இந்த முரண்பாட்டை சரி செய்யலாம். (அரசாணை எம்.எஸ். 145 நிர்வாகத்துறை, நாள் 19.4.71 மற்றும் அரசாணை எம்.எஸ்.எண் 286 நிர்வாகத்துறை நாள் 31.10.94)

xi) முதுநிலையில் உள்ளவர் சிறப்பு நிலைப் பதவிக்கு உயர்வு பெறுவதற்குள் பதவி உயர்வு கிடைத்து விடுகின்றது. இளநிலையில் உள்ளவருக்கு சிறப்பு நிலை உயர்வு பெற்ற பின்னர் பதவி உயர்வு கிடைக்கின்றது. இதனால் இவரிடையே

ஊதிய முரண்பாடு ஏற்படலாம். இதனையும் ஈடு செய்யலாம். (அரசுக் கடிதம் எண். 24867/PC/73 நிதித்துறை, நாள் 8.11.93)

மேற்கண்ட ஊதிய முரண்பாடுகள் சரி செய்ய ஏதுவாக திருந்திய அறிவுரைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய படிவங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

அரசு ப நி.சீ.துறை கடித எண்.22508 FR-1/2019-1 நாள் 03.09.2019

அரசு நிதிதுறை கடித எண்.27649/PC-3/2019-1 நாள் 22.10.2019

**ஸ்டேக்னேஷன் ஊதிய உயர்வு பெற்றவர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தால், ஊதிய நிர்ணயம் செய்யும் முறை**

ஸ்டேக்னேஷன் ஊதிய உயர்வு கிடைத்த அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தால் அவர்களுக்கு F.R.22(B)–ன் கீழ் ஊதியம் நிர்ணயிக்க வேண்டும். 1.10.78 முதல் கடைசி ஊதிய உயர்வு விகிதத்தில் நோஷனல் ஊதிய உயர்வளிக்கப்பட வேண்டும். F.R.22(B) நான்காவது உபவிதி, அ.ஆ. 239 நிர்வாகத்துறை, நாள் 18.5.90 அ.ஆ.476 நிர்வாகத்துறை, நாள் 19.11.90)

**தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள், உதவியாளர்களாக பதவி உயர்வு பெறும்போது ஊதிய நிர்ணயம்**

இவர்கள் தங்கள் விருப்புரிமைகளை (Option) ஒரு மாதத்திற்குள் தரவேண்டும். உதவியாளர் ஊதிய விகிதத்தில் தகுந்த இடத்தில் ஸ்டெனோ சம்பளம் மற்றும் சிறப்பு ஊதியம் இணைத்ததற்கு சமமான இடத்தில் நிர்ணயிக்கலாம். அப்படி ஒரு நிலை இல்லையென்றால் அடுத்த நிலையில் நிர்ணயித்து வித்தியாசத்தை தனி ஊதியமாக தந்து அடுத்த ஊதிய உயர்வில் சரி செய்து கொள்வது (Ruling 4 under F.R. 27) அல்லது (F.R.22(B) கீழ் சிறப்பு ஊதியத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

**நடைமுறையில் இருக்கும் ஊதிய விகிதம் மாறுதலுக்குட்பட்டால் ஊதிய விகிதம் நிர்ணயிக்கும் முறை**

1. நடைமுறையில் இருக்கும் ஊதிய விகிதம் திருத்தப்பட்டால் F.R.23–ன்கீழ் மற்றும் அரசு ஆணை எண். 824 (P&AR நாள் 1.9.83) ஊதியம் நிர்ணயிக்க வேண்டும். வேறு புதிய பதவிக்கு புதிய சம்பளத்தில் அமர்த்தப்பட்டவருக்கு (F.R.22(i)a(iii) மற்றும் FR22(i) (b) (ii) நிலை இருந்தாலும் இல்லாவிட்டாலும், கீழ்நிலை மற்றும் பர்சனல் சம்பளம், வரவிருக்கும் ஊதிய உயர்வில் சரிக்கட்டிக் கொள்ளும் வகையில் (அல்லது) பழைய ஊதிய விகிதத்தில் அடுத்த ஊதிய உயர்வு பெறும் வரை தொடர்ந்து இருக்க விருப்புரிமை தரலாம். (அ.ஆ.எண் 824, நிர்வாகத்துறை, 1.9.83, அ.ஆ.எண். 369 நிர்வாகத்துறை, 26.6.89)

**தண்டனைக் காலத்தில் பதவி உயர்வு பெற்றால் ஊதிய நிர்ணயம் செய்வது (FR22(B)-ன்கீழ் Ruling (3)**

திரண்ட பயன் இல்லாமல் ஒருவரின் ஊதிய உயர்வு தள்ளி போடப்பட்டுள்ள தண்டனைக் காலத்தில் அவருக்கு பதவி உயர்வு வருமாயின் தண்டனையாக ஊதிய உயர்வு தள்ளாமல் இருப்பின் என்ன ஊதியம் பெற்று இருப்பார் எனக் கண்டறிந்து அந்த ஊதியத்தை கொண்டு F.R.22(B) ன்படியோ அல்லது அவர் விரும்புகின்ற பிற ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு ஊதிய நிர்ணயம் செய்துவிட்டு முடிவுறாத தண்டனைக் காலத்திற்கு இணையான நிதித் தொகையை



பிடித்தம் செய்ய வேண்டும். (அரசாணை எண் 191, நிதித்துறை நாள் 3.3.67 மற்றும் அடிப்படை விதி 22(பி)ன் துணை விதி)

**சிறப்பு நிலை ஊதிய விகிதத்தில் இருப்பவர் குறைவான ஊதிய விகிதம் உள்ள ஒரு பதவிக்கு பதவி உயர்வு பெற்றால் ஊதிய நிர்ணயம்**

சிறப்பு நிலைப் பதவியில் உள்ள ஒருவருக்கு பதவி உயர்வு கிடைக்கிறது. அந்த உயர் பதவியின் ஊதிய விகிதமானது சிறப்பு நிலைப் பதவியின் ஊதிய விகிதத்தைவிடக் குறைவாக உள்ளது. இதுபோன்ற நிகழ்வில் கீழே குறிப்பிட்டுள்ளபடி பதவி உயர்வு பெற்றவரின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். (அரசாணை எண் 590, நிதித்துறை நாள் 1.8.92)

i) பதவி உயர்வுக்காக சிறப்பு நிலைப் பதவியில் ஒரு ஊதிய உயர்வு பெற்றுக்கொண்டு தொடர்ந்து சிறப்பு நிலைப் பதவியிலேயே இருக்கலாம். இவ்வாறு செய்வதால் அடுத்த ஊதிய உயர்வு ஒராண்டு கழித்துப் பெற நேரிடும். அதேபோன்று சிறப்பு நிலைப் பதவியில் கிடைக்க வேண்டிய வழக்கமான ஊதிய உயர்வு நாள் வரைப் பொறுத்திருந்து பதவி உயர்வு பெற்றமைக்காக ஒரு ஊதிய உயர்வும் ஆண்டு ஊதிய உயர்வு என்று இரண்டு ஊதிய உயர்வும் பெறலாம். (அரசு கடித எண் 17598/பி.சி./93–2 நிதித்துறை, நாள் 30.8.93 மற்றும் அரசு கடித எண் 66012/பி.சி./93–1 நிதித்துறை நாள் 25.3.94)

அல்லது

ii) பதவி உயர்வு நாளன்று தேர்வு நிலைப்பதவி அல்லது சாதாரண நிலைப்பதவியில் இருப்பின் இவருக்கு கிடைத்திருக்கக்கூடிய ஊதியத்தைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றவருக்கு அடிப்படை விதி 22(b) அல்லது அவர் விரும்புகின்ற ஏதாவது ஒரு ஊதிய நிர்ணய விதியின்கீழ் அவரின் ஊதியத்தை நிர்ணயித்தல்.

iii) எந்த விதிப்படி ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும் என்று உயர்பதவியில் பணி ஏற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் இதற்கான விருப்புரிமை கொடுக்க வேண்டும்.

iv) இந்த விதி 1.6.88 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 1.4.92 முதல் நிதிப் பயன் கிடைக்கும்.

(ஆ) இளநிலையில் உள்ளவர் இதனால் முதுநிலையில் உள்ளவரைவிடக் கூடுதலாக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு ஏற்படின் அரசாணை எண் 57 நிதித்துறை நாள் 28.1.91ன்படி சரிசெய்யலாம்.

**PAY FIXATION ON MOVING TO SELECTION GRADE SCALE OR SPECIAL GRADE SCALE (Ruling (35) FR, 22 intruduced in G.O.Ms. No. 15 P&A.R., dt. 5.1.87)**

1. தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னரும் வழக்கமான நாளிலேயே ஊதிய உயர்வு கிடைக்கும்.

2. ஊதிய உயர்வுக்கு சேராத காலங்கள், தேர்வு/சிறப்பு நிலை வழங்குவதற்கான காலத்திற்கும் சேராது.

3. 1.6.88 முதல் சிறப்பு தற்காலிகப் பதவியில் உள்ளவர்கள் தேர்வு நிலைப் பதவியில் உள்ளவராக கருதப்படுவார். (அரசாணை எண். 215, நிதித்துறை நாள் 22.3.93)

4. தேர்வு நிலை நாளும், ஊதிய உயர்வு நாளும் ஒன்றானால் முதலில் தேர்வு நிலை வழங்க வேண்டும். பின்னர் தேர்வு நிலைப் பதவியில் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.(அ.ஆ.எண். 144, நிதித்துறை நாள் 12.5.95)

**ஐந்தாவது ஊதியக்குழுவின் கீழ் செய்யப்படும் ஊதிய நிர்ணயித்தினால் ஏற்படும் நட்டத்தை பாதுகாப்பது எப்படி?**

5ஆம் ஊதியக்குழுவின்படி 1.6.88க்குப் பிறகு ஒருவருக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. அந்த ஊதியமானது அவர் கீழ்நிலைப் பதவியில் இருந்திருப்பின் பெற்று இருக்கக்கூடிய ஊதியத்தைவிட ஏதாவது ஒரு நிலையில் குறைவாக இருக்கலாம். உதாரணமாக அவர்

1. கீழ்பதவியின் சாதாரண நிலை ஊதியம்
2. கீழ்பதவியின் தேர்வுநிலை ஊதியம்
3. கீழ்பதவியின் சிறப்பு நிலை ஊதியம்

**ஆறாவது ஊதியக்குழுவின் கீழ் செய்யப்படும் ஊதிய நிர்ணயித்தினால் ஏற்படும் நட்டத்தை பாதுகாப்பது எப்படி?**

(1) பதவி உயர்வு - அ.வி 22(பி)ன் கீழ் கொடுத்த விருப்பம் புது ஊதிய விகித நிர்ணயத்தினால் ஏற்படும் நட்டம் தவிர்த்தல்.

1.1.96 முதல் 13.4.98 காலத்தில் ஒரு அலுவலர் பதவி உயர்வு பெறுகிறார். பதவி உயர்வு தேதியில் விருப்பம் அ.வி. 22(பி)ன்கீழ் கொடுத்திருக்கிறார். ஊதிய நிர்ணயமும் ஊதிய உயர்வும் அதன்படி பெற்று வருகிறார். புது ஊதிய விகிதத்தின் கீழ் அ.வி. 22(i)(a)(i) ன்கீழ் பதவி உயர்வு தேதியில் (அ) அ.வி. 22(பி)ன்கீழ் ஊதிய உயர்வு பெற்ற பிறகு ஊதிய நிர்ணயம் செய்ய விரும்புகிறார். இம்மாதிரி அ.வி. 22(i)(a)(i) கீழ் பதவி உயர்வு பெற்ற பிறகும், ஊதிய விகிதம் மாற்றி நிர்ணயம் செய்திட அனுமதிக்கலாம். (அரசு கடித எண். 30027/பி.சி.1/98-1 நிதித்துறை 28.4.98)

(2) பதவி உயர்வு தேதியில் புது ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்ய ஊழியர் விருப்பம் தெரிவிக்கும்போது

1.1.96 முதல் 13.4.98 வரை பதவி உயர்வு பெற்றவர்கள், சில விதிகளின்கீழ் தங்களுக்கு சொந்தமான பயன் கிடைப்பதனை எதிர்நோக்கி விருப்பம் (Option) தெரிவித்திருப்பார்கள். ஆறாவது ஊதியக்குழு பரிந்துரை அமுல்படுத்தியதன் தொடர்ச்சியாக அம்மாதிரியான ஊதிய நிர்ணயம் அதிக அளவு பயன் கிட்டாமல் போகலாம். அம்மாதிரி நேரங்களில் தாங்கள் ஏற்கனவே கொடுத்த விருப்பங்களை மாற்றி நிர்ணயம் செய்து கொள்ளலாம். அதாவது அ.வி. 22(ஆ)ன் கீழ் பதவி உயர்வு தேதியில் பழைய ஊதிய விகிதத்திலேயே நிர்ணயம் செய்து கொண்டு புது ஊதிய விகிதத்தில் அதே தேதியில் மீண்டும் அட்டவணைப்படி (Fitment Table) நிர்ணயம் செய்து கொள்ளலாம். (அரசு கடித எண். 30027/பி.சி./98-1 நிதித்துறை 28.4.98)

(3) ஏற்கனவே பதவி உயர்வு பெற்று அ.வி.22(i) (a) (i) மற்றும் அ.வி. 22(பி)ன் கீழ் ஊதியங்களை நிர்ணயம் செய்து கொண்டவர்கள், தற்போது விருப்பத்தினை மாற்றிக் கொள்ள முடியுமா?

ஒரு ஊழியர் 1.1.96 முதல் 13.4.98ல் பதவி உயர்வு பெறுகிறார். பதவி உயர்வு தேதியில் அ.வி 22(i) (a) (i) ன்கீழும் அ.வி. 22 (பி) ன்கீழ், கீழ்நிலைப் பதவியில் ஊதிய உயர்வு பெற்ற பிறகு சம்பள நிர்ணயம் செய்து கொள்கிறார். ஊதியக்குழு அமுலிற்கு பிறகு அ.வி 22(i) (b) (i) ன் கீழ் தனக்கு ஊதியம் நிர்ணயம் செய்து கொள்வது அதிக அளவு பயன் அளிக்கும் என கருதுகிறார். இம்மாதிரி இனங்களில் அ.வி 22(பி)ன் கீழ் பதவி உயர்வு தேதியிலேயே தனது ஊதியத்தை மறு நிர்ணயம் செய்து கொள்ளலாம். (அரசு கடித எண். 30027/ பிசி-1/98-1 நிதித்துறை 28.4.98)



(4) 1.1.96க்கு முன் ஊழியர்கள் பதவி உயர்வு பெற்று 1.1.96க்குபின் உதிய உயர்வு நிர்ணயத்திற்கு விருப்பம் தெரிவித்தவர்கள்

ஒரு ஊழியர் 1.1.96க்கு முன் பதவி உயர்வு பெற்றிருந்து பதவி உயர்வு தேதியில் அ.வி 22(i) (a) (i) ன்கீழ் ஊதிய நிர்ணயம் செய்து கொண்டும், அ.வி. 22(i)(b)(i) ன்கீழ் 1.1.96, 1.4.96, 1.7.96ல் தவணையாகும் ஊதிய உயர்வினை பெற்றுக் கொண்டு ஊதிய விகிதம் பெற்றவர் புதிய ஊதியக்குழு பரிந்துரைக்குப் பிறகு நட்டமடைந்திருக்கக்கூடும். இம்மாதிரி நேர்வுகளில் உயர் பதவியில் 1.1.96 நேரடியாக ஊதிய நிர்ணயம் செய்து கொள்ளவும். மீண்டும் 1.1.96, 1.4.96, 1.7.96 (அ) 1.10.96 தேதிகளில் புது ஊதிய விகிதங்களில் ஊதிய உயர்வு பெற்று மீண்டும் ஊதிய நிர்ணயம் செய்து கொள்ளலாம். அ.வி. 22(i)(b)(அ) 22(i)(a)(i) ன்கீழ் திருத்தியமைக்கப்பட்ட விருப்பத்தினை தரலாம். (அரசு கடித எண். 30027/பிசி-1/98-1 நிதித்துறை நாள் 28.4.98)

ஆறாவது ஊதியக்குழு பரிந்துரை அமுல்படுத்தியதால் இளையவர், முதியவர்களைவிட ஊதியம் அதிகம் பெறக்கூடிய நிகழ்வு ஏற்படுமானால் அம்மாதிரி முரண்பாடுகளை நியமன அலுவலர்களே (Appointing Authority) சரிசெய்து உத்திரவிடலாம். (அரசு கடித எண். 30027/பிசி-1/98-1 நிதித்துறை நாள் 28.4.98)

பணியில் இளையவர், ஊதிய நிர்ணய விருப்பத் தேதியை பின் தேதியிட்டு கொடுத்து, அதனால் பணியில் மூத்தவரைவிட அதிகமாக ஊதியம் பெறும் நேர்வுகளில் பணியில் மூத்தவரது ஊதியத்தை இளையவரது ஊதியத்திற்கு சமமாக தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள் 2009-ன் விதி 5(3)ன்படி உயர்த்தி அலுவலகத் தலைவரே நிர்ணயிக்கலாம். (அரசு கடித எண். 45113/ஊ.கு. 2009-1, நாள் 17.6.2009)

பணியில் இளையவர் 31.12.05க்குப் பிறகு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதற்கான முன் ஊதிய உயர்வு/உயர்கல்வி பெற்றமைக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை 31.12.2005க்குப் பிறகு பெற்றதால், இதே ஊதிய உயர்வை 31.12.2005க்கு முன்னர் பெற்ற, பணியில் மூத்தவர்களைவிட கூடுதல் ஊதியம் பெறும் நேர்வுகளில், அத்தகைய பணியில் மூத்தவர்களது ஊதியத்தை பணியில் இளையவர்களது ஊதியத்திற்கு சமமாக உயர்த்தி நிர்ணயிக்கலாம்.

இத்தகைய ஊதிய உயர்வு நிர்ணயங்களை ஊதியம் நிர்ணயம் செய்யும் அதிகாரம் பெற்ற அலுவலரே ஆணை வழங்கலாம் (அரசு கடித எண். 45113/ ஊ.கு./2001-1, நாள் 17.6.2009)

**தனி ஊதியம் (அரசாணை 497 நிதி (ஊதியக்குழு) நாள் 15.9.98)**

1.1.96க்கு முன்பு எந்தெந்த பணியிடங்களுக்கு 5% தனி ஊதியம் பெறப்பட்டதோ அந்தந்த பணியிடங்களில் பணிபுரிபவர்களுக்கு 1.9.98 அன்று திருத்திய ஊதியத்தில் 5% தனி ஊதியம் வழங்கப்படும்.

ஓர் அரசு ஊழியர் உயர் பதவியிலிருந்து கீழ் பதவிக்கு பதவியிறக்கம் செய்யப்பட்டதையடுத்து. 1.9.98ல் இந்த 5% தனி ஊதியமும் பெற்றுக் கொண்டு 1.9.98க்கு பிற்பாடு மறுபதவி உயர்வு (Re Promotion) பெற்றால் அவர் உயர் பதவியில் (1.9.98க்கு முன்னர்) பதவி உயர்வுக்கு முன்னர் பெற்ற ஊதியத்தைவிட (1.9.98க்கு பின்னர்) மறுபதவி உயர்வில் பெற்ற ஊதியம் அதிகமாகவே இருக்கும். (இந்த அதிகப்படியான தொகை 1.9.98ல்

| வ. எண் | சாதாரண நிலை | தேர்வுநிலை | சிறப்புநிலை |
|---|---|---|---|
| 1. | 2650-55-2660-60-3200 | 2650-65-3300-70-4000 | 2750-70-3800-75-4400 |
| 2. | 2610-60-3150-65-3540 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 |
| 3. | 2650-65-3300-70-4000 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 4. | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 5. | 3050-75-3950-80-4950 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 6. | 3200-85-4900 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 7. | 3625-85-4900 | 4300-100-6000 | 4500-125-7000 |
| 8. | 4000-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 9. | 4300-100-6000 | 5000-150-8000 | 5500-175-900 |
| 10. | 4500-125-7000 | 5300-150-8300 | 5900-200-9900 |
| 11. | 5000-150-8000 | 5500-175-9000 | 6500-200-10500 |
| 12. | 5300-150-8300 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 13. | 5500-175-9000 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 14. | 5700-175-9200 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 15. | 5900-200-9900 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 16. | 6500-200-10500 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 17. | 6500-200-11100 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 18. | 8000-275-13500 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 19. | 9100-275-14050 | 10000-325-15200 | 12000-375-16500 |

வழங்கப்பட்ட 5% தனி ஊதியத்தின் விளைவாய்க் கிடைத்ததாகும்) எனவே அடிப்படை விதி 22(பி)யின் விதி 5ல் கண்ட வரையறை இத்தொகை ஊதிய நிர்ணயத்தில் பொருந்தாது. ஆயினும், உயர் பதவியில் மறு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஓர் ஆண்டு காலத் தகுதிப் பணிக்காலம் முடிவுற்ற பின்னரே அடுத்த ஊதிய உயர்வு அனுமதிக்கப்படும். (அரசு நிதித்துறை கடித எண். 22361/ ஊ.கு./99-2,13.7.99) மூன்றாம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு 1.8.1992 மற்றும் 1.9.1998 முதல் 5 சதவீதம் தனி ஊதியம் அனுமதிக்கப்பட்டது. (அரசாணை எண். 43 நிதி(ஊ.கு.) துறை நாள் 3.6.2014)

**அலுவலக உதவியாளர்களுக்கு சிறப்பு படி**

(அ) அரசுப் பணியிலிருக்கும் அலுவலக உதவியாளருக்கு கீழ்கண்டவாறு சிறப்பு படி வழங்கப்படும். (அ.ஆ.எண். 239 நிதி(ஊதியம்) துறை நாள் 22.7.2013)



1. சாதாரண நிலை ஊதியம் பெறுவோர் ரூ. 50
2. தேர்வு நிலை ஊதியம் பெறுவோர் ரூ. 75     1.4.2013 முதல்
3. சிறப்பு நிலை ஊதியம் பெறுவோர் ரூ. 100 வழங்கப்படுகிறது.

**சிறப்பு ஊதியம்**

ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைப்படி 1.1.96முதல் தேர்வு நிலை, சிறப்பு நிலை ஊதியம் வருமாறு (அ.ஆ.எண். 162 நிதி(ஊதியம்) துறை நாள் 14.3.98)

அரசாணை எண். 234, நிதி (ச.கு) துறை, நாள் 1.6.2009ன்படி, ஏற்கனவே பெற்று வந்த சிறப்பு ஊதியமே திருத்திய ஊதிய விகிதத்திலும் தொடர்ந்து பெறலாம்.

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை**

ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைப்படி 1.1.96 முதல் தேர்வு நிலை, சிறப்பு நிலை ஊதியம் வருமாறு (அ.ஆ.எண். 162 நிதி(ஊதியம்) துறை நாள் 14.3.98)

**1.1.2006** முதல் **3**விழுக்காடு ஊதிய உயர்வு அனுமதித்தும் கூடுதலாக வழங்கப்படும் **3**விழுக்காடு ஊதிய உயர்வு தேர்வு நிலை/சிறப்புநிலை அனுமதிக்கும் நாள் முதல் **(1.1.06** முதல்**)** கருத்தியலாக ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். பின், **1..4.2013** முதல் பணப்பயன் வழங்க வேண்டும். **1.4.2013**க்கு பின்பு தேர்வு நிலை/சிறப்பு நிலைக்கு உயர்த்தப்படுபவருக்கு ஊதியத்தில் **3**%+**3**% ஊதிய உயர்வு பணப்பயனுடன் வழங்க வேண்டும். **(**அரசாணை எண்.**237** நிதித்துறை நாள் **22.7.2013)**

இவைகளில் ஏதாவது ஒரு பதவியில் இருந்திருப்பின் அவர் பெற்று இருக்கக்கூடிய ஊதியம் அதிகமாக இருந்திருக்கும் என்று அவர் கருதினால் அந்த ஊதியத்தை அவருக்கு வழங்க வேண்டும். (அரசாணை எம்.எஸ் 57 நிதித்துறை நாள் 28.1.91) 1.1.96லிருந்து விதி 4(3)ன் கீழ் மறு நிர்ணயம் செய்ய வேண்டிய இனங்களுக்கும் அரசு ஆணை எண். 57 நிதித்துறை நாள் 28.1.91 பொருந்தும் (அரசு கடிதம் எண் 9925/சிஎம்பிசி/200-1 நாள் 1.3.2000 நிதித்துறை) இதன் காரணமாக இளநிலையில் உள்ளவர் கூடுதலாக ஊதியம் பெறுகின்ற நிகழ்வு ஏற்படின் அதனையும் சரி செய்யலாம். (மேற்படி அரசாணை) மேற்படி ஊழியர் கீழ்ப்பதவியின் தேர்வு நிலை /சிறப்பு நிலைப் பதவியில் பணி புரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. (அரசு க.எண். 85776/எம்பிசி/91-1 நிதித்துறை நாள் 7.2.95)

பதவி உயர்வு பெற்றும் உதிய இழப்பு ஏற்படக் கூடியவர்களுக்கு ஊதிய இழப்பை தடுத்து நிறுத்தும் ஒரு பாதுகாப்பாக இந்த விதி உள்ளது.

பட்டம் பெற்ற தட்டச்சு (இ.நி.உ.) பதிவுறு எழுத்தர் ஆகியோர் **01.04.2013** க்கு முன்பு பணியேற்றிருந்தால் மற்ற தேவையான நிபந்தனைகள் திருப்தியாக இருக்கும்பட்சத்தில் “உயர் தொடர்நிலை” (Higher start of Pay) ஊதிய நிர்ணயம் செய்ய தகுதியாவார்கள். மேற்படி ஊதிய நிர்ணயம் எந்த தேதியிலும் வழங்கப்படலாம்.

**01.04.2013** க்கு பின்பு பணியேற்றிருந்தால் மேற்படி ஊதியம் நிர்ணயம் செய்ய தகுதியற்றவராகின்றனர். ஊதியம் நிர்ணயம் செய்திருந்தால் (அ.ஆ.எண் **241 –** நிதி ஊகு**)** துறைநாள் **22.07.2013) 22.07.2013** வரை உள்ள காலம் வரை வழங்கப்பட்ட தொகையை பிடித்தம் செய்யக்கூடாது. மேலும் அவர்களுக்கான ஊதியத்தை பணிநியமனம் வழங்கப்பட்டநாளில் அப்பதவிக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் தர ஊதியத்தில் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

அரசு கடித எண் : **16115** | CMPC | **2018–1** நாள் **25.05.2018**

**பொதுவான விதிகள்**

பட்டம் பெற்ற தட்டச்சர் / இநிஉ / பதிவுறு எழுத்தர் ஆகியோர் 01–04–2013 க்கு முன்பு பணியேற்றிருந்தால் மற்ற தேவையான நிபந்தனைகள் திருப்தியாக இருக்கும் பட்சத்தில் “உயர் தொடர்நிலை” (higher start of pay) ஊதிய நிர்ணயம் செய்ய தகுதியாவார்கள். மேற்படி ஊதிய நிர்ணயம் எந்த தேதியிலும் வழங்கலாம்.

01–04–2013 க்கு பின்பு பணியேற்றிருந்தால் மேற்படி ஊதியம் நிர்ணயம் செய்ய தகுதியற்றவராகின்றனர். ஊதியம் நிர்ணயம் செய்திருந்தால் (அ.ஆ. எண். 241 /நிதி(ஊகு) துறை நாள் 22–07–2013) 22–07–2013 காலம் வரை வழங்கப்பட்ட தொகையை பிடித்தம் செய்யகூடாது. மேலும் அவர்களுக்கான ஊதியத்தை பணி நியமனம் வழங்கப்பட்ட நாளில் அப்பதவிக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் +தர ஊதியத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யவேண்டும்.

அரசு கடிதஎண்.16115/CMPC/2018–1 நாள் 25–05–2018

(அ) தேர்வு நிலை/சிறப்பு நிலையில் ஊதிய நிர்ணயம் 1.1.2006 முதல் 3 விழுக்காடு ஊதிய உயர்வு அனுமதித்தும் கூடுதலாக வழங்கப்படும். 3 விழுக்காடு அனுமதிக்கும் நாள் முதல் (1.1.06 முதல்) கருத்தியலாக ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும். பின் 1.4.2013 முதல் பணப்பயன் வழங்க வேண்டும். 1.4.2013க்கு பின்பு தேர்வு நிலை/சிறப்பு நிலைக்கு உயர்த்தப்படுபவருக்கு ஊதியத்தில் 3% + 3% ஊதிய உயர்வு பணப்பயனுடன் வழங்க வேண்டும். (அரசாணை எண் 237, நிதித்துறை நாள் 22.7.2013)

(ஆ) பதவி உயர்வுக்குத் தேவையான தகுதிகள் இருந்தால் மட்டுமே தேர்வு/ சிறப்பு நிலைப் பதவிக்கு உயர்த்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை (அ.ஆ.எண். 276 நாள் 7.8.92) 7.8.92 வரை இருந்தது. 7.8.92 முதல் பதவி உயர்வுக்கான தகுதி இல்லை என்றாலும் தேர்வு நிலை/சிறப்பு நிலை வழங்கப்படும். 7.8.92 அன்று 20 ஆண்டு பணி முடித்து தகுதியின்மை காரணமாகத் தேர்வு நிலைக்கு உயர்த்தப்படாதவர்கள் நேராக சிறப்பு நிலைப் பதவிக்குத்தான் உயர்த்த வேண்டும். (அ.ஆ.எண். 188, நிர்வாகத்துறை, நாள் 13.7.94)

(இ) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைக்கு செல்ல கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்றும் தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும் என்றும் நிபந்தனை அரசாணை எண். 276 பணியாளர் துறை, 7.8.92 மூலம் நீக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் கல்வித்தகுதி பெறாதோர்/தேர்வுகளில் வெற்றி பெறாதோர் 10/20 ஆண்டுகள் பணி முடித்திருப்பினும் அவர்கள் தேர்வு நிலை/சிறப்பு நிலைக்கு 7.8.92 முதல் தான் செல்ல முடியும். (அரசு கடிதம் 75678/92–1 நிர்வாகத் துறை நாள் 21.9.92)

(ஈ) ஒரு ஆண்டில் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை தேர்வுநிலைக்கு உயர்த்தப்பட வேண்டியவர்கள் பட்டியல் தயார் செய்யப்படும். தண்டனைக் காலம் நடப்பில் இருப்பின், தண்டனை முடிந்த பின்னர்தான் தேர்வு நிலை கிடைக்கும். (அரசாணை எண் 68, நிர்வாகத்துறை நாள் 23.1.86)

(உ) தேர்வு நிலை/சிறப்பு நிலைக்கு பணி இறக்கக் காலம் சேராது. L.L.P without M.C. சேராது.

(ஊ) பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து பத்து ஆண்டு கணக்கிடப்படும். தற்காலிகப் பணிக்காலமும் பதவி இறக்க காலமும் சேராது. (அரசாணை எண் 68, நிர்வாகத்துறை நாள் 23.1.86)

(எ) கண்டனம் போன்ற சிறிய தண்டனைகள் (Minor Punishment) இருப்பின் தேர்வு நிலை தள்ளிப் போகாது. (அரசு கடித எண். 11877/பணி N /86–1 நிர்வாகத்துறை நாள் 15.5.87)



(ஏ) தேர்வு நிலை நாளும், ஊதிய உயர்வு நாளும் ஒன்றானால் தேர்வு நிலை வழங்கியபின் ஊதிய உயர்வு அளிக்கலாம். (அரசு கடித எண். 17177/பிசி1ஏ/792 நிதித்துறை, நாள் 15.5.87)

(ஐ) ஒரு பதவியின் தேர்வு நிலை ஊதிய வீதமும் உயர்பதவியின் ஊதிய வீதமும் ஒன்றாக இருப்பின் இரண்டு பணிக்காலத்தையும் சேர்த்து உயர் பதவியில் தேர்வு நிலை வழங்கலாம். இது முதல் பதவி உயர்வு மட்டுமே கிடைக்கும் என்றிருந்தது. (அரசாணை எண் 210, நிர்வாகத்துறை நாள் 11.3.87) இச்சலுகை 1.6.88க்கு முன்னர் வழக்கில் இருந்த Special Temporary Post–ல் பணிபுரிந்தவருக்கும் கிடைக்கும். (அரசாணை எண் 375, பணியாளர் துறை, நாள் 22.10.93) அதேபோன்று ஒருவர் சிறப்பு நிலைப் பதவியிலிருக்கும்பொழுது பதவி உயர்வு பெறுகின்றார். சிறப்பு நிலைப் பதவியின் ஊதிய விகிதமும் உயர்பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றானவை. இதுபோன்ற இனங்களில் கீழ்பதவியின் சிறப்பு நிலைப் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்து உயர்பதவியில் தேர்வு நிலை வழங்கப்படும். இதனால் உயர்பதவியில் பத்து ஆண்டு பணி முடிப்பதற்குள் தேர்வு நிலை பெற முடியும். (அரசு கடித எண் 15077/95–4, நிர்வாகத்துறை நாள் 13.6.95) ஒரு அரசு ஊழியர் முதல் நிலை பதவி உயர்வுக்கு மட்டும் பெற முடியும் என்பதை தற்போது அனைவரும் பெறமுடியும் என அரசு கடிதம் எண். 168, பணியாளர் நிர்வாக சீர்திருத்தம் நாள் 28.9.99ல் விஸ்தரித்துள்ளது. ஆனால், நிதிப்பயன் 1.9.98லிருந்து மட்டுமே பெறமுடியும் என்பதும் தனது ஒட்டுமொத்த பணிக்காலத்தில் ஒரு தடவை மட்டுமே இச்சலுகையை பெறமுடியும் என்பதும் முக்கியமான நிபந்தனையாகும். (அரசு கடிதம் எண். 61998/N/99–5 பணியாளர் நிர்வாக சீர்திருத்தம் நாள் 15.3.2000)

மேற்காணும் சலுகைகள் 1.1.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திருத்திய ஊதிய விகிதங்களுக்கு பொருந்தாது. மேலும், கீழ்நிலைப் பதவியின் தேர்வு நிலை/சிறப்பு நிலை ஊதிய விகிதமும் அடுத்த உயர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமும் ஒன்றாக இருப்பின் கீழ்நிலைப் பதவியின் தேர்வு நிலை/சிறப்பு நிலை பணிக்காலத்தையும், உயர் பதவியின் சாதாரணநிலை பணிக்காலத்தையும் கணக்கிட்டு உயர் பதவியில் தேர்வு நிலை வழங்குவது 01.06.2009 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.(அரசுக் கடிதம் எண். 23373/எஸ்/2011.2 ப.ம.நி.சீ.து. நாள் 09.08.2011 & அரசுக் கடிதம் எண்.7286/எஸ்/2012.1 ப.ம.நி.சீ.து. நாள் 14.06.2012)

(ஒள) பதவி உயர்வு மறுக்கப்பட்ட ஒருவர் முறையீட்டின் பேரில் பின்னர் பதவி உயர்வு பெற்றால் அவரின் இளையவர் தேர்வு நிலை பெற்ற நாளிலேயே தேர்வு நிலை வரலாம். (அரசு கடித எண் 49530/பணி–எம்/84–1, நிர்வாகத்துறை நாள் 21.6.84)

# XIX. தமிழ்நாடு "திருத்திய ஊதிய" விதிகள்-2017

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள், பத்து ஆண்டுகட்குப் பிறகு திருத்தி அமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளன. இவை **01.01.2016** முதல் புனைவியலாகவும் **01.10.2017** முதல் பணப்பயனுடனும் நடைமுறைப்படுத்தப்பட ஆணையிடப்பட்டுள்ளது. (அரசாணை எண்.303/நிதி (ஊதியக் குழு)த்துறை/ நாள்.11.10.2017)

இந்த திருத்திய ஊதிய விதிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**விதி 3 : விளக்கங்கள்:**

i. **தற்போதைய அடிப்படை ஊதியம்:**
திருத்திய ஊதிய விதி எண்.6 இன்கீழ் புலம்பெயர விழைவு தெரிவிக்கும் தேதிக்கு முன்னர் ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியத்தில் பெற்றுவரும் ஊதியம் (மட்டும்) என்று பொருளாகும். இதனுடன் இதர ஊதிய வகைளான 'சிறப்பு ஊதியம்' தனி ஊதியம் போன்றவை சேராது.

ii. **தற்போதைய ஊதியக் கட்டு மற்றும் தர ஊதியம்:**
நிலையான அல்லது அலுவல்முறையில் பணிபுரிந்துவரும் ஒரு அரசு ஊழியர், புதிய ஊதிய அமைப்புக்கு விதி 6 இன் கீழ் புலம்பெயர விழைவு தெரிவிக்கும் தேதியில், தான் வகிக்கும் பதவிக்குப் பொருத்தமான ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியம் என்று பொருளாகும்.

iii. **தற்போதைய ஊதியக் கட்டமைப்பு:**
இந்தத் திருத்திய ஊதிய விதிகள், 2017 நடைமுறைக்கு வரும் நாளுக்கு முந்தைய நாளில், ஒரு அரசு ஊழியர் இருந்து வந்த (முந்தைய) அப்போதைய ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியம் ஆகும்.

iv. ஊதிய அணி (Pay Matrix) என்பது திருத்திய ஊதிய ஆணை, அட்டவணை III & IV இல் காட்டப்பட்டுள்ள' தற்போதைய ஊதியக்கட்டு + தர ஊதியத்திற்கு நிகரான ஒன்றன்கீழ் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள ஊதிய 'செல்' (Cell) களை உள்ளடக்கிய ஊதியப் படிநிலை (Levels)களைக் கொண்டதாகும்.

v. ஊதியப் படிநிலை (Pay Level) என்பது, தற்போதைய ஊதியக்கட்டு + தர ஊதியத்திற்கு நிகராக, அட்டவணை III & IV இல் தரப்பட்டுள்ள புதிய 'படிநிலை' ஆகும்.



vi. ஊதியப் படிநிலை (Pay in the Level) யில் ஊதியம் என்பது ஊதிய அணியின்கீழ், படிநிலையில் ஒவ்வொரு 'செல்'விலும் குறிப்பிடப்படும் ஊதியத் தொகை ஆகும்.

vii. திருத்திய ஊதிய கட்டமைப்பு (Revised Pay Structure) என்பது, தனியே வேறொன்று அறிவிக்கப்பட்டாலொழிய, தற்போதைய ஊதியக்கட்டு + தர ஊதியத்திற்கு நிகராக அறிவிக்கப்பட்டுள்ள, ஒரு பதவிக்கான ஊதிய அணி மற்றும் படிநிலை (Pay Matrix & Level) ஆகும்.

viii. திருத்திய ஊதியக் கட்டமைப்பில் அடிப்படை ஊதியம் என்பது, ஊதிய அணியில், தகுந்த படிநிலையில் பெறும் ஊதியம் மட்டுமே ஆகும். இதில் சிறப்பு ஊதியம், தனி ஊதியம் போன்றவை சேராது.

ix. ஷெடியூல் (அட்டவணை) என்பது திருத்திய ஊதிய விதிகளின் பின்னிணைப்பாக உள்ளவை ஆகும்.

**விதி 6:** திருத்திய ஊதிய விகிதங்களுக்கு, தற்போது பணிபுரிந்துவரும் ஊழியர்கள் புலம்பெயரும் நாள் (Date of migration) மற்றும் விழைவைத் தெரிவித்தல் (Option)

**6 (1) :** தற்போது பணிபுரிந்துவரும் ஊழியர் ஒருவர், புதிய ஊதியக் கட்டமைப்புக்கு புலம் பெயர, தன் விழைவை பின்வரும் 3 வகையான நாட்களில் ஏதேனும் ஒன்று எனத் தெரிவு செய்யலாம்:–

(அ) 01.01.2016 முதல் ;

(ஆ) தற்போதைய ஊதிய அமைப்பிலேயே, தன் அடுத்த அல்லது அதற்கு அடுத்த ஊதிய ஊயர்வு(கள்) பெறும் நாட்கள் வரை (அல்லது) தற்போதைய பதவியைவிட்டு விலகும் நாள்வரை தற்போதைய ஊதிய அமைப்பிலேயே இருந்துவிட்டு அதன்பிறகு புதிய குறிப்பிடும் தேதியில் திருத்திய ஊதியக் கட்டமைப்புக்கு புலம் பெயர்தல்; (அல்லது)

(இ) 01.01.2016 முதல் திருத்திய ஊதிய விகித விதி 2017 அறிவிக்கப்பட்ட (11.10.2017) தேதிக்கு இடைப்பட்ட நாட்களில் பதவி உயர்வு பெற்றிருந்தால் அந்த நாளில் புலம்பெயர்தல்.

**6(2)** அட்டவணை எண். VI இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இந்த விழைவுக் கடிதம், இந்த ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தரப்பட வேண்டும்.

(2) (i,ii,&iii) இந்த ஆணை வெளியிடப்பட்ட தேதியில் (11.10.2017) தற்காலிக பணிநீக்கம்;அயற்பணி, பணிநீக்கம்; போன்றோர் எவ்வாறு, எப்போது விழைவுக் கடிதம் தருவது குறித்து விரிவான நடைமுறை ஆணை 6 (2)–ஐத் தொடர்ந்து தரப்பட்டுள்ளன.

6 (2) (iv) 01.01.2016 தேதிக்கு பின் ஒரு அரசு ஊழியர் மரணமடைந்திருப்பாராயின், அலுவலகத் தலைவரே அந்த ஊழியரின் ஊதியத்தை 01.01.2016 முதல் அல்லது அவரைச் சாா்ந்திருப்போருக்குக் கூடுதல் பணப்பயன் கிடைக்குமெனில் பிறிதொரு நாளில் நிர்ணயித்து ஆணையிடலாம்.

6 (4) நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் ஒரு ஊழியர் தன் விழைவை அளிக்காவிட்டால் 01.01.2016 முதல் புதிய ஊதியக் கட்டமைப்புக்குப் புலம் பெயர் அவர் விழைவு அளித்ததாகக் கருதி (deemed) நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

6 (5) ஒரு முறை அளித்த விழைவு இறுதியானது; அதே நாளில் ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

6 (6) ஒரு குறிப்பிட்ட நாள்வரை ஒரு ஊழியர் தற்போதைய (திருத்தத்துக்கு முந்தைய; Pre-revised) ஊதியக் கட்டமைப்பிலேயே தொடர்ந்திட விழைவு தெரிவித்த நேர்வுகளில், அவருக்கு அதே ஊதியம் மற்றும் அதற்கான படிகளும் பெற அனுமதிக்கப்படுவார்,

**விளக்கம் 1 :** தற்போதைய ஊதிய விகிதத்தில் தொடர விழைவைத் தெரிவிப்பவர், ஒரே ஒரு ஊதியக்கட்டு + தர ஊதியத்தில் மட்டுமே நீடிக்க இயலும்.

**விளக்கம் 2 :** இந்த திருத்திய ஊதிய விதிகள் அறிவிக்கப்பட்ட தேதிக்குப்பின் (11.10.2017) புதிய நியமனத்தில் பணியில் சேர்ந்தோருக்கு இந்த விழைவு அளிக்கும் உரிமை கிடையாது; அவர்களுடைய ஊதியம் இந்த விதிகளின் படியே நிர்ணயிக்கப்படும்.



6 (6) **விளக்கம் 3 :** 01.01.2016 அன்று ஈட்டிய விடுப்பில் இருந்தோர் குறித்து கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விவரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கம் 4 :** 01.01.2016 அன்று கல்வி விடுப்பில் இருந்தோர் குறித்து ........

**விளக்கம் 5 :** 01.01.2016 அன்று தற்காலிக பணிநீக்கம், பதவி இறக்கம் செய்யப்பட்டோர் குறித்து.

} என்று பணி மேற்கொள்கிறார்களோ அன்றைய தேதியில் இருந்து மூன்று மாதத்திற்குள் விழைவு தெரிவிக்க வேண்டும் (விவரம் அரசு ஆணையில்)

விதி 7 : புலம் பெயர்கையின் போது திருத்திய ஊதிய அமைப்பில் ஊதிய (மறு) நிர்ணயம் செய்வது குறித்த முறைகள் பற்றி இவ்விதி விவரிக்கின்றது.

7(1) குறிப்பிட்ட நேர்வுகளில் வேறுவிதமாக ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என அரசு சிறப்பு ஆணை மூலம் அறிவித்தாலொழிய, அனைத்து அரசுஊழியர்களின் ஊதியமும் 01.01.2016 முதல்(அல்லது) அவர்கள் விருப்பம்தெரிவித்த பிறிதொரு நாளில் அவர்களுடைய நிரந்தர பதவியில் (அவருக்கு உரிமை (lien) உள்ள அல்லது உரிமை நீக்கப்படாத நேர்வில் ) நிலையான ஊதியம் (Substantive pay) தனியாகவும், அலுவல்ரீதியான (Offciating Pay) ஊதியம் தனியாகவும், பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(i) 01.01.2016 அல்லது விழைவு தெரிவித்த நாளில் தற்போது பெற்று வரும் ஊதியத்தை (அடிப்படை ஊதியம் + தர ஊதியம்) 2.57 எனும் காரணியால்பெருக்கிவரும் தொகையை அருகாமை ரூபாய்க்கு சுழித்துக் கொள்க. (Rounded off to the nearest rupee)

அதே தொகை, திருத்திய ஊதிய அணியில் (Pay matrix) ஊதியப் படிநிலை (Level) யில் உள்ள 'செல்'லில் (Cell) இடம்பெற்றிருக்குமாயின் அதே தொகை இவருடைய திருத்தியமைக்கப்படும் ஊதியம் ஆகும்; அவ்வாறு, அத்தொகை, 'செல்'லில் இடம் பெற்றிருக்கவில்லையாயின் அதற்கடுத்து செல்லில் இடம்பெற்றிருக்கும் 'உடனடி உயர்தொகை' (அதே ஊதிய அணி; அதே படிநிலையில்) அவருடைய அடிப்படை ஊதியமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். (உதாரணம், அட்டவணை V; மாதிரிநிர்ணயம்–I; பக்கம் 26) தனியே தரப்பட்டுள்ளது.)

7 (1) (ii) ஒருவேளை அவ்வாறு கணக்கிடப்படும் தொகை (2.57 காரணியால் பெருக்கிப்பட்டு வருவது) ஏற்புடைய ஊதியப் படிநிலையில் முதல் செல்லில் உள்ள தொகையை விடக் குறைவாக இருக்குமாயின், அவருடைய ஊதியம், அந்தப் படிநிலையின் குறைவான அதாவது முதல் செல்லில் உள்ள குறைந்தபட்ட ஊதியத்தல் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

7 (2) ஊதிய மறுநிர்ணயம் செய்கையில், தற்போதைய ஊதிய அமைப்பில் (ஊதியக்கட்டு + தர ஊதியம்) இரண்டு அல்லது அதிகமான நிலைகளில் (Stages) ஊதியம் பெறும் அரசு ஊழியர்களின் ஊதியமும் ஒரே ஊதிய அணி, ஊதியப் படிநிலையில் ஒரே செல்லில் நிர்ணயிக்கப்படும் நேர்வுகள் ஏற்படலாம்; அப்போது எப்படி நிர்ணயிக்க வேண்டும் என்பதை இவ்விதி விளக்குகிறது: வருமாறு:

இவ்வாறான நேர்வில், அவ்வாறு "ஒன்றுகுவிக்கப்படும்" (bunched) ஒவ்வொரு இரண்டு நிலைகளுக்கும் ஒரு கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு (One additional increment shall be given for every two stages bunched) தற்போதையஊதியக் கட்டமைப்பில் அதிக ஊதியம் பெறும் ஊழியரின் ஊதியம் அதே (திருத்திய) ஊதியஅணி; படிநிலையில் அடுத்த செல்லில் உள்ள தொகை என நிர்ணயிக்கப்பட வேண்டும்.

7 (2) **விளக்கம் :** இரண்டு அரசு ஊழியர்களின் ஊதியத்தை மேற்காணும்நோக்கத்திற்காக ஒப்புநோக்குங்கால், இரு ஊதியங்களில், குறைவான ஊதியத்தைவிட, மாறுபாடு 3% க்கு மிகுதியாக உயர் ஊதியம் இருந்தால் மட்டுமே இவ்வாறு இரண்டு நிலை என்று கருதப்பட வேண்டும்; அவ்வாறு இல்லையெனில், இந்தப் பயன் பெற இயலாது.

7 (3) : மேலே விதி 7(2) இல் வகைசெய்தவாறு ஊதியம் நிர்ணயம் செய்த நேர்வில், அந்த அரசு ஊழியரைவிட அதே அல்லது அடுத்த நிலையில் ஊதியம்பெற்றவரின் ஊதியமும் நிர்ணயிக்கப்படுமானால், அந்த (பிந்தைய) ஊழியரின் ஊதியமும் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு உயர்த்தி நிர்ணயம் செய்யப்படலாம்.

7 (4) இவ்வாறு விதி 7 (1) இன்கீழ் ஊதியம் மறுநிர்ணயம் செய்த நேர்வில், 1.1.16 க்கு முன்னர் தன் இளையவரை விட அதிக ஊதியம் பெற்ற முதியவர் ஒருவரின்ஊதியம், திருத்திய ஊதியக் கட்டமைப்பில் இளையவருக்கு நிர்ணயிக்கப்பட்ட செல்லில் உள்ள தொகைக்குக் குறைவாக அமைந்திடின், அந்த முதியவரின் ஊதியத்தை, இளையவர் பெற்ற ஊதியத்திற்கு நிகரக உயர்த்தி நிர்ணயித்து ஆணையிடலாம்.



7 (5) 01.01.2016 அன்றைய தேதியில் ஊதியக்குறைப்பு; ஊதிய உயர்வு நிறுத்தம்போன்ற தண்டனை பெற்று இருந்தோர் போன்ற நேர்வுகளில் கடைபிடிக்க வேண்டிய ஊதிய நிர்ணய நடைமுறைகளை விவரிக்கின்றது.

8 01.01.2016 க்குப் பிறகு அரசுப்பணியில் முதன்முறையாக நேரடித் தேர்வு (அல்லது பிறவழிகளில்) தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் சேர்ந்தோரின் ஊதியத்தைநிர்ணயம் செய்யும் வழிமுறைகள் :

விதி 6–க்கு விலக்காக, 01.01.2016 க்குப் பின்னர் அரசுப்பணிக்கு, முதன்முறையாக, நேரடித் தேர்வு அல்லது பிறவழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் சேர்ந்த ஒரு ஊழியரின் ஊதியம், அவர் நியமிக்கப்பட்ட பதவிக்கான ஊதியநிலை(Pay Level) யின் குறைந்த பட்ச ஊதியத்தில் (அதாவது முதல் 'செல்'லில் உள்ள தொகையில்) நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் இவ்வாறு நிர்ணயிக்கப்படும் நேர்வுகளில், அவ்வாறு நிர்ணயிக்கப்படும் (குறைந்தபட்ச ஊதியம் (அ) முதல் செல்) தொகையை விட அவர் "பெற்ற மொத்தத் தொகை " அதிகமாக இருப்பின், மாறுபடும் தொகையானது 'தன் ஊதியம்' என வழங்கப்படவும், அடுத்தடுத்த ஊதியஉயர்வுத் தொகைகளில் ஈர்க்கப்படவும் வேண்டும்.

**விளக்கம் 1:** பெற்ற மொத்தத் தொகை (existing emoluments) என்பது அவர் பணியில் நியமிக்கப்பட்ட தேதியில் வழங்கப்பட்ட (i) தனி ஊதியம்/சிறப்பு ஊதியம் தவிர்த்த அடிப்படை ஊதியம், (ii) அகவிலைப்படி ஆகியவற்றின் கூட்டுத்தொகை ஆகும்.

**விளக்கம் 2:** அடுத்தடுத்த ஊதிய உயர்வு தொகைகளில் ஈர்க்கப்படத்தக்க தனிஊதியம் என்றால் அடுத்தடுத்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படாமல், எப்போது வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுத் தொகை, நிலுவையில் உள்ள தனி ஊதியத் தொகையை விட அதிகம் எனும் நிலை வருகிறதோ அதுவரை எனவும் அறிக. அதன் பின்னர் தனி ஊதியம் வழங்குவது நிறுத்தப்படும்.

**விதி 9 :** **ஊதிய அணியில் ஊதிய உயர்வு**

(ஆண்டு) ஊதிய உயர்வு வழங்க நேர்கையில், பொருத்தமான ஊதிய அணி, ஊதியப் படிநிலையில் தற்போது பெற்றுவரும் செல்லுக்கு செங்குத்தாகக் கீழே உள்ள அடுத்த 'செல்'லில் (moving vertically down along the applicable level by one cell from the existing cell of pay in pay matrix) உள்ள தொகை என நிர்ணயித்து வழங்கப்பட வேண்டும். (அட்டவணை V, மாதிரி, III)

**விதி 10:** **திருத்திய ஊதியக்கட்டில் அடுத்த ஊதிய உயர்வு நாள்:**

**10(1)** ஜனவரி முதல் நாள், ஏப்ரல் முதல் நாள், ஜீலை முதல் நாள், அக்டோபர் முதல் நாள் என முன்பிருந்தது போலவே வருடத்தில் நான்கு காலாண்டுகளில் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஒரு அரசு ஊழியர் பணியில் நியமிக்கப்பட்ட அல்லது பதவி உயர்வு பெற்ற தேதியைப் பொருத்து அவர், மேற்கண்ட நான்கு தேதிகளில் ஏதாவது ஒன்றில் ஒரேயொரு ஊதிய உயர்வை ஓராண்டில் பெறத் தகுதியடைவார்.

**10(1) (i)** தற்போதைய ஊதியக் கட்டமைப்பில், வருடத்தின் நான்கு காலாண்டுகளில் ஏதாவது ஒன்றில் தற்போது பெற்றுவரும் ஆண்டு ஊதிய உயர்வை புதிய ஊதியக் கட்டமைப்பிலும் தொடர்ந்து பெற அரசு ஊழியர்கள் அனுமதிக்கப்படுவர்.

**விதி 10(1) (ii)** ஒரு அரசு ஊழியர், தற்போதைய ஊதியக் கட்டமைப்பில் தொடர்ந்திருப்பின், ஓராண்டு பணி முடித்து எந்தத் தேதியில் தன்ஆண்டு ஊதிய உயர்வைப் பெறுவாரோ, அதே தேதியில் திருத்திய ஊதியக் கட்டமைப்பிலும் தன் ஆண்டு ஊதிய உயர்வைப் பெறத் தகுதியுடையவராவார்.

மக்கள் வரிப்பணத்தில் செயல்படும் அரசாங்கத்தில் அடிப்படை உரிமைகளைக் கேட்டு அரசிடம் விண்ணப்பித்தால் அதன்மீது அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையை தெரிந்துகொள்ளும் உரிமையை மறுத்தது வெள்ளைக்கார அரசு கொண்டுவந்த ‘அரசு ரகசிய சட்டம் – 1923’. இந்த சட்டம் நம்மவர்கள் ஆட்சியிலும் 58 ஆண்டுகள் தொடர்ந்தது. இதற்கு எதிராக, தகவல் பெறும் உரிமைக்காக பல தன்னார்வ அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், சமூக சிந்தனையாளர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகள் போராட்டம் நடத்தி வந்தனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலான தொடர் போராட்டத்தின் காரணமாக இந்திய அரசு 2002ல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை அமலாக்க முயற்சி மேற்கொண்டது. அச்சமயத்தில் இருந்த காங்கிரஸ் அரசு இச்சட்டத்தை கூர்மையாக்க நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு பரிந்துரைத்த சட்ட முன்வடிவு 2004ல் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 11.5.2005ல் மக்களவையிலும் 12.5.2005ல் மாநிலங்களவையிலும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. 15.6.2005ம் தேதி குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இந்தியா முழுவதும் (ஜம்மு–காஷ்மீர் தவிர) 12.10.2005ஆம் தேதியன்று இது செயல்பாட்டிற்கு வந்தது. இதன்மூலம் அரசு நிர்வாகம் வெளிப்படையாக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு குடிமகனுக்கும் பதிலளிக்கும் கடமை அரசாங்கத்திற்கும் அதன் அதிகாரிகளுக்கும் உண்டு என்பதை உணர்த்தும் இச்சட்டம் மிகவும் வலிமை வாய்ந்த, ஜனநாயகத்திற்கு வலிவும், செறிவும் ஊட்டுகின்ற ஒரு சட்டமாகும். உலக வரலாற்றில் முதன்முதலாக இந்த உரிமையை வழங்கிய நாடு என்ற பெருமையை ஸ்வீடன் பெற்றுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் என நீளும் நாடுகளின் வரிசையில் தகவல் அறியும் உரிமையை தன் மக்களுக்கு அளித்திருக்கின்ற 56வது நாடு என்ற பெருமையை(!?) இந்தியா பெற்றுள்ளது.

பல்வேறு அரசுத் துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் இச்சட்டத்தின் மூலம் தகவல் கோருபவருக்கு, தகவல் அளிக்கும் பொதுத்தகவல் அலுவலர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வரும் மனுக்களின் பேரில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தகவல் தர அல்லது நிராகரிக்கக் கடமைப்பட்டவர்கள். அப்படி தகவல் கோரப்படும் விவரங்களை தரலாமா வேண்டாமா என்ற குழப்பத்திலேயே அதுபற்றி பலரிடம் கேட்டு குழம்பி, ஒன்று தரக்கூடாத தகவலை தந்துவிடுகிறார்கள். அல்லது தரவேண்டிய தகவலை தராமல் நிராகரித்து விடுகிறார்கள். இதனால் மேல்முறையீட்டில் தகவல் ஆணையத்திடம் அபராதம் செலுத்த வேண்டியவர்களாகவோ அல்லது எச்சரிக்கை செய்யப்படுபவர்களாகவோ அவர்கள் ஆட்பட்டு விடுகிறார்கள். தகவல் அளிக்கும் பொறுப்பில் உள்ள பொதுத் தகவல் அலுவலர் என்ற அரசு ஊழியருக்கு, வரக்கூடிய விண்ணப்பங்களில் கேட்கப்பட்டிருக்கக்கூடிய தகவல்கள் தரத்தக்கவையா

இல்லையா என்பதை விளக்கும் பொருட்டு, கையேடுகளோ புத்தகங்களோ சந்தையில் புழங்குவதாக தெரியவில்லை. அதனால் அந்த குறையை கூடுமான அளவிற்கு நிவர்த்தி செய்யும் பொருட்டு பொதுத்தகவல் அலுவலர்களாக இருக்கும் அரசு ஊழியர்கள் எந்த தகவலைத் தரலாம், எந்தெந்த தகவலைத் தரக்கூடாது என்பது பற்றியும், அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியப் பிரிவுகள் எந்த தகவல்களை தரலாம், எந்தத் தகவல்களைத் தரக்கூடாது என்பதைப் பொறுத்து, இதுவரை நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புரைகள் மற்றும் சட்ட விளக்கங்களின் அடிப்படையில் சுருக்கமான வடிவில் பொதுத்தகவல் அலுவலர்களுக்கு பயன்படக்கூடிய செய்தலும் செய்யக்கூடாததுமான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எழும் பிரதிபலிப்புகளைக் கொண்டு எதிர்வரும் ஆண்டுக் குறிப்பேடுகளில் இந்தத் தகவல்கள் மேலும் செழுமைபடுத்தப்படும்.

## பொதுத் தகவல் அலுவலர்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் முக்கிய சட்டப்பிரிவுகள்

பிரிவு 2 (f) தகவல் (Information) என்பது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னஞ்சல்கள், கருத்துரைகள், ஆலோசனைகள், செய்தி வெளியீடுகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், நாள்விவரக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள்கள், மாதிரிகள், உருப்படிவங்கள், மின்னியக்க வடிவம், எதிலும் வைத்திருக்கப்பட்ட தனியார் குழுமம் தொடர்பான தகவல் விவரங்கள் அப்போதைக்கு அமலில் உள்ள வேறு சட்டம் எதன்படியும் பொது அதிகார அமைப்பு ஒன்றால் அணுகிப்பெற முடிகிற பொருள்வகை எதுவும் என்று பொருள்படும்.

பிரிவு 2(j) ''தகவல் அறியும் உரிமை'' (Right to Information) என்பது பொது அதிகார அமைப்பு எதனாலும் வைத்திருக்கப்பட்டுள்ளதும் அல்லது அத்தகு எதனின் கட்டுப்பாட்டிலும் உள்ள இந்தச் சட்டத்தின்படி அணுகிப் பெறக்கூடிய தகவலை அறியும் உரிமை என்று பொருள்படும். மேலும், மின்னியக்க வழி வேறு எதிலும் அல்லது அச்செடுப்புகள் மூலம் எதன் வடிவிலும் தகவலைப்பெறும் உரிமையையும் இது உள்ளடக்கும்.

1. பணி ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை பார்வையிடல்.
2. ஆவணங்கள் அல்லது பதிவேடுகளின் குறிப்புகளை எடுத்தல், சான்றளிக்கப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்.
3. அத்தகு நுண்படதகட்டில் உள்ளடங்கிய உருவம் அல்லது உருவங்களின் (பெரிதாக்கப்பட்ட அல்லது அவ்வாறு ஆக்கப்படாத) மறுபடைப்பு மற்றும்
4. கணினி ஒன்றில் அல்லது வேறு சாதனம் எதிலும் தகவல் பதிவு செய்யப்பட்டிருக்கும் பொழுது அதனை வட்டுகள், நெகிழ்வூட்டுகள், ஒலி நாடாக்கள், ஒலி – ஒளிக்காட்சி நாடாப் பேழைகள் அல்லது மின்னியக்க வழி வேறு எதிலும் அல்லது அச்செடுப்புகள் மூலம் எதன் வடிவிலும் தகவலைப் பெறும் உரிமையையும் இது உள்ளடக்கும்.



## பிரிவு 5 பொது தகவல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளின் பதிவுகள் பற்றிய விபரங்கள்

ஒவ்வொரு துறையின் தலைமை அதிகாரியும் இச்சட்டம் ஆரம்பிக்கப்பட்ட 120 நாட்களுக்குள் மத்திய மாநில பொதுத் தகவல் அளிக்கும் அதிகாரிகளை முறையாக நியமிக்க வேண்டும்.

## பிரிவு 6 தகவல்களைக் கேட்டுப் பெறுதல்

தகவல்களைக் கேட்டுப் பெற விரும்பும் நபர், மத்திய/மாநில அரசால் நியமிக்கப்பட்ட பொது தகவல் அளிக்கும் அலுவலர்களுக்கு உரிய கட்டணத்துடன் ஆங்கிலம், இந்தி மற்றும் அரசியல் அமைப்பு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகளில் ஒன்றில் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.,

விண்ணப்பம் எழுதுகோலின் உதவியினாலோ, கணினி உதவியாலோ தயாரிக்கப்பட்டு இருக்கலாம்.

தகவலைக் கேட்டுப் பெறுவதில் பொது தகவல் அலுவலர் விண்ணப்பம் செய்பவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். விண்ணப்பித்தவர் எந்தப் பயனுக்காக விண்ணப்பித்தார் என்ற விபரங்களை அளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

## பிரிவு 8 தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து விலக்கு (Exception from disclosure of information)

இந்த சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்திய குடிமக்கள் எவருக்கும் பின்வரும் தகவலைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

(அ) எந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, நாட்டின் பாதுகாப்பு, இந்தியாவின் போர்த்திறம் சார்ந்த அறிவியல் அல்லது பொருளாதார நலன்கள், அயல்நாட்டுடன் கொண்டுள்ள உறவை பாதிக்குமோ அல்லது குற்றமொன்றைத் தூண்டுவதற்கு ஊக்கமளிக்குமோ, அந்தத் தகவல்.

(ஆ) எந்தத் தகவல் வெளியிடப்படுவதற்கு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதனாலும் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது எதனை வெளிப்படுத்துதல் நீதிமன்ற அவமதிப்பாகுமோ அந்தத் தகவல்.

(இ) எந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற சிறப்புரிமையின் மீது மீறுகை ஒன்றை செய்யுமோ, அந்தத் தகவல் ஆகியவற்றை கொடுக்க வேண்டியதில்லை.

(ஈ) வணிகத்தின் நம்பகத்தன்மை, வியாபார ரகசியங்கள் அல்லது அறிவுசார் சொத்துடமை உள்ளிட்ட எந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது மூன்றாம் தரப்பினர் ஒருவரின் சந்தையில் போட்டியிடும் நிலைக்கு தீங்காகுமோ அந்தத் தகவலை கொடுக்க வேண்டியதில்லை. அத்தகு தகவலின் வெளிப்படுத்துகையானது பொதுமக்களின் பேரளவு நலனுக்கு நியாயமானதாக உள்ளது என்று தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி மற்றபடி அந்தத் தகவலை கொடுத்தல் கூடாது.

(உ) நபர் ஒருவருக்கு அவரது பொறுப்புரிமை தொடர்பால் உறவில் கிடைக்கும் தகவல், அந்தத் தகவலின் வெளிப்படுத்துகையானது பொதுமக்களின் பேரளவு நலனுக்கு நியாயமானதாக உள்ளது என்று தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி மற்றப்படி அந்த தகவலை கொடுத்தல் கூடாது.

(ஊ) அயல்நாட்டு அரசாங்கத்திடமிருந்து ரகசியமாகப் பெறப்பட்ட தகவல்.

(எ) எந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது நபர் ஒருவரின் வாழ்க்கைக்கு அல்லது உடல் பாதுகாப்பிற்கு அல்லது தகவலின் மூலத்தை அடையாளம் காண்பதற்கு அல்லது சட்ட நிறைவேற்றும் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக ரகசியமாக கொடுத்த உதவிக்கு அபாயம் விளைவிக்குமோ அந்தத் தகவலை கொடுத்தல் கூடாது.

(ஏ) எந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது புலனாய்வு செயல்முறைக்கு அல்லது குற்றவாளிகளை கைது செய்தலுக்கு அல்லது அவர்கள் மீது குற்றவழக்கு தொடருவதற்கு தடை செய்யுமோ அந்தத் தகவல் ஆகியவற்றைக் கொடுத்தல் கூடாது.

(ஐ) அமைச்சர்கள், குழுச் செயலாளர்கள் மற்றும் இதர அலுவலர்களின் கலந்தாய்வுகள் குறித்த பதிவேடுகள் உள்ளிட்ட அமைச்சரவை ஏடுகள் ஆகியவற்றை கொடுத்தல் கூடாது.

வரம்புரையாக : அமைச்சர்கள் குழுவின் முடிவுகள் அவற்றிற்கான காரணங்கள் மற்றும் எந்த பொருளின் அடிப்படையில் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டனவோ அந்த விஷயம் நிறைவடைந்த பின்னர் அல்லது முடிவடைந்த பின்னர் பொதுமக்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக : இந்தப் பிரிவில் விலக்களிக்கப்பட்டுள்ள குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களை வெளிப்படுத்தல் கூடாது.

(ஒ) எந்தத் தகவல் தனிப்பட்ட தகவலாக இருக்கிறதோ அதுபொதுச் செயற்பாடு அல்லது நலனுக்கு தொடர்புடையதாக இல்லாதிருக்கும்போது அல்லது தனி நபரின் அந்தரங்கத்தில் நியாயமற்ற குறுக்கீடு செய்யும்போது அந்தத் தகவலை தெரிவித்தல் கூடாது. அத்தகைய தகவலை வெளிப்படுத்தலானது பொது மக்களின் பெருமளவிலான நலனுக்கு நியாயமானதாக உள்ளது என்று மத்திய, மாநில பொதுத் தகவல் அலுவலர் அல்லது மேல் முறையீட்டு அதிகார அமைப்புக்குத் திருப்தியளிக்கும்போது அவர் அத்தகைய தகவலை வெளிப்படுத்தலாம்.

வரம்புரையாக : எந்தத் தகவல் நாடாளுமன்றத்திற்கு அல்லது மாநிலச் சட்டமன்றம் ஒன்றிற்கு மறுக்கப்படுதல் கூடாதோ அந்தத் தகவல் நபர் எவருக்கும் மறுக்கப்படுதல் கூடாது.

2. அலுவலக ரகசியங்கள் சட்டம், 1923 (19/1923) அல்லது உட்பிரிவு (1)ன்கீழ் அனுமதிக்கத்தக்க விலக்களிப்புகள் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் பொது நலனானது பாதுகாக்கப்பட்ட நலன்களுக்கான தீங்கைவிட விஞ்சியிருப்பின், தகவலைப் பெறுவதற்கு அனுமதிக்கலாம்.

3. உட்பிரிவு (1), கூறுகள் (அ) (இ) மற்றும் (i) (உ) வகையகங்களுக்குட்பட்டு எந்தத் தேதியில் பிரிவு (6)–ன்கீழ் ஒரு வேண்டுகோள் செய்யப்பட்டதோ அந்தத் தேதிக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த, நிகழ்ந்த அல்லது ஏற்பட்ட



சம்பவம், நிகழ்ச்சி அல்லது விஷயம் எதுவும் தொடர்பான தகவல் எதுவும், அந்தப் பிரிவின்படி வேண்டுகோள் ஒன்றைச் செய்யும் நபருக்கு அளித்தல் வேண்டும்.

வரம்புரையாக : மேற்சொல்லப்பட்ட 20 ஆண்டுகள் கால அளவு எந்தத் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டுமென்பதில் தேதி குறித்து பிரச்சனை ஏதும் எழுந்தால்,இந்த சட்டத்தில் வகை செய்யப்பட்ட வழக்கமான மேல்முறையீடுகளுக்கு உட்பட்டு மத்திய அரசாங்கத்தின் முடிவே இறுதியானதாகும்.

## பிரிவு 9 தகவல் மறுக்கப்படுவதற்கான சில சூழ்நிலைகள்

வேண்டப்படும் தகவலானது அரசு அல்லாத நபர் ஒருவரிடம் நிலைப்பெற்றிருக்கும் காப்புரிமையின் மீறுகை ஒன்றை உள்ளடக்குவதாக இருக்கும்போது அதனைப் பிரிவு 8–ன் வகையங்களுக்கு குந்தகமில்லாமல் மத்தியப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது மாநிலப் பொது தகவல் அலுவலர் நிராகரிக்கலாம்,

## பொது தகவல் அலுவலரின் கடமைகள்

1. விண்ணப்பத்தில் கோரிய விபரம் மூன்றாம் நபருக்குச் சார்ந்தது என்றால், 5 நாட்களுக்குள் உரிய பொதுத் தகவல் அலுவலருக்கு விண்ணப்பத்தை மாற்றம் செய்ய வேண்டும். தனது கடமையைச் செய்வதற்கு, மற்ற அலுவலர்களின் உதவியை, பொதுத் தகவல் அலுவலர் பயன்படுத்திக் கொள்ளலாம். எவ்வகையிலும் 30 நாட்களுக்குள் விண்ணப்பத்திற்கு ஒரு முடிவு கொடுக்க வேண்டும். அதன்படி நடைபெறாவிட்டால், விண்ணபத்தை பொதுத்தகவல் அலுவலர் ரத்து செய்து விட்டார் என்று கொள்ள வேண்டும்.

2. கோரிய தகவலானது ஒரு தனிமனிதனின் உயிருக்கும், விடுதலைக்கும் உரியதாக இருந்தால் 48 மணி நேரத்திற்குள் தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.

## பிரிவு 19 மேல்முறையீடு

1. பொதுத் தகவல் அலுவலரின் முடிவால் (தகவல் அளிக்கவில்லையென்றால், தகவல் மறுக்கப்பட்ட முடிவு எடுத்துவிட்டதாகக் கொள்ள வேண்டும்). திருப்தியடையாத நபர், முடிவு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நியமிக்கப்பட்ட முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு முறையீடு செய்ய வேண்டும். (போதிய காரணங்களுக்காக தாமதம் ஏற்றுக் கொள்ளப்படும்)

2. முதல் மேல்முறையீட்டு அலுவலரால் கொடுக்கப்பட்ட தீர்ப்பிலிருந்தோ அல்லது கொடுத்தாக வேண்டிய நாளிலிருந்தோ 90 நாட்களுக்குள் மத்திய / மாநில தகவல் ஆணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ய வேண்டும்.

3. தகவல் கொடுக்க மறுக்கும் முழுப் பொறுப்பையும் பொதுத் தகவல் அலுவலர் ஏற்றுக் கொண்டு நிரூபிக்க வேண்டும்.

4. முதல் மேல் முறையீடு, தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் அல்லது தகவல் கிடைக்கப்பெற வேண்டிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

## பிரிவு 20 அபராதங்கள்

ஒவ்வொரு பொது தகவல் அலுவலரும் நாளொன்றுக்கு ரூ.250 வீதமும், ரூ.25,000 வரையிலும் கீழ்க்கண்ட குற்றங்களுக்காக அபராதம் செலுத்த வேண்டும்.

1. தகவல் கோரும் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளாமைக்காக
2. நியாயமான காரணமில்லாமல் 30 நாட்களுக்குள் தகவல் வெளியிடுவதில் தாமதம் செய்வது அல்லது
3. தகவலுக்கான வேண்டுகோளை தீய எண்ணத்துடன் மறுத்ததற்காக அல்லது
4. தீய நோக்கத்துடன் முழுமை பெறாத, தவறான தகவலை அளிப்பது அல்லது
5. கோரப்பட்ட தகவல்களை அழித்து விடுதல் அல்லது
6. தகவல் அளிப்பதை, முறை எதனாலும் தடுத்திருப்பதாக கருதுமிடத்து

இந்த அபராதம் மாநில மற்றும் மத்திய தகவல் ஆணையத்தால் விதிக்கப்படும். இதைத்தவிர, சட்டத்திற்கு முரண்பாடாக நடந்து கொணட பொதுத் தகவல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், மத்திய – மாநில ஆணையம் சிபாரிசுகளும் செய்யலாம்.

## தகவல் பெற விலக்களிக்கப்பட்ட துறைகள் (பிரிவு 8)

தமிழகத்தில் பின்வரும் அரசுத் துறைப் பிரிவுகளில் இந்தச் சட்டத்தின்கீழ் தகவல் கோர முடியாது.

1. தனிப்பிரிவு – குற்றப்புலனாய்வுத் துறை சி.ஐ.டி. 2. க்யூ பிரிவு – குற்றப்புலனாய்வுத் துறை சி.ஐ.டி. 3. தனிப்பிரிவு 4. பாதுகாப்புப் பிரிவு 5. கோர்செல் சி.ஐ.டி. 6. சுருக்கெழுத்து அமைவனம் 7. மாவட்டத் தனிப் பிரிவுகள் 8. காவல்துறை ஆணையரக புலனாய்வுப் பிரிவுகள் 9. தனி புலனாய்வு செல்கள் 10. காவல் ஆணையரகங்கள்/மாவட்டங்களில் உள்ள பாதுகாப்பு பிரிவுகள் 11. நக்சலைட்டு தனிப்பிரிவு 12. குற்றப்பிரிவு சி.ஐ.டி. 13. தனிப்புலனாய்வுக் குழு 14. திரைத் திருட்டுப் பிரிவு 15. போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு அமைவனம் 16. கொள்ளைக்கெதிர் பிரிவு 17. பொருளாதார குற்ற செயல்கள் சரகம் 18. சிலைத் திருட்டு தடுப்புச் சரகம் 19. சி.சி.ஐ.டபிள்யு. குற்றப் புலனாய்வுத் துறை 20. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை 21. கணினி குற்றப்பிரிவு 22. மாவட்ட குற்றம், மாநகர குற்றப் பிரிவுகள் 23. சிறப்பு பணிப்படை 24. பயிற்சிப் படை மற்றும் பள்ளி 25. கடலோரக் காவல் படை 26. விரல் ரேகைப் பிரிவு 27. காவல் துறை வானொலி பிரிவு 28. உள் (காவல்துறை) 29. உள் (கடும் மந்தணம்) துறை 30. பொது (கடும் மந்தணம்) புலனாய்வு மற்றும் ஒடுங்கமைவனம்.

நாளும் நாளும் கேட்கப்படும் தகவல்களின் அடிப்படையில் எழும் வழக்குகளில் பல்வேறு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புரைகள் அவ்வப்போது www.tnsic.gov.in மற்றும் www.cic.gov.in ஆகிய இணையதளங்களில் வெளியிடப்படுகின்றன. பொதுத்தகவல் அதிகாரிகள் அவ்வப்போது இந்த இணையதளங்களைப் பார்வையிட்டு சமீபத்தில் வெளியாகியுள்ள தீர்ப்பின் விவரங்களை படித்து, தகவல் கோருபவருக்கு எத்தகைய தகவல்களைத்தரலாம், எந்தத் தகவல்கள்களைத் தரக்கூடாது என்ற விவரங்களை விரல்நுனியில் வைத்துக் கொள்ளலாம். சந்தேகம் கேட்பவர்களுக்கும் உதவலாம்.



## பொதுத் தகவல் அலுவலர் செய்ய வேண்டியனவும், செய்யக் கூடாதனவும்

- தகவல் கோரும் மனுதாரருக்கு பொதுத்தகவல் அலுவலர் இடைக்கால பதில் எதுவும் தரக்கூடாது.
- தகவல் பெறும் உரிமைச்சட்ட விண்ணப்பங்களை குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பெறப்படும் என மறுத்தல் கூடாது.
- பணியிடம் காலியாக உள்ளது, அலுவலகத்தில் வெள்ளையடிக்கும் பணி நடைபெறுகிறது என காரணம் காட்டி மனுக்கள் மீது தகவல்கள் வழங்குவதை தாமதப்படுத்தக் கூடாது.
- தகவல்களை கோருவோருக்கென்று குறிப்பிட்ட படிவம் எதுவும் கிடையாது. இன்ன படிவத்தில்தான் தகவல்கள் கோரப்பட வேண்டும் என்று மனுதாரரை நிர்ப்பந்திக்கக் கூடாது.
- கையொப்பமிடப்படாத, தகவல் கோரும் மனுக்களை நிராகரிக்கலாம்.
- சட்டப்பிரிவு 2(f) மற்றும் 2(j)க்கு உட்பட்டு தகவல்கள் வழங்க வேண்டும்.
- தகவல்கள் கேள்வி வடிவத்தில் கோரப்பட்டுள்ளன என்பதற்காக அதை நிராகரிக்கக் கூடாது.
- அரசின் கொள்கை முடிவு / நிர்வாக நடவடிக்கை முடிவுறாத நிலையில் தகவல்களை கோரினால் அதை வழங்க வேண்டிய அவசியமில்லை.
- தான் கொடுத்த மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று மனுதாரர் கேட்டால் அது குறித்த தகவலை அவருக்கு தெரிவிக்க வேண்டும்.
- ஏன் ? எதற்கு ? எப்படி ? என்ன காரணம் ? சரியா தவறா ? குற்றவியல் நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது போன்ற வினாக்களுக்குத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தகவல் பெற வாய்ப்பில்லை என்று மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.
- மனுதாரரின் ''ஏன் செய்யவில்லை'', ''ஏன் தயக்கம்'' போன்ற காரண கேள்விகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் அளிக்க வேண்டியதில்லை.
- எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா ? நீதிமன்றம் செல்ல வேண்டுமா ? போன்ற கேள்விகளுக்கு பதில் தர வாய்ப்பில்லை என மனுதாரருக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
- யூகங்களின் அடிப்படையில் கேட்கப்படும் தகவல்களுக்கு பதில் தர இயலாது என்று மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.
- பொதுத்தகவல் அதிகாரியின் சொந்தக் கருத்துக்களை வழங்கக் கோருவது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராது.
- பொதுமக்கள் காவல் துறை மீது வெறுப்பில் உள்ளனர் என்பதை அறிவீர்களா ? பொய் வழக்கு என்று முறையீடு செய்து வந்தாலும் அதை

ரத்து செய்ய காவல் துறைக்கு அதிகாரம் உண்டா ? போன்ற கேள்விகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வராது என்பதை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மருத்துவ ஆலோசனை கோரமுடியாது.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் குறைதீர் நடவடிக்கை கோர இயலாது.
- கோப்புகளில் உள்ள தகவல்களை உள்ளவாறு கேட்டுப் பெறுவதற்கு மட்டுமே மனுதாரருக்கு உரிமை உள்ளது.
- தகவல்கள் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும். தகவல்களை உருவாக்கித் தரக்கூடாது.
- மனுதாரர் தகவல்களை Cubic Metre அளவில் கேட்டுள்ளார். ஆனால், கோப்புகளில் அளவுகள் மெட்ரிக் டன்களில் உள்ளது என்றால் அந்த அளவை மெட்ரிக் டன்களிலேயே தரவேண்டும். அளவை Cubic Metre–ல் மாற்றுவது தகவலை உருவாக்குவதாகும்.
- கோப்பில் உள்ள தகவல்கள் ஆங்கிலத்தில் இருந்தால் அதை அப்படியே தர வேண்டுமே தவிர, மொழி மாற்றம் செய்து தரும்படி மனுதாரர் கோருவது ஆணையத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது என மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.
- கோப்பில் இல்லாத தகவல்களை புதிதாக உருவாக்கி வழங்கக் கூடாது. கோப்பில் உள்ள தகவல்களை மட்டுமே தரவேண்டும்.
- இடத்தைப் பார்வையிட்டு தகவல்களை வழங்கத் தேவையில்லை.
- கோப்பு குறிப்புகள் குறித்து கோரப்படும் தகவல்கள் பிரிவு 8 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டிருந்தால் ஒழிய தர வேண்டிய அவசியமில்லை.
- விடுப்பு குறித்த தகவல்களை வருகைப் பதிவேட்டின் நகல்களை வழங்க மறுக்கக் கூடாது.
- மனுதாரர் வழக்கின் ஒரு தரப்பினராக இல்லாத நிலையில், வழக்கு முடிவு பெறாத நிலையில், அவற்றின் ஆவணங்களை கேட்டுப்பெற தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழிவகை இல்லை.
- தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கேட்கப்படும் தகவல்கள் அது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கேட்கப்பட்டுள்ளது என நிரூபணமாகும் நிலையில் தரத் தேவையில்லை.
- முதல்வர், ஆளுநர், அமைச்சர்கள் போன்ற உயர் பதவியிலிருக்கும் அதிகாரிகளை நேரில் சந்திக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதி கோர முடியாது.
- Departmental Promotion Committee (DPC) நடவடிக்கைகளை (minutes) தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் வழங்கலாம்.



- ஏதேனும் ஒரு சட்டத்தின்மூலம் தனிநபர் குறித்த தகவல்களையும் பெற முடியுமானால் சட்டப்பிரிவு 2(f)ன்படி பெற்று மனுதாரருக்கு வழங்க வேண்டும்.
- செய்தித்தாள்களில் வந்த செய்தியின் அடிப்படையில் FIR Copy கோர முடியாது.
- கூட்டுறவு வங்கிகளுக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொருந்தும்.
- அரசு உதவி பெறாத நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் வராது.
- கோப்புகளை பார்வையிட மனுதாரரை அனுமதிக்கலாம்.
- எந்த வேலையிடத்தையும் பார்வையிட மனுதாரருக்கு அனுமதி உண்டு.
- ஆய்வின்போது Videography எடுக்க அனுமதிக்கலாம்
- அலுவலக கணினிகளை ஆய்வு செய்ய அனுமதிக்க இயலாது
- ஆவணங்களை சான்றொப்பமிட்டு வழங்கும்போது ‘தகவல் பெறும் உரிமைச் சட்டம்–2005ன் வகைமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள்’ என பொது தகவல் அலுவலர் முத்திரையிட்டு சான்றொப்பமிட வேண்டும்.
- அரசு ஊழியர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களை கோரலாம்
- பெயர் விவரத்தாளை (Letter Pad) பயன்படுத்தி தகவல்களை கேட்கலாம்
- வழக்கறிஞர் தனது கட்சிக்காரருக்காக தகவல்களை கோர முடியாது.
- நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக தகவல்களை கேட்டுப்பெற தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழிவகை இல்லை.
- ஒரு பொது அதிகார அமைப்பில் ஒன்றிற்கும் மேற்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களை நியமித்துக் கொள்ளலாம்
- சட்டப் பிரிவு 5(5)–ன்படி உதவி நாடப்படுகின்ற அலுவலர்கள் பொதுத் தகவல் அலுவலர்களாக கருதப்படுவார்கள்
- மனுதாரர் ஒரே விண்ணப்பத்தில் பல்வேறு பொது அதிகார அமைப்புகள் குறித்த தகவல்களை கேட்டுப் பெறுவதற்கு இச்சட்டத்தில் வழிவகை இல்லை
- உரிய விண்ணப்பக் கட்டணம் செலுத்தாமலிருந்தால் மனுவை நிராகரிக்கலாம்
- தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைக் கட்டண விதிகளுக்குட்பட்டே விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் (முத்திரைத் தாள் ஏற்புடையதல்ல)
- இந்திய அஞ்சல் ஆணை (Indian Postal Order) ஏற்புடையதல்ல (தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பொறுத்தவரை)

- ஒன்றிற்கும் மேற்பட்டவர்கள் கையொப்பமிட்டு விண்ணப்பித்திருந்தால் ஏற்கத் தேவையில்லை.
- தெளிவாகக் குறிப்பிடப்படாமல் கேட்கப்படும் தகவல்கள் நிராகரிக்கப்படலாம்.
- கோப்பு எண் குறிப்பிடப்படாமல் கோரப்படும் தகவல்கள் நிராகரிக்கப்படலாம்.
- இந்தியக் குடிமகன்தானா என்பதற்கான அத்தாட்சியை மனுதாரரிடம் கேட்கக் கூடாது
- தகவல்களை கேட்பதற்கான காரணங்களை மனுதாரரிடம் பொது தகவல் அலுவலர் கேட்கக்கூடாது
- பல்வேறு பொது அதிகார அமைப்புகளிடமிருந்து தகவல்களை சேகரித்து வழங்க வேண்டியதில்லை
- அனைத்து அலுவலகங்களிலிருந்தும் தகவல்களை சேகரித்து வழங்க வேண்டிய தில்லை
- வேறு ஒரு பொது அதிகார அமைப்பிற்கு விண்ணப்பத்தினை மாற்றம் செய்தவுடன் பொதுத் தகவல் அலுவலரின் கடமை முடிவடைந்துவிடுகிறது.
- பல்வேறு பொது அதிகார அமைப்புகளுக்கு மனுவினை மாற்றம் செய்ய வேண்டியதில்லை
- தகவல்கள் பொது அதிகார அமைப்பிடமே இருக்கும்போது, விண்ணப்பத்தினை துறைத் தலைமை அலுவலகத்திற்கு மாற்றம் செய்வது தவறாகும்.
- பொதுத் தகவல் அலுவலர், தான் தகவல் அளிக்காமல், தன்கீழ் பணியாற்றும் அலுவலரை தகவல் அளிக்குமாறு பணிக்கக்கூடாது
- விண்ணப்பக் கட்டணம் குறைவாக செலுத்திய காரணத்திற்காக மனுதாரரின் விண்ணப்பத்தினை அசலாக திருப்பி அனுப்பக்கூடாது
- கோப்பில் எழுதப்படாத பக்கங்களுக்கு கட்டணம் வசூலிக்க தேவையில்லை. தகவல்களை பதிவு அஞ்சலில்தான் அனுப்ப வேண்டுமென்ற அவசியமில்லை.
- தேடு கூலி கேட்கக் கூடாது.
- அஞ்சல் அனுப்ப அஞ்சல் செலவுத் தொகையை மனுதாரரிடம் கோரக்கூடாது.
- ஆவணங்களை பெற சம்பந்தப்பட்ட துறை கட்டணம் நிர்ணயம் செய்திருந்தால் அக்கட்டணத்தைத்தான் மனுதாரர் செலுத்த வேண்டும்
- பதிவுச் சட்டத்தின்கீழ் தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும்போது அத்தொகை யைச் செலுத்தித்தான் மனுதாரர் நகல்களை பெற முடியும்
- RSO 173 விதியின்படி நகல்களை சான்றொப்பமிட்டுத் தர கட்டணம் ரூ.5/– செலுத்த வேண்டும்.



- 30ம் நாளன்று நகலுக்கான கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரருக்கு கடிதம் அனுப்ப முடியாது
- 30 நாட்களுக்குள் தகவல் அளிக்காவிட்டால் மனுதாரர் கோரும் தகவல்களை இலவசமாக வழங்க வேண்டும்.
- 30 நாட்களுக்குள் வழங்கப்படவில்லையென்றால் மனுதாரரிடமிருந்து பெற்ற கட்டணத் தொகையை திரும்ப வழங்க வேண்டும்
- கோரிக்கையை மறுக்கும்போது யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்ற விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்
- பண்பாடற்ற முறையில் எழுதி விண்ணப்பித்திருந்தால் அதை நிராகரிக்கலாம்.
- மனதில் தோன்றியவற்றை எல்லாம் எழுதி மனுச் செய்யப்பட்டால் அதை நிராகரிக்கலாம்.
- தேவையற்ற முறையில் அளவுக்கு அதிகமான தகவல்கள் கேட்கப்பட்டால் விதி 7(9)ன்கீழ் தள்ளுபடி செய்யலாம்.
- மனுதாரர் கோரும் ஆவணங்கள் சிதைவடைந்த நிலையில் இருந்தால் தகவல் தர இயலாத நிலையை எடுத்துக் கூறி மனுதாரருக்கு தெரிவிக்கலாம்.
- தரக்குறைவான வார்த்தைகளை பயன்படுத்தி விண்ணப்பித்திருந்தால் மனுவை தள்ளுபடி செய்யலாம்.
- அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட ரகசியமான தகவல்களை மனுதாரர் பெற முடியாது.
- நீதிமன்றத்தால் தடைசெய்யப்படாத தகவல்களை வழங்க வேண்டும்
- புலன் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் தகவல்களை வழங்கக் கோருவது விசாரணையை பாதிக்கும் என்பதால் மனுவை நிராகரிக்கலாம்.
- விடுப்பிற்கான காரணங்களை வழங்க வேண்டியதில்லை
- மந்தண அறிக்கையை சம்பந்தப்பட்ட அலுவலரே கோரும்போது வழங்கவேண்டும்
- மந்தண அறிக்கையை மூன்றாம் தரப்பினருக்கு வழங்க வேண்டியதில்லை
- அரசுப் பணியாளருடைய பணிப் பதிவேட்டின் நகலினை மூன்றாம் நபருக்கு வழங்க வேண்டியதில்லை
- பட்டா மாறுதல் குறித்த கோப்புகள் மூன்றாம் தரப்பினர் தகவல்களாகும்
- தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மனு செய்தவர்தான் மேல்முறையீடு செய்ய வேண்டும்
- மேல்முறையீட்டு மனுவில் புதிய கேள்விகள் கேட்கக்கூடாது.
- ஒவ்வொரு மனுவிற்கும் தனித்தனியாக மனுதாரர் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

- மனுதாரரை விசாரணைக்கு அழைப்பது தவறாகும்
- ஆணைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரிடம் நேரடியாக பேசக்கூடாது
- விசாரணைக்கு வரும்போது உரிய ஆவணங்கள்/கோப்புகளைக் கொண்டு வரவேண்டும்
- மேல்முறையீட்டு அலுவலர் மீது சட்டப் பிரிவு 20ன்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு வழிவகை இல்லை
- தகவல் அளிக்காமல் வேறு இடத்திற்கு பணிமாறுதலில் சென்றாலும்கூட சட்டப் பிரிவு 20ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- தகவல் அளிக்காமல் ஒய்வு பெற்றாலும் ஒய்வூதிய விதி– 9 – ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- அபராதத் தொகையை சரிசமமாகப் பிரித்து சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும்
- தாமதம் ஏற்பட்டதற்காக தெரிவிக்கப்பட்ட காரணம் ஏற்கத்தக்கதாக இருந்தால் மேல் முறையீடு அதிகாரி அதை ஏற்கலாம்.
- 10–ம் வகுப்பு விடைத்தாளின் நகலினை பெறலாம்
- விதி 22ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிற அரசு ஆணைகளின் மீதூர்ந்து இயங்கும் தன்மை கொண்டது
- பெயரினை தவறாக குறிப்பிட்டு பதில் அனுப்புவது கண்டிக்கத்தக்கது
- தொகையைப் பற்றி தகவல் கேட்கும்போது தவறின்றி வழங்க வேண்டும்
- ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக பதில் அளிக்க வேண்டும்
- மனுதாரர் குறிப்பிட்டுள்ள இனங்களின் வரிசை எண்ணைக் குறிப்பிட்டு மனுதாரருக்கு தகவல் தரப்பட வேண்டும்.
- பொதுத் தகவல் அலுவலர் என்ற பதவியை முன்நிறுத்தி பதில் அனுப்ப வேண்டும்
- மனுதாரருக்கு தகவல்களை முறையாக அலுவலகக் கடிதத்துடன் (with proper covering letter) இணைத்து அனுப்ப வேண்டும்
- மனுதாரருக்கு அனுப்பப்படும் கடிதங்களில் பொதுத் தகவல் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர்கள்தான் கையொப்பமிட வேண்டும்.
- சட்டப்பிரிவு 20(2)ன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கும் முன்பாக பொதுத் தகவல் அலுவலருக்கு போதுமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்
- மனுதாரர் சட்டப் பிரிவு 19(1)ன்படி முதல் மேல்முறையீடு செய்திருந்தால் மட்டுமே இழப்பீடு (Compensation) வழங்க முடியும்.



- துறை விசாரணை நிலுவையில் இருக்கும்போது, அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை கோர முடியாது. [பிரிவு 8(1)(g) மற்றும் பிரிவு 8(1)(h)]
- தன் மேலதிகாரியிடம் தன் சம்பந்தப்பட்ட கோப்பு குறிப்புகளை கேட்டு, மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டப்படி தகவல் கோர முடியாது.

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்திருத்தம் 2019 சொல்வதென்ன?

நடந்து முடிந்த 2019ஆம் ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 13, 16 மற்றும் 27வது பிரிவுகளுக்கு திருத்தங்கள் கொண்டுவந்து மக்களைவையில் அதை நிறைவேற்றியும் இருக்கிறது மத்தியில் ஆளும் பாஜக அரசு.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள திருத்தத்தின்படி மத்திய அரசாங்கத்தில் உள்ள முதன்மைத் தகவல் ஆணையர், மாநிலங்களில்தகவல் ஆணையர்களின் பணிக்காலம், ஊதியம் ஆகியவற்றை தீர்மானிக்கும் அதிகாரம் இனி மத்திய அரசிடம்தான் இருக்கும்.

நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி முதன்மைத் தகவல் ஆணையரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் அல்லது 65 வயது வரை இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் தொடரும். ஆனால் திருத்தச் சட்டத்தின்படி முதன்மை தகவல் ஆணையர்களாகவும், தகவல் அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட போகிறவர்களின் பதவிக்காலம் ஊதியம் ஆகியவற்றை மத்திய அரசே நிர்ணயிக்க இந்தச் சட்டத் திருத்தம் வழிவகுக்கிறது. மேலோட்டமாக பார்க்கும்போது இந்த திருத்தம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படைகளை மாற்றவில்லை எனத் தோன்றினாலும் இதில் மத்திய அரசின் துருப்பிடித்த இரும்புக்கரம் மறைந்துள்ளது தெரியும்.

அதாவது முதன்மைத் தகவல் ஆணையர்களோ, தகவல் அதிகாரிகளோ ஆளும் ஆட்சியாளர்களுக்கு கோபம் உண்டாக்கும் வகையில் செயல்பட்டால் என்ன நேரிடும்? என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்கிறது. பதவிக்காலம் மட்டுமல்லாமல் ஊதியமும் மத்திய அரசின் முடிவுப்படியே என்பதால் முதன்மைத் தகவல் ஆணையர் மட்டுமல்ல மாநிலத் தகவல் ஆணையர்களும் தங்களுக்கான ரொட்டியை தரும் கை எது என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கையை உள்ளடக்கியுள்ளது இந்தச் சட்டத் திருத்தம்.

மாநிலத் தகவல் ஆணையர்களின் பதவிக்காலம் அவர்களின் ஊதிய நிர்ணய அதிகாரம் ஆகியவற்றை மத்திய அரசு தன் வசம் எடுத்துக் கொண்டிருப்பது, மாநில அரசுகளின் அதிகாரத்தில் கைவைக்கும் அப்பட்டமான முயற்சி. மத்திய அரசு மாநில அரசை இந்த விஷயத்தில் முடமாக்குவதுடன் மாநில அரசுடனான உறவைப் பொருத்து இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் மறைமுக அரசியலில் ஈடுபட முடியும். இந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத் திருத்தமானது மத்திய அரசே அனைத்து அதிகாரங்களையும் தன் வசம் வைத்துக்கொண்டு வாலாட்டும் மாநில அரசுகளை பந்தாடும் விளையாட்டின் ஒரு பகுதியே.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரும் விண்ணப்பங்கள் தற்போது எளிமைப்படுத்தும் வகையில், முதலாம் மேல் முறையீட்டு மனுக்களையும் இணைய வழியிலும் சமர்ப்பிக்கும் வசதி இந்த நிதியாண்டிலிருந்து (2020-21) படிப்படியாக ஏற்படுத்தபடும்.

அரசாணை (நிலை) எண்.49/ப.ம.நி.சீ.(FR-III) துறை நாள் 29.04.2020

## XXVI. பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள்

### (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் குறை தீர்ப்பு) சட்டம், 2013

### செயல்முறைகளும், வழிகாட்டு நெறிமுறைகளும்

பணி செய்யும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் தொந்தரவுகள் பல காலமாக ஊழியர் சங்கங்களால் அரசுகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டு, அதற்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் பெண் ஊழியர்களின் எண்ணிக்கையானது நாளுக்குநாள் அதிகரித்து வருகிற சூழலில், பணியிடத்தில் பாலியல் தொந்தரவு என்ற பிரச்சனையும் பெருகி வருகிறது.

பெண்கள் வேலையிடங்களில் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவுகளிலிருந்து காக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தி விசாகா – எதிர் – ராஜஸ்தான் அரசு [IT 1997 (7)SC384] என்ற வழக்கில் சில வழிகாட்டு நெறிமுறைகளை நிறுவனங்களும், அரசுத் துறைகளும் கடைபிடித்து வேலை செய்யும் இடங்களில் பெண்கள் பாதுகாப்பான, அச்ச உணர்வற்ற பணி செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் புகார்களை விசாரித்து அறிக்கை அளிக்க ஒவ்வொரு துறைத்/நிறுவனத் தலைமையும் புகார் கமிட்டியை அமைக்க வேண்டும் என்றும் புகார் கமிட்டி தன்னுடைய விசாரணையை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு அரசு செயல்முறைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசாணை நிலை எண்.166 (சமூக நலத்துறை) நாள் 29.8.2003ல் வகுத்துள்ளது. அவையாவன:

### புகார் கமிட்டி விசாரணையை மேற்கொள்வதற்கான செயல்முறைகள்

1. (i) பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்ட எவரும் அது குறித்த புகாரினை புகார் கமிட்டியிடம் எவ்வளவு விரைவாக அளிக்க முடியுமோ அளிக்க வேண்டும். எப்படியிருப்பினும் புகார், பாலியல் தொல்லை குறித்த சம்பவம் நடந்த 30 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். (தற்போது 3 மாதமாக புகார் கொடுக்கும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது)

இருப்பினும் புகார் கமிட்டி, காலம் கடந்து தரப்படும் பாலியல் தொல்லை தொடர்பான புகார்களை, அது தாமதமாக கொடுக்கப்பட்டதற்கான காரணம் ஏற்புடையதாக இருந்தால், காலதாமதமானது புகார்தாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருந்தால், அப்புகாரினை ஏற்று பரிசீலிக்கலாம்.

(ii) புகாரானது, பாலியல் தொல்லை சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் தேவைப்படும் விளக்கங்களுடன் பாலியல் தொல்லை தந்தவரின் பெயர் விவரங்களுடன், புகார் கமிட்டிக்கு முகவரியிடப்பட்டிருக்க வேண்டும்.



2. புகார் கிடைக்கப் பெற்றவுடன் புகார் கமிட்டி, இயற்கை நீதிக்கான பொருண்மைகளை கடைபிடித்து புகார் கொடுத்தவருக்கும், அவர் யார் மீது புகார் கொடுத்துள்ளாரோ அந்த நபருக்கும் அவரவர் தரப்பினை எடுத்துரைக்க வாய்ப்புகள் அளித்து, அதன்பிறகு விசாரணையை மேற்கொள்ள, உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

3. புகார் கமிட்டி என்பது உண்மையை கண்டறியும் குழு மட்டுமே. அது புகாருக்கு அடிப்படை முகாந்திரம் ஏதும் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும். இந்த புகார் குழு தன்னுடைய விசாரணையை புகார் கிடைக்கப் பெற்ற தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும். (தற்போது மேற்படி சட்டப்படி 90 நாட்கள்)

4. புகார் கமிட்டி பாலியல் தொந்தரவு தந்ததாக குற்றம் சாட்டப்பட்ட நபரை விசாரித்து, அவர் தரப்பை எடுத்துச் சொல்ல வாய்ப்புகள் வழங்கியபின், தன்னுடைய அறிக்கையை துறைத்தலைமைக்கு/நிறுவனத் தலைமைக்கு சமர்ப்பிக்க வேண்டும். அறிக்கையை பெற்ற துறைத்/நிறுவனத் தலைமை அதை ஒழுங்கு நடவடிக்கை அலுவலருக்கு மேல் நடவடிக்கைகக்காக அனுப்ப வேண்டும். புகாரானது இந்திய ஆட்சிப் பணியல்லாத (Non I.A.S) துறைத் தலைமை மீது எழுப்பப்பட்டிருந்தால், புகார் கமிட்டி தன்னுடைய அறிக்கையை நேரடியாக அரசுக்கு அனுப்ப வேண்டும். இந்திய ஆட்சிப் பணியல்லாத துறைத் தலைமைக்கு அரசுதான் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரக் குழுவாகும்.

5. புகார் கமிட்டியிடமிருந்து அறிக்கையை பெற்றதும், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரக் குழு, சம்பந்தப்பட்ட விதிகளின்படி நடைமுறைகளைக் கடைபிடித்து, அந்தந்த வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு அபராதம் விதிக்கலாமா ? வேண்டாமா ? என முடிவு செய்ய வேண்டும்.

6. புகார் கமிட்டி முந்தைய ஆண்டுக்கான தன்னுடைய நடவடிக்கைகளை ஆண்டறிக்கையாக தயார் செய்து அதன் நகலை சம்பந்தப்பட்ட துறை/நிறுவனத் தலைமைக்கு அனுப்ப வேண்டும். அதை துறை/நிறுவனத் தலைமை தன்னுடைய கருத்துருக்களுடன் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்கு அனுப்ப வேண்டும்.

7. புகார் கமிட்டி புகார்தாரரின் பெயரையோ அல்லது எழுத்துபூர்வமான புகாரையோ, (பெண்களுக்கான தேசிய ஆணையம் பரிந்துரைத்துள்ளபடி) கண்டிப்பாக தரச்சொல்லி கேட்கக் கூடாது.

### பணி வழங்குபவருக்கான (Employer) வழிகாட்டு நெறிமுறைகள்

1. ஊழியரின் செயலானது உரிய விதிகளில் வரையறுக்கப்பட்டபடி, பணிக்கு குந்தகம் விளைவிப்பதாக இருப்பின், துறை/நிறுவனத் தலைமை சம்பந்தப்பட்ட ஊழியரின் பேரில் தேவையான ஒழுங்கு நடவடிக்கையை சரியான மற்றும் போதுமான காரணங்களின் பேரில், புகார் கமிட்டியிடம் புகார் அளிக்கப்படாத நிலையிலும் மேற்கொள்ளலாம்.

2. மூன்றாவது நபர் அல்லது வெளியாள் மூலம் ஊழியர் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு ஏற்படுத்தப்பட்டிருக்குமானால், துறைத் தலைமை/நிறுவனத் தலைமை தேவையான நியாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட ஊழியருக்கு ஆதரவும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும்.

**3.** தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973 விதி 20(1)ன்படி ஒவ்வொரு அரசு ஊழியரும் எந்த சந்தர்ப்பத்திலும் எதுவும் செய்ய முடியாத சூழல் உள்ளது. பெண் ஊழியர்கள் மீதான பாலியல் தொந்தரவு என்பதான நிகழ்வு கண்டிப்பாக நிகழக்கூடாதது என்பதோடு அது தவறான நடவடிக்கைகக்கு ஆளாகக் கூடியதாகும். அத்தகைய நிகழ்வுகளில் பாதிப்பை ஏற்படுத்திய அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**4.** மேற்படி செய்கையானது இந்திய தண்டனை சட்டப்படியோ அல்லது வேறு சட்டப் பிரிவுகளின்படியோ ஈர்க்கப்படக் கூடிய குற்றமாக தெரிய நேர்ந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளிடம் புகார் மூலம் சட்டத்திற்கு உட்பட்டு மேற்கொள்ள வேண்டும்.

**5.** குறிப்பாக, பாதிக்கப்பட்டவேரா அல்லது சாட்சிகளோ பாலியல் தொல்லை சம்பந்தப்பட்ட விசாரணைகளினால் தண்டிக்கப்படவோ அல்லது பாதிக்கப்படவோ மாட்டார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டவர் பாதிப்புக்கு உள்ளாக்கியவரை இடமாற்றம் செய்யக் கேட்கவோ அல்லது தான் இடமாற்றம் செய்யக் கேட்கவோ விருப்பத் தெரிவு வழங்கப்பட வேண்டும்.

**6.** புகார் இயக்கும் செயலமைவுத் திட்டம் (Mechanism): இத்தகு நடத்தைகளானது சட்டப்படியான குற்றச் செயலுக்கும், பணியமர்வு விதிகளுக்கும் குந்தகம் விளைவிப்பதாகவோ அல்லாததாகவோ இருந்தாலும், இல்லாவிட்டாலும் புகார் மீது நடவடிக்கை எடுக்கும் செயலமைவுத் திட்டம் ஒவ்வொரு நிர்வாகத்திலும் பாதிக்கப்பட்டவர் கொடுத்த புகாரின் மீதான குறைகளை நிவர்த்தி செய்யும். அத்தகு புகார் இயக்குமுறை புகார்களின் மீது குறிப்பிட்ட காலவரையரைக்குள் எடுக்கும் நடவடிக்கையை உறுதி செய்ய வேண்டும். எங்கெங்கு அத்தகு செயலமைவுத் திட்டங்கள் குறைகளைக் களைய ஏற்கெனவே உள்ளதோ அதை இன்னும் முனைப்பாக செய்யவும் குறிப்பாக அத்தகு புகார்களை பெண் அதிகாரிகள் கையாளவும் செய்ய வேண்டும்.

7. விழிப்புணர்வு : பெண் ஊழியர்களுக்கு உள்ள உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை இவ்விஷயம் சார்ந்து வழிகாட்டுநெறிமுறைகளின்படி சரியான வகையில் ஏற்படுத்துதல் வேண்டும்.

**8.** இருப்பினும் குறிப்பான ஒரு சட்டம், தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973ல் தனியாக ஏற்படுத்தப்பட்டு, அரசு ஊழியர்களால் ஏற்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான பாலியல் தொந்தரவுகளிலிருந்து அவர்களை பாதுகாக்க உச்ச நீதிமன்ற தீர்ப்புரையின்படி உருவாக்கப்பட்டுள்ளது.

**2011–2012**ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தில்லி, மும்பை, பெங்களூரு, சென்னை, கொல்கத்தா, அகமதாபாத், லக்னோ மற்றும் துர்காபூர் ஆகிய நகரங்களில் வசிக்கும் 400 உழைக்கும் பெண்களில் 66 பேர் எதிர்கொண்ட பாலியல் தொந்தரவு நிகழ்வுகளின் எண்ணிக்கை 121. இந்த சம்பவங்களில் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக துறைத் தலைமைகளோ/நிறுவனத் தலைமைகளோ சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் அதிகரிப்பின் காரணமாக இவற்றிற்கு எதிரான குரல்கள் இந்தியாவில் ஓங்கி ஒலிக்கத் துவங்கின.



இந்தப் பின்னணியில், பணியிடத்தில் பாலியல் தொல்லைக்கு எதிரான சட்டம் இயற்றப்படுவதற்கான மசோதா உருவானது. இந்த மசோதா, மக்களவையில் 2012ஆம் ஆண்டு செப்டம்பர் 3ம் தேதியும், மாநிலங்களவையில் 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் தேதியும் நிறைவேற்றப்பட்டது. 2013 ஏப்ரல் 22ம் தேதி குடியரசுத் தலைவர் இச்சட்டத்திற்கு தனது ஒப்புதலை அளித்தார். டிசம்பர் 2012ல் இதற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டன.

“பணியிடத்தில் பெண்களுக்கெதிரான பாலியல் தொந்தரவுகள் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் குறைதீர்ப்பு) சட்டம், 2013” என்ற இச்சட்டத்தின் மூலம் பணியிடத்தில் பாலியல் தொல்லைகளிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பது என்பதுடன், இத்தகைய குற்றங்களைத் தடுப்பது மற்றும் அது தொடர்பான புகாரினை விசாரித்து நியாயம் வழங்குவது என்ற நோக்கம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சட்டமானது அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர ஊழியர்களுக்கு மட்டுமின்றி கட்டிடத் தொழிலாளர்கள், தினக்கூலி அல்லது பயிற்சி அல்லது அப்ரண்டிஸ் அடிப்படையில் வேலை செய்பவர்கள், ஊதியம் பெற்றோ அல்லது பெறாமலோ பணிபுரிபவர்கள், தன்னார்வ அடிப்படையில் பணிபுரிபவர்கள் என அனைத்து பெண் தொழிலாளர்களுக்கும் பணியிடத்தில் பாதுகாப்பு அளிப்பதாக உள்ளது. ஏற்கனவே பாலியல் கொடுமைகளுக்கு எதிராக நம் நாட்டில் சட்டங்கள் உள்ளன என்றபோதும், இந்த சட்டம்தான் பணியிடத்தில் பெண்களுக்கு பாலியல் தொந்தரவுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் முனைப்பான சட்டமாக உள்ளது.

## சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- ஒரு தனிநபரின் வேலையில் தலையிடும் நோக்கத்துடன் சொல்லப்படும் பாலியல் ரீதியிலான வார்த்தைகள் அல்லது உடலைத் தொடுதல் அல்லது வரவேற்கத்தகாத செயலைச் செய்தல் அல்லது அச்சுறுத்தல், விரோதமாக நடத்துதல், திட்டுதல் அல்லது அருவருப்பான பணிச்சூழல் என்பன பாலியல் தொந்தரவு என்பதாகும்.
- இச்சட்டத்தின்படி 10 பேருக்கு மேல் பெண்களை பணியில் அமர்த்தியுள்ள எந்த ஒரு நிறுவனமும் அலுவலக அளவிலான புகார்குழு (Internal Compliments Committee - ICC) ஒன்றை அமைத்திட வேண்டும்.
- இக்குழுவின் தலைவராக அந்நிறுவனத்தில் உயர்நிலை பொறுப்பில் பணிபுரியும் பெண் ஒருவர் இருக்க வேண்டும்.
- பெண் நலனில் அக்றை அல்லது சமூகச் செயல்பாட்டில் அக்கறை அல்லது சட்ட அறிவு கொண்ட சக பெண் ஊழியர் இருவர் இதில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- இந்த புகார் குழுவில் உள்ள உறுப்பினர்களில் பாதிக்கும் குறையாமல் பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
- இந்த புகார் குழுவின் காலம் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- புகார்குழுவின் தலைவரோ, உறுப்பினர்களோ விதி 16க்கு முரணாக

செயல்பட்டால், அவர்கள் மீது சட்டப்படியான குற்ற நடவடிக்கை துறை/ நிறுவனத் தலைமையால் எடுக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும்.

- பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கப்பட்ட நபர், சம்பவம் நடந்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் புகாரை, புகார் குழுவிடம் எழுத்துபூர்வமாக அளிக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபர் புகார் அளிக்காத நிலையில் இருந்தாலோ இறந்து விட்டிருந்தாலோ அவருடைய வாரிசுதாரரோ, வேண்டியவரோ புகார் அளிக்கலாம்.
- புகார் மனுவின் பேரில் பிரிவு 11ன்படி புகார் குழு விசாரணையை தொடங்குமுன், பாதிக்கப்பட்ட பெண் பிரச்சனையை எதிர்மனுதாரருடன் சமரசம் செய்து கொள்வதாக வேண்டுகோள் வைத்தால் சமரசம் செய்து வைக்க புகார் குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- சமரசம் செய்துகொண்ட நபர் உட்பிரிவு (2) பிரிவு 10ன்படி செய்யப்பட்ட சமரத்துக்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி நடக்கத் தவறினால், புகார் குழு, பாதிக்கப்பட்ட நபர் கொடுத்த புகாரினை காவல்துறை விசாரணைக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- விசாரணை நிலுவையில் இருக்கும்போது பாதிக்கப்பட்ட பெண் ஊழியர் அவரையோ அல்லது தன்னை பாதிப்புக்கு உள்ளாக்கிய ஊழியரையோ வேறு பணியிடத்திற்கு மாற்றக்கோரி எழுத்துபூர்வமான கோரிக்கை கொடுத்தால் அதை புகார் குழு, துறை/நிறுவனத் தலைமைக்கு அல்லது வேலை அளிப்பவருக்கு (Employer) அனுப்பி அக்கோரிக்கையை நிறைவேற்ற பரிந்துரைக்க வேண்டும்.
- அதேபோல் பாதிக்கப்பட்ட பெண் கோருவதன்பேரில் மூன்று மாத காலம் வரை விடுப்பில் செல்ல பரிந்துரைக்கலாம். மேலும் பாதிக்கப்பட்ட பெண் கோரும் வேறு கோரிக்கைகளையும் பரிசீலித்து துறை/நிறுவனத் தலைமைக்கு பரிந்துரைக்கலாம்.
- புகார் கிடைக்கப் பெற்ற தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் விசாரணையை முடித்து புகார் குழு தன் அறிக்கையை துறை/நிறுவனத் தலைமைக்கு விசாரணை முடித்த 10 தினங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேலும், அந்த அறிக்கை நகல் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.
- பாதிப்புக்குள்ளாக்கிய நபர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லை என புகார் குழு முடிவு செய்யுமானால் பாதிப்புக்குள்ளாக்கிய நபர் மீது நடவடிக்கை தேவையில்லை என பரிந்துரைக்கலாம்.
- பாதிப்புக்கு உள்ளாக்கிய நபர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகியுள்ளதாக புகார் குழு முடிவு செய்தால் அந்நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கலாம்.



- புகார் குழுவின் பரிந்துரை கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் மாவட்ட அலுவலர் அல்லது வேலை தருபவர் பாதிப்புக்கு உள்ளாக்கிய நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பாதிப்புக்கு உள்ளாக்கியதாக கூறப்படும் நபர் மீது வேண்டுமென்றே புகார் கூறப்பட்டுள்ளதாக ஆவணங்கள், கடிதங்கள், சாட்சியங்கள் வாயிலாக புகார் குழுவுக்கு தெரிய நேர்ந்தால் புகார் கொடுத்த பெண் மீது நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட அலுவலர் (அ) வேலை வழங்குபவருக்கு புகார் குழு பரிந்துரைக்கலாம்.
- விசாரணையின்போது சான்றளித்த சாட்சியின் சாட்சியம் பொய்யானது என புகார் குழு அறியுமானால், சம்பந்தப்பட்ட சாட்சியின் பேரில் நடவடிக்கை எடுக்க மாவட்ட அலுவலர் (அ) வேலை வழங்குபவருக்கு பரிந்துரைக்கலாம்.
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணங்களில் மனநோய், மனஅழுத்தம், வலி, எதிர்கால வாழ்க்கை இழப்பு, மருத்துவ செலவினங்கள் ஆகியவற்றுக்காக புகார் குழு பரிந்துரைக்கலாம்.

## வேலை வழங்குபவர் (Employer) அல்லது நிர்வாகத்தின் கடமை

பெண்கள் வேலை செய்யும் இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பான பணியிடத்தை உறுதி செய்வதுடன் வேலையிடத்திற்கு வரும் நபர்களிடமிருந்தும் பாதுகாப்பளிப்பது பணி வழங்குபவர் அல்லது நிர்வாகத்தின் கடமையாகும். மேலும், அந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள புகார் குழு மற்றும் தண்டனை குறித்த விவரங்களை அனைவரின் பார்வைக்கும் உரிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும். இது மட்டுமின்றி, இச்சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கூட்டங்களை நடத்திட வேண்டும். புகார்க் குழுவின் செயல்பாட்டிற்கு உகந்தச் சூழலை உருவாக்கிட வேண்டும்.

பெண்களின் மீதான பாலியல் வன்முறை என்பது நாளுக்கு நாள் அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் அரங்கேறி வருகிற வேளையில் பெண்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் கறாராக அமலாக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதால்தான் புகார் குழு அமைக்கப்படாமல் இருந்தாலோ அல்லது அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலோ அல்லது சட்டத்தின் விதிமுறைகளை மீறினாலோ ரூ.50,000 வரை அபராதம் விதிக்கவும் இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

மேலும், சமூக நலத்துறை ஆணையர், தமிழக அரசில் உள்ள அனைத்து துறை தலைமைகளுக்கும் 8.7.2014ஆம் தேதி அனுப்பியுள்ள கடிதத்தில் புகார் கமிட்டியானது பெண் அதிகாரியின் தலைமையில் அமைக்க வேண்டும் அல்லது இருக்க வேண்டும் என்றும் அதன் உறுப்பினர்களில் பாதி பேர் பெண்களாக இருக்க வேண்டும் என்றும் மேலதிகாரிகளின் அழுத்தம் மற்றும் ஈர்ப்பு இவற்றின் காரணமாக புகாருக்கு ஆட்பட்டவர் தப்பிக்காதவரை மூன்றாவது நபர்களை (என்.ஜி.ஓ. அல்லது சமூகநல ஆர்வலர்கள்) புகார் கமிட்டியின் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். மேலும் அமைக்கப்பட்ட புகார்

கமிட்டியின் உறுப்பினர்கள் பட்டியல் மாதிரியும் அந்த கமிட்டிகள் சமர்ப்பிக்க வேண்டிய மாத அறிக்கைகள் பற்றிய விவரப் பட்டியல் மாதிரியும் அக்கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த, மாதிரிப் பட்டியல்கள் கீழே.

துறையின் பெயர் :

புகார் கமிட்டியின் விவரங்கள் :

கமிட்டி அமைக்கப்பட்ட நாள் :

| வ.எண். | கமிட்டி உறுப்பினரின் பெயர்கள் | பதவி | முகவரி தொலைபேசி மற்றும் துறை/நிறுவன மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

இந்த புகார் கமிட்டிகள் ஒவ்வொன்றும் ஓர் விரிவான அறிக்கையை மாதந்தோறும் சமூக நலத்துறை ஆணையருக்கு கீழ்க்கண்ட படிவத்தில் தாமதிக்காமல் அனுப்ப வேண்டும்.

**...................** மாதத்திற்கான அறிக்கை

| வ. எண். | பாலியல் தொல்லையின் வகை | பாதிக்கப் பட்டவரின் பெயர் (ம) முகவரி | குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி | சம்பவம் நடந்த நாள் மற்றும் நேரம் | நடவடிக்கை ஏதும் எடுக்கப் பட்டிருந்தால் அதன் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |